
காதலெனும்
சோலையிலே
ரமணிசந்திரன்

# காதலெனும் சோலையிலே

ரமணிசந்திரன்

அருணோதயம்
3, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை-600 014

# நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : காதலெனும் சோலையிலே |
| ஆசிரியர் | : ரமணிசந்திரன் |
| மொழி | : தமிழ் |
| முதற் பதிப்பு | : ஏப்ரல், 1985 |
| ஐந்தாம் பதிப்பு | : டிசம்பர், 1991 |
| ஆறாம் பதிப்பு | : டிசம்பர், 1992 |
| ஏழாம் பதிப்பு | : ஜூன், 1994 |
| எட்டாம் பதிப்பு | : மே, 1996 |
| ஒன்பதாம் பதிப்பு | : டிசம்பர், 1997 |
| பத்தாம் பதிப்பு | : ஜூன், 1999 |
| பதினோராம் பதிப்பு | : ஏப்ரல், 2001 |
| பனிரெண்டாம் பதிப்பு | : செப்டம்பர், 2002 |
| பதின்மூன்றாம் பதிப்பு | : ஜனவரி, 2004 |
| பதினான்காம் பதிப்பு | : பிப்ரவரி, 2005 |
| பதினைந்தாம் பதிப்பு | : பிப்ரவரி, 2006 |
| பதினாறாம் பதிப்பு | : ஏப்ரல், 2008 |
| பதினேழாம் பதிப்பு | : ஜனவரி, 2011 |
| பதினெட்டாம் பதிப்பு | : மே, 2012 |
| பத்தொன்பதாம் பதிப்பு | : செப்டம்பர், 2013 |
| பக்கங்கள் | : 268 |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை, சென்னை-14. |

**விலை: ரூ.120.00**

| | |
|---|---|
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ், சென்னை-14. |

# காதலெனும் சோலையிலே

## 1

அலுவலகத்தில் வேலை நேரம் முடியப் பத்து நிமிடங்களே இருந்தன.

அவசர அவசரமாகக் கையில் இருந்த கணக்கைச் சரி பார்த்துக் கொண்டிருந்தாள் ஜீவரேகா.

மற்றவர்கள் அளித்திருக்கும் தொகையைப் பார்த்து விட்டு, பெரும்பாலானவர்களைப் போலத் தானும் இருபது ரூபாய் என்று எண்ணாலும் எழுத்தாலும் குறித்துக் கையெழுத்திட்டாள்.

பணியாளரிடம் மீண்டும் அறிக்கையைக் கொடுத்து விட்டு மீண்டும் கணக்கில் மூழ்கினாள்.

மணி ஐந்தடித்ததும் வேலை முடிப்பதும், எடுத்து வைப்பதும், கிளம்புவதுமாக அலுவலகத்தில் சலசலப்புக் கிளம்பியது.

மானேஜர் அறைக்குள் வரவும் மீண்டும் அமைதி நிலவியது.

"டைப்பிஸ்டின் திருமண அன்பளிப்பிற்காக நானூற்று ஐம்பது ரூபாய் சேர்ந்திருக்கிறது. என் பொறுப்பாக ஐம்பதும், அலுவலகப் பொறுப்பாக ஐநூறும் சேர்த்தால் ஆயிரம் ரூபாய் ஆகிவிடுகிறது. பெரியதாகவே ஏதேனும் வாங்கிப் பரிசளிக்கலாம்" என்று அவர் அறிவிக்கவும் எல்லோரும் கைதட்டினர்.

"அலுவலகத்திலிருந்து திருமணம் நடக்கும் மாதா கோயில் வரை சென்றுவர ஆபீசில் இருந்தே 'வேன்' ஏற்பாடு செய்யப்படுகிறது. தனியாகவும் வரலாம், ஆனால் இங்கிருந்து வருகிறவர்களின் எண்ணிக்கை தெரிந்து விட்டால் நன்றாக இருக்கும். சொல்லுங்கள். ஹெலன் கல்யாணத்துக்கு இங்கிருந்து யாரெல்லாம் வருகிறீர்கள்?" என்று வினவினார் மானேஜர்.

'நான்... நானும்' என்ற ஆரவாரத்தில் ஜீவரேகாவின் முகவெளுப்பும் கல்லாய் உறைந்த தோற்றமும் மவுனமும் அடிபட்டுப் போயின.

ஹெலன் கல்யாணம்.

ஒரு ஹெலன் கல்யாணத்துக்குச் சென்று வாங்கி வந்த வரம் வாழ்க்கை முழுவதற்கும் போதுமானதாக இருக்க, இன்னுமொரு ஹெலனின் கல்யாணத்திற்குப் போவதா?

இன்னும் எத்தனை பிறவிகளுக்குத் துன்பச் சுமை தூக்கி வரவோ?

"பைக்கில் கொண்டுபோய் விடட்டுமா?"

திகைப்பும் மருட்சியுமாக நிமிர்ந்தாள் ரேகா.

அருகில் நின்றவன் சரவணன்தான் என்பதைக் கண்டதும் சற்று அமைதி அடைந்தவளாகி லேசான முறுவலுடன் மறுதலிப்பாய்த் தலையசைத்தாள்.

"சோர்ந்தாற் போலத் தெரிகிறதே என்றுதான்."

"இல்லை" என்று திடமாக மறுத்தவள், அந்த மறுப்பின் கூர்மையைச் சமனப்படுத்துவது போன்று புன்னகை செய்தாள்.

"ப்ளீஸ்..." என்று கைகளை விரித்தான் சரவணன். "தயவு செய்து இந்த மாதிரி முறுவலை நீங்கள் என்மேல் செலுத்தக் கூடாது. ஆயிரம் வாட் மின்சாரத்தை அடியேன் மேல்."

அதற்கு மேல் அவன் பேச்சைக் கேட்க அங்கே காற்று தான் இருந்தது.

மீண்டும் ஒரு தலையசைப்பின் பின் அவள் சென்றே விட்டிருந்தாள்.

வேகத்தில் எழிலைக் காட்டி நெளிந்த பின்னலையும் மெல்லிய இடையையும் வெறித்து நோக்கினான் அவன்.

சூடு கண்ட பூனையின் ஒதுக்கமா?

அல்லது என்றோ கைவிட்டு மறைந்தவனை எண்ணி இன்னமும் ஏங்குகிறாளா?

சரவணனின் உதடுகள் அழுத்தத்துடன் மடிந்தன. இதற்கு ஒரு முடிவு கட்டியே ஆகவேண்டும்!

ஜீவரேகாவை முந்திக்கொண்டு அவள் வீட்டை அடைந்த சரவணனுக்கு அங்கே நல்ல வரவேற்பு.

ரேகாவின் பெற்றோர் அவனை அன்புடன் வரவேற்றனர்.

ஆனால் ரேகாவின் வருகைக்காகத்தான் அவன் வெகு நேரம் காத்திருக்க வேண்டும்.

அலுவலகத்திலிருந்து நேராக வீட்டுக்குச் செல்ல ஜீவரேகாவுக்கு மனம் இல்லை.

ஹெலனின் திருமணம் என்ற இரு வார்த்தைகள் வேண்டாம் வேண்டாம் என்று அடிமனதில் புதைத்து வைத்திருந்த நினைவுகளெல்லாம் எரிமலைக் குழம்பாய்ப் பொங்கிப் பிரவகிக்கச் செய்தன.

பல்வேறு உணர்ச்சிகள் அவளது சின்னஞ்சிறு இதயத்தில் பேயாட்டம் போட்ட அந்த மன நிலையில் வேண்டியவர் வேண்டாதவர் என்று யாரையுமே பார்க்க விருப்பம் இல்லாமல் தனிமையை வேண்டி ஆற்றங்கரைக்குச் சென்றாள்.

வைகைப் பொன் மணல் பரப்பாய் விரிந்திருந்தது.

ஒதுக்குப்புறமாய் அமர்ந்து மணலாற்றை வெறித்தாள்.

பழைய சம்பவங்களை மனது அசை போடலாயிற்று.

அல்லது காயம் பட்ட மிருகம் காயத்தை நக்கி நக்கித் தன்னைத்தானே மேலும் மேலும் வருத்திக்கொள்வது போல என்று சொல்ல வேண்டுமோ?

எப்படியோ, தன்னிச்சையாய் எண்ணங்கள் ஓடத் தடுக்கும் சக்தியிழந்து செயலற்று அமர்ந்திருந்தாள்.

ஹெலன் ஃபெர்னாண்டோ.

ஜீவரேகாவின் உயிருக்குயிரான சினேகிதி.

அவள் மட்டும் அப்படிப்பட்ட சினேகிதியாக இல்லாமல் இருந்திருந்தால் அத்தனை அனர்த்தங்களும் நேர்ந்திராதோ?

அல்லது அத்தனை அனர்த்தங்களும் நேருவதற்காக ஏற்பட்டிருந்த கருவிதான் அந்தத் தோழியோ?

கருவியும் காரியமும்!

புத்தியைப் புல் மேய விட்டுவிட்டு பழியைச் சுமத்த ஒரு காரணம் தேடுவது எவ்வளவு முட்டாள்தனம்!

விழிநீரைத் துடைத்தெறிந்தாள் ஜீவரேகா.

உள்ளத்து நினைவுகளைத் துடைக்க முடியவில்லையே,

ஆன்ட்டி... என்று அந்த நினைவோட்டத்தின் முன்னணியில் சிரிப்புடன் வந்து நின்றாள் ஹெலன்.

''ஆன்ட்டி, நீங்கள் கட்டாயமாக ஜீவரேகாவையும் என்னோடு அனுப்பித்தான் ஆகவேண்டும். இல்லாவிட்டால் நானும் போகப் போவது இல்லை'' என்றாள் ஹெலன் பிடிவாதமாக.

சட்டெனச் சிரித்தாள் ஜீவரேகா. "அப்புறம் மாப்பிள்ளை, வேறு பெண் கழுத்தில் தாலி கட்டிவிடுவார்" என்றாள் மிரட்டுவதுபோல.

"அதெல்லாம் மாட்டார்" என்றாள் ஹெலன் அழுத்தம் திருத்தமாக.

"அடேயப்பா! அவ்வளவு நம்பிக்கையா உன் வருங்கால அவரிடம்!'' என்ற ஜீவரேகாவின் அதிசயிப்பைக் கவனியாதவள் போல, "எங்களில் தாலி கட்டும் பழக்கம் இல்லாததால் வேறு பெண்ணோடு மோதிரம்தான் மாற்றுவாராக்கும்" என்று தொடர்ந்து கூறிவிட்டுக் கலீரென்று நகைத்தாள் ஹெலன்.

தன்னையும் மீறி இணைந்து சிரித்தார் ஜீவரேகாவின் தாயார்.

சட்டென அவர் கையைப் பற்றிக்கொண்டு, ''ப்ளீஸ் ஆன்ட்டி, கல்யாண நாளன்று என் சந்தோஷத்தைக் குறைத்துவிடாதீர்கள் ஆன்ட்டி. காலேஜில் உல்லாசப் பயணம் என்று ஊட்டிக்குப் பத்துநாட்கள் அனுப்பவில்லையா? இப்போது ஒரே வாரம்தானே. என்னுடனேயே வரப்போகிறாள். மற்ற தோழிகள் போல இவளும் திரும்பப் போகிறாள். நான் எல்லா ஏற்பாடும் செய்து விட்டேன். இப்போது இவள்

வரவில்லை என்றால் அபசகுனம்கூட ஆன்ட்டி" என்றாள் கொஞ்சலாக.

ஜீவரேகாவின் அன்னை சரஸ்வதிக்குப் பொதுவாகத் திடமனது கிடையாது.

கல்யாணப் பெண்ணே கெஞ்சுகிறாள் என்றபோது ஒரேயடியாகத் தட்டிப்பேச அவரால் முடியவில்லை.

அதுவும் அபசகுனம் என்று அவள் கூறவும் மசிந்து விட்டார்.

ஆனாலும், ''கல்யாணத்தன்று மட்டும் இருந்தால் போதாதா?'' என்று இழுத்தார்.

மூத்தவர் இளகுவது தெரிந்ததும் ஹெலன் பிடித்துக் கொண்டாள்.

"இவள் தனியாகக் கிளம்பி, கஷ்டப்பட்டு விலாசம் பார்த்து அங்கே வந்து சேர்வதைவிட என்னோடேயே கிளம்புவது மேல் இல்லையா ஆன்ட்டி? அப்படியே கொச்சியிலிருந்து திருவனந்தபுரம் போய் அங்கே உங்கள் கோயில்... அதுதான் பத்மநாபர்.... என்று ஒரு சாமி-அந்தக் கோயில் எல்லாம் காட்டி அனுப்புகிறேனே. என் சித்தி ஊர் அதுதான். திருவனந்தபுரத்தில் பெரிய மியூசியம். திமிங்கல எலும்புக்கூடு எல்லாம் பார்க்கலாம்..."

அடியாய் அடித்து அன்னையை வளைத்தாள்.

ஹெலனிடம் தலையாட்டிவிட்டு மகளிடம் ஆயிரம் சொன்னார்.

'மழையில் நனைந்துவிடாதே. குளிரடித்தால் ஸ்வெட்டர் போட்டுக்கொள். இரவில் கண் விழிக்காதே. சாப்பிட மறக்காதே' என்றவை தவிர முக்கியமாக அவர் வலியுறுத்திச்

- சொன்னது ஆண்களிடம் அவசியம் என்றால் கூடப் பேசாதே என்பதுதான்.

'எப்பேர்ப்பட்ட நல்லவன் என்றாலும் நீ நின்று பேசாதே' என்று திருப்பித் திருப்பிச் சொன்ன அந்த புத்திமதியை மட்டும் கடைப்பிடிக்க ஏன் மறந்தாள்?

நெருப்பைத் தொடாதே சுட்டுவிடும் என்று பெரியவர்கள் சொல்லும்போது சிரிப்பாக இருக்கிறது. சூடுபட்ட பிறகுதானே பெரியவர்கள் புத்திசாலிகள் என்பது புரிகிறது.

காலம் கடந்த ஞானோதயம்.

"ஷ், அவள் என்ன சிறு குழந்தையா? எல்லாம் தானாகவே கவனித்துக்கொள்வாள், விடு" என்று சிதம்பரம் குறுக்கிட்டுத் தாயாரை அடக்கியபோது குதூகலப்பட்டதுகூட ஜீவரேகாவுக்கு வெகு துல்லியமாக ஞாபகம் வந்தது.

அது மட்டுமா நினைவு வந்தது?

அடுத்து எத்தனை!

முக்கியமாக அந்த விஜயேந்திரன்-

சூழ இருந்தோரை எல்லாம் குள்ளமாக்கிக்கொண்டு ஆறடிக்கும் மேலான உயரத்துடன் கண்களில் சிறு கர்வத்துடன் அவன் உருவம் இம்மி குறையாமல் அப்படியே வந்து நின்றதே; பேசியதே; சிரித்ததே....

கொச்சின் எக்ஸ்பிரஸ் கேரளத்தினூடே செல்லச் செல்ல அந்தப் பசுமையும் நீரோட்டங்களும் சிலுசிலுப்பும் எல்லோரிடமும் ஒரு நெகிழ்வை ஏற்படுத்தியிருந்தன.

இந்த அழகான மாநிலத்தை விட்டுக் கேரள மக்கள் மற்ற இடங்களுக்கு ஏன் செல்கிறார்கள் என்று ஜீவரேகாவுக்கு ஆச்சரியமாகக்கூட இருந்தது.

சுற்றுப்புற எழிலோடு, ஒரு கல்யாணப் பெண்ணைக் கோட்டா செய்தபடி நடந்த பயணமும் அவளது மனதை பாதித்திருந்தனவோ?

மற்றபடி ஒருவனைப் பார்த்த கணத்திலேயே அவளால் எப்படி மயங்க முடியும்?

கொறித்து மீந்த சிப்ஸ், முறுக்கு போன்றவைகளை யாராவது எளியவருக்குக் கொடுக்க எண்ணிக் கூடையுள் வைத்துவிட்டுக் கடைசியாக ரயிலில் இருந்து இறங்கினாள் ஜீவரேகா.

"ராணியாருக்கு வணக்கம்" என்று கேலிக்குரலில் கூறிக் குனிந்து நிமிர்ந்து கொண்டிருந்தான் அவன்.

சட்டென அசைய முடியாது போயிற்று ஜீவரேகாவுக்கு.

முகமெல்லாம் சிரிப்பாய், "விஜய்! நீங்கள் எங்கே, இங்கே?" என்று கூவினாள் ஹெலன்.

"என்ன செய்வது? குளிருக்கு அடக்கமாய் ரஜாய்க்குள் உறங்காமல் என் ராணியை ஜாக்கிரதையாக வீட்டில் விட்டு விட்டுத்தான் வரவேண்டும் என்று விரட்டியடித்து விட்டானே எனக்கென்று வாய்த்த சினேகிதப் படுபாவி" என்று சோகக் குரலில் சொல்லிக் கண்ணால் சிரித்தான் அவன்-விஜய்.

"சேச்சீ...." என்று யாசித்த இளங்குரல் ஜீவரேகாவைத் தன்னுணர்வு பெற வைத்தது.

பட்டிக்காடுபோல திறந்த வாயுடன் அந்தப் புதியவனை வெறித்துக் கொண்டிருப்பதை அப்போதுதான் உணர்ந்து சட்டென முகம் சூடேறிப் போயிற்று.

பிரயாசையுடன் பார்வையைத் திருப்பியவள் தானும் திரும்பி, கூடையிலிருந்த மிச்சம் மீதி உணவுப் பொருட்களை எடுத்து அந்தச் சிறுவனிடம் கொடுத்தாள்.

"இவர்கள் மூன்று பேரும்...." என்று ஹெலன் தொடங்கவும் நெஞ்சு படபடக்கக் கூடையினுள் எதையோ தேடும் பாவனையில் குனிந்து கொண்டாள் ஜீவரேகா.

லில்லியும் நளினியும் அவசர அவசரமாக உடையை நீவித் தலையைச் சீர்பண்ணுவது ஓரக்கண்ணில் பட்டது.

'நானும் இப்படித்தான் பயணத்தால் கலைந்திருக்கிறேனோ?' என்ற எண்ண ஓட்டத்தை அவனது குரல் நிறுத்தியது.

"உன்னுடன் பயிலும் உயிர்த் தோழிகள் தெரியும், ராஜா சொன்னான்... மேற்கொண்டு அறிமுகப் படலத்தை எல்லோரும் குளித்து உண்டு பிரயாண அலுப்பெல்லாம் தீர இளைப்பாறிய பிறகு வைத்துக் கொள்ளலாமா?" என்று நகாசுக் குரலில் கூறியவன், உரக்க ஒரு போர்ட்டரை அழைத்தான்.

மற்றவருக்கு எப்படியோ, முகத்தில் அறைவாங்கியது போல் அவமானமாகிப் போயிற்று ஜீவரேகாவுக்கு.

கரிசனம் காட்டிப் பேசுவது போல கூறினாலும் உன் தோழிகளிடம் பேச எனக்கு விருப்பம் இல்லை என்று அவன் சொல்லாமல் சொன்னதாகவே அவள் நினைத்தாள்.

கர்வம் பிடித்தவன். போகட்டுமே, இவனிடம் பேசிப் பழக என்று இங்கு யாரும் தவம் புரியவில்லை.

தப்பித் தவறிக்கூட அவனிடம் பார்வை சென்றுவிடாமல் கவனத்துடன் ஹெலனைப் பின் தொடர்ந்தாள்.

ஹெலனுக்கு, ஏன் மற்ற இரு தோழியருக்கும் கூட ஏதும் தோன்றவில்லை போலும்.

கலகலப்பாகப் பேசியபடியே சென்றனர்.

காரில் கடைசியாக ஜீவரேகா ஏறியதும் கதவைச் சாத்தத் தொடங்கிய அவனது கரம் சற்றுத் தயங்கியது.

அவன் பார்வை தன் மீது படிவதைக் கவனியாதவள் போல மறுபுறம் திரும்பினாள் ரேகா.

மெல்லக் கதவை அழுத்தி மூடிவிட்டு முன்புறம் ஏறிக் காரை ஓட்டத் தொடங்கினாள் அவன்.

'ஸ்டியரிங் வீலில்' இருந்த ஆரோக்கியமான விரல்களும் சட்டைக்காலரை மறைத்த கருத்தடர்ந்து பளபளத்த சிகையும் ஜீவரேகாவின் கவனத்தை ஈர்த்தன.

கூடவே அந்த அலட்சியப் பேச்சு..

பெண்களின் மனப்பாங்கு தெரிந்தவன்; இந்த அலட்சியப் பாங்கை ஒரு சவாலாக ஏற்று அதை வெல்ல வேண்டும் என்ற துடிப்புடன் வந்து விழுந்து சாகும் பல பெண்மீன்களைப் பார்த்தவனாக இருக்க வேண்டும்.

அன்று வீசிய தூண்டில் அது!

ஆனால் இந்த விளக்கமெல்லாம் இப்போதுதானே புரிகிறது-தூண்டிலில் சிக்கி இரையாகி மூச்சடைத்து உயிரையே இழந்த பின்னரா?

கண் போன பிறகு கிடைத்த சித்திரமாய்க் காலம் கடந்து வந்த ஞானோதயம்

உதட்டைப் பற்களால் அழுத்தியபடி, குறிப்பற்று வெறித்தாள் ஜீவரேகா.

தங்கும் விடுதியில் 'அலோ' என்று அவன் கை நீட்டியதைக் கவனியாதவள் போல பெட்டியோடு மடமடவென்று உள்ளே சென்றது மட்டும் இல்லாமல் பிறகும் ஜீவரேகா அதேபோன்று விலகி ஒதுங்கிப் போவதை ஹெலன் கண்டு கொண்டாள்.

"என்ன?" என்று விசாரிக்கவும் செய்தாள்.

"பின்னே, ரயிலடியில் நீ அறிமுகம் செய்து வைத்த போது அவர் மட்டும் தட்டிக் கழிக்கவில்லையா? இவர் ஏதோ பெரிய மகாராஜா போலவும், மற்றவர்கள் இவர் பார்வைக்கு ஏங்கிக் கிடப்பது போலவும், ச்சு" என்று தோளைக் குலுக்கினாள் ஜீவரேகா.

சிறு முறுவலுடன், "அவர் பெயர் என்னவென்று தெரியுமா, ஜீவரேகா? விஜயேந்திர பூபதி" என்றாள் ஹெலன். "அவர் அப்பா பெயர் ராஜேந்திர பூபதி" என்றாள் தொடர்ந்து.

"பெரிய ராஜ பரம்பரை போலப் பெயரெல்லாம் பிரமாதம்தான்" என்று கேலியாகச் சிரித்தாள் ஜீவரேகா.

சேர்ந்து சிரித்துவிட்டு, "போல அல்ல. ராஜ பரம்பரையே தான்; தலைமுறை தலைமுறையாகச் செல்வாக்கான குடும்பம். காலத்தோடு ஒட்டியபடி நிலத்தைத் தொழிற்சாலை அது இது என்று மாற்றிக் கொண்டார்கள். இன்னமும் அந்தப் பக்கம் அவர்கள் வீட்டை ராஜா வீடு என்றுதான் சொல்வார்கள்... அதனால்தான் அந்தத் தாராகூட" என்றவளை ஜீவரேகா இடைமறித்தாள்.

"அதற்காக சாதாரண மரியாதைகூட இல்லாமல் இருப்பது எப்படி சரியாகும்? வெறும் அறிமுகத்தில் இவரை யாரும் கொத்திப்போய் விடுவார்களா? 'அப்படியா' என்று கேட்டு லேசாக முறுவல் செய்தால் இவரது கவுரவம் குறைந்துவிடுமோ?" என்றாள் ரோஷத்துடன்.

"ஷ். அப்படியெல்லாம் இல்லைப்பா. ஆனால் நம் இனம்தான் விஜயனை இந்த மாதிரி ஆக்கிவிட்டிருப்பதாம், இம்மெனுமுன் மேலே விழுந்து சே, எங்கள் இனத்தில் தாராளமாகப் பழகுவோம்தான்-ஆனால் எனக்குக் கூட நம்ப சில பெண்கள் விஜயின் கவனத்தைக் கவர முயல்வதை நானே கண்டிருக்கிறேன். அதனால்தான் இந்தத் தட்டிக் கழிப்பே தவிர

வேறு ஒன்றும் இல்லை..." என்ற ஹெலன், லேசாகத் தலையைச் சரித்து ஜீவரேகாவைக் குறுகுறுவென்று பார்த்தாள்.

"ஏய், என்ன?" என்று ஜீவரேகா வியப்புடன் வினவ, "உன்னிடம் விஜய் தானாகப் பேச முயல்வதைப் பார்த்தால் எனக்கு.... என்...னவோ சந்தேகம்" என்று இழுத்தாள் ஹெலன்.

"மண்ணாங்கட்டி" என்று அலட்சியமாகத் திருப்பிக் கொண்ட போதும் தன் கன்னங்கள் சூடேறுவதை ரேகாவால் உணர முடிந்தது.

ஹெலன் வேண்டும் என்றுதான் செய்தாளோ, அன்றிக் காதலனுக்கும் கல்யாண காரியங்களுக்கும் இடையே நேர மின்றித்தான் செய்தாளோ- "ஜீவரேகாவுக்கு ஊர் சுற்றிக் காட்டுங்கள், விஜய்" என்று அவனிடம் தள்ளிவிட்டாள்.

யாரும் மறுத்துப் பேச இடம் கொடாது, "நான் டிரஸ் ஃபிட்டிங் பார்க்கப் போகிறேன்" என்று கூறி வருங்காலக் கணவனுடன் காரில் பறந்து விட்டாள்.

லில்லியும் நளினியும் கூட அவரவர் ஜோடி சேர்த்துக் கொண்டு சென்று விட்டிருக்கவே... ஜீவரேகா திகைத்தாள்.

ஜீவரேகா உதட்டைக் கடித்துக்கொண்டு நின்றாள். "என் மேல் இன்னமும் கோபமா?" என்று விஜயேந்திரனுடைய ஆழ்ந்த குரல், மெதுவாக அவள் காதருகே கேட்டது.

இந்த நேரடித் தாக்குதலை எதிர்பாராததால் ஒரு கணம் குழம்பிச் சிவந்துவிட்டு, "கோபமா? கோபப்படக் காரணம் ஏதும் இருக்கிறதா, என்ன?" என்று மிடுக்காகப் பேச முயன்றாள்.

"சர்வ நிச்சயமாய் இருக்கிறது. ஆனால் என்னுடைய ஒரே சமாதானம் என்னவென்றால் நான் அப்படிப் பேசியபோது உங்களைச் சரியாகப் பார்த்திருக்கவில்லை என்பது தான்" என்றான் அவன் ஒரு பளீர்ப் புன்னகையோடு.

முகஸ்துதியோடு அந்தப் புன்னகையும் சேர்ந்து அவளை அவனிடம் சரணடையச் செய்தன.

வெலிங்டன் ஜலண்டு, உப்பங்கழியில் போட்டிங் என்று அவன் அழைத்துச் சென்று காட்டிய ஏதும் அவள் கருத்தில் பதியவே இல்லை.

கண்ணோரம் சுருங்க அவனது சிரிப்பும் அகன்ற தோளும் செதுக்கினாற்போல உதடுகளும் அன்று வரை அவள் வளர்ந்த சூழ்நிலையை அடியோடு மறக்கடித்துக் கொண்டிருந்தன.

சிகரம் வைத்தாற்போல அந்தத் திருமண நாள்...

கையில் சில்லென்று நீர்தெறிக்கவும் திடுக்கிட்டாள் ஜீவரேகா.

மெல்ல சுற்றுப்புறம் புரிபடவும் கண்களில் பெருகி வழிந்த கண்ணீர்தான் கையில் பட்டுத் தன்னை விழிக்க வைத்திருப்பது தெரிந்தது.

மெல்லக் கவிந்து வந்த இருட்டு நேரமாகிவிட்டதை உணர்த்த, மெல்ல எழுந்து திரும்பி நடந்தாள்.

அவ்வளவு நேரம் கழிந்த பிறகும் வீட்டில் சரவணன் இருந்தான்.

ஜீவரேகாவைக் கண்டதும், "என்னுடனேயே வந்திருக்கலாம் இல்லையா? முகமெல்லாம் கன்றிக் கிடக்கிறதே" என்றான் புன்முறுவலோடு.

இன்னதென்று பொருள் கொள்ள முடியாத தலையசைப்புடன் ஜீவரேகா உள்ளே சென்றுவிட்டாள்.

வேண்டுமென்றே வெகு நிதானமாக முகம் கழுவி உடை மாற்றி அவள் வந்தபோதும் அவன் அசையவில்லை.

குழந்தை ராஜாவை மடியில் வைத்துக்கொண்டு அவளுடைய தந்தையுடன் அவன் உலக விவகாரம் அலசிக் கொண்டிருந்ததைப் பார்க்கவும் ஜீவரேகாவின் புருவ மத்தியில் ஒரு முடிச்சு விழுந்தது.

ஒருவாறு அவன் விடை பெற்றுச் செல்கையில் வாயில் வரை வந்து, "என்ன விஷயம்" என்றாள் நேராக.

இந்த நேர்ப் பார்வையையும் கேள்வியையும் தாங்க் முடியாதவன் போலச் சற்றுக் குனிந்தான் சரவணன்.

உடனேயே நிமிர்ந்து, ''நான் உங்களை மணக்க விரும்புகிறேன்" என்று விஷயத்தைக் கொட்டிவிட்டான்.

தரையை வெறித்த வண்ணம், "நான் கன்னி மேரியல்ல. சரவணன் ராஜா தந்தையற்று வருவதற்கு. இந்த எண்ணத்தை விட்டுவிடுங்கள்" என்றாள் ஜீவரேகா உறுதியான குரலில்.

ஏதோ பேச வாயெடுத்த அவனைக் கையமர்த்தி நிறுத்தி, "என் மனமே எனக்கு விலங்கு சரவணன், அதை உடைக்க முயன்றால் என் உயிரும் போய்விடும்" என்றாள் திருத்தமாக-தெளிவாக.

"விலங்கை உடைத்துத்தான் ஆகவேண்டும் என்று இல்லை ஜீவரேகா, மெதுவாகக் கழற்றியும் எறியலாம்; எனக்குப் பொறுமையோடு விடாமுயற்சியும் உண்டு. இப்போது எதற்கும் அவசரம் இல்லை. என் கோரிக்கையை அவ்வப்போது மனதில் அசைபோட்டுப் பார்த்தால் போதும்" என்றுவிட்டுப் போனான் அவன்.

## 2

தாய் தந்தையின் மனது கஷ்டப்படக் கூடாது என்ற ஒரே காரணத்துக்காக இரண்டு சப்பாத்திகளை இனிய முகத்துடனேயே மிகவும் கஷ்டப்பட்டு விழுங்கினாள் ஜீவரேகா.

தூக்கம் கண்களைச் சுழட்டுவதாகச் சொல்லி, மகனையும் தாயிடமே விட்டுவிட்டுத் தன் அறைக்குள் புகுந்து கொண்டாள்.

புகுந்த கணத்திலேயே தன்னையும், தனது திருமண வேண்டுகோளையும் ஜீவரேகா மறந்து போனாள் என்பது

தெரியவந்தால் சரவணனின் தன்மானத்துக்கு அடியாகத்தான் ஆகி இருந்திருக்கும்.

ஆனால் ஜீவரேகாவுக்கும் அன்று ஓர் அடிதான்.

மனதைக் கட்டுப்படுத்துவதில் வெற்றிகண்டு விட்டோம்; பழையனவற்றைக் குப்பையென ஒதுக்கப் பயின்று விட்டோம் என்று எண்ணி இறுமாந்திருந்த அவளுக்குத் தான் எத்தனை பெரிய தோல்வி!

அதிலும் ஹெலனுடைய திருமணத்திற்கு முந்தைய நாள் தோழியர் இருவருக்கும் இடையே நடந்த பேச்சு, காயத்தில் கத்தியை விட்டுத் துழாவும் வலியுடன் நினைவு வர, அதைத் தடுக்க முடியாமல் தவிக்கலானாள்.

மெய்யாக அந்த இரவு மட்டுந்தான் ஹெலனுக்குத் தன் தோழியோடு பேசவே நேரம் கிடைத்தது.

அதுகூட வருங்கால தம்பதியர் அந்த இரவில் ஒருவரை ஒருவர் சந்தித்தால் கேடுவரும் என்று ஒரு நம்பிக்கை அவர்கள் சமூகத்தில் இருந்ததால் தான்.

அப்போதும்கூட நளினியும் லில்லியும் எங்கோ சுற்றப் போயிருந்ததால்தான் இருவருமாகத் தனித்துப் பேசும் வாய்ப்புக் கிடைத்தது.

''ரேகா, நீயும் விஜய்யும் நெருங்கிவிட்டது பற்றி ஆல்பர்ட்டுக்கும் எனக்கும் எவ்வளவு சந்தோஷம் தெரியுமா? சீக்கிரமே கல்யாணமும் செய்துகொள்ளுங்கள், ஆனால், உன் திருமணத்தை என்னால்தான் பார்க்க முடியாது. நாளை 'ஹனிமுன்' கிளம்பினால் அப்படியே ஐந்து ஆண்டு ஒப்பந்தத்தின்படி அபுதாபி செல்லத்தான் சரியாக இருக்கும். அனேகமாக உன்னிடம் தனித்துப்பேசும் கடைசி வாய்ப்பு இனி வரும் ஐந்தாண்டு காலத்தில் இதுதான் கடைசியாக இருக்கும்... ரேகா, உன்னைக் காதலிப்பதாக விஜய் சொன்னாரா?'' என்று விசாரித்தாள் ஹெலன்.

காதல், கல்யாணம் என்றெல்லாம் சகஜமாகப் பேசிப் பழகியிராத ஜீவரேகா திணறிப் போனாள். சிவந்த முகத்தைத் திருப்பிக்கொண்டு, "ஷ் என்னடி..." என்றாள் வெட்கத்துடன்.

"ஓ, இன்னமும் அவர் 'டிக்ளேர்' பண்ணலையா? செய்வார். ஆனால் அதுவரை ஜாக்கிரதையாக இரு" என்று எச்சரித்தாள் ஹெலன்.

"ஜாக்கிரதை என்றால்"... என்று யோசித்தபடியே தலையை மட்டும் அசைத்து வைத்தாள் ஜீவரேகா.

"திரும்பிச் செல்ல உன் டிக்கட் இந்தா" என்று கொடுத்தாள் ஹெலன். "இன்னும் மூன்று தினங்களுக்கு உனக்கு 'ரூம்' புக் செய்திருக்கிறது. அதற்குள் ஊரெல்லாம் சுற்றிப் பார்த்து முடித்துவிடுவாய் இல்லையா!" ஆல்பர்ட்டின் பார்ட்டி எந்த அளவில் இருக்கிறதோ? அதிகம் குடிக்காமல் இருந்தால் நல்லது. குடித்தால் அவருக்குத் தலைவலி வேறு வரும்."

ஆல்பர்ட், ஆல்பர்ட் என்று ஹெலன் உருகுவதை ஒருவித வியப்புடன் கவனித்தாள்.

இத்தனை ஆண்டு காலம் வளர்த்த பெற்றோர், உடன் பிறந்தார், பழகிய சுற்றத்தினர் எல்லோரையும் அடியோடு மறந்துவிட்டாற் போல வருங்காலக் கணவனைப் பற்றியே அவள் பிதற்றுவது ஜீவரேகாவுக்கு வேடிக்கையாகக்கூட இருந்தது.

கூடவே இந்த மூன்று தினங்களில் அம்மா அப்பாவைப் பற்றி எத்தனை தடவை நினைத்தோம் என்று எண்ணிப் பார்க்கையில் தூக்கிவாரிப் போட்டது.

நினைக்கவே இல்லையே!

இரவும் பகலும் அந்த விஜயேந்திரன் ஜபத்தில் பெற்றவர்களை மறந்தே போனேனே!

சர்வசதா காலமும் அவன் நினைவு எப்படி வருகிறது?

யாரோடு பேசியிருந்தாலும், விளையாடினாலும், உண்டாலும்... ஏன், உறங்கினாலும்கூட அவன் கனவு தானே!

ஏனோ ராமகிருஷ்ணரின் போதனைகளில் ஒரு சிறு பகுதி நினைவு வந்தது.

"ஒரு வீட்டில் வேலை செய்யும் பணிப்பெண் என்னென்ன வேலைகளைச் செய்து கொண்டிருந்தாலும், வீட்டு எஜமானின் குழந்தைகளைக் கொஞ்சிக் கொண்டிருந்தாலும், எப்போதும் அடிமனதில் வீட்டிலிருக்கும் தன் குழந்தைகளின் நினைவிலேயே இருப்பாளாம்; அது போல என்ன செய்தாலும் இறைவன் நினைவு அடிமனதில் இருந்துகொண்டே இருக்க வேண்டும்" என்று பகவான் ராமகிருஷ்ண பரமஹம்சர் கூறியிருந்ததை எண்ணிப் பார்த்தாள்.

இவளும் அதுபோலத்தான் இருக்கிறாள்.

இரவு பகல் எந்நேரமும் விஜயன், விஜயன், விஜயன் என்று.

அவர் சொன்னதற்குப் பெயர் பக்தி; இறையன்பு.

அப்படி என்றால் இதன் பெயர்... இதன் பெயர்தான் காதலா?

ஒரு கணம் உடம்பெல்லாம் சிலிர்த்துப் பரவசமாகிப் போயிற்று ஜீவரேகாவுக்கு.

அதற்குள் மற்ற இரு தோழியரும் வந்துவிடவே அவர்களுடன் ஹெலனைப் பேசவிட்டு விட்டுத் தனியே நழுவினாள் அவள். அவளுக்கு விஜயேந்திர ஜபம் செய்ய வேண்டியிருந்தது.

மறுநாள் திருமணம் என்பதால் அன்று மட்டும் மூன்று தோழியரும் ஹெலன் வீட்டிலேயே தங்குவதாக ஏற்பாடு.

கல்யாணச் சந்தடியில் இருந்த வீட்டுப் பகுதியை விட்டு, செழித்து வளர்ந்திருந்த தோட்டத்தின் பின்புறம் சென்று அமர்ந்து கொண்டாள் ஜீவரேகா.

மனது விஜயன் ஜபம் செய்தது.

இத்தனை தரம் கடவுளை நினைத்திருந்தால் அவர் கூட எதிரில் வந்து நின்றிருப்பார் என்று அவள் வேடிக்கையாக எண்ணமிடுகையிலேயே, "ஜீவரேகா" என்ற அழைப்புடன் விஜயேந்திரன் எதிரே வந்து நிற்கவும் தூக்கி வாரிப் போட்டது அவளுக்கு.

அவசரமாக எழ முயன்று அவள் தடுமாற, அவன் விழுந்து விடாமல் பற்றி, லேசாக அணைத்தாற்போல் அவன் நின்றபோது, ஹெலன் சொன்ன ஜாக்கிரதையின் பொருள் புரிந்தாற்போலத் தோன்றிற்று.

ஆனால் விலகத் தோன்றாமல் அவள் நிற்க, அவனே லேசான சிரிப்புடன் அவளை விடுவித்தான்.

"தனிமையில் என்ன பாராயணம்" என்று இயல்பாக பேச முயன்று கேட்டான் அவன்.

'என்ன பாராயணம்.... விஜயன் பாராயணம் தான்' என்று அவள் சொன்னால் அவனுக்கு எப்படி அதிர்ச்சியாக இருக்கும் என்று எண்ணிப் பார்க்கையில் அன்று சிரிப்பு வந்தது ஜீவரேகாவுக்கு.

ஆனால் இவ்வளவு எளிதாகப் பழம் கையில் வந்து விழுந்துவிட்டதே என்று எக்களிப்பாய் இருந்திருக்கும் என்பது இன்றைய புத்தி வந்த ஜீவரேகாவுக்குப் புரிந்தது.

ஆனால் அன்றைய ஜீவரேகா அசட்டுப் பெண் ஆயிற்றே.

ரொம்பவும் கெட்டிக்காரத்தனமாக நடந்து கொள்வதாக எண்ணிச் சிரிப்பை மறைத்து, "இந்த நேரத்தில் இங்கே என்ன

காரியமாய் வந்தீர்கள்? அங்கே பார்ட்டி வேறு இருக்குமே" என்று அமுத்தலாகக் கேட்டாள்.

"போரடித்தது" என்றவன் சற்றே அவள் முகத்தை ஊடுருவி விட்டு, "நிலவொளியில் உன் முகம் வெள்ளியில் வார்த்தது போல இருக்கிறது" என்றான் மிக மிருதுவான குரலில்.

வெள்ளி உருகிப் போயிற்று.

வேடிக்கையாகப் பேசுவதாக நினைத்துக் கண்ணை விரித்து, "தெரியாதா உங்களுக்கு, கோயில் சிலைபோல நான் வெள்ளிக் கவசம் போட்டிருக்கிறேனாக்கும்" என்று சிரித்ததும், நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டு இருந்ததும் இன்று கசந்தாலும் அன்று இனிப்பாய் இருந்தது.

மறுநாள் திருமணத்தன்று அசட்டுத்தனத்தின் உச்சியை ஜீவரேகா வெற்றிகரமாகச் சென்றடைந்தாள்.

மறுநாள்-திருமண நாளுக்குரிய பரபரப்புடன் புத்தம் புதிதாய் வளர்ந்த காதலின் நெகிழ்வும் சேர்ந்து கொள்ள ஜீவரேகா தன்னை மறந்திருந்தாள்.

திருமணச் சடங்குகளின் முடிவில் ஆல்பர்ட்டும் ஹெலனும் ஒருவரை ஒருவர் முத்தமிட்டுக் கொண்டபோது அதை எதிர்பார்த்திராத அவள் இனிமையாய் வெட்கமாய் அதிர்ந்தாள்.

தன்னை அறியாமல் அவள் பார்வை விஜயேந்திரனிடம் ஓட, அவனும் அவளையே - குறிப்பாக அவளது உதடுகளையே பார்த்துக் கொண்டிருப்பதை அறிந்து முகம் சிவந்து தலை குனிந்தாள்.

பின்னரும் அவனது விழுங்கும் பார்வை தொடரவும், கொஞ்ச நஞ்சம் மிச்சமிருந்த மூளையும் கிறங்கிப் போயிற்று.

அதனால் மட்டும்தானா அல்லது திருமணத்தின் பிறகு நடந்த பார்ட்டியில் பழக்கலவை ரசம் என்று அவன் மீண்டும் மீண்டும் கொணர்ந்து தந்தது வேறெதுவுமா?

மற்றபடி அவள் தலை அப்படிக் கிறுகிறுத்துப் போக முடியுமா?

அதுவும் 'ஜாக்கிரதையாக இரு' என்று ஹெலன் எச்சரிக்கை செய்த பிறகும்கூட?

அப்போதில்லாத சந்தேகம் இப்போது வந்தது.

இல்லையென்றால் பழக்கமற்ற அந்த நடனத்தில் பங்கெடுத்து விஜயனைத் தொட்டு, தொடவிட்டுத் துணிந்து ஆடியிருப்பாளா?

எல்லோருமே ஆடுவதும் குடிப்பதும் கொறிப்பதுமாக இருக்கவே தன் செயல் சரியா, தவறா, தன் பழக்க வழக்கங்களுக்கு ஒத்ததா என்றெல்லாம் எண்ணக்கூட அன்று அவளுக்குத் தோன்றவில்லை.

இரவு வெகுநேரம் ஆனபிறகு அவளது ஓட்டல் அறைக்கு அவளை அழைத்துச் சென்றான் அவன்.

பிறகு நடந்த தவறுக்கு... தப்புக்கு... இல்லை பெரும் குற்றத்துக்கு யார் பொறுப்பு?

அறைக் கதவை அவன் திறந்துவிட்டபின் இவள் உள்ளே சென்று, 'குட்நைட்' சொல்லி முடித்திருக்கலாம்.

அல்லது அவனே, 'கதவை உள்ளே பூட்டிக்கொள்' என்று சொல்லிவிட்டுச் சென்றிருக்கலாம்.

அவனுக்கு விடை கொடுத்து அனுப்ப மனம் இல்லாததைச் சொல்லாமல் சொல்லுவதுபோல, ஒன்றுமே கூறாமல், சன்னல் அருகே சென்று திரையை இழுத்துவிடாமல் அவள் இருந்திருக்கலாம்.

அவனும் அவளைத் தொடர்ந்து வந்து தோளைப் பற்றி அவளது பின்னங் கழுத்தில் தன் சூடான உதடுகளைப் புதைக்காமல் இருந்திருக்கலாம்.

ஆனால் இந்த 'இருக்கலாம்' கள் எல்லாமே அல்லவோ இல்லாமல் போய்விட்டன.

பின்னரும்கூடக் கிறுகிறுத்துப் போன அந்த நிலையைத் தொடராமல் அவளைவிட்டு விலகிச் செல்லத்தான் விஜயன் முயன்றான். அல்லது அவள் நிலையறிந்த குற்றத்தில் தன் பங்கை மட்டுப்படுத்திக்காட்ட அவன் புரிந்த சாகசமோ?

விஜயன் பிரிந்து செல்வதைச் சில வினாடிகள் பல்லைக் கடித்துச் சகித்து, நின்ற ரேகா அவன் கதவை அடைத்து விட்டதை உணர்ந்ததும் தன்னை மறந்தாள்.

சட்டெனத் திரும்பி 'விஜய்' என்ற கூவலுடன் அவனை நோக்கி வெட்கம் கெட்டு ஓடலானாள்.

பாதித் தூரத்திலேயே அவனும் அதே வேகத்துடன் அவளை எதிர்கொண்டான்.

அன்றிரவு அவன் அந்த அறையைவிட்டு போகவில்லை.

* * *

'நான் எப்படி இந்த முட்டாள்தனத்தைச் செய்தேன்?'

'அதையும் கொஞ்சம்கூடக் குற்ற உணர்ச்சியே இல்லாமல் எப்படிச் செய்தேன்?'

எண்ணி எண்ணி எண்ணில் அடங்காத எத்தனையோ முறைகள் மறுகி மறுகி வேதனைப்பட்டது போலவே அன்றும் துடித்தாள் ஜீவரேகா.

அத்தோடு பிழை புரிந்தது அன்றுமட்டும்தானா?

அடுத்த இரு தினங்களையும் ஒரு குட்டித் தீவில் தனிமையாக அமைந்திருந்த பழைய கால அரண்மனை ஒன்றில் அவர்கள் கழித்ததைப் பற்றி என்ன சொல்வது?

ஓரிரு சமயங்களில் விஜயேந்திரன், 'சற்று சீரியசாகப் பேச வேண்டும்' என்று தொடங்கிய போதும் கூடக் 'காதலைப் பற்றித்தானே' என்று கண்ணை விரித்து, உதட்டைக் குவித்து அவனை அழைத்ததையும், அவனும் பேச்சைக் கைவிட்டு நெருங்கியதையும் எத்தனை தடவைகள் எண்ணி அவமானப்பட்டிருப்பாள்?

'ஜீவா' என்று அவளை அவன் செல்லமாக அழைத்ததும் தன்னை 'விஜி' என்று அழைக்கச் சொல்ல, அதில் உச்சி குளிர்ந்து போய் 'விஜி விஜி' என்று உருப்போட்டபடி அவன் கழுத்தை கட்டிக்கொண்டு தொங்கியதும் சை....

இன்றைக்கு உடல் கூசிக் குறுகியபோதும், அன்று சொர்க்க சுகமாக அல்லவே இருந்தது.

ஊருக்குப் போய் பெற்றோருடன் பெண் கேட்க வருவதாக அவன் சொன்னதை அப்படியே நம்பினாளே.

அவள் ஏமாற்றக் கூடும் என்று கணமும் கருதவில்லையே...

அம்பிகாபதி அமராவதிபோல, ரோமியோ ஜூலியட் போலக் கண்டவுடன் கொண்ட தெய்வீகக் காதல் என்று பெருமிதப்பட்டாளே....

அந்த தெய்வீகக் காதல் ஒன்றுகூட நிறைவேறியதில்லை என்பதை ஏன் மறந்தாள்?

தான் இருக்கும் உலக நினைவே இல்லாமல் ஆகாயத்தில் மிதந்தபடி வந்ததும் வராததுமாகத் தன் உள்ளத்தை எல்லாம் கொட்டி அவனுக்கு ஒரு கடிதம் எழுதினாள்.

தினமும் அவனது பதிலை எதிர்பார்த்து வாயிலிலேயே நின்றாள்.

ஒரு வாரம் கழிந்தபின் இரத்தினச் சுருக்கமாக ஒரு கடிதம் அவனிடமிருந்து வந்தது.

விஜயனுடைய தந்தைக்கு திடீர் என்று உடம்பு சரியில்லையாம். தொழிற்சாலையில் முழு வேலையையும்

கவனித்து, மருத்துவமனைக்கும் சென்று பார்த்துக் கொள்ள வேண்டியிருப்பதால் எழுத நேரமில்லையாம்.

காதலைப் பறைசாற்றும் ஒரு வார்த்தைகூட இல்லாமல் வெறும் கையெழுத்தோடு முடிந்த கடிதத்தில் ஜீவரேகாவுக்குப் பெரிதும் ஏமாற்றமே,

உடனேயே பெற்றவருக்கு உடம்பு சரியில்லாத நேரத்தில் காதல் கவிதையா எழுத முடியும் என்று உருகிப் போனாள்.

"ஜீவி" என்ற அழைப்பில் மட்டுமே ஆறுதலும் பெற்றாள்.

வருத்தம் தெரிவித்து அவளும் ஒரு பதில் எழுதினாள்.

பிறகு... பிறகு... அந்த இரண்டு நாள் உறவின் பலன் புரியத் தொடங்கியபோது கூட முதலில் அவளுக்கு மகிழ்ச்சியாகத் தான் இருந்தது.

காதலின் கனி அல்லவா?

அந்த மகிழ்ச்சியோ தாயிடம் சொல்ல வாயெடுத்த போதுதான் இது அப்படி மகிழ்ச்சியோடு அறிவிக்கக்கூடிய விஷயம் அல்ல என்பது புரிந்தது.

அந்த நேரத்தில் வேறு எதையோ சொல்லித் தாயாரைச் சமாளித்துவிட்டுத் தனிமையாக இருந்து யோசித்தாள்.

கல்யாணம் என்கிற முத்திரை இல்லாமல் கருவை ஏந்தி நிற்பவளைக் காதல் தேவதை என்று பாராட்டமாட்டார்கள். அதற்கு வேறு அசிங்கப் பெயர்கள்தான் அளிக்கப்படும்.

அப்போதும்கூட அவள் அவனைத் தவறாக எண்ண வில்லை.

இனி அவசரமாக வேலை நடக்க வேண்டுமே என்ற எண்ணத்துடன் அவனுக்கு விஷயத்தைத் தெரியப்படுத்தி, திருமணத்துக்கு விரைவாக ஏற்பாடு செய்யுமாறு எழுதினாள்.

சுவரில் அடித்த பந்தின் விரைவுடன் இரண்டே தினங்களில் அவனிடமிருந்து வந்த பதில் கொஞ்சமும் அவள் எதிர்பார்த்த படி இல்லை.

அவனுடைய தந்தைக்கு உடல்நலம் தேறத் தொடங்கிய சமயத்தில் 'ஸ்ட்ரோக்' ஏற்பட்டுவிட்டதாம். பெரிய தங்கையின் திருமணம் விரைவில் நடக்கவேண்டியிருக்கிறதாம். தொழிற் சாலை வேறு மிகவும் மோசமான நிலையில் இருப்பதால் அதை சீர்செய்யப் பெருமளவு பணமும் முழு நேர வேலையும் தேவைப்படுகிறதாம். அதையும் சமாளித்துக் குடும்பத்தினர் வாழ்ந்த தரம் குறையாமல் பராமரித்து இன்னோரன்ன வேலைகளில் 20 மணி நேரம் வேலை செய்கிறானாம்.

இந்த நிலையில் சொந்தப் பிரச்னை குறித்து நினைக்கக் கூடிய நிலையில் அவன் இல்லையாம். அதனால் இதுபற்றி யாரிடமும், பெற்ற தாயிடம் கூடச் சொல்லவில்லையாம்.

மேலும் தன் சுகம் என்பதையே அடியோடு தியாகம் செய்தாக வேண்டிய இக்கட்டில் நிற்பதாகவும் எழுதியிருந்தான்.

அவனுடைய நிலையை ஜீவரேகா புரிந்துகொண்டு அதற் கேற்ப நடந்துகொள்வாள் என்பதில் முழு நம்பிக்கையோடு இருப்பதாக இடைச்செருகல் வேறு.

ஜீவரேகா பிரமித்துப் போனாள்.

இதற்கு என்ன அர்த்தம்?

இவன் சகோதரியின் திருமணத்தைக் குறைவின்றி நடத்தி முடித்து, தந்தை உடல்நிலை தேறி, தொழிற்சாலையைச் சீர்படுத்தி, குடும்பத்தினர், தொழிலாளர், பணியாட்கள் அனைவரையும் குறைவின்றிப் பராமரித்து இதை எல்லாம் முடித்து வரும்வரை இவன் பிள்ளை வளராமல் சும்மா இருக்குமா?

இதில் யாருடைய நிலையை யார் புரிந்துகொள்வது?

அவளுடைய நிலைமை பற்றித் தேறுதலாகக்கூட ஒரு வார்த்தை எழுதவில்லை.

கூடவே சொந்தப் பிரச்சினை, தன் சுகம், தியாகம் என்ற சொற்களெல்லாம் ஏனோ அவளைப் பயமுறுத்தின.

செய்வது அறியாமல் அவள் குழம்பிக் கொண்டிருந்த போதுதான் அந்த அழைப்பு - நாற்புறமும் மஞ்சள் தடவி யிருந்த அந்த அழைப்பு வந்தது.

சும்மாவே தலை சுற்றல் தொடங்கியிருந்த ஜீவரேகா, அதைப் பார்த்ததும் மயங்கி விழுந்தாள்.

நல்லவேளையாக அழைப்பிதழ் வந்த சமயத்தில் சரஸ்வதி அம்மாள் வெளியே சென்றிருந்தாள்.

தன் நினைவற்று விழுந்த ஜீவரேகா, சற்று நேரத்தில் தானாகவே தெளிந்து எழுந்தாள்.

கொஞ்சம் பானைத் தண்ணீரைப் பருகி ஆசுவாசப்படுத்திக் கொண்டு மீண்டும் அதைப் பிரித்துப் பார்த்தாள்.

திருமண அழைப்புதான்.

திருமணம் விஜயேந்திரனுக்குத்தான்.

அவனுக்கும் யாரோ ஒரு தாராதேவிக்கும்

திருமண விழாவுக்கு ஒரு வாரம் முன்னதாக நடக்கும் நிச்சயதார்த்தத்துக்கு வந்து சிறப்பிக்குமாறு அழைத்திருந் தார்கள்.

இது என்ன அநியாயம் என்ற ஆத்திரம் தோன்றும் போதே அந்தப் பெண்ணின் பெயர் மனதை உறுத்திற்று. எங்கேயோ எப்படியோ பரிச்சயமான பெயர்.

ஹெலன் ஏதோ சொன்னாளே அந்தத் தாரா கூட என்று...

மீண்டும் அழைப்பிதழைப் பார்த்தாள்.

பெண்ணுடைய தந்தையின் பெயரை அடுத்து இருந்த தொழில்கள் அவரது செல்வ நிலையை எடுத்துக் காட்டின.

அவள் கோடீசுவரியாக இருக்கலாம்.

அதற்காக?

இந்தக் குழந்தை விஜயேந்திரனுடையது இல்லை என்று ஆகிவிடுமா?

ஒருகால் அவளுடைய கடிதம் அவனுக்குக் கிடைக்க வில்லையோ?

ஆனால் இந்தக்கரு உருவாகாமலே இருந்திருந்தால் கூட அவர்கள் இருவரும் பழகியது ஒன்றுமில்லை என்றாகிவிடுமா?

அவளால் ஒப்ப முடியவில்லை.

இந்த அழைப்பிதழைக்கூட அவளால் நம்ப முடியவில்லை.

இதில் எங்கோ, ஏதோ தவறு இருக்கவேண்டும் என்று வெகுவாகத் தோன்றியது.

அது என்னவென்று அறிந்தே ஆகவேண்டும் கட்டாயமாய்.

வாழ்நாளில் முதல் முறையாகப் பெற்றோரிடம் பொய்யளந்துவிட்டுக் கிளம்பினாள்.

சினேகிதி ஒருத்தி சீரியஸாக இருப்பதாகவும், மூன்று தோழியர் சேர்ந்து திருச்சிவரை சென்று பார்த்துவிட்டு வரப் போவதாகவும் சொன்னாள்.

சில நாட்களாகவே நீ நன்றாயில்லை, வேண்டாம் என்று தாயாரின் ஆட்சேபணைகளைக் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை.

'ஜாக்கிரதை' என்ற தந்தையையும் கவனித்தாள் இல்லை.

தஞ்சைக்குச் சற்று முன்னதாக இருந்த அந்தச் சின்ன ஸ்டேஷனில் இறங்கிய ஜீவரேகா சற்று நேரம் மலங்க விழித்தாள்.

விமானத்தில் திருச்சி சென்று அங்கிருந்தோ, அல்லது ரயிலில் தஞ்சை வரை சென்று அங்கிருந்தோ காரில் சென்று விடுவது வழக்கம் என்று விஜயேந்திரன் சொன்னது அவளுக்கு நினைவு வந்தது.

பணக்கார வர்க்கம் என்று முதல் முறையாகக் கசப்பு மனதில் ஓடியது.

அங்கங்கே தென்பட்ட சிலரிடம் விசாரித்தபோது ஒன்று போல் 'கல்யாணத்துக்கு வந்தீங்களா?' என்று கேட்டார்கள் வழிகாட்டினார்கள்.

"ராஜேந்திர பூபதி ராஜா வீட்டுக் கல்யாணம் என்றால் சுற்றுப் பட்டி எல்லாம் அதிருமே... பெரியவர் உடல் நிலைக்காக அடக்கிச் செய்கிறார்கள்..."

காற்றுப் போக்கில் காதில் விழுந்தது இது.

ஜீவரேகாவின் தலை சுழன்றது.

இன்று நிச்சயதார்த்தம் என்றுதானே அழைப்பிதழில் குறித்திருந்தது. கல்யாணம் என்றால் எப்படி?

"ஊருக்குப் புதிதா, குழந்தை?" இதமாக ஒரு குரல் விசாரித்தது.

ஜீவரேகா நிமிர்ந்து பார்த்தாள்.

நரையோடிக் குறைந்திருந்த தலை மயிரும், கண்ணாடியும், முன் வளைந்த மூக்கும், மெல்லிய உதடுகளும் குரலுக்குப் பொருந்தாது முரண்பட்டன.

"பூபதி ராஜா வீட்டுக்கா, அம்மா? அங்கே கல்யாணப் பொண்ணுக்கு சினேகிதியா, அல்லது பையனுக்குச் சொந்தமா?

யாரைப் பார்க்க வேணும் என்று சொன்னாயானால் அழைத்துப் போகிறேன்" என்றார் அவர் அதே இதக்குரலில்.

சிறு சந்தேகத்துடன் நோக்கியவளைப் பார்த்துச் சிரித்தார். "என்ன விஷயம்மா? ஓகோ. இந்த ஊரில் நீ சந்தேகப்படுகிற மாதிரி இடமெல்லாம் கிடையாது. தாயே இன்னமும் நம்பிக்கை இல்லையானால் உன் விருப்பம் போலச் செய்யம்மா. நீயாகத் தனியே போனால் உள்ளே நுழைந்து தம்பியையோ, பாப்பாவையோ பார்ப்பது ரொம்பக் கஷ்டம் ஆயிற்றே என்று நினைத்தேன். எனக்குக் கூடச் சிரமம்தான். வந்திருப்பவர்கள் எல்லாம் உயர்மட்டத்து ஆட்கள் ஆயிற்றே."

"எனக்கு விஜயனைப் பார்க்கவேண்டும்?"

''அய்யோ... அய்யோ...'' என்று வாயில் போட்டுக் கொண்டார் அவர். ''சின்ன ராஜான்னு சொல்லும்மா. இல்லைன்னா அடித்து விரட்டிவிடுவார்கள். குறைந்தது புதுமாப்பிள்ளை என்றாவது சொல்லு. அதுசரி, நீ சாப்பிட்டாயிற்றா? காலையில் ஐந்தரைக்குத் தொடங்கிய பந்தி நள்ளிரவு வரை நடக்கும். யார் வேண்டுமானாலும் சாப்பிடலாம். ஏதோ ஒரு வித தருமம். நீயும் சாப்பிடுகிறாயா?'' என்று விசாரித்தார்.

உதடு அழுந்த மறுத்தாள் அவள்.

"வேண்டாமா? சரி வா. உன்னை ஓர் இடத்தில் கொண்டு விடுகிறேன். அவர்கள் மூலமாய்த் தம்பியைச் சந்திப்பது உன் சாமர்த்தியம்" என்று அவர் அவளை அழைத்துச் சென்ற இடம் தாராதேவி.

வைரங்கள் பளபளக்க வந்தவள் அவரைப் பார்த்ததும் முதலில் அடையாளம் புரியாதவளாய்ப் புருவங்களைச் சுருக்கினாள்.

"யார்... ஓ நல்லசிவனா? என்ன சிவன். சவுக்கியமா? தன் அலுவலகத்தில் அத்தனை பேருக்கும் கழுத்துமுட்ட வேலை என்று அத்தான் சொன்னார். நீரானால் இங்கே சுற்றுகிறீரே" என்று அதிகாரக் குரலில் வினவியவள் ஜீவரேகாவைக் கண்டதும், "யாரிந்தப் பெண்?" என்று விசாரித்தாள்.

"சின்ன ராஜாவைப் பார்க்க வேண்டும் என்றாள், நிச்சயதார்த்தம் முடிந்ததிலிருந்து அங்கே மினிஸ்டர் கார் வந்திருப்பதால் பாதுகாப்பு அது இது என்று அது வேறு கூட்டம். எனக்குக்கூட போலீஸ்காரர்கள் வசதி கவனிப்பது தான் இன்று வேலை. ஹி.. ஹி நீங்கள் இந்தப் பெண்ணைக் கவனித்துக் கொண்டால் நான் போய் வேலையைப் பார்ப்பேன்..." என்றார் அந்த நல்லசிவன்.

"முதலில் வேலையைப் பாருங்கள். ம்" என்று அவரை அனுப்பிவிட்டு, ஜீவரேகாவின் பக்கம் திரும்பினாள் அவள்.

ஒருதரம் ஜீவரேகாவை ஏற இறங்கப் பார்த்துவிட்டு ஒரு சோபாவில் ஒயிலாக அமர்ந்தாள்.

"யாரம்மா, நீ, எதற்காக அத்தானைப் பார்க்க வேண்டும்?" என்று விசாரித்தாள்.

இவளிடம் என்னவென்று சொல்வது என்று ஜீவரேகா தயங்கவும் ஒரு பெருமூச்சுடன், "அத்தானின் காதல் விளையாட்டுகளில் மயங்கி ராணியாகக் கனவுகண்ட இன்னொரு அப்பாவியா?" என்றாள் அவள் சலிப்பாக.

## 3

சில நாட்களாகவே ஜீவரேகாவுக்குச் சரியாகச் சாப்பாடு இறங்கவில்லை.

அழைப்பிதழைக் கண்ட பிறகோ உணவு அடியோடு செல்லவில்லை.

சரியான ஆகாரமின்றிப் பலவீனப்பட்டிருந்த உடம்பு இப்போது தாராதேவியின் பேச்சில் உதறத் தொடங்கியது.

பெருமுயற்சி செய்து மனதை அமைதிப்படுத்திக் கொண்டு கேட்டாள், "அப்படிப்பட்ட பட்டாம்பூச்சி மனிதரை நீங்கள் ஏன் மணம் புரிய வேண்டும்?" என்று.

கேட்ட மறுகணமே, "நீ யாரடி கேட்பது?" என்று இவளும் விரட்டி அடித்தால் என்ன செய்வது? வேறு எப்படி விஜயனைப் பார்ப்பது என்று பதறிப் போனாள் ஜீவரேகா.

யோசனையோடு ஜீவரேகாவை நோக்கினாள் அவள். பிறகு தொடங்கினாள். "இதெல்லாம் சொன்னால் உனக்குப் புரியுமோ, என்னவோ? சொல்ல வேண்டிய அவசியம் கூட இல்லைதான். ஆனாலும்... சரிதான், கேட்டுக்கொள். அத்தானுக்கும் எனக்கும் திருமணம் என்பது சிறு வயதிலேயே முடிவான விஷயம். மாமா 'ஸ்ட்ரோக்' விஷயம் தெரியும் அல்லவா? அவருக்காகத் தான் இப்போது அவசரமாகத் திருமணத்தை நடத்தப் போவது கூட, இப்போது நான் மறுத்தால் மாமாவின் உயிரே போய்விடும்.... அத்தோடு அத்தானுடைய தொழில்களுக்காக என் அப்பா நிறையப் பணம் கொடுத்திருக்கிறார்; நிறைய என்றால் ஆயிரத்தில் கணக்கிடாதே. பத்து லட்சம் ரூபாய். எனக்கு சீதனம் போலக் கொடுத்ததுதான்... இதை வேறு வகையில் வசூல் பண்ணவும் முடியாது..."

"அதற்காக? பணத்துக்காகப் பெண்ணைப் பலி கொடுப்பாரா உங்கள் தந்தை?" என்று சூடாகக் கேட்டாள் ஜீவரேகா.

விசித்திரப் பிராணியைப் பார்ப்பதுபோல அவளைப் பார்த்தாள் தாராதேவி. "பலியென்ன வந்தது? ஓ... உன்னோடெல்லாம் பழகியதைச் சொல்கிறாயா? பணக்காரப் பிள்ளைகள் என்றால் உன் போலப் பெண்கள் மேலே விழுந்து பழகுவதும், இவர்கள் பல மலர் நாடுவதும் சகஜம்தானே.

கல்யாணம் ஆனபிறகு ஊர் மேயாமல் பார்த்துக் கொள்வது மனைவியின் சாமர்த்தியம். அத்தானும் இனி ஒழுங்காக இருப்பதாகச் சத்தியம் செய்திருக்கிறார்."

"பணக்காரப் பிள்ளை என்கிறீர்கள், உங்கள் தந்தையிடம் அந்தப் பணக்காரர் பத்து லட்சம் கடன் வாங்குவானேன்?" என்று கேட்கும் போதே உள்ளூரக் கணக்கு விரிந்து மிரட்டியது.

'பத்து லட்சம் என்றால் பத்து நூறு ஆயிரங்கள் அடேயப்பா' எவ்வளவு பணம்

"உனக்குத் தெரியாதா, மாமாவுக்கு ஸ்ட்ரோக் வந்தது. பாங்கில் ஓ.டி. எல்லாம் கட்டிவிடச் சொன்னது... என் அப்பா மட்டும் உதவியிருக்காவிட்டால் எல்லாம் போய் அத்தான் குமாஸ்தா வேலை பார்க்க வேண்டிய நிலைக்குப் போயிருப்பார். ஏன், உதயா, வித்யா இரண்டு பேரும் கூட அம்போதான். அவர்களும் தன் வேலையைத் தானே செய்து கொண்டு கிடக்க வேண்டி இருந்திருக்கும்" என்றாள் அவள் இளக்காரமாய்.

"தன் வேலையைத் தானே செய்வது ஒன்றும் கேவலம் அல்ல" என்றாள் ஜீவரேகா ஆத்திரமாக.

ஒருகணம் அவளை வியந்து நோக்கி விட்டுத் தாரா, "உனக்கு அப்படித்தான் தோன்றும். போகட்டும், உன் பெயர், ராதியா, ஷீலுவா, நளினா, அல்லது ஜீவியா? எதுவென்று சொல். எல்லோருக்கும் அழைப்பு அனுப்பியிருப்பதால் நாலு பேருமே வரக்கூடும் என்றார் அவர். சொல்லு, உன் பெயரைச் சொன்னால் அவர் சொன்னபடி, உனக்குச் செய்ய வேண்டியதைச் செய்து விடுகிறேன்" என்றாள் மீண்டும் பழைய அலுப்புக் குரலுக்கு மாறி.

தாராதேவி வேகமாக அடுக்கிய பெயர்கள் - அதிலும் செல்லச் சுருக்கங்கள் - முக்கியமாகத் தன் பெயரின் ஜீவிச் சுருக்கம் ஜீவரேகாவை அதிர வைத்தது.

"நீ என் 'ஜீவி' நான் 'உன் விஜி" என்று கொஞ்சிய அவன் மட்டும் தானே இன்று வரையில் அவளை 'ஜீவி' என்று அழைத்த ஒரே ஒரு ஜீவன்.

தங்கள் உறவு பற்றி யாரிடமும் சொல்லவில்லை என்றவன் இந்தச் செல்லப்பெயர் வரைக்கும் இவளிடம் சொல்லியிருக்கிறானே.

இதை மட்டுமா? ராதி, நளினி, ஷீலு...

"இ.. இதெல்லாம் யார் பெயர்கள்?...?" என்றாள் ஈனசுரத்தில்.

"தான் பழகிய பெண்கள் என்று அத்தான் சொன்னார். தன்னிடம் வந்தால் தானே பார்த்துக் கொள்வதாயும், என்னிடம் கலகம் செய்ய முயன்றால் நானே கவனித்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறியிருந்தார். இப்போதைக்கு இந்த நாலு பேரும்தான் என்றாரே. உன் பெயரைச் சொல்ல மறந்து விட்டாரா? பரவாயில்லை. உன் பெயரையும் உனக்கு எவ்வளவு தேவை என்பதையும் சொல்லு. நான் தந்து விட்டு அத்தானிடம் கூறிவிடுகிறேன்."

"நான்... நான்..." ஜீவரேகாவின் குரல் விக்கி உடைந்தது.

"ஓர் இருபது போதுமா? இருபது என்றால் நூறல்ல ஆயிரத்தைச் சொல்லுகிறேன்" என்று எழுந்து உட்புறம் நோக்கி நடந்தாள் தாராதேவி.

"இதற்கே இரண்டு லட்சம் ஓடிவிடும் போல இருக்கிறது. சே. மான ஈனம் இல்லாததுகள்" என்ற அவளது முணுமுணுப்பு ஜீவரேகாவின் காதுகளில் தெளிவாகவே விழுந்தது.

உள்ளே சென்றவள் திரும்பி வருமுன் ஜீவரேகா வெளியேறி விட்டாள்.

ரயில் நிலையத்தில் உடனடியாக, ரயில் ஏதும் இல்லை என்றார்கள்.

கிடைத்த பஸ்ஸில் ஏறி திருச்சியை அடைந்தாள்.

சென்னைக்குச் செல்லும் ரயிலில் ஏறித் தன் இடத்தில் சாய்ந்தாள்.

பிறகு....

பிறகு அவளது நெஞ்சு பிளந்து போயிற்று.

ஆயிரம் ஆயிரம் ஆசைக் கற்பனைகளும் தூள் தூளாய் நொறுங்கிப் போயின.

கொச்சிக்குக் கிளம்பியதிலிருந்து இனிக்க இனிக்க அந்த ஏழுநாட்கள் - அவை கனவோ என்ற பிரமைகூட ஒரு சமயம் உண்டாயிற்றே.

கனவாக இருந்திருந்தால் எவ்வளவு நன்றாய் இருக்கும்.

ஆனால் எதுவும் கனவல்லவே.

அவனைக் கண்டது, காதல் கொண்டது, களித்தது, முகமறியாத ஒருத்தியிடம் அவமானப்பட்டுத் திரும்புவது - இதில் எதுவுமே கனவில்லையே.

எவ்வளவு இலகுவாகத் தன்னை இழந்தாள்!

அதுவும் பார்த்து நாலு முழு நாட்கள் ஆகியிராத ஒரு அன்னியனிடம்!

அவன் தான் என்ன நினைத்திருப்பான்?

என்ன நினைத்திருப்பான் என்பதைத்தான் அவள் - அவனுடைய வருங்கால மனைவி சொன்னாளே - மான ஈனம் இல்லாததுகள்.

இதயம் கிழிபட்டது; குத்தப்பட்டது; நைந்தது.

ஆனால் நிற்காமலே துடிக்கிறதே என்பதுதான் அவளுக்கு வருத்தம்.

இனி?

ஒன்றுமில்லாத சூனியமாகவும் அடிநுனி காணமுடியாத பூதாகாரமாகவும் எதிர்காலம் அவளை மருட்டியது.

நாளைக் காலைப் பெற்றோரை எதிர்கொண்டாக வேண்டுமே.

பெற்றவர்கள்!

அந்த ஏழு நாட்களும் அவளால் அடியோடு மறக்கப்பட்டிருந்த, அவளுடைய அப்பாவிப் பெற்றோர்கள்,

மகளிடம் மகாநம்பிக்கை அவர்களுக்கு.

எங்கள் தங்கம் பொய்கூடச் சொல்லமாட்டாள் என்பார்கள்.

அவர்களிடம் என்ன சொல்வது?

இந்தப் பெருந்துயரத்திலிருந்து அவர்களை எப்படிக் காப்பது?

இதுவரை நடந்தது எதையும் அவர்கள் அறிந்திருக்க வில்லை.

இனியும் மறைத்துவிட்டால் என்ன?

கொஞ்ச காலம் கழித்துத் 'திருமணம் செய்துகொள்' என்று ஒரு பிரச்னை கிளம்பக்கூடும்; அவளைப் பொறுத்தவரை இனி யாரையும் மணப்பது என்பது நடவாத விஷயம்.

இதுவரை நடந்ததை மறந்தோ, மறைத்தோ இன்னொரு ஆணை ஏற்பது அவளால் இயலாது.

எனவே அந்தப் பிரச்சினை கிளம்பும்போது முடியாது என்று தீர்மானமாக மறுத்துவிட்டால் மீறி அவளை மிரட்டி அடக்கும் தன்மை உடையவர்கள் அல்ல அவர்கள்.

எனவே இந்த அவமானத்தை அவர்களுக்குத் தெரியாமல் மறைத்துவிட வேண்டியதுதான் என்ற முடிவுக்கு அவள் வரும்போதே முக்கியமான ஒன்று உறைத்தது.

மறைக்க முடியாதே!

தாங்குகிறவளின் விருப்பு, வெறுப்பைப் பற்றிய அக்கறையே இல்லாமல் அது தன்பாட்டில் வளர்ந்து கொண்டே இருக்குமே!

நெஞ்சுமுட்டும் துயரத்தை விழுங்கி மறைக்க முடியும். ஆனால் வயிறு முட்டும் பிள்ளையை மறைப்பது சாத்தியம் இல்லையே.

அழித்துவிடலாம். சுவடே தெரியாமல் ஒழித்து விடலாம். இந்தக் காலத்தில் மிகவும் எளிதானது.

ஆனால்,

யோசிக்க முடியாமல் ஓயாது குறுக்கிட்ட வேதனையை முயன்று ஒதுக்கி முடிந்தவரை யோசித்து ஒரு முடிவுக்கு வந்தாள்.

இரவு முழுவதும் பொட்டுக் கண் மூடவில்லை-அது முடியவும் இல்லை.

காலையில் வீட்டை அடைந்தபோது வாயிலிலேயே எதிர்கொண்டார் தந்தை.

ஒரே பார்வையில், "என்னடாம்மா. ரயிலில் தூங்கவே இல்லையா?... அல்லது உன்... தோழிக்கு ஒன்றும் இல்லையே..." என்று பரிவோடு விசாரித்தார்.

இப்படி வளர்த்த பெற்றோருக்கு ஜீவரேகா எப்பேர்பட்ட கைம்மாறு செய்து இருக்கிறாள்!

நடுங்கும் உதடுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு "கொஞ்சம் உள்ளே வாருங்கள். அப்பா நான்... நான் ஒன்று சொல்லவேண்டும்" என்று அழைத்துச் சென்று கதவை உட்புறம் தாளிட்டாள்.

யோசனையாகப் பார்த்த தந்தையை, "அப்பா-பா" என்று கூப்பிட்டவள் மேலே பேச முடியாமல் திணறினாள்.

சட்டென மகளை நெருங்கித் தோளைத்தட்டி, "கண்ணம்மா, முதலில் சற்று ஆசுவாசப்படுத்திக் கொள். விஷயம் எப்பேர்ப்பட்டது என்றாலும் சமாளிக்க முடியாதது என்று ஒன்றும் கிடையாதும்மா; முதலில் ஏதாவது குடிக்கிறாயா? பிறகு பேசலாம்" என்று கனிவாகக் கூறி "சரசு" என்று குரல் கொடுத்தார்.

"இதோ காபி ரெடியாகிவிடும். ரயிலிலேயே பல் விளக்கி விட்டாயல்லவா, பாப்பா" என்று உள்ளிருந்து தாயின் குரல் கேட்டது.

பெற்றோரின் பரிவு மேலும் நெஞ்சை ரணமாக்க "இப்போதே... முதலில் சொல்லிவிடுகிறேன் அப்பா" என்றாள் மகள்.

ஆனால் சொல்லமுடியாமல் தவித்தபடி "அப்பா.... அப்பா, நான் தப்பு பண்ணிவிட்டேன். பெரிய ரொம்பப் பெரிய தப்பு அப்பா. ஆனால், அப்பா அதை நான் அப்போது தப்பு என்றே நினைக்கவில்லை அப்பா. ஆனால் அப்படி நினைக்காதது கூடத் தப்பு என்று இப்போதுதான் அப்பா.... அப்பா" தடுமாறினாள்.

என்னவென்று விண்டு சொல்லவும் இயலாமல், சொல்லாமல் விடவும் முடியாமல், அடைத்துக் கொண்டு வந்த நெஞ்சையும் தொண்டையையும் அழுத்தியபடி அவள் பேசியதை அந்தப் பெற்றவரால் தாள முடியவில்லை.

ஆனால் மகள் சொல்ல வந்தது புரியாமலும் போகவில்லை.

"ரேகா!" என்று அதிர்ந்து போனபோது அதை விடவும் மகளது துன்பம் புரிபட, அவளைப் பற்றித் தன் தோளில் சாய்த்துக் கொண்டார்.

"வேண்டாமடா கண்ணு. இவ்வளவு கஷ்டப்படுகிறாயே தங்கம். இதோ பார், தப்பு செய்வது மனித இயல்பு. அதற்குப் போய்... எல்லாவிதத் தப்புக்கும் ஏதோ ஒரு தீர்வு உண்டம்மா. எல்லாம் சமாளித்துக் கொள்ளலாம். முதலில் பயப்படாமல் இருக்கவேண்டும். அப்பா இருக்கிறேன் இல்லையா? தைரியமாக இரு கண்ணம்மா'' என்று மகளின் உடல் நடுங்குவதை உணர்ந்து தட்டிக் கொடுத்தார்.

''முடியவில்லையேப்பா'' என்று விம்மினாள் ரேகா. தொடர்ந்து, ''நான் செய்த தப்புக்கு மீள ஒரு வழியும் இல்லையேப்பா. அய்யோ, என்மேல் எவ்வளவு நம்பிக்கை உங்களுக்கு. எல்லாவற்றையும் படுநாசம் பண்ணி விட்டேனே. அப்பா, அம்மா, என்னைத் திட்டுங்கள் அப்பா; அடியுங்கள் அப்பா; கடவுள் கொடுத்த தண்டனைக்கு மேலாக நீங்களும் ஏதாவது தண்டனை கொடுங்கப்பா. அய்யோ, அப்பா என்னால் தாங்க முடியவில்லையே" என்று குமுறினாள்.

"அடிப்பது மட்டுமா? கொலையே செய்து விடுகிறேனடி, சண்டாளி" என்று வேகமாக வந்து மகளைப் பிடித்து ஓங்கி அறைந்தாள் சரஸ்வதி.

"ராட்சசி, பிசாசே, சனியனே ஒழிந்து போ, போ" என்று ஆங்காரத்துடன் மீண்டும் அவள் கையை ஓங்கியபோது சிதம்பரம் குறுக்கே வந்து மனைவியைத் தடுத்தார்.

"விட்டுவிடுங்கப்பா, அம்மா என்னை அடிக்கட்டும்பா" என்று கதறிய மகளைத் தன்புறமாய் இழுத்துக் கொண்டார்.

''இனி ஒரு விரல் மகள் மேல் பட்டால் நான் பொல்லாதவனாக இருப்பேன் ஜாக்கிரதை" என்று மனைவியை எச்சரித்தார்.

''ஆமாம். உங்களுக்கு மட்டும்தானே மகள். உங்களுக்கு மேலே உயிரைக் கொடுத்து பெற்றேனே. கடவுளே, எத்தனை கனவு கண்டேன். அத்தனையும் அரை நொடியில் அழிந்து போயிற்றே" என்று அழுதாள் சரஸ்வதி.

மனைவி அழுததும் மனம் இளகி, "அப்படி வளர்த்தவள் இப்போது மாறுவதா? அவளே தவியாய்த் தவிப்பது தெரிய வில்லையா? பெரிய தவறுதான் - ஆனால் குழந்தை குன்றிக் குமுறுவது புரியவில்லையா? சும்மாவே நொந்து கிடப்பவளை நீ வேறு தாக்குவதா? இந்த வேதனையில் அவள் எத்தனை நாள் சாப்பிடக்கூட இல்லாமல் இருக்கிறாளோ?" என்று வருத்தத்துடன் உரைத்தார்.

தாய் மனமல்லவா?

ஓடிவந்து மகளை அணைத்து "பட்டினியாம்மா கிடந்தாய்? என் தங்கம்? அன்றைக்கே உன் முகம் சரியாய் இல்லையே, சினேகிதி உடம்புக்காக என்று நினைத்தேனே கடைசியில் உன் கதிக்காக என்று தெரியாத முட்டாளாய் இருந்து விட்டேனே" என்று புலம்பினாள்.

சமாளித்துக் கொண்டு உள்ளே சென்று எதையோ கொண்டு வந்து குடிக்கச் செய்தார்.

அதற்கு மேல் சிதம்பரம் யாரையும் பேச விடவில்லை.

ஓய்ந்து கிடந்த மகளை எழுப்பிக் கட்டிலில் படுக்க வைத்தார்.

"அப்பா, உன் பக்கத்திலேயே இருக்கிறேன். நீ கொஞ்சம் தூங்கு பாப்பா. உன் கண்ணைப் பார்த்தால் நாள் கணக்கில் தூங்கியிராதது போல் தெரிகிறது. நீ தூங்கி விழித்த பிறகு எதையும் பேசிக் கொள்ளலாம். சொல்கிறேன் இல்லையா... சொன்ன பேச்சைக் கேட்கவேண்டும். தூங்கு" என்று அவளைப் பேசவிடாமல் அதட்டி, அடக்கி, ஆசுவாசப்படுத்தி உறங்க வைத்தார்.

அலுப்பிலோ, தந்தையின் அருகாமை தந்த தெம்பிலோ ரேகா உடனே தூங்கிப் போனாள்.

வெகுநேரம் கழித்து அவள் விழித்து எழுந்த பிறகும் அவளைச் சாப்பிட வைத்து அதன் பிறகே கேட்டார். "என்ன செய்வதென்று ஏதேனும் யோசித்தாயா?" என்று.

குறிப்பாக எதைப் பற்றிச் சொல்கிறார் என்பது புரிந்துவிட, "எனக்கு இந்த...இது வேண்டும் அப்பா" என்றாள் ரேகா குனிந்த தலை நிமிராமல்.

குழந்தை என்று குறிப்பிடக்கூட அவளுக்கு வாய் வரவில்லை.

"ஆமாம். தலையில் போடுகிற கல்லைக் கொஞ்சம் பெரிதாகவே போட்டு முடித்துவிடு" ஆத்திரமும் அழுகையுமாக வெடித்தார் தாயார்.

"சரசு!" என்று மனைவியை அதட்டிவிட்டு "ரேகா நீ நன்றாக யோசித்துத்தான் பேசுகிறாயா? பின் விளைவுகளை எண்ணிப் பார்த்தாயா? இதுபோன்ற விஷயங்களை அவரவர் சொந்த விஷயம் என்று விலகிவிடுகிற சமூகம் இல்லை நம்முடையது. ஏளனம், இகழ்ச்சி என்று இதை விடவும் அதிக வேதனைப்படும்படியாக நேரக்கூடும். அத்தோடு இதை அழிப்பதும் அடியோடு மறைத்து விடுவதும் கூட எளிதுதான். யோசி" என்றார்.

அவராலும் இதைக் குழந்தை என்று எளிதாகச் சொல்ல முடியவில்லை என்று ஊகித்தாள். எப்படி முடியும்? குழந்தை என்றால் குதூகலம் ஆயிற்றே. குற்றமற்றது ஆயிற்றே; ஏதோ ஒரு குற்றத்தில் விளைந்ததைக் குழந்தை என்று அப்பாவாலும் ஒப்ப முடியவில்லை போலும் என்று வேதனையோடு நினைத்தாள் ரேகா.

அதைக் காட்டாமல் பார்வையைத் தரையிலேயே பதித்தபடி, "நன்றாக யோசித்துவிட்டேன். அப்பா அப்பா, அவர் ஏமாற்றும் எண்ணத்தில் பழகியிருக்கலாம்... அப்படித்தான்

பழகியிருக்கிறார் என்று இப்போது நன்றாகத் தெரிகிறது. ஆனால் என் மனது சுத்தம் அப்பா, என் அன்பு உண்மை. அதன் சின்னம் எனக்கு வேண்டும்" என்றாள் மெல்லிய குரலில்.

"பெரிய அன்பு. பெரிய சின்னம். முகத்தைப் பார்த்துத் தான் பேசித் தொலையேண்டி சனியனே..."

ஒரு கணம் மட்டும் உயர்ந்த மகளின் நீர்த்திரையிட்ட பார்வை தாயின் பேச்சை இடையில் நிறுத்தியது.

அதற்குள், "உருப்படியாக ஒன்றும் பேசமுடியவில்லை என்றால் வாயை மூடிக் கொண்டே இரு சரசு" என்று மனைவியைக் கண்டித்தார் சிதம்பரம்.

மகளிடமும், "அம்மா நீ கிழவியாகி விடவில்லை. சின்ன வயது - இதெல்லாம்கூட நேரக்கூடாத ரொம்பச் சின்ன வயதுதான். வேறு ஒரு வாழ்வு அமையக்கூடிய காலம் பிற்பாடு ஏராளம் இருக்கிறது. அந்தச் சமயத்தில் இது அந்த வாழ்வுக்குத் தடையாக இருக்கக்கூடாது. உணர்ச்சி வசப்படாமல் நிதானமாய் யோசித்து அதன் பிறகு சொல்லு" என்றார் சிறு கண்டிப்புக் குரலிலேயே.

ஒரு கசந்த உதட்டு நெளிவுடன் "யாரும் அறியாமல் இதை அழித்துவிட்டு ஒன்றும் அறியாத கன்னிபோல இன்னொரு வனை மணந்து நான் வாழ வேண்டும் என்று சொல்கிறீர்களா அப்பா" என்று நேரடியாகக் கேட்டாள் ரேகா.

ஒரு கண நேர மவுனத்தின் பின் அவளாகவே தலை யசைத்து மறுத்தாள். "வேறு ஒரு வாழ்க்கையும் இனிக் கிடையாது அப்பா. இது... இந்தக் கு...குழந்தை எனக்கு வேண்டும்" என்றாள் முடிவாக.

"குழந்தையாம் குழந்தை. உனக்கு இந்தக் கோட்டான்தான் வேண்டும். பெற்றவர்கள் தூக்கில் தொங்கி செத்தால்கூட ஒன்றுமில்லை" என்றார் தாயார் கடுமையாக.

தந்தை குறுக்கிடுமுன் "அம்மா" என்று கதறிவிட்டாள் ரேகா.

தாயாரும் தன்னை வெறுத்துப் பேசவில்லை. இப்படி ஆகிவிட்டதே என்ற வேதனையில் பேசுகிறார் என்பது ரேகாவுக்குப் புரியாமல் இல்லை.

வெகு பிரயாசையுடன் தன்னை அடக்கிக் கொண்டு பேசினாள். "அம்மா, இது எவ்வளவு பெரிய அவமானம், கேவலம் என்பது எல்லாம் எனக்கு நன்றாகப் புரிகிறது அம்மா. அதே போல அருமையாக வளர்த்த உங்களுக்கு எவ்வளவு பெரிய துரோகம் செய்துவிட்டேன் என்பதும் தெரிகிறது. ஆனால் அம்மா, நான் மற்ற ஆண்களையே பார்த்தது இல்லையா? ஆண் பெண் சேர்ந்து படிக்கும் கல்லூரியில் தானே படிக்கிறேன். அவரைப் பார்த்த உடன் மட்டும் ஏன் நேசிக்கத் தொடங்கினேன்? அவரிடமும் அதே அன்பு இருப்பதாக நம்பி... நம்பித்தான்... அம்மா, அவர் எப்படியோ போகட்டும். என் மனதில் தோன்றியது உண்மையான நேசம். இனி அப்படி ஒரு நேசம் அங்கே தோன்ற வழியில்லை. இல்லாத அன்பைக் காட்டி வேறு ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்வதும் என்னால் முடியாத காரியம். அதனால் பிற்கால வாழ்க்கைக்கான என்று எந்த ஏற்பாடும் செய்யத் தேவையில்லை. அத்தோடு என்னை மட்டும் பொறுத்த வரையில் உண்மை அன்பில் தோன்றிய ஒன்றை அழிப்பதும் குற்றமில்லையா? அதை அழித்தால் நான் கொண்ட அன்பும் பொய்தான் இல்லையா? பிறகு நான் மட்டும் எந்த வகையில் மேல்?

"நீ ஆயிரம் சொன்னாலும் கழுத்தில் தாலி ஏறாமல் வயிற்றைத் தள்ளிக்கொண்டு நின்றால் ஊர் சிரிக்காதா? அதை எப்படித் தாங்குவது?" என்று கேட்டாள் தாயார்.

வேதனையில் விழி அகல தலையசைத்தாள் ரேகா. "தாங்க முடியாததுதான். ஊரும் கைகொட்டிச் சிரிக்கத்தான் செய்யும்.

அதனால்... அதனால் அம்மா, இதுபோல மாட்டிக் கொண்ட பெண்களுக்கு என்று ஒரு விடுதி இருக்கிறது. அதில் போய்ச் சேர்ந்துவிடலாம் என்று இருக்கிறேன்" என்றாள்.

"ரேகா!" என்று இப்போது கதறியது தாயார்.

"வெரிகுட்! இப்போது அம்மாவுக்குப் போட்டியாக நீயும் பேத்துகிறாயாக்கும் போதும் போதும்" என்று கோபமாகக் கூறினார் தகப்பனார்.

முதல் தடவையாக நிமிர்ந்து பேசினாள் ரேகா. "நான் மெய்யாகத்தான் சொல்லுகிறேன் அப்பா. நேற்று இரவு முழுவதும் யோசித்து எடுத்த முடிவுதான். இந்த ஊர், உலகம் அதில் சமூகம் என்று நிறைய இருக்கிறது. அதை, சகிக்கவும் முடியாது? உதறி ஒதுங்கவும் முடியாது. அதை விட நான் ஒருத்தி மட்டும்..."

"போதும் என்றேன்" என்றார் சிதம்பரம் அதட்டலாக.

பிறகு சொன்னார். "இருவருமே குறுக்கே பேசாமல் கவனித்துக் கேளுங்கள். இதோ பார் ரேகா. இந்த ஊர், உலகம் எல்லாம் நாமும் அதிலேயே இருப்பதால் ரொம்பவும் முக்கியம்தான். ஆனால் உன்னை விடவும் அது எங்களுக்கு முக்கியம் இல்லை. ஏன் எங்கள் இருவரின் உயிர் கூட உனக்கு அடுத்துதான் முக்கியம். ஆனால் இந்த ஊருக்கும் உலகத்துக்கும் பயந்து கொண்டு உன்னைக் கைகழுவி அதுபோல விடுதிக்கெல்லாம் அனுப்புவேன் என்று நினைக் காதே. எந்தக் கேவலம் என்றாலும் உனக்காக அதை ஜீரணித்துக் கொள்ள எங்களால் முடியும். உன் விரல் கண்ணைக் குத்திவிட்டால் உடனே அதை வெட்டி விடுவாயாம்மா? சொல்லு.

"குழந்தை வேண்டும் என்கிறாய். சரி, பெற்றுக் கொள். அதிலே உனக்கு துணை இருக்கிறோம். ஆனால் துணை

இருப்பதால் நீ செய்தது குற்றம் அல்ல என்றோ அதை நாங்கள் ஆமோதிக்கிறோம் என்றோ அர்த்தம் அல்ல.

"பெற்றவர்கள் என்று இருப்பது எதற்கு? நாங்கள் தேர்ந்து எடுப்பவனைத்தான் நீ ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இல்லை. குறைந்த பட்சம் உன்னுடைய தேர்வு சரிதானா? என்று ஆராய்ந்து சொல்லும் உரிமை எங்களுக்கு இல்லையா? அதற்கு முன் அவசரப்பட்டது நீ செய்த பெரிய குற்றம்.

"போகட்டும். இனி அதையெல்லாம் நினைத்துப் பயன் இல்லை என்பதோடு நீயும் அதை உணராமல் இல்லையே.

"ஆனால் அவன் ஏமாற்றித்தான் விட்டான் என்பது நிச்சயம் தானா? நன்றாகத் தெரிந்து கொண்டாயா?"

"ஆமாம்" என்றாள் ரேகா சுருக்கமாக.

"இனி அவனிடம் நான் சென்று பேசி ஏதேனும் செய்ய வாய்ப்பு இருக்கிறதா? செய்து பார்க்கட்டுமா?"

"இல்லை வேண்டாம்" என்றாள் அவள் திடமாக.

"ஏன்?"

"அவருக்குத் திருமணம் ஆகிவிட்டது. மேலும் அந்த மாதிரியான மனிதரிடம் சென்று எனக்கும் வாழ்க்கை கொடுங்கள் என்று கெஞ்ச நான் தயாராயில்லை" என்றாள் மகள் உறுதியாக.

"திருமணம் உறுதியாகி விட்டது உண்மைதானே?"

ஒரு கணம் மவுனமாக இருந்துவிட்டு "அப்படியா சரிதான். விட்டுவிடு. இப்போது மதுரையில் ஒரு வேலைக்கு எனக்கு ஏற்கனவே வாய்ப்பு வந்திருக்கிறது. அங்கே போய் விடலாம். அதற்கு முன் இங்கே எதையும் வெளிப்படுத்த வேண்டாம்" என்று தொடங்கினார்.

"அங்கே மட்டும் என்ன சொல்வது?" என்று வருத்தமாக இடையிட்டுப் பேசினாள் சரஸ்வதி.

"ஒன்றுமே சொல்ல வேண்டாம். யாரேனும் ரேகாவைப் பற்றித் துருவினால் 'அதுபற்றி பேசுவதில்லை' என்று ஒரே வாக்கியத்தில் முடித்துவிடு. நீயும் அப்படித்தான் ரேகா. கேலியோ, கிண்டலோ எதையும் காதில் போட்டுக் கொள்ள வேண்டும். தப்பு பண்ணியவள் தானே என்று யாரும் சீண்ட முயற்சிக்கலாம். ஆனால் நேர்பார்வையும் நிமிர்ந்த நடையுமாக இருந்தால் இதெல்லாம் நாளா வட்டத்தில் மறைந்து போய்விடும். இதுபோலத் தவறுகளுக்கெல்லாம் ஒதுக்கி வைப்பது எல்லாம் இந்தக் காலத்தில் நிகழ்வது இல்லை. ஆனால் எண்ணித் துணிக கருமம். துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு என்று குறள் கூறுகிறது. அதனால் மீண்டும் நன்றாகச் சிந்தித்துச் சொல். இப்போதல்ல. இரவு வரை யோசி. அதன் பிறகு சொல்லு. இந்தக் குழந்தை வேண்டும்தானா?"

இரவில் மீண்டும் சிதம்பரம் கேட்டபோதும், "ஆமாம்" என்று சின்னக் குரலில் என்றாலும் அழுத்தமாகவே பதில் கூறினாள் மகள்.

"சரி, மூட்டையைக்கட்டத் தொடங்குங்கள். நான் நாளையே மதுரை வேலையை உறுதி செய்து விடுகிறேன். அங்கே போய்-ஷ் என்ன பாப்பா இது? சினிமா டிராமா மாதிரி இதெல்லாம் என்ன? எழுந்திரு" என்று காலில் விழுந்து கிடந்த மகளைத் தூக்கி நிறுத்தினார் அவர்,

முன்னுச்சியில் புரண்ட கூந்தல் சுருளை ஒதுக்கி விட்டார். "தைரியமாக இரு, அம்மாவும் அப்பாவும் எதற்கு இருக்கிறோம்?" என்று தெம்பளித்தார்.

அவர் சொன்னது போலவேதான் நடந்தது.

ரேகாவின் திருமணத்துக்கு என்று சேமித்த பணத்தையும் மற்றதையும் போட்டு மதுரையில் சொக்கிகுளத்தில் ஒதுக்கமாய்

ஒரு சின்ன வீட்டை வாங்கிக் கொண்டு அதில் குடியேறினார்கள்.

முதலில் தாங்கிக் கொள்ள முடியாதது போலத் தோன்றிய கேலிப் பார்வையும் கிண்டல் மொழிகளும் மெல்ல மெல்ல ஓய்ந்து போயின.

இப்போதும் ஓரோர் சமயங்களில் குத்து கிடைப்பது உண்டுதான். ஆனால் அது வெகு அபூர்வமாய்த்தான்.

இந்த மாதிரி தந்தை கிடைக்க எத்தனை பிறவிகளில் எவ்வளவு பூசை செய்தேனோ? என்று எண்ணிக் கொள்வாள் ரேகா.

முதலில் அவ்வப்போது பொருமிக் கொண்டிருந்த தாயாரும் குழந்தையைக் கண்ட பிறகு அடியோடு மாறிப் போனார்.

குழந்தைக்குப் பெயர் வைக்கும்போது சற்று யோசித்து விட்டு, 'ராஜேந்திர பூபதி' என்றாள் ரேகா.

ஆச்சர்யமான ஒரு பார்வையுடன் பெயர் அவளைப் பெற்றவர்களால் ஒத்துக் கொள்ளப்பட்டது.

'ராஜா' என்று செல்லமாக அழைத்தனர்.

இவ்வளவு நாளில் விஜயேந்திரனைப் பற்றி தகவல் ஒன்றே ஒன்று சென்னையை விட்டுக் கிளம்புவதற்கு முன் ஹெலனின் கடிதம் மூலம் கிடைத்தது.

அவனுடைய தந்தை இறந்து போனாராம்.

மகளுடைய திருமணம் முடிந்த இரண்டு நாட்களில் இறந்தாராம். மகனுடைய திருமணத்தைப் பார்க்க முடியா விட்டாலும் மகளுடைய மணக்கோலத்தையாவது பார்த்து விட்டுக் கண்ணை மூடினாரே என்று எழுதியிருந்தாள்.

அவள் எழுதியிருந்த நாள் கணக்கை வைத்துப் பார்த்தால் ரேகா அங்கே சென்று திரும்பிய இரண்டு நாட்களில் என்று தெரிந்தது.

அப்படியானால் அன்றையத் திருமணம் மகளுடையதுதான்.

மகனுடைய திருமணம் நின்றுவிட்டிருக்கும். என்ற எண்ணம் தோன்றியபோதே தொடர்ந்து நாற்பதுநாள் தள்ளி நடத்தி முடிப்பார்கள். இனி நமக்கு அது சம்பந்தமற்ற விஷயம் என்று ஒதுக்கித் தள்ளினாள்.

ஹெலனுக்கு மதுரைப் பயணம் பற்றி எழுதாமல் மாற்று முகவரியும் கொடுக்காமல் விடுத்தாள்.

ஏன், அவள் அறிந்தவரை யாரிடமுமே சொல்லவில்லை.

மதுரையில் ரேகாவுக்கும் ஒரு வேலை கிடைத்தது.

அளவு மீறி என்று இல்லாவிட்டாலும் செலவுக்கு மிஞ்சியே வருமானம் இருந்தது.

சரஸ்வதிக்குக் குழந்தையைக் கவனித்து, வீட்டைப் பராமரிப்பதிலும், பொழுது பறந்தது.

ரேகாவும் அவளுடைய தந்தையும் அலுவலகம் முடிந்து வந்தால் குழந்தை ராஜாவுடன் விளையாடுவதிலும் அலுவலகப் பேச்சிலுமாக அவர்களுக்கும் நாள் கழிந்து போயிற்று.

அவ்வப்போது, அப்படிப் பழகினானே, பிரியம் காட்டினானே அதெல்லாம் எப்படிப் பொய்யாகும் என்று தனிமையில் ரேகா மனம் பொருமுவது உண்டு.

அதெல்லாம் கூட வெகுவாகக் குறைந்து போயிற்று.

இப்படியே வாழ்வு சென்றுவிடும் என்று இருந்தபோது,கல் விழுந்த குட்டைபோல மனம் குழம்பித் தவிக்க, ஹெலனின் திருமணம் என்ற இரண்டு வார்த்தைகள் போதுமானதாக இருந்தது.பெரும் அதிர்ச்சியாய் இருந்தது ரேகாவுக்கு.

ஆயினும் மனவேதனை வெளியே தெரியாமல் மறைக்க் வெகு சிரமப்பட்டு முயன்று வெற்றியும் கண்டாள்.

அன்றைக்குப் பிறகு மீண்டும் திருமணப் பேச்சை சரவணன் எடுக்கவில்லை என்றாலும் ஏதாவது ஒரு சாக்கிட்டுத் தினமும் அவளிடம் ஒரு வார்த்தையேனும் பேசிச் சென்றான்.

காத்திருப்பதை நினைவூட்டுகிறானாம்.

உள்ளூர எரிச்சல் மூளத் தொடங்கியிருந்தபோது டைப்பிஸ்ட் ஹெலனின் திருமண தினம் வந்தது.

ஆம். இப்போதெல்லாம் டைப்பிஸ்ட் என்ற அடைமொழி இல்லாமல் இந்த ஹெலனை ரேகா நினைத்துப் பார்ப்பதே இல்லை. எதற்கு வீண் வம்பு.

திருமணத்தன்று அலுவலகத்திலிருந்து எல்லோரும் போனார்கள்.

திருமணச் சடங்கு எதிலும் மனது ஈடுபடாமல் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்த ரேகாவின் பார்வையில் சரவணனுடைய முகபாவமும் நோக்கும் பட்டன.

அவளுடைய - ரேகாவுடைய உடலைத்தான் அவன் அவ்வளவு வேட்கையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

வேறு ஒருவனிடம் இந்த வேட்கைப் பார்வையைக் கண்டதும் ரேகா கூசிப் போனாள்.

மேலும் அங்கே நிற்க மனம்இல்லாமல் யாரும் கவனிக்காத சமயம், பெண்ணின் தந்தையிடம் சொல்லிக் கொண்டு கிளம்பி விட்டாள்.

என்ன மாதிரித் தொல்லை ஏற்பட்டாலும் சரவணனிடம் வெட்டென்று சொல்லிவிட வேண்டியதுதான் என்ற முடிவுடன் வீட்டை அடைந்தாள்.

குழந்தையின் மழலைச் சிரிப்பு கேட்டைத் திறக்கும் போதே கேட்கவும் மனது கொஞ்சம் அமைதியாயிற்று.

வராந்தாவில் செருப்பைக் கழற்றிவிட்டு, முறுவலுடன் முன்னறைக்குள் சென்றவளின் முகம் சட்டென வெளுத்தது.

தோளில் குழந்தையுடன் தன் உயரத்தால் அந்த அறையையே சின்னதாக்கிக் கொண்டு அவளை நோக்கித் திரும்பியவன் - விஜயேந்திரன்.

## 4

தாயைக் கண்டதும் அம்மா அம்மா என்று ஆர்ப்பரித்தபடி, புதியவன் தோளிலிருந்து இறங்கி ஓடிவந்து ரேகாவின் கால்களைக் கட்டிக் கொண்டு தூக்கச் சொன்னான் குழந்தை.

இனி ஒருபோதும் பார்க்கப் போவதில்லை என்று எண்ணியிருந்த ஒரு முகத்தைத் தன் வீட்டிலேயே அதுவும் தன் பிள்ளையோடேயே பார்க்க நேர்ந்ததில் ரேகா வெகுவாக அதிர்ந்து போனாள்.

ஒன்றும் சொல்லத் தோன்றாமல் எதுவும் நினைக்கக்கூடத் தோன்றாமல் அசைவற்று நின்றாள்.

ஆனால் அவளுடைய வரவை எதிர்பார்த்திருந்ததாலோ அல்லது அவளது உணர்ச்சிகளினால் பாதிக்கப்படாமல் இருந்ததாலோ விஜயேந்திரன் முகத்தில் சலனம் இல்லை.

உணர்ச்சியற்ற பார்வையால் மட்டும் அவளை அளந்தான்.

அதற்குள் பொறுமையிழந்த ராஜா கத்தத் தொடங்கவே "குழந்தையைத் தூக்கு ரேகா, அவன் கத்துவது கேட்கவில்லை." என்று சற்று அதட்டிச் சொன்னார் சிதம்பரம்.

தன் தந்தையின் உரத்த குரல் பிரமிப்பை ஊடுருவச் சட்டெனக் குனிந்து பிள்ளையைத் தூக்கிக் கொண்டாள் ரேகா.

"அம்மா... மா, எனக்கு பொம்மை... அதோ பாரு..." என்று காட்டிய மகனின் மழலைமொழி காதிலேயே விழாதது போல மடமடவென்று உட்புறம் செல்லலானாள்?

"ரேகா?"

தந்தையின் கண்டிக்கும் குரல் அவள் மனதைக் குழப்பியது.

அவளை நரக வேதனைக்குள்ளாக்கிய அவனை 'வா, வா' என்று வெற்றிலை பாக்கு வைத்து அழைக்க வேண்டுமா என்ன?

செவியற்றவள் போலத் தொடர்ந்து உள்ளே போய் விட்டாள்.

"நீங்கள் உட்காருங்கள்" விஜயனிடம் சிதம்பரம் ஏதோ சொல்வது அரைகுறையாகக் காதில் விழுந்தது.

ஆர்வமாக எதிர்கொண்ட தாயாரிடமும் பேச மனம் இல்லை அவளுக்கு.

"இங்கேயே இவனை வைத்துக் கொள்ளுங்கள் அம்மா" மகனை ஒப்படைத்துவிட்டுக் குளியல் அறையுள் புகுந்து கொண்டாள்.

மனது கலங்கி இருந்த இன்று என்று பார்த்து இவன் எங்கிருந்து வந்தான்?

ஏன் வந்தான்?

காதலித்துக் கைவிட்ட பெண்களையெல்லாம் அடுத்து ஒரு சுற்று சந்திப்பது கூடப் பணக்காரர் வழக்கம் தானோ?

அவள் அந்தத் தாராதேவி சொன்னாளே, அந்த ஷீலு, ராதி, இன்னும் நளினி இவர்களையெல்லாம் பார்த்து முடித்தாயிற்றா இனிமேல் தானா?

வெறுத்து வந்த வார்த்தைகள்தான். ஆனால் வேதனை தோன்றாமல் இல்லையே.

இப்படி ஓடி ஒளிந்த இடத்திற்கு எப்படி வந்தான்?

அவன் தான் வந்தாலும், "வெளியே போ" என்று விரட்டி அடிக்காமல் இந்த அப்பா எப்படி அவனை உட்கார வைத்துப் பேசலாம்?

யோசித்துப் பார்க்கையில் ஏதோ டிபன் தட்டுகூட டீபாய் மேல் பார்த்த நினைவு வந்தது.

உபசாரம் வேறா?

இந்த அழகில் இவனை 'வா' வென்று வருந்தி உபசாரம் செய்யவில்லை என்று அவளுக்கு வேறு ஓர் அதட்டல்.

இந்த மகளின் நெஞ்சு வெடித்துவிடும்போல் எப்படித் துடிக்கிறது என்பது அவருக்குப் புரியாதா?

"ரேகா" என்ற அவரது அழைப்புக் குரலும் "ரேகா முகம் கழுவிக் கொண்டிருக்கிறாள்" என்ற தாயாரின் குரலும் மெல்லக் கேட்டன.

குளியல் அறைக்குள்ளேயே இருந்துவிடவும் முடியாதே.

அவசரமாக முகத்தில் - முக்கியமாகக் கண்கள் மேல் குளிர்நீரை அடித்துக் கழுவிக் கொண்டு வெளியேறினாள்.

தன் அறைக்குள் சென்று முகத்தை அழுந்தத் துடைத்து நெற்றியில் பொட்டிட்டாள்.

அதற்குள் பொறுமையிழந்தாற்போல அவளுடைய தந்தை அறையினுள் வந்தார்.

கதவை சாத்திவிட்டு, "நீ செய்வது சரியில்லை பாப்பா விரோதியே என்றாலும் வீட்டுக்கு வந்தவரை "வா" என்று கூடச் சொல்லாமல் முகம் திருப்புவதா? இந்த மாதிரி நாகரிகத்தை நாங்கள் உனக்குக் கற்றுத் தந்ததாக எனக்கு ஞாபகம் இல்லை" என்றார் சற்றுக் கோபமாக.

அமைதியே உருவான தந்தை வழக்கத்துக்கு விரோதமாகப் பரபரப்புற்று இருப்பதை ரேகா புரிந்து கொண்டாள்.

எல்லோரையும் கலக்கத்துள் தள்ள இவன் எப்படி வரலாம்?

"நீங்கள் ஏனப்பா அவரை வெளியே விரட்டாமல் உட்கார வைத்து உபசரிக்கிறீர்கள்? அதற்கும் மேலாகக் குட்டிப் பையனை வேறு அவரிடம் விட்டு... முதலில் அவரைப்போகச் சொல்லுங்கள்" என்றாள் எரிச்சலோடு.

"ஏனோ?"

"அப்பா!"

"நீயும் ஒன்றும் முழுக்க முழுக்க சரியாக நடந்து கொண்டதாக தெரியவில்லையம்மா. ராஜேந்திரனைப் பற்றி அவருக்கு ஒன்றுமே தெரிவிக்கவில்லை."

"மு... முதலில் எழுதினேன் அப்பா உண்டானதும்."

"இல்லை என்கிறார் அவர்."

"பொய் பொய்"

"இல்லை என்று எனக்குத் தோன்றுகிறது. மற்றபடி ராஜாப் பையன் படத்தைப் பார்த்துவிட்டுத் தேடி வருவாரா? மேலும் அவர் திருமணம் ஆனவர் என்று சொன்னாயே, அது கூடச் சரியில்லைதான் போல இருக்கிறது."

"நடப்பதாக நிச்சயமாகி இருந்தது அப்பா."

"நடந்திருக்கவில்லையே. சரி சரி. அதைப் பற்றிப் பிறகு பேசலாம். அவரை அங்கே தனியே உட்காரவைத்து விட்டு நாம் இங்கே நின்று பேசிக் கொண்டே இருப்பது முறையில்லை. வா... ரேகா, அவரிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொள்ளக்கூடாது" என்றார் சிதம்பரம் கண்டிப்பான குரலில்.

மகளின் பார்வையில் லேசாக முறுவல் செய்து, "சமயங்களில் இன்னும் சின்னப்பிள்ளை போலவே நடந்து கொள்கிறாயேம்மா, வா" என்று அழைத்துச் சென்றார்.

விஜயனின் சட்டை பட்டனில் பார்வையைப் பதித்து கை குவித்தாள் ரேகா.

"சவுக்கியமா? உங்கள் அப்பா பற்றி ஹெலன் எழுதி யிருந்தாள். ஸாரி." என்றாள் பொதுப்படையாக.

ஒருகணம் யோசித்துவிட்டு, அது மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. அப்போதே நீ ஒரு கடிதம் எழுதியிருக்கலாம். பரவாயில்லை. லேட்டாக வந்த இரங்கல் என்றாலும் நன்றி" என்றான் சற்று. வறண்ட குரலில் விஜயன்.

ஒரு சிறு அமைதிக்குப்பின், "இந்த பட்டன் சிங்கப்பூர் சரக்கு. எங்கள் டெயிலர் சொன்னார்" என்றான் அவன்.

திகைப்புடன் நிமிர்ந்தவளைப் பார்த்து லேசாக முறுவலித்து "அவ்வளவு தீவிரமாக பட்டனையே பார்த்துக்கொண்டு இருந்த தால் விவரம் சொன்னேன்" என்றான் கேலியாக.

சிரிப்புடன் எழுந்து "பேசிக்கொண்டு இருங்கள்" என்று தந்தை உள்ளே செல்லவும் ரேகாவின் உதடுகள் ஆத்திரத்தில் அழுந்தின.

எதிர்பாராததைச் சுவையாகப் பேசி அடுத்தவரைக் கவர்வது எவ்வளவு தூரம் அவனுக்குக் கைவந்த கலை என்பது ரேகாவுக்குத் தெரியும்.

உள்ளே சென்று கொண்டிருந்த தந்தையின் முதுகுப்புறம் ஒரு பார்வையைச் செலுத்தியபடி, "இங்கே எப்படி வந்தீர்கள்?" என்று தணிவான குரலில் வினவினாள்.

பார்வை அவள் முகத்தில் பதிந்திருக்க, அவன் சொன்னான். "இங்கே டி.வி.எஸ்.ஸில் சில டிரக்குகள் வாங்குவது தொடர்பாக

வந்தேன். சொக்கிகுளத்தில் தெரிந்தவர் வீட்டில் சாப்பிட அழைத்திருந்தார்கள். வரும்போது வழியில் ஒரு போட்டோ ஸ்டூடியோ - ரவி ஸ்டூடியோ என்று பெயர். வெளியே 'டிஸ்ப்ளேவிண்டோ'வில் ஒரு குழந்தையின் படத்தைப் பார்த்தேன். அங்கே உள்ள நம் வீட்டில் என் சிறு வயதுப் படம் இருக்கிறது. அதைப் பார்த்தால் உனக்குப் புரியும். காரை நிறுத்தி விசாரித்தேன். ராஜாவின் இரண்டாவது ஆண்டு நிறைவின் போது எடுத்தீர்கள் போலும். குழந்தையோடு நீ உன் பெற்றோர் என்று எல்லோர் படத்தையும் பார்த்தேன். உன் முகவரி அதன் பிறகு கஷ்டமான காரியம் இல்லையே."

நம் வீடாம். இந்த வெண்ணைப் பேச்சுக்குப் பஞ்சமே இல்லை.

"உங்கள் வீட்டில் வந்து அந்தப் படத்தைப் பார்ப்பதற்கு வாய்ப்பு இல்லை."

"ஏன்?" என்று ஒற்றைச் சொல்லை விடுத்து அவளைத் திணறடித்தான்.

அதற்கு பதில் கூறாமல் "நீங்கள் ஏன் இங்கே வந்தீர்கள்?" என்று பதில் கேள்வி விடுத்தாள்.

அவன் முகத்தில் லேசாகக் கடுமை பரவியது. "மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக, என்னோடு உயிருக்கு உயிராகப் பழகிய ஒரு பெண்ணைப் பார்க்க வந்தேன். அத்தோடு...."

"அவள் செத்துவிட்டாள் என்று உங்களுக்குத் தெரியாதா?" என்று குத்தலாக இடைமறித்தாள் அவள்.

"இருந்திருந்தால்தானே சாவதற்கு?" என்றான் அவன் பூடகமாக.

அவள் குறுக்கிடுமுன் தொடர்ந்து, "இப்போதைக்கு இருப்பவளையும் என் மகனையும் அழைத்துப் போக வந்தேன்" என்று முடித்தான்.

தந்தையின் சொல்லுக்காக இழுத்துப் பிடித்து வைத்திருந்த அமைதி காற்றில் பறக்க, "இல்லை" என்று கூவியபடி எழுந்தாள் ரேகா.

"உட்கார் ரேகா" என்றான் அவன் அதிகாரமாக.

இவன் கல்மாதிரி இருக்க தான் மட்டும் உணர்ச்சிவசப் படுவானேன் என்று தன்னையே கடிந்து கொண்டாள் ரேகா.

மெல்லப் பதற்றத்தை சமனப்படுத்தி கொண்டு அமர்ந்தாள்.

அசுவாரசியமாகப் பேசுவது போல, "வந்து... யாரோ தாராதேவியுடன் முன்பு உங்களுக்கு நிச்சயமாகியிருந்ததே, அந்தத் திருமணம் என்ன ஆயிற்று?" விசாரித்தாள்.

"நிச்சயமானால் நடந்துவிடுமா?"

"ஏன்? அந்தத் தாராதேவி மறுத்துவிட்டாளா?" என்று கிண்டலாகக் கேட்டாள் ரேகா.

அவள் முகத்தையே தீவிரமாகப் பார்த்து, "நான் மறுக்க மாட்டேனா ரேகா?" என்று தணிவான குரலில் கேட்டான் விஜயன்.

இந்தக் குரலிலும் 'ரேகா'விடம் மயங்கியதையும் பின்னர் பட்ட அவமானங்களையும் எண்ணி ஆத்திரம் பொங்கியது ரேகாவுக்கு.

இவனைக் குத்தவேண்டும்; நோகடிக்க வேண்டுமே!

'தோளைக் குலுக்கி, "பெரிய பணக்காரியாமே, ஏன் மறுக்க வேண்டும்?" என்றாள்.

"அதை நீதான் சொல்ல வேண்டும்" என்றான் அவனும் அதே குரலில். தொடர்ந்து, "எல்லோருமே பணத்தை மட்டும் பிரதானமாக நினைப்பது இல்லை!" என்றான் உதட்டோரம் வளைய.

பத்துலட்சம் பணத்துக்காக அந்தப் பெண்ணை மணக்க இருந்தவன் எவ்வளவு சுலபமாகப் பேசுகிறான்!

"ஆமாமாம் எல்லோரும் உங்களைப் போல இருக்க முடியுமா" என்று குத்தினாள். "நீங்கள் கையசைத்தால் உங்களை மணந்து கொள்ள எத்தனையோ பேர் வருவார்கள் என்று ஹெலன் சொன்னாள்."

"நான் கையசைத்துப் பார்த்தது இல்லை" என்றான் அவன் சுருக்கமாக.

"முயற்சி செய்து பார்ப்பதுதானே."

"அதற்குத்தான் அவசியம் இல்லையே" என்றான்,

அவனும் அவளைப் பின்பற்றி.

மீண்டும் உள்ளம் கலங்க அதை மறைக்கும் முயற்சியாக அவனை வெறித்தாள் ரேகா.

அவனுக்கு வேடிக்கையாக இருந்தது போலும் தெளிவாகவே விளக்கினான். "ஏன் அவசியம் இல்லை தெரியுமா? கையசைப்பது எதற்கு? பெண் கிடைப்பதற்காக. பெண் எதற்கு? திருமணம் செய்வதற்காக. திருமணம் எதற்கு? பிள்ளை பெறுவதற்காக. பிள்ளை இல்லாவிட்டால் தானே பெற வேண்டும்? நீ தான் குடும்ப வழக்கப்படி அழகாக 'ராஜேந்திர பூபதி' என்று பெயர் கூட வைத்திருக்கிறாயே."

கிண்டலா!

உசுப்பிவிடப்பட்டவளாக ரேகா நிமிர்ந்தாள். "ராஜேந்திர பூபதி" என்று யார் வேண்டுமானாலும் பெயர் வைத்துக் கொள்ளலாம் தெரியுமில்லையா? என்றாள் அலட்சியமாக.

"ஓ. நன்றாகவே தெரியும். ஆனால் என் முதல் மகனுக்கு அந்தப் பெயர் மட்டும்தான் இருக்க முடியும். அந்த மட்டும் சரியாகவே செய்திருக்கிறாய்" என்று சிலாகித்தான் அவன்.

மெச்சுவது போல் அவன் மட்டம் தட்டுவது ரேகாவுக்குப் புரியாமல் இல்லை. தப்பும் செய்துவிட்டு இவன் என்ன மட்டம் தட்டுவது?

குழப்பத்தைக் கோபம் விரட்டிவிட, "ஒன்றை மறந்து விட்டீர்களே? ராஜா உங்கள் மகன் என்பதோ, அதிலும் உங்கள் முதல் மகன்தான் என்பதோ என்ன நிச்சயம்?" என்றாள் வெகு உதாசீனமாக.

"ஏய்" என்று கடும் சீற்றத்துடன் எழுந்தான் விஜயன்.

அவனைக் காயப்படுத்தும் வெறியில் அவனோடு தன்னையும் சேர்த்து இழிவுபடுத்திக் கொண்டோமோ என்று குன்றிவிட்டிருந்த ரேகாவுக்கு அவனுடைய சீற்றத்தில் அச்சமும் உண்டாயிற்று.

என்ன செய்திருப்பானோ? அதற்குள் பேரனுடன் சிதம்பரம் உள்ளே வந்தார்.

"உங்கள் பையனுக்கு நீங்கள் வாங்கி வந்த பொம்மை வேண்டுமாம்" என்று அந்தப் பொம்மை ரதத்தை எடுத்து அவனிடம் கொடுத்து அனுப்பினார்.

இன்னொரு நாற்காலியில் அமர்ந்து, "என்ன முடிவு செய்தீர்கள்?" என்று விசாரித்தார்.

"எதைப் பற்றி?" என்று கடுத்தாள் மகள்.

முகத்தில் குழப்பத்துடன் பெரியவர் விஜயன் முகத்தைப் பார்த்துவிட்டு அவன் லேசாகச் சிரிக்கவும் தெளிந்தார்.

"நான் ஊர் திரும்புவதை இன்னமும் நான்கு நாட்கள் தள்ளிப்போட முடியும். அதற்குள் ஏதாவது கோயிலில்-முடிந்தால் திருப்பரங்குன்றத்தில் திருமணத்தை முடித்துக்

கொண்டு இவர்களை அழைத்துக் கொண்டே வளநாடு திரும்பலாம் என்று இருக்கிறேன்" என்றான் விஜயன்.

"உங்களை மணக்க இங்கே யாரும் தயாரில்லை" என்ற ரேகாவைக் கவனியாதவன் போல அவன் தொடர்ந்தான்.

"முதலில் என்னைப்பற்றி நீங்கள் நன்கு விசாரித்து அறிந்து கொள்ளுங்கள். நான் யார் என்பது ஏற்கனவே ரேகாவுக்கு தெரியும். மற்ற விவரம் டி.வி.எஸ். அல்லது எஸ்.டி.சி.யில் கேளுங்கள் சொல்வார்கள். விஜயேந்திரன் ஆஃப். வளநாடு என்று கேளுங்கள். அதன் பிறகு மற்ற ஏற்பாடுகளைச் செய்து கொள்ளலாம்-அல்லது எல்லாம் நானே ஏற்பாடு செய்து விடுகிறேன்.

"நீங்கள் உங்களுக்கு வேண்டியவர்களோடு திருப்பரங் குன்றத்துக்கு வந்தால் போதும்-முக்கியமாக அந்த போட்டோ ஸ்டூடியோக்காரரை அழைத்து வாருங்கள்" என்று முறுவலோடு முடித்தான்.

தந்தை முகம் விகசிப்பதைக் காணவும் ரேகாவின் சினம் இருமடங்காயிற்று.

உலக மகா உத்தமன் போல அவன் மொழிவதும் தந்தை அதில் மயங்கி ஒரேயடியாய் மகிழ்ந்து போவதும்....

"உங்களை நான் மணந்து கொள்ளப் போவது இல்லை என்றேன்" என்றாள் ரேகா அழுத்தம் திருத்தமாக.

யோசனையோடு அவளைப் பார்த்தான் விஜயேந்திரன்.

"பதினெட்டு வயது முடிந்து, மேலே மூன்று ஆண்டுகளேனும் முடிந்திருக்க வேண்டும். எனவே உன்னைக் கட்டாயப்படுத்தி, கட்டளையிட்டு என்று எதையும் செய்ய முடியாது. எனவே உன் விருப்பம்" என்றான் அமைதியாக.

# 5

விஜயேந்திரனை மணந்து கொள்ளவேண்டும் என்று ரேகா மிக மிக விரும்பிய காலம் ஒன்று உண்டு.

பழைய காலத்தில் கதைகளில் அவர்கள் இருவரும் திருமணம் புரிந்துகொண்டு வெகு காலம் சுகமாக வாழ்ந்தனர் என்று வருமே, அதுபோல வாழ ஆசைப்பட்டாள்.

ஆயிரம் ஆயிரம் கனவுகள் கண்டாள்.

ஆனால் அந்தக் கனவுகள் சிதைந்த விதமும், அடைந்த அவமானங்களும், மனவேதனையும் விஜயன் என்ற பெயரையே வெறுக்க வைத்திருந்தன.

தன் துயரம் ஒருபுறம் இருக்க, தாயும் தந்தையும் உள்ளூர மறுகியபோதும் அவளுக்குத்துணை நின்று காத்த விதம் அந்த வெறுப்பை மிகுதிப்படுத்தியிருந்தது.

தியாகம் என்ற பெயரில் சாமர்த்தியமாய் இன்னொரு பெண்ணை மணக்க இருந்த அவன், இன்று மணக்க இங்கு வந்து மணம் புரியப் போவதாகச் சொன்னது ஏன் என்றுதான் அவளுக்குப் புரிபடவில்லை.

'தன் மகன்' என்று மனம் மாறிவிட்டதா?

ஆனால் அவள் அதுபற்றி எழுதியபோது அப்படி ஒன்றும் பிள்ளைப் பாசம் பொங்கி வழியவில்லையே, அழித்துக் கொள்வாள் என்று எண்ணியிருப்பானே? இப்போது தன் முகத்தைப் பிள்ளையிடம் பார்த்தவுடன் உள்ளம் உருகி விட்டதோ?

எப்படியிருந்தபோதும் அவன் தொடர்பே வேண்டாம் என்று ரேகா நினைத்தாள்.

ஒருதரம் அவனை நெருங்கியதன் விளைவு தீக்குளித்தாற் போலத் துடித்தாயிற்று!

மீண்டும் என்ன?

மனதில் இல்லாத வெறுப்பு மண்டியிருக்கையில் அவனைக் கணவனாக ஏற்று வாழ்வது எப்படி?

முடியாத காரியம் என்று அவள் நிச்சயமாக நினைத்தாள்.

ஆனால் அதை அவன் அவ்வளவு எளிதாக ஒத்துக் கொள்ளவும். 'ஆன்டிக் கிளைமாக்ஸ்' என்பார்களே, அது போல ஒரு மாதிரி சப்பென்றுகூடத் தோன்றியது.

ஏமாற்றமும் வேதனையுமாகக் கலங்கிய முகத்துடன் "யோசித்துப் பேசு, அம்மா வார்த்தைகளைக் கொட்ட அவசரப் படாதே", என்று கெஞ்சும் குரலில் சிதம்பரம் யாசித்தபோது ஒருமாதிரி இருந்தபோதும் ரேகா அசைவதாக இல்லை.

விசித்திரமாகத் தோன்றிய போதும் விஜயன் அவளைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

உண்மை அன்பு இருந்தால் அல்லவா மறுக்கிறாளே என்று வருத்தம் வரும் என்று காரணம் கற்பித்தது அவள் மனம்.

அவன் அவளைச் சற்று ஆச்சரியமாகப் பார்த்துவிட்டு, "பெற்றவள் ஆயிற்றே; உன்னால் ராஜாவை விட்டுப் பிரிந்து இருக்க முடியாதே என்று நினைத்தேன். ஆனால் நீ தைரிய மாகப் பிரிந்து இருப்பாய் போலத் தெரிகிறதே" என்றான் சாவதானமாக.

உள்ளூர எரிச்சல் மண்ட "ஏன் பிரிந்து இருக்கவேண்டும்?" என்று மிடுக்காகக் கேட்டாள்.

"பின்னே? என்னை மணந்து கொள்ளவில்லை என்றால் ராஜாவை நான் அழைத்துச் செல்லும்போது நீ தனியாகத் தானே இங்கே இருக்க நேரிடும்" என்று நிதானமாக விளக்கினான் விஜயன்.

வெட்டுவது போல அவனைப் பார்த்துவிட்டு "உலகமே தெரியாத ஒரு பதினெட்டு வயது முட்டாளிடம் பேசுவதாக எண்ணமா? இந்த வயதில் தன் தாயிடமிருந்து அவனைப் பிரிக்கச் சட்டத்தில்கூட இடமில்லை" என்றாள் ரேகா.

சற்றும் கலக்கமின்றி "சட்டத்தின் உதவியை யார் தேடப் போகிறார்கள்?" என்றான் அவன்.

"பின்னே?"

பார்வை அசையாமல் லேசாகத் தோளைக் குலுக்கினான் அவன்.

"மிரட்டுகிறீர்களா?" என்றாள் ரேகா ஆத்திரத்துடன்.

"இல்லையே கொஞ்சம் மூளையைப் பயன்படுத்தினால் நீயே சொல்லக்கூடிய யோசனைதான்."

"இந்த மாதிரி யோசனை சொல்கிற அளவுக்கு நான் முட்டாள் அல்ல."

"மெய்யாகவா!" என்று வியந்தான் அவன்.

அவளது கன்னங்களின் கோபச் சிவப்பு ஏறக் கண்டதும் விஷயத்துக்கு வந்தான். "சிலவற்றைச் சொல்லி உன் மனதைக் கஷ்டப்படுத்த வேண்டாம் என்று நினைத்தேன். ஆனால் நீ விடுவதாக தெரியவில்லை. நல்லது. கேட்டுக் கொள் ரேகா" என்று தொடங்கினான்.

"இன்றைக்கு ராஜேந்திரன் சிறுகுழந்தை. இந்த வீட்டை விட்டு வெளியே ஒன்றும் தெரியாது. சில விஷயங்களை மற்றவர் பேசினாலும் பொருள் புரியாது.

"ஆனால் சில ஆண்டுகளில், 'எல்லோருக்கும் இருக்கும் அப்பா எனக்கு இல்லையே' என்று ஏக்கம் உண்டாகும்.

"அதன் பிறகு தகப்பன் இல்லாத பிள்ளை, தகப்பன் தெரியாதவன் என்ற பேச்செல்லாம் அரைகுறையாகப் புரியத் தொடங்கும்போதே அவன் தாங்கமாட்டான்.

"அந்த வருத்தம் அவன்பட நான் விடமாட்டேன். ரேகா. தந்தை இறந்து போயிருந்தால் பரிதாபப்படுவார்கள். ஆனால் இருந்தும் இல்லை என்றால் அவமானப்படுத்துவார்கள். அந்த மாதிரி அவமானம் அவனுக்கு நேர விடுவது எனக்குக் கேவலம்; ஏன், அதைவிடப் பல மடங்கு உனக்கு மானக்கேடு.

"இந்த ஆத்திரத்தையும் பிடிவாதத்தையும் விட்டுவிட்டு யோசித்துப் பார். உனக்கும் விளங்கும்" கடுமையாக முடித்தான்.

புதிதாக விளங்க வேண்டுமா?

இந்த அவமானம் எல்லாம் அனுபவித்ததுதானே.

வயிற்றுச் சுமையோடு கழுத்தில் தாலியற்று நின்ற போது இருந்த கேலிப் பார்வைகளும் குத்தல் பேச்சுகளும் என்றேனும் மறக்கக்கூடுமா?

பிரசவ ஆஸ்பத்திரி நர்ஸ்கூட எவ்வளவு இகழ்ச்சியாக நடத்தினாள்.

இப்போதும்கூட முனைவீட்டு மாமி, "இவன் அப்பா" என்று வேண்டுமென்றே பேச்செடுப்பதும் "ஓ மறந்துட்டேனே. அவர் பத்திதான் நீங்க பேசமாட்டேளே!" என்று உதட்டைப் பிதுக்கு வதும் நடக்கத்தானே செய்கிறது.

நாளை இந்தப் பச்சை மண்ணை மட்டும் விட்டு வைப்பாளா?

உள்ளூர எண்ணி எண்ணிப் பயந்து கொண்டிருந்த ஒன்றுக்கு அவன் வார்த்தை வடிவம் கொடுத்தபோது மேலும் பயங்கரமாக இருந்தது.

அவசரப்பட்டுப் பிழைபுரிந்த அவள் அவமானப்பட்டது நியாயமாக இருக்கலாம்.

பெற்ற பாவத்துக்காக அவளுடைய தாயும் தந்தையும் பட்டதே அநியாயமாகத்தான் இருந்தது.

பெரியவர்கள் என்பதால் புரிந்து பொறுத்துக் கொண்டார்கள்.

ஆனால் அவள் வயிற்றில் பிறந்த பாவத்துக்காக ஒன்றும் அறியாத இந்தப் பிஞ்சும் வெந்து வெதும்புவதா?

பதில் சொல்ல முடியாமல் அவள் பார்வை தாழ்ந்து போயிற்று.

சில கணங்கள் பொறுத்து. விஜயேந்திரன் சிதம்பரத்திடம் திரும்பினான்.

"நீங்கள் நாளைக் காலையிலேயே என்னைப் பற்றி விசாரித்து முடித்து விட்டீர்களானால்..."

"அதற்கு அவசியம் இல்லை. மாப்பிள்ளை" என்று முறுவலித்தார் சிதம்பரம்.

விஜயன் பார்வை ரேகாவின் குனிந்த தலைமீது படிந்து மீண்டது.

"இல்லை இல்லை . பிற்பாடு மன உளைச்சல் இல்லாமல் இருக்க வேண்டுமானால் இப்போது விசாரித்து விடுவது தான் நல்லது. என் பொருளாதார நிலைமை பற்றி நன்றாக விசாரியுங்கள். அப்புறம்... நாளைக்குக்கூட ஒரு முகூர்த்த நாள் என்று நினைக்கிறேன் அன்றே நடத்தி விடலாம்."

சிறுதயக்கத்தோடு "உங்கள் தாயார்... தந்தை... மற்றவர்கள்" என்று இழுத்தார் சிதம்பரம்.

"அப்பா இறந்தபிறகு எந்த விசேஷத்திலும் அம்மா கலந்து கொள்வது இல்லை. மற்றவர்கள்... யாரென்றாலும் எடுத்த எடுப்பில் இதையெல்லாம் ஒப்பமாட்டார்கள். அவர்கள் எதிர்த்து அதை மீறிச் செய்வதாக ஏன் இருக்கவேண்டும். இவர்கள் என் பிள்ளை, என் மனைவி, செய்த தப்பை சீர் செய்தேன் என்று முடித்துவிட்டால் எல்லாம் சரியாகிப் போகும். இனி எதிர்த்துப் பயன் இல்லை என்றாவது ஒத்துப் போய் விடுவார்கள்."

'எதிர்த்து', 'மீறி.'

அங்கே யாரும் அன்போடு ஆரத்தி சுற்றமாட்டார்கள் என்பதைத் தெரிவிக்கிறான்.

ஆக அங்கேயும் அவமானப்பட்டாக வேண்டும்.

சட்டென எழுந்து வெளியே சென்றாள் ரேகா.

பின் வாயிலில் அமர்ந்து, "அப்புறமாய் பெரிய காரில் ஸ்கூலுக்குப் போவாயாம்" என்று பேரனுக்குக் கதை சொல்லிக் கொண்டிருந்தார் சரஸ்வதி.

அங்கேயும் செல்ல மனம் இல்லாமல் தன் அறைக்குள் சென்று சன்னல் ஓரமாய் அமர்ந்தாள் ரேகா.

வெளிக்காட்சி எதுவும் மனதில் பதியவில்லை.

இந்தத் திருமணத்தை ஒப்ப மனம் வரவில்லை.

இதிலிருந்து மீளவும் வழியில்லை.

ஒரு தரம் இவனைப் பார்த்த பாவம் - ஆனந்தமாய் இருந்த உலகம் அவலமாய்ப் போயிற்று. இப்போதும் எப்படியோ ஒரு வழியாக நிம்மதியாய் இருந்ததைக் கெடுக்கவென்றே வந்து நிற்கிறானே.

பின்புறம் அரவத்தோடு தந்தையின் குரலும் கேட்டது. "நீ செய்வது நன்றாயில்லை ரேகா" பாதிப் பேச்சில்...

ஆத்திரத்துடன் திரும்பினாள் ரேகா.

"நான் செய்வது நன்றாயில்லை என்கிறீர்களே அப்பா, நீங்கள் செய்வது நன்றாயிருக்கிறதா? வேரோடிய மரத்தை அடியோடு பெயர்த்து வந்த மாதிரி நட்பு, சுற்றம் எல்லாவற்றையும் விட்டுவிட்டுத் திருடர்களைப் போல ஓடி வந்தோமே, இங்கே மட்டும் கொஞ்சமா அவமானப்பட்டோம்? இவ்வளவு காலம் கழித்தும், நாம் நல்லவர்கள் என்று தெரிந்தும், 'ஏதோ போகிறது' என்று மன்னிக்கும் பாவனையில் பழகுகிறார்களே தவிர, சென்னையில் இருந்தமாதிரி வெளிப்படையான பிரியத்தோடு இங்கே யார் நம்மோடு பழகுகிறார்கள்? எத்தனை பேர் வாயிலிருந்து வேதனைப்பட்டு... கடைசியில் இத்தனைக்கும் காரணமானவர் வந்து நின்றால் காலில் விழுந்து கும்பிடவில்லை என்று குறை சொல்கிறீர்களே. இது மட்டும் நன்றாக இருக்கிறதா?" என்று பொரிந்து கொட்டினாள்.

"நேற்று என்பது முடிந்து போன விஷயம் அம்மா. அதையே நினைத்து வரப்போகிற எவ்வளவோ காலத்தை வீணாக்கலாமா? கொஞ்சம் மறக்கவும் தெரியவேண்டும் தங்கம்" என்றார் அவர் இதமாக.

"அதெப்படி அப்பா? என்னிடம் நெருங்கிப் பழகிவிட்டு இன்னொரு பெண்ணை மணக்க இருந்தவர் என்பதை எப்படி மறப்பது?"

"அந்தத் திருமணம்தான் நின்றுவிட்டதே."

"திருமணம் நின்றதா இல்லையா என்பது விஷயம் இல்லை அப்பா. ஒருத்தியைக் கைவிட்டுவிட்டு இன்னொருத்தியை

மணக்கத் தயாராக இருந்தவர்தானே. இந்த மாதிரி மனிதரைக் கல்யாணம் செய்து கொள்வது என்றால் அருவருப்பாக இல்லையா?"

"நீ நினைக்கிற விதமே தப்பும்மா. எங்களைப் பொறுத்த வரையில் வாழ்வில் பெரும் பகுதியைக் கடந்து விட்டோம். நீ அப்படியில்லையே சின்னக்குட்டி, இப்போதுதான் தொடங்குகிறவள். இந்த இரண்டு எதிர்காலங்களை எண்ணிப் பார்க்கவேண்டாமா? முக்கியமாகக் குழந்தையின் வருங்காலம் பற்றி அவர் சொன்னதைத் தள்ளிவிட முடியுமா? நானே அதையெல்லாம் எதிர்பார்த்து உள்ளூரக் கலங்கிக் கொண் டிருந்தேன் பார். அன்றைக்குப் பிள்ளை வேண்டும் என்றாய். எல்லா வகையிலும் உன் அம்மாவும் நானும் துணை நிற்க வில்லையா? இப்போது ஓய்ந்துபோகிற வயதில் எங்களுக்கும் நிம்மதி வேண்டாமா?"

"நாற்பத்து எட்டு வயதில் நீங்கள் ஒன்றும் ஓய்ந்து போக வேண்டியதில்லை." என்று முணுமுணுத்தாள் ரேகா.

"சரி அப்படி இல்லை. வாழ்கிற வயது என்றே வைத்துக் கொள்ளேன். அதை நிம்மதியாய் வாழ விரும்புகிறோம். நம் எல்லோரையும்விட ராஜாக்குட்டி முக்கியம் அம்மா. அவனுக்காக வேனும் மாப்பிள்ளையிடம் நல்ல படியாக நடந்து கொள்" என்றார் மகளிடம் கெஞ்சுவது போல.

"பெரிய மாப்பிள்ளை" என்றாள் அவள் வெறுப்புடனேயே.

"ஆமாம். ஆறடி இருக்கிறாரே" என்று லேசாகச் சிரித்தார் தந்தை.

"ஜோக் அடிக்கிறீர்களாக்கும்" என்று எரிச்சல் பட்டாள் மகள்.

"ஆமாம்மா. மூன்று ஆண்டுகளாக மறந்து போயிருந்தது. கண்ணம்மா, உனக்காக இல்லை. என்றாலும் இந்த அப்பனுக்காகவும் அந்தப் பிள்ளைக்காகவும்..."

விஜயனும் அவன் மகனும் இணைந்து நகைக்கும் ஒலி முன்னறையிலிருந்து வந்து காதில் விழுந்தது.

"அதுதான் சரியென்று முடித்தாகிவிட்டதே" என்று சிடுசிடுத்தாள் ரேகா.

"அதைக் கொஞ்சம் சிரித்தாற்போலச் சொல்லவேண்டும் அவ்வளவுததான்" என்று முறுவலித்தார் சிதம்பரம்.

வாய்சிரித்த போதும் தந்தையின் கண்ணில் கவலையைக் கண்டு மனம் இளகிப் போனாள் மகள்.

பிள்ளைக்காகத் தியாகம் செய்யச் சொல்லும் இந்தத் தந்தை தனக்காகச் செய்திருக்கும் தியாகங்கள் புரியாதவள் அல்லவே அவள்.

பெற்றவர்கள் முகம் மலர்ந்து ஜாடையாகப் பார்வை பரிமாறிக் கொள்ள அவனை வழியனுப்ப வெளிகேட் வரையும் சென்றாள்.

பெரியவர்களின் பார்வையிலிருந்து மறைந்ததும் நின்று "என்ன விஷயம்?" என்று வினவினான் விஜயேந்திரன்.

"எது?" என்றாள் அவள்.

"நீ உன் பெற்றோர் அறியாமல் என்னிடம் சொல்ல வந்தது. வெறும் வழியனுப்பலுக்காக நீ வாயில் வரை வந்ததாக நான் கருதவில்லை." என்றான் அவன்.

விஷயம் மெய்தான் என்றாலும் அதை அவன் கண்டு கொண்டதில் அவளுக்கு எரிச்சல் வந்தது.

இவனை மணக்கவென்று நான் ஒன்றும் தவம் கிடக்கவில்லையே என்ற அலட்சியம் வேறு.

எனவே தன் முகச் சுழிப்பை மறைக்கக்கூட அதிக முயற்சி பண்ணாமல் "ராஜாவுக்காகத்தான் இந்தத் திருமணம் தெரியுமில்லையா என்றாள்.

அவன் பதில் கூறாமல் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டு அதே உணர்ச்சியற்ற பார்வையுடன் நிற்கவும் மேலும் எரிச்சல் மிக, "மற்ற வகையில் நான்... என்னிடம் இருந்து எதையும் எதிர்பார்க்க வேண்டாம்" என்றாள் குறிப்பாக.

அவன் பேசியபோது பார்வையைப் போலவே அவனது குரலிலும் உணர்ச்சியில்லை. "என் மனைவி என்ற நிலையில் குறைந்த பட்சமாக சில நியதிகளை நீ கடைப்பிடித்துத்தான் ஆகவேண்டும் ரேகா. ஆனால் அதீதமாக எதையும் உன்னிடம் நான் எதிர்பார்ப்பதற்கு இல்லை என்பது உனக்கு நன்றாகவே தெரியும். வருகிறேன்" என்று காரில் ஏறி அமர்ந்து கிளம்பினான்.

கொஞ்சம் குழம்பிப் போனாள் ரேகா.

'எதையும் எதிர்பார்ப்பதற்கில்லை - என்றானே' அன்று கை விட்டது தவறு என்று உணர்ந்து உள்ளூர வருந்துகிறானோ?

ஆனால் கழிவிரக்கம் கொண்டவன் என்றால் உதட்டோரத்தில் அந்த ஏளன வளைவு ஏன்?

இம்மெனுமுன் அன்று குழைந்தவள்தானே என்றா!

எப்படியும் இரண்டும் ஒன்றை ஒன்று வெட்டுகின்றனவே!

லேசாகத் தோளைக் குலுக்கினாள் ரேகா.

இவனை என்றுதான் புரிந்து கொண்டிருக்கிறாள் இவள்.

புரிந்து கொண்ட தாக நினைத்திருந்த அன்றும்புரியாமல்தான் பழகி இருக்கிறாள்.

இன்றோ அடியோடு புரியாத முழுப் புதிர், அவ்வளவுதான்.

கஷ்டம் என்னவென்றால் இவனோடு வாழ்நாளெல்லாம் கழித்தாக வேண்டும்.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்.

இனி ஒரு தரம் அவனுடைய விளையாட்டுப் பொம்மையாக அவன் கையில் நெகிழ்வது மட்டும் இனி ஒரு போதும் நடவாத ஒன்று.

அது மட்டும் சர்வ நிச்சயம்.

ஆனால் அவனும் கூடத்தான் அதை எதிர்பார்க்கவில்லை என்றானே.

அதென்ன வார்த்தை?

'அதீதமாக எதையும்'

ஆம்,

அதீதம் தான்,

இன்றைக்கு மட்டும் அல்ல.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக அப்போதும்கூட அது அதீதம்தான்.

அந்த உண்மை புரிய இத்தனை காலம் ஆனது தான் பரிதாபத்துக்குரிய விஷயம்.

## 6

முக்கியமான விஷயம் தன் எண்ணப்படி தீர்வான பிறகு ரேகா எதிலும் அதிக அக்கறை காட்டவில்லை.

தாலி என்று இறைவன் சந்நிதியில் அவன் கட்டியபோது கொஞ்சம் திக்கென்று இருந்தபோதும் எல்லாம் என் செல்வனுக்காக என்று மனதை நிலைப்படுத்திக் கொண்டாள்.

தாயார், தந்தை இருவருமே முக்கியமாகச் சொன்னது புத்திமதி எப்போதும் பொறுமையோடு இருக்கவேண்டும் என்பதுதான்.

எப்படியும் மாப்பிள்ளை பார்த்துக் கொள்ளுவார் என்ற நம்பிக்கை இருவருக்கும் இருந்ததைப் பார்த்து உள்ளூர ஆச்சரியப்பட்டாள் ரேகா.

'எனக்கு அணுவளவுகூட இல்லாத நம்பிக்கை...க்க்'

மதுரையில் இருந்து விமானம் மூலம் திருச்சி சென்று அங்கே ஓர் ஓட்டலில் தங்கினார்கள்.

அவன் டெலிபோனும் கையுமாக அமர்ந்திருந்தபோது ரேகா ராஜாவின் தேவைகளைக் கவனித்தாள்.

"வீட்டிற்குச் செல்லுமுன் உனக்கும் ராஜாவுக்கும் ஏதேனும் வாங்க வேண்டுமென்றால் சொல். என் சகோதரிகள் வாங்கும் கடைகளுக்கு அழைத்துப் போகிறேன்" என்றான் விஜயன்.

"அவசியம் இல்லை" என்று மறுத்துவிட்டாள் ரேகா.

மதுரையிலேயே "உனக்கும் பையனுக்கும் துணிமணி, தேவையான சாமான் வாங்க என்று மாப்பிள்ளை பணம் தந்தார். ஆனால் என்னால் இயன்றதை நானே வாங்கிவிடுவ தாக இருக்கிறேன். மாப்பிள்ளை தந்த பணத்தை அப்படியே உன்னிடம் தந்து விடுகிறேன். உன் விருப்பம் போலச் செய்து கொள்" என்று கத்தையாக நோட்டுகளைக் கொடுத்தார் சிதம்பரம்.

எண்ணிப் பார்த்தாள் ஐந்து ஆயிரம்! ஹூம்!

இதில் ஒரு பைசாக்கூடச் செலவு பண்ணாது அப்படியே திருப்பிக் கொடுத்துவிடவேண்டும் என்ற உறுதியுடன் பணத்தை வாங்கி வைத்துக் கொண்டாள் ரேகா.

இவனுடைய பணம் யாருக்கு வேண்டும்.

தன் செலவாக மகளுக்கு மூன்று பட்டுச் சேலைகளும் நாலு பாலியெஸ்டர் சேலைகளும் வாங்கினார் சிதம்பரம்.

குழந்தைக்கும் பாபாசூட் அது இதென்று ரெடிமேடு ஆடைகள் பொறுக்கி எடுத்திருந்ததார் சரஸ்வதி.

எனவே மெய்யாகவே தேவையில்லை என்றுதான் எண்ணினாள் ரேகா.

"எதற்கும் கொஞ்சம் வாங்கிக் கொள்" என்று அவள் வற்புறுத்திச் சொன்னபோதும் பிடிவாதமாய் மறுத்துவிட்டான்.

மாலை வெயில் குறைந்ததும் அவன் ஏற்கனவே வரவழைத் திருந்த காரில் புறப்பட்டார்கள்.

குறுகுறுப்பை மறைக்க முயன்று பணிவுடன் நின்ற டிரைவரை பஸ்ஸில் வரச்சொல்லிவிட்டு விஜயேந்திரனே காரை எடுத்தான்.

வளநாட்டுப் பாதையில் திரும்புகிறோம் என்று அவன் சொன்னதும் அவளுக்கு வயிற்றில் பட்டாம்பூச்சிகள் விளையாடத் தொடங்கின.

இதுவரையிலே சுகமோ துக்கமோ, பங்கேற்றுத் துணையிருக்க எப்போதும் பெற்றோர் அருகே இருந்தார்கள்.

முதல் தடவையாகத் துணையற்றுத் தன்னந்தனியாக வாழ்க்கையை எதிர்கொள்ளப் போகிறாள்!

அங்கே யார் இருக்கக்கூடும்?

அவர்கள் எப்படிப்பட்டவர்கள்?

குணம், பிரியம் எல்லாம் எப்படி?

எதுவுமே தெரியாது.

காரிருள் துழாவுவது போலத்தான்.

எல்லாம் தெரிந்தவன் அருகில் இருந்தும் அவனிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவே மனம் இல்லை.

இறுகிப் போய் அவள் இருப்பதை அவன் கவனித்தானோ "வீட்டில் என் அம்மாவும் சின்னத் தங்கையும் அவள் பெயர் வித்யா இருப்பார்கள். பெரிய தங்கை உதயா ஒருவேளை வந்திருக்கலாம். வீட்டுக்கு விருந்தாளிகள் யாரேனும் வந்திருக்கக்கூடும். ஆனால் அவர்களை அவ்வளவாகப் பொருட்படுத்தத் தேவையிராது. நம் வீட்டினரைப் பொறுத்த வரையில் முதலில் கொஞ்சம் ஒரு மாதிரிப் பழகக் கூடும். கொஞ்சம் பொறுத்துப் போனால் எல்லாம் சரியாகிவிடும்." என்றான் அவன் அவளை அமைதிப்படுத்துவது போல.

அதற்கு இடம் தராது. "இந்தக் கஷ்டம் எதற்கு? நிம்மதி யாக இருந்திருக்கலாம்" என்றாள் அவள் மொட்டையாக.

பக்கவாட்டில் ஒரு பார்வையைச் செலுத்திவிட்டு, "எத்தனை நாள்?" என்றான் அவன் கேலியாக.

அவன் கூறுவதுதான் சரி என்ற உண்மை அவளது எரிச்சலை அதிகப்படுத்தியதே தவிர எந்தவித ஆறுதலும் அளிக்கவில்லை.

மூன்று ஆண்டுகள் முன்பாகப் பார்த்த இடம் எதையுமே அவளுக்கு அடையாளம் காண முடியவில்லை.

அன்று ஒருவகைப் பதற்றம் என்றால் இன்று இன்னொரு வகையாக இருந்தது.

அல்லது இந்த வழியே வேறா என்று எண்ணினாள் ரேகா.

ஒரு பெரிய கேட்டின் முன் கார் லேசாகத் தயங்குமுன் மின்னல் விரைவுடன் இருவர் கதவுகளைத் திறந்தனர்.

கார் உள்ளே வெகுதூரம் சென்று பெரிய தூண்களால் தாங்கப் பெற்ற ஒரு போர்டிகோவில் நின்றது.

காக்கி உடை அணிந்த ஒருவன் ஓடிவந்து கார்க் கதவைத் திறந்தான்.

காரைச் சுற்றி வந்துபிள்ளையைத் தூக்க அவன் கை நீட்டு முன், மடியில் தூங்கிய பிள்ளையை அவசரமாகத் தோளில் சாற்றிக் கொண்டு இறங்கினாள் ரேகா.

அசைவில் லேசாக விழித்த குழந்தை சுற்றிலும் எல்லாம் புதிதாகத் தெரியவும் தாயின் கழுத்தை இறுகக் கட்டிக் கொண்டான்.

"தாத்தா எங்கே?" என்றான் சிணுங்கலாக.

"தாத்தா ஊரில்..." என்று பதிலளித்தபடி விஜயனைத் தொடர்ந்தாள் ரேகா.

அலங்கார வேலைப்பாடமைந்த பெரிய கதவுகளைத் தாண்டி உள்ளே சென்றதும் ரேகா சற்று திகைத்தாள்.

அந்தப் பெரிய அறையில் மதுரை வீடு முழுவதுமே அடங்கிவிடும்!

அறையில் யாரும் இருப்பது போலவே முதலில் தெரியவில்லை.

பிறகுதான் ஒருபுறமாய்ப் போடப்பட்டிருந்த சோபாக்களில் மூன்று பெண்கள் இருந்தது தெரிந்தது.

இருவர் சற்று முதியவர்கள். முதியவர் என்றால் ஒரேயடியாக அறுபது எழுபது என்றில்லை. ஐம்பதை ஒட்டி இருக்கக் கூடும்.

சுமார் பதினெட்டு வயது இளம் பெண் ஒருத்தி சோபாவில் சுருண்டு கிடந்தாள்.

உள்ளே இருந்த மனிதர்களை ஆவலுடன் பார்வையிட்ட ராஜா அங்கேயும் தன் அன்பிற்குரிய தாத்தா பாட்டியைக் காணாது போகவே லேசாக அழத் தொடங்கினான்.

"தாத்தா வேணும். பாத்திம்மா வேணும்..."

''ஷ் கத்தக்கூடாது ராஜ்'' என்று தணிவான குரலில் அதட்டினாள் ரேகா.

தூக்கக் கலக்கம் சரியாகத் தெளிந்திராத குழந்தை. மனதிற்கு இனியவரைக் காணாததே பெரிதாய் இருந்தது.

கூடவே புதிய மனிதர்களைக் கண்ட மிரட்சி வேறு.

அத்தோடு தாயின் அதட்டலும் சேர்ந்து கொள்ளவே ஓங்கி முழுத் தொண்டையில் "தாத்தா, பாத்திம்மா..." என்று கூவி அழைத்து அழலானான்.

"ராஜா இதோ பார்" என்று அழைத்த தந்தையையும் அவன் லட்சியம் செய்தது ரேகாவுக்கு ஓரளவு திருப்தியையே தந்த போதும், தானாகவும் பிள்ளையைச் சமாதானப்படுத்த முடியாது திணறினாள்.

"ஷ் கத்தக்கூடாது கண்ணா" என்று அவனை அடக்க முயன்று, முடியாது போகவே முதல் தடவையாகப் பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள் என்று சங்கடத்தோடு நிமிர்ந்தபோது, அந்த இளம் பெண்ணின் குரோத விழிகளைச் சந்தித்தாள்.

''உம். இனிமேல் இந்தப் பாட்டை வேறு சகித்தாக வேண்டுமா? அம்மா காலையில் பூபாளத்தில் டேப் வைப்பீர் களே. இனி இந்த ராகமே போதும்" என்றாள் அவள் உரக்க.

"வித்யா, பேசாதிரம்மா" என்று மகளை அடக்க முயன்றார் ஒரு பெண்மணி.

"அவளை ஏன் அண்ணி, அதட்டுகிறீர்கள்? எல்லாம் கால வித்தியாசம் விடுங்கள். வாப்பா தம்பி வா ம்ம்... இதுதான் உன் பிள்ளையும் அதன் தாயாருமா? சின்ன வயதில் நீயானால் அழுததே இல்லை. ஆனால் உன் பிள்ளை இப்படி அழுகிறானே. அம்மா வீட்டு ராசியாயிருக்கும் ஊ... ம்" என்றார் அந்த இன்னொரு பெண்மணி.

உதட்டைக் கடித்துக் கொண்டு அசையாமல் நின்றாள் ரேகா.

ஆனால் பெற்றவனுக்கு ஒன்றும் தப்பாகத் தெரியவில்லை போலும்.

"காரில் தூங்கிக் கொண்டிருந்தான் அத்தை. திடுமென விழித்துப் புதியவர்களைக் காணவும் மிரண்டு விட்டான் போலத் தெரிகிறது. ரேகாவுக்கு எந்த அறை தயார் செய்தீர்கள் அம்மா? வித்யா அண்ணியை அழைத்துப் போம்மா" என்றான் சாதாரணமாகவே.

"அப்...ப்பா" என்று காதைப் பொத்திக் கொண்டாள் சுடிதார் அணிந்திருந்த அந்தப் பெண் வித்யா. "இந்தக் காட்டுக் கத்தலில் நீங்கள் பேசுவது கேட்கவே இல்லை. என்னண்ணா சொன்னீர்கள்?" என்று சிணுங்கும் குரலில் கேட்டாள். "இன்றைக்கு எனக்கு ஒரே கால்வலி" என்று மீண்டும் சோபா வில் தொப்பென்று விழுந்தாள்.

சிறு முறுவலுடன் தங்கையை விஜயன் நெருங்குமுன் "வேலாயி" என்று விளித்தார் விஜயனுடைய தாயார் பவானி அம்மாள் "மாடியில் தயார் பண்ணின அறையை அவர்களுக்குக் காட்டு" என்று பணித்தார்.

பூமிக்குள் போய்விட மாட்டோமா என்று நொந்து கொண்டிருந்த ரேகா, விட்டால்போதும் என்று வேலாயியைத் தொடர்ந்தாள்.

புதிய மனிதர்களிடமிருந்து அகன்றதுமே சிறுவனின் அழுகை குறைந்து போயிற்று.

அதற்குள் அவளது பொருட்கள் அந்த அறையில் கொணர்ந்து வைக்கப்பட்டிருக்கவே உள்ளிருந்து ராஜாவுக்குப் பிரியமான நாய்க்குட்டி பொம்மையை எடுத்து அவனிடம் தரவே அழுகை நின்றே விட்டது.

ஆனால் அதே வேகத்தில் வந்த விசும்பல் மட்டும் மகன் உடலைக் குலுக்கிக் கொண்டு இருக்க, அவனை மடியில் வைத்துக் கொண்டு அசையாமல் அமர்ந்திருந்தாள் ரேகா.

பானைச் சோற்றின் பதம் இந்த ஒரு நிகழ்ச்சி என்றால் பின்வரும் காலம் எப்படி இருக்கும்?

விஜயன் அழைக்கும் முன்பாகவே அவன் வந்தது தெரிந்தும் ரேகா அசையவே இல்லை.

"இன்னமும் விசும்புகிறானே?" என்று அதுதான் முக்கியம் போல் வினவினான் அவன்.

"அது மெல்லத்தான் அடங்கும்" என்று முணுமுணுத்தாள் அவள்.

"என்னடா கண்ணா, எல்லோரையும் மிரட்டினாயா? ம்?" என்று மகனைக் கொஞ்சிவிட்டு, "இவனுக்கு இரவு என்ன உணவு? எப்போது கொடுப்பாய்?" என்று மனைவியிடம் விசாரித்தான்.

"பால் சாதம் ஏழுமணிக்கு" என்றாள் அவள் சுருக்கமாக.

"ஓகே. தங்கம்மாவிடம் கொண்டுவரச் சொல்லுகிறேன். சாதம் கொடுத்து ராஜாவைத் தங்கத்திடம் விட்டு விட்டு வா. எட்டு மணி அளவில் இரவுச் சாப்பாடு."

"நான் இங்கேயே இல்லை. எனக்குச் சாப்பாடு வேண்டாம்..." என்றாள் ரேகா அவசரமாக.

இந்த மனிதர்களோடு சாப்பிடுவதை விடப் பட்டினி கிடக்கலாம் என்று அவளுக்குத் தோன்றியது.

ஆனால் அவன் மறுத்தான். "நோ. யோசனை இல்லாமல் பேசாதே ரேகா" என்றான்.

"ராஜா வேறு யாரிடமும் நிற்க மாட்டானே. பார்த்தாலே அழவில்லையா?" என்று மடக்கினாள் அவள் ஒருவித அசட்டு திருப்தியுடன்.

அவன் சிரித்தான். "தங்கம்மாவைப் பற்றி உனக்குத் தெரியாதில்லையா? என்னையே வளர்த்தவள் அவள்தான்."

"பெரிய தகுதிதான்."

"நிச்சயம்" என்று முறுவலித்தான் அவன். "எட்டு மணி அளவில் உன்னை அழைத்துப்போக வருகிறேன்" என்று விட்டுப் போனான்.

தங்கம்மா வந்தபோது அவன் சொன்னதே மெய்யென்பது புரிந்தது.

அவளுடைய சிரித்த முகமும் அவசரம் அற்ற அணுகலும் ராஜாவுக்குப் பிடித்துப் போயின.

அவள் ஊட்ட ஊட்ட உண்டு. அவளிடமே உடம்பு கழுவி, அவளோடு விளையாடியபடியே உறங்கிப் போனான்.

ராஜாவுக்கு மட்டுமின்றி ரேகாவுக்கும் தங்கம்மாள் வருகை இதமாக, ஒருமாதிரி ஒத்தடம் கொடுத்தாற் போல இருந்தது.

வீட்டினரைப் பற்றிய அனாவசிய வம்பு பேசவில்லை; கூடவே எதையும் கிண்டிக் கிளறவும் இல்லை.

ராஜாவுக்கு எதெது பிடிக்கும், பிடிக்காது என்று விசாரித்தாள்; அவன் தந்தையோடான ஒற்றுமைகளைச் சொன்னாள்.

மெய்யான பிரியம் கொண்டவள் என்பதை அடிக்கடி பிள்ளை மீதே படிந்த நீர்க் கோடிட்ட விழிகள் காட்டின.

"சாப்பிடப் போகலாமா?" என்று விஜயேந்திரன் வந்தபோது மணி எட்டு என்பதை ஒரு திடுக்கிடலுடன் உணர்ந்தாள் ரேகா.

இரவு உணவு ஒரு சோதனையாகத்தான் இருந்தது.

வித்தியாசமாய் ஏதும் இல்லாதது போல இயல்பாக உணவருந்தியது விஜயேந்திரன் மட்டுமே.

முதலில் அவன் அறிமுகம் செய்து வைத்தான்.

ரேகா ஊகித்ததுபோலச் சின்னப்பெண் அவனுடைய சின்னத் தங்கை வித்யா. முதியவர்களில் ஒருவர் அவனுடைய தாயார் பவானி அம்மாள்.

அடுத்திருந்தவர் ஒன்றுவிட்ட மாமனின் மனைவியென்றான் அவன்.

"இவள்தான் நீ கட்டிக் கொண்டவள் என்பது நீ சொல்லாமலே தெரியும்" என்று தொடங்கிய அந்த அம்மாள் வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் ரேகாவை மட்டம் தட்டினாள்.

பவானி அம்மாள் மட்டம் தட்டவில்லைதான். பேசினார் தான். ஆனால் பொதுப்படையாக அந்தப் பேச்சுக்குப் பின் இருந்த நம்பிக்கையும் வெறுப்பும் தெளிவாகவே தெரிந்தன.

"என்ன படித்திருக்கிறாய்?" என்ற பவானி அம்மாளின் கேள்விக்கு ரேகா பதிலளிக்குமுன் முந்திக் கொண்டு "என்ன ஏதாவது வேலைக்குப் படித்திருப்பாள். சம்பாதிக்க வேண்டியிருக்குமே" என்று பதில் சொன்னார் மாமன் மனைவி.

"எங்கே படித்தாய்? என்று வந்த கேள்விக்கு. என்ன, "ஏதாவது கார்ப்பரேஷன் ஸ்கூலாயிருக்கும். அங்கேதான் சம்பளம் கிடையாதாம்" என்று பதில் வந்தது.

ரேகா வாயைத் திறக்கத் தேவையே இருக்கவில்லை உணவு அருந்துவதற்காகத் தவிர.

ஆனால் உணவும் வெறுப்பாய் இருந்ததால் அதுவும் அவசியமற்றுப் போயிற்று.

உம்மென்ற முகத்துடன் இருந்த வித்யாவோ பேசவே இல்லை.

ஒருபுறம் ஆத்திரம் பொங்கியது ரேகாவுக்கு.

ஆனால் மாமியாரின் நிலையில் யார் இருப்பினும் இப்படித்தான் இருக்க முடியும் என்றும் தோன்றியது.

"உதயா ஏதும் டெலிபோன் செய்தாளா, அம்மா?" என்று ஒரு நீண்ட மவுனத்தைத் தகர்த்து விஜயன் விசாரித்தான்.

"ம். பேசினாளப்பா. முடிந்தவரையில் நாளையே வர முயற்சி செய்கிறாளாம். ஆனால் மருமகனும் அவளும் மட்டும்தான் வர முடியுமாம். அதற்கே அவள் மாமியார் ஆயிரம் சொல்கிறார்களாம். அங்கே என்ன சமாளிக்கிறாளோ எப்படித் திண்டாடுகிறாளோ!" என்றார் அவன் தாயார் வருத்தமாக.

"எல்லாம் சரியாகிவிடும்மா" என்று தாயாரைத் தேற்றினான் விஜயேந்திரன்.

சற்றுமுன் மாமியார் மீது தோன்றிய பரிவு பனியாய் மறைய, பளபளத்த பீங்கான் தட்டை ரேகா வெறித்தாள். உணவை அளைந்தாள்.

'அன்பிலாச் சோறு என்பிலே குத்தியது' என்பார்கள்.

உணவு ரேகாவின் தொண்டையிலே சிக்கிக்கொண்டு இறங்க மறுத்தது.

"கெட்டித் தயிர் உனக்குப் பழக்கம் இல்லையென்றால் நீர் ஊற்றிப் பிசைந்தாவது சாப்பிடுவதுதானே" பரிவு போல அத்தையம்மாள் மட்டம் தட்டினாள்.

பொறுமை பொறுமை என்று உபதேசித்த பெற்றோரை நினைவில் கொண்டு வாயை இறுக மூடிக்கொண்டு மனதால் 'ஒன்று இரண்டு' எண்ணலானாள் ரேகா.

ஒரு பத்துக்குப் பதிலாக மூன்றுதரம் எண்ணியும் சீற்றம் மட்டுப்பட மறுத்தது.

சட்டென எழுந்தாள்.

"எனக்குக் களைப்பாக இருக்கிறது. தூங்கப் போகிறேன்" என்றவள் வாஷ்பேசினில் கையைக் கழுவிக் கொண்டு மட மடவென்று வெளியேறிச் சென்றுவிட்டாள்

அறையில் ராஜாவின் தொட்டிலின் அருகே இருந்த தங்கம்மாள் முறுவலித்து, "போகட்டுமாம்மா?" என்று அனுமதி வாங்கிக்கொண்டு சென்றாள்.

தூங்கும் மகனின் முகத்தைச் சற்று நேரம் பார்த்துக் கொண்டு நின்றுவிட்டுச் சோர்வுடன் கட்டிலில் சாய்ந்தாள் ரேகா.

துன்பத்திலும் துயரத்திலும் பங்கேற்று அரணாகத் துணை நின்ற பெற்றோரின் பிரியத்துக்காக மனது வெகுவாக ஏங்கியது.

நிழலின் அருமை வெய்யிலில் பல மடங்கு அதிகமாகத் தெரியுமல்லவா?

அன்பேயில்லாத இந்த வீடோ கொடும் பாலையாகத் தகித்தது.

கொண்டவன் துணையிருந்தால் எதை எதையோ தாங்கலாம் என்பார்கள்.

ஆனால் அவனும் பிள்ளைக்காக மட்டிலுமே அவளை மணந்தவன் ஆயிற்றே.

"மகனைப் பிரிந்து இருப்பாயானால் உன் இஷ்டம்" என்று சொன்ன கல் நெஞ்சன் ஆயிற்றே.

இந்த வாழ்க்கையை அவளால் தாங்கமுடியுமா?

குழப்பத்துடன் அவள் அமர்ந்திருந்தபோது கதவைத் தட்டி விட்டு அவன் உள்ளே வர அவள் நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

அவன் கையில் உயர்ரக பிஸ்கெட் பாக்கெட் ஒன்று இருந்தது.

பிஸ்கெட்டை அவளது படுக்கையை ஒட்டியிருந்த சிறு மேசைமேல் வைத்துவிட்டு, "நீ சரியாகச் சாப்பிட்டது போலத் தெரியவில்லை. அதனால் கொணர்ந்தேன். பசித்தால் சாப்பிடு" என்றான்.

தொட்டிலின் அருகே சென்று பார்த்துவிட்டு, "நன்றாகத் தூங்கிவிட்டானே. தினமும் இதே நேரத்தில் உறங்கி விடுவானா?" என்று வினவினான்.

நிமிர்ந்துகூடப் பாராமல், உதடுகளை அழுந்த மூடிக் கொண்டு அசையாமல் அமர்ந்திருந்தாள் ரேகா.

ஒரு பொறுமையிழந்த மூச்சுடன், "ரேகா, நான் உனக்கு உதவி செய்யத்தான் விரும்புகிறேன். ஆனால் குதிரையைத் தண்ணீரின் அருகே கொண்டு விடத்தான் முடியுமே தவிர தண்ணீரைக் குடிக்க வைக்க முடியாது. என் உதவியை நீ ஏற்கவில்லையானால் நான் என்ன செய்வது?" என்று முடிந்த அளவு நிதானமாகவே கேட்டான் அவன்.

"பார்த்தேனே. சாப்பிடும்போது வெகுவாக உதவி செய்தீர்களே" என்றாள் ரேகா குத்தலாக.

"ஏன்? உன்னை யார் என்ன செய்து விட்டார்கள்? எல்லோருக்குமே முதலில் அதிர்ச்சியாகவும் ஏமாற்றமாகவும் இருக்கும் என்பது எதிர்பார்த்ததுதானே. மற்றபடி வித்யாகூட வாயே திறக்கவில்லையே" என்று அவன் தன் உறவினர்களுக்காகப் பரிந்து வந்தது இன்னமும் அவளுடைய சினத்தை அதிகரிக்கச் செய்தது.

"மெய்தான். அத்தோடு உங்கள் அத்தையின் கொஞ்சல் இப்படித்தான் இருக்கும் என்று புரிந்து கொள்ளாததுகூட என் தப்புத்தான் இல்லையா?" என்றாள் ஏளனமாக.

லேசாக முறுவலித்துவிட்டு, "அத்தைக்கு அவர்களுடைய மகளை நான் மணந்து கொள்ளவில்லை என்று கோபம். அதைக் கொஞ்சம் காட்டுகிறார்கள். கவனியாதது போல விட்டு விட்டால் எல்லாம் சரியாகிவிடும்" என்றான் இதமான குரலில் அவன்.

"ஆமாம் ஆமாம். எல்லாமே சரியாகித்தான் விடும். சரியாகாதது என்றுகூட ஒன்று உண்டா என்ன?" என்றாள் ரேகா வெகு ஏளனமாக.

ஒருகணம் பேசாதிருந்துவிட்டு, "ஒருவேளை சாப்பாட்டு அறையில் நீ சொல்லிவிட்டு வந்தது பொய்யாக இல்லாமல் உண்மையாகவே உனக்கு களைப்பாகவே இருக்கிறது போலும். தூங்கு. காலையில் பார்க்கலாம்." என்றவன் பதிலுக்குக் காத்திராமல் திரும்பி நடக்கலானான்.

தோரணையாக அவன் சொல்லிவிட்டுப்போன விதம் ஆத்திரமூட்டியதாலோ என்னவோ, கதவருகே நின்று, "சுகமாக வந்து சேர்ந்ததாக உன் அப்பாவுக்குத் தந்தி கொடுத்திருக்கிறேன். நாளைக் காலையில் பதினோரு மணிக்கு உன் அப்பாவின் அலுவலகத்துக்கு 'டிரங்க் கால் புக்' பண்ணியிருக்கிறேன். சுகம் என்று உன் வாயால் சொன்னால் அவர்களுக்கு ஆறுதலாக இருக்கக்கூடும்... மேலே என் அறையை நாளை காட்டுகிறேன். அங்கேயே டெலிபோனை எடுத்துப் பேசு" என்று சொல்லிவிட்டுப் போனபோது, அவளால் ஒரு 'நன்றி' கூடச் சொல்ல முடியவில்லை.

## 7

மறுநாள் காலை ஆறுமணிக்கெல்லாம் ராஜாவின் வழக்கமான காலைப் பாலுடன் தங்கம்மாள் வந்து விட்டாள்.

குழந்தையின் வேலைகளை அவள் கவனிக்கத் தொடங்கவும், "பரவாயில்லை. வழக்கம்போல நானே பார்த்துக் கொள்கிறேன்" என்றாள் ரேகா.

முகத்தில் அறைவிழுந்தாற்போல் வாடிப்போனாள் தங்கம்மா. "ஏனம்மா, இவன் அப்பாவை முழுக்க முழுக்க வளர்த்த நான், இந்தக் குழந்தையைச் சரியாகப் பார்த்துக் கொள்ள மாட்டேன் என்றா நினைக்கிறீர்கள்?" என்று வருத்தமாகக் கேட்டாள்.

தானாகவே பிள்ளையைத் தூக்கி அவள் கையில் கொடுத்துவிட்டாள் ரேகா.

ரேகாவும் குளித்து உடைமாற்றி கொண்டிருந்தபோது விஜயேந்திரன் வந்தான்.

"தங்கம்மா, ராஜாவைத் தோட்டத்திற்கு அழைத்துப் போய் விளையாடவிடு" என்று அனுப்பினாள்.

"உன்னோடு பேச வேண்டும். என் அறைக்குப் போய்ப் பேசலாம்" என்று ரேகாவை அழைத்துச் சென்றான்.

அவன் அறையும் மாடியில்தான் இருந்தது.

விசாலமான அந்த அறையின் ஒரு பகுதியை ஒரு பெரிய மேசை அடைத்திருந்தது.

ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அவளை அமரச் செய்துவிட்டு எதிரே மேசைமீது சாய்ந்தபடி நின்று சொல்லலானான்.

பதினோரு மணிக்கு இங்கே டெலிபோன் கால் வரும், எடுத்துப் பேசு. உன் மனதில் என்ன இருந்தாலும் ரேகா, அவர்கள் மனதுக்கு நிம்மதி தரும் விதமாகப் பேசுவாய் என்று நம்புகிறேன் என்று நிறுத்தினான்.

"அவர்கள் என்னைப் பெற்றவர்கள் என்பதை மறக்க வேண்டாம்."

"அது உனக்கும் நினைவிருக்கும் வரை நல்லது தான்" என்றான் அவன் கேலியாக.

அவள் ஆத்திரமாக நிமிரவும் "கோபப்படாதே ரேகா வீண் சச்சரவுகளில் கழிக்க இப்போது எனக்கு நேரம் இல்லை. சில விஷயங்களைச் சொல்லிவிட்டு அரைமணி நேரத்திற்குள் தொழிற்சாலைக்குச் செல்ல வேண்டும்."

''முதல் விஷயம் உன் அறை. அதை மாற்ற வேண்டியிருக்கிறது."

"ஏனோ? எனக்கு அது வசதியாகத் தான் இருக்கிறது."

"இங்கே எல்லா விருந்தினர் அறையுமே அதேபோல வசதியாகத் தான் இருக்கும். ஆனால்..." என்று சற்றுத் தயங்கி விட்டு, ''குறுக்கே பேசாமல், என் மேல் பாயாமல் பொறுமையாகக் கேள் ரேகா. பிடிக்கிறதோ பிடிக்கவில்லையோ, நாம் இருவரும் கணவன்மனைவி, வீண் பேச்சுக்கு இடம் அளிக்காமல் நாம் இருவரும் வெவ்வேறு அறைகளில் இருக்க முடியாது?" என்று இழுத்த போது ரேகா குறுக்கிட்டாள்.

"ஏன் முடியாது?" கணவன் பேச்சை எதிர்க்க வேண்டும் என்ற வேகத்தில் வார்த்தைகள் வெளி வந்து விட்டபோதும் உடனே முகம் சிவந்து போனாள்.

உடனே சமாளித்துக் கொண்டு, ''உங்கள் அறையில் இருப்பதென்றால் எனக்குப் பிடிக்கவில்லை" என்று முகத்தை சுளித்தாள்.

"பிடிக்கிறது, பிடிக்கவில்லை என்ற பிரச்சினையே இங்கே எழவில்லையே. மேலும் நீ நினைப்பது போல் இருக்கவேண்டியதும் இராது. உன் வலதுபுறம் பார்த்தாயா? அங்கே அந்தக் கதவைத் திறந்தால் நேற்றிரவு நீ தங்கியிருந்த அறைபோலவே அட்டாச்டு பாத்ரூம் வசதியோடு ஓர் அறை இருக்கும். அதேபோலவே உன் இடதுபுறம் இருக்கும் அறைதான் நான் பயன்படுத்துவது. இது ஆபீஸ் அறை.

உனக்கு அளிக்கப்போகும் அறையில் சில முக்கிய ரிக்கார்டுகள் பைல்கள் இருக்கின்றன. அதையெல்லாம் எடுத்து விட்டு அறையை உனக்குத் தந்து விடுகிறேன் சரிதானா?"

சிறு அமைதியின் பின், "நான் கேட்டது உன் காதில் விழவில்லை?" என்றான் சற்று அழுத்தமாக.

சரேலெனப் பார்வையை உயர்த்தி அவனை வெட்டுவது போல் விழித்தாள் ரேகா. "நன்றாக-மிகவும் நன்றாக விழுகிறது என்பது உங்களுக்கே தெரியும். மேலும் நீங்கள் ஒன்றும் என்னிடம் அபிப்பிராயம் கேட்கவில்லையே. சரிதானா இல்லையா என்று கூற?" என்றாள் வேகத்துடன்.

"உன்னிடம் அபிப்பிராயம் கேட்டுப் பயனும் இல்லை. ஆக உன் அறை விஷயம் முடிந்தது. அடுத்தது ராஜா."

"இரவில் அவனை உன் அருகில் படுக்க வைத்துப் பழக்கி யிருக்கமாட்டாய் என்று நம்புகிறேன். ராஜாவுக்கு நர்சரியைத் தயார் செய்யச் சொல்லியிருக்கிறேன்."

"அப்படியென்றால்?" சிறுபயத்துடன் கேட்டாள் அவள்.

"குழந்தைக்குரிய அறை. விளையாட்டுச் சாமான்கள்."

"அது தெரியும். தெரியும். ஆனால் தனியாக எப்படி?"

லேசாகத் தலையசைத்தான் விஜயன். "தங்கம்மா அவனைப் பார்த்துக் கொள்ளுவாள். நீயும் நாளின் பெரும் பகுதியை அவனுடனேயே கழிக்கலாம். மற்றபடி அம்மா மடிக்குள்ளேயே வளர்ந்தால் பிறகு பொறுப்பேற்கும் போது தாங்க முடியாது" என்றான் முடிவாக.

அவன் சொல்வது சரிதான்.

அவளுடைய தந்தை அடிக்கடி சொல்வதுதான்.

அருகில் படுத்து உறங்க விடக்கூடாது.

கையைப் பிடித்துக் கொண்டே நடக்கக் கூடாது.

இதைச் செய்யாதே, அதைச் செய்யாதே என்று தடுத்துக் கொண்டே இருக்கக் கூடாது.

இதெல்லாம் பிள்ளையின் தன்னம்பிக்கையை அழித்து விடும்.

தந்தை சொல்லச் சொல்ல நல்லது என்று கேட்டுப் பின்பற்றியது இப்போது இவன் வாயால் சொல்கையில் எதிர்க்க வேண்டும் போல இருந்தது. ஆனால் இவனிடம் எதிர்த்துப் பேசி பயன் இல்லை என்பதால் வாய்மூடி நின்றாள்.

"இங்கே காலை, மதிய உணவுகள் அவரவர் விருப்பம் போல எப்போது வேண்டுமானாலும் சாப்பிடலாம். சாப்பாடு அறைக்குச் சென்று மணியை அழுத்தினால் கொண்டு வருவார்கள். ஆனால் இரவுச் சாப்பாடு மட்டும் எல்லோரும் சேர்ந்துதான். மற்றபடி உன் நேரம் உன்னுடையது - முக்கியமான விசேஷம் எதுவும் இல்லை என்றால்."

"உணவு விஷயத்தில் உனக்கோ, ராஜாவுக்கோ ஏதேனும் தேவையென்றால் சமையல்காரனை அழைத்துச் சொல்; மற்றது என்றால் என்னிடமே சொல்லலாம்."

"நம் அறை வாசலில் காலையில் ஒரு ட்ரேயில் அன்றைய தினசரிகள் வைக்கப்பட்டிருக்கும், வாராந்திர, மாதாந்திர பத்திரிகைகள் வேண்டுமானால் கீழே, முதலில் நாம் வந்தோமே, அந்த ஹாலில் டீபாய் மேல் இருக்கும். புத்தகம் எதுவும் வேண்டுமானால் ஹாலின் வலது புறமாய் லைப்ரரியில் இருக்கும். படித்துவிட்டு எடுத்த இடத்திலேயே வைத்து விடு..."

"வேறு ஏதேனும் தெரிய வேண்டுமா?"

"இல்லை" என்பது போலத் தலையசைத்தாள் அவள்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இவன் குரலைக் கேட்கும் போதே பரவசமாக இருந்ததே! இப்போது ஏன் இப்படி எரிச்சல் வருகிறது? அப்போது அவன் தொடு உணர்ச்சியில் குளித்து குழைந்த உடல் இப்போது ராஜாவிடம் கொஞ்சும் காரணமாக அருகில் வந்தால்கூட ஏன் விறைத்துப் போகிறது என்று அவளது யோசனை ஓடியது.

இவ்வறைக்கு எதிர்த் துருவத்துக்கே மனது ஓடிவிடுமா?

''இன்னும் ஒன்று'' என்ற அவன் குரல் அவளது யோசனையைக் கலைத்தது.

"உதயா தன் கணவரோடு நாளை மாலை வருகிறாள். சுமார் ஐந்தரைக்கு. ராஜாவுடன் ஹாலுக்கு வந்துவிடு" என்றவன் நிமிர்ந்து நின்று, "இனி நான் கிளம்புகிறேன்" என்று முடித்தான்.

"ஒரு விஷயம். இதோ வருகிறேன்" என்று தரையில் இருந்த பணத்தை எடுத்து வந்தாள் ரேகா.

"நீங்கள் கொடுத்ததாகச் சொல்லி அப்பா தந்தது; தேவைப் படவில்லை" என்று அவன் அருகே மேசை மேல் வைத்தாள்.

ஆத்திரமாக, ''இதைச் செலவு செய்யச் சொல்லிக் கொடுத்தேன்.''

''என்னிடம் இருப்பது போதுமானது'' என்றாள் அவள் பிடிவாதக் குரலில்.

தோளைக் குலுக்கினான் அவன். "உன் இஷ்டம். குதிரைக் கதைதான் ஏற்கனவே சொல்லியாயிற்றே. ஆனால்... ஆச்சரியந்தான்."

துணிமணி வேண்டாம் என்று சொல்லும் பெண் இருப்பது ஆச்சரியம் என்று நினைத்தான்.

அவன் செல்லும்வரை ஒதுங்கியே இருந்தாள்.

கால் வந்ததும் தந்தையின் குரலைக் கேட்டுத் தொண்டையை அடைத்தது அவளுக்கு.

மாப்பிள்ளை 'டைம்கால்' புக் பண்ணினார் என்பதில் சிதம்பரத்துக்கு ஏகமாய் உச்சி குளிர்ந்து போயிற்று.

''பார்த்தாயா கண்ணம்மா. ஏற்கனவே தந்தி அடித்திருக்கிறார். அதுபோக நேரில் குரலைக் கேட்டால்தான் திருப்தியாக இருக்கும் என்று யோசித்து, நான் ஆபீசில் இருக்கும் நேரம் பார்த்துப் பேச ஏற்பாடு செய்திருக்கிறார். நல்லவர் தானம்மா. ஏதோ நாம் பட வேண்டிய காலமாய் இருந்திருக்கிறது. பட்டு விட்டோம். இனிப் பழையதை எல்லாம் மறந்து சந்தோஷமாக இரம்மா. உன் அம்மாவுக்கும் எனக்கும் இப்போது எவ்வளவு நிம்மதியாக இருக்கிறது தெரியுமா?''

''குட்டிப் பையனைப் பார்த்தாயா, கண்ணு? அவரிடம் அப்படியே ஒட்டிக் கொண்டானே. இப்போது எப்படி இருக்கிறான்? எப்படியோ. என் பேரன் கவுரவமாக, வசதியாக உரிய இடத்தில் இருப்பது எவ்வளவு நிம்மதியாக இருக்கிறது தெரியுமா? ஆனால் அவனைத்தான் கண்ணம்மா, மனது ரொம்பவும் தேடுகிறது, உன் அம்மாவுக்குப் பைத்தியம் பிடித்தமாதிரி இருக்கிறதாம். ஒரு மாதம் லீவு போட்டுவிட்டு அங்கே இங்கே என்று சுற்றிவிட்டு வரலாம் என்று இருக்கிறோம்.''

''நீ எப்படி இருக்கிறாய் பாப்பா? அங்கே எல்லோரும் நன்றாக இருக்கிறார்களா? முதலில் கொஞ்சம் ஒரு மாதிரி இருந்தாலும் உன் பொறுமையில், குணத்தில் அவர்களைக் கவர வேண்டும்...நானே வளவளக்கிறேன் பார். பேசு கண்ணா'' என்றார் தழுதழுத்த குரலில்.

அவர் மனம் நிம்மதி பெறும் விதமாகப் பேசிவிட்டு, ராஜாவை ''தாத்தா குட்பை'' சொல்ல வைத்துவிட்டு யோசனையோடு டெலிபோனைக் கீழே வைத்தாள்.

'ஏதேனும் காரணம் சொல்லி மீண்டும் இங்கே வந்து நிற்காதே' என்று எச்சரிப்பது போலத்தான் இந்த வெளியூர்ப் பயணமோ என்று தோன்றியது அவளுக்கு.

உடனேயே, இவ்வளவு அவமானம் மிகுந்த, துயரமான நாட்களில் துணை நின்றவர்களைப் பற்றி இப்படியா நினைப்பது என்று தன்னையே கடிந்து கொண்டாள்.

"ஒருவேளை இதுதான் அவளுடைய இடம் என்பதைப் புரிய வைத்துவிட்டால் அதையே சுகமாக்கிக் கொள்வாள் மகள் என்ற நம்பிக்கையும் காரணமாக இருக்கலாமில்லையா?"

பெற்றோரின் தன்மை அறிந்த மனது அதுவே மெய்யென்றது.

எப்படியும், இங்கே ஒத்து வரவில்லை என்று திரும்பிச் சென்றால் அவளைப் பெற்றவர்கள் தாளமாட்டார்கள் என்பது நன்றாகவே புரிந்தது.

அன்றைய தினத்தின் பெரும் பகுதி மகனோடு தோட்டத்திலும், நர்சரியிலுமாகக் கழிந்தது.

அவன் தூங்கிய நேரத்தை லைப்ரரியில் போக்கினாள்.

பவானி அம்மாளையோ வித்யாவையோ அவள் சந்திக்கவில்லை. வேண்டுமென்று ஒதுங்கிக் கொண்டார்களோ என்று நினைத்தவள் தானாகவும் அவர்களை நாடிச் செல்லவில்லை.

இரவு உணவு அந்த அத்தையம்மாள் இல்லாதபடியால் அமைதியாக முடிந்தது.

மறுநாள் மாலைவரையும் முன்தினம் போலவேதான் சென்றது.

கீழிருந்து கேட்ட பேச்சுக்குரல்களும் அரவமும் விஜயனுடைய பெரிய தங்கை உதயா வந்துவிட்டதை அறிவித்தன.

விஜயன் உத்திரவுப்படி கிளம்ப முகம் கழுவிப் பொட்டிட்ட போது அவள் மனம் புரட்சி செய்தது.

இவளும் இந்தக் குளத்தில் ஊறிய மட்டை தானே இவள் மட்டும் தனியாக உருகிவிடவா போகிறாள்?

பவானி அம்மாளும், வித்யாவும் தன்னிடம் ஒரு கசப்புடன் பழகுவதை ரேகாவால் புரிந்துகொள்ள முடிந்தது.

ஆனால் ராஜாவையும் அவர்கள் ஒதுக்குவதை அவளால் சகித்துக்கொள்ள முடியவில்லை.

அவன் முகத்தைப் பார்க்கும் ஆர்வம் கொஞ்சம்கூட இல்லாமல் திருப்பிக்கொள்கிறார்களே.

எந்தப் பிள்ளையின் மனது கன்றி, குன்றிவிடாது என்று இந்த அன்பற்ற பிணைப்பில் ஈடுபட்டாளோ அந்த மகனே அலட்சியப்படுத்தப்படுவது என்றால் எப்படி?

இந்த சூழ்நிலை மட்டும் அப்படியென்ன அவனை வளப்படுத்தி விடப்போகிறது?

குழந்தையுடன் அறைவாயில் வரை வந்த ரேகா அதற்கு மேல் தயங்கினாள்.

கிட்டத்தட்ட தன் வயதினனான ஒருவனுடன் கதவுக்கு எதிர்ப்புறம் நோக்கி அமர்ந்து பேசிக்கொண்டிருந்த விஜயன் அவளைக் கவனிக்க நியாயம் இல்லை.

ஆனால் தன் சகோதரியிடம் கையை ஆட்டிப் பேசிக் கொண்டு இருந்த விஜயா இவளைப் பார்த்ததும் வேண்டுமென்றே பார்வையைத் திருப்பிக்கொண்டது அநியாயமாய்த் தோன்றியது.

பார்க்கக்கூடிய இடத்தில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்த புதியவனின் பார்வை வாயிற்புறம் பாய்வதைக் கண்டு திரும்பிய விஜயன் உடனே எழுந்து வந்தான்.

"வா" என்று அழைத்துச் சென்றவன், "கருண் இவள் தான் என் மனைவி ரேகா, இவர் உதயாவின் கணவர் கருணாகரன், ஏய், உதய் இதோ உன் அண்ணி. உன் மருமகன், பார்த்துக் கொள்" என்று உற்சாகத்துடன் அறிமுகம் செய்வித்தான்.

"சவுக்கியமா?..." என்று கரம் குவித்து விட்டு மேலே பேசத் தோன்றாமல் தடுமாறினான் கருணாகரன்.

வருவித்த புன்னகையுடன் உதயா எழுந்துவர "நீங்கள் உட்காருங்கள், கருண்" என்று அழைத்து முன்பிருந்த சோபாவிலேயே சற்று ஒதுங்கி அமர்ந்து தங்கை கணவனுடன் பழைய பேச்சைத் தொடர்ந்தான் விஜயன்.

"வந்து...இங்கே வசதியாக இருக்கிறதா?" என்று திணறினாள் உதயா.

"உம். வ..வந்து நேரம்... நேரமாயிற்றா?" என்று திக்கினாள் ரேகா.

"உம்."

புதிதாக அறிமுகம் செய்யப்பட்டவர்கள் எவ்வளவோ பேசலாம்.

ஆனால் இருவரும் ஒரேஒருவித உள்தடைகளால் பாதிக்கப் பட்டிருக்கவே மேலே பேசுவது அறியாமல் தவித்தார்கள்.

அதற்குள் வித்யா எழுந்து வந்தாள்.

சகோதரியின் கையைப் பற்றித் தன்புறம் திருப்பி, "அக்கா, உன்னைப் பார்த்து மூன்று மாதம் ஆகிறது. என்னிடம் பேசிக் கொண்டிராமல் எதெதுகளோ... மற்றவர்களோடு என்ன பேச்சு? வாயேன், போன வாரம் நான் ஒரு சின்ன விசிறி பாக்கெட் - தந்தத்தில் செய்தது வாங்கினேன் பாரேன்" என்று இழுத்துக் கொண்டே போனாள்.

வீட்டிற்கு வந்திருந்த வேறுயாரோ இரண்டு விருந்தினரோடு பவானி பேசிக்கொண்டிருக்கத் தோளில் பிள்ளையோடு ரேகா தனித்து நின்றாள்.

வித்யா உதயாவை அழைத்துச் சென்று ஐந்து நிமிடங்கள் இருக்கலாம்.

ஆனால் ஓடி விளையாடத் துடித்த ஆரோக்கியமான குழந்தை எதைத் தட்டிவிடுவானோ என்ற பயத்தில் இறுகப் பிடித்தபடி, மற்றவரின் - முக்கியமாகக் கணவனின் பாராமுகம் எரிச்சலூட்ட ஆத்திரத்தை அடக்கியபடி நின்ற ரேகாவுக்கு அவை ஐந்து யுகங்களாகத் தோன்றின.

திரும்பிப் போய்விடலாமா என்ற எண்ணமும், என்ன நேர்ந்தாலும், தன்னிடம் பிழை காணும் நிலைமை வரவிடக் கூடாது என்ற பிடிவாதமும் போராடிக் கொண்டிருந்த வேளையில் சகோதரிகள் திரும்பி வந்தனர்.

ரேகா தனித்தே நிற்பதைக் கண்ட உதயா, அப்போதும் தன் கரத்தைப் பற்றியிருந்த வித்யாவின் கையை அகற்றி விட்டு அண்ணன் மனைவியை நெருங்கினாள்.

இயல்பான குரல் வரவில்லை என்றாலும் ஒரு பிடிவாதத்துடன், "நீங்கள் என்ன படித்திருக்கிறீர்கள் அண்ணி?" என்று பேச்சைத் தொடங்கினாள்.

ஒரு நிம்மதி மூச்சுடன் பதில் கூறும் முகமாகத் தானும் பேசலானாள் ரேகா.

"இவன் என்னிடம் வருவானா, வருவாயா கண்ணா? இது வேண்டுமா?" என்று தன் அலங்கார வெள்ளிச் சாவி வளையத்தை அண்ணன் மகனிடம் நீட்டினாள் உதயா.

"அய்யோ, உடைத்துவிடப் போகிறான். கொடுக்காதீர்கள்" ரேகா தடுக்குமுன் சாவி வளையத்தை வாங்கிக் கொண்டு உதயாவிடம் சென்றான் ராஜா.

"நல்ல பையன், உன் பெயர் என்ன...ராஜாக்குட்டியா?" என்று கொஞ்சிவிட்டு, அண்ணியிடம் கவனத்தைத் திருப்பினாள் உதயா.

சற்று நேரம் இருவருமாகக் கஷ்டப்பட்டு விஷயங்களை இருவருக்கும் சங்கடம் வராத விஷயங்களைத் தேடிப் பிடித்துப் பேசினார்கள்.

திடுமென் நாத்தனாரின் கையில் ராஜா இல்லாததைக் கவனித்துத் தேடிய ரேகாவுக்கு மூச்சு நின்றது.

அத்தையின் கையிலிருந்து நெளிந்து வளைந்து இறங்கி விட்டிருந்த ராஜா அன்றுவரை தன்னை ஏறெடுத்தும் பார்த்திராத பாட்டியின் கையைப் பிடித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அதிர்ச்சியுற்று நோக்கிய பவானி அம்மாளை அண்ணாந்து நோக்கிய பேரன், பாட்டியின் கையில் இருந்த பெரிய எனாமல் பதித்த மோதிரத்தைக் காட்டி, "இது ஸ்ஸாமியா" என்று மழலையாகக் கேட்டாள்.

அது அவனுடைய தாத்தா - விஜயேந்திரனுடைய தந்தையின் படம்.

தன் உருவத்தை எனாமல் பதிப்பால் மோதிரத்தில் அமைத்து மனைவிக்குப் பரிசாக அளித்திருந்தார் ராஜேந்திர பூபதிராஜா.

அதைப் பவானி அம்மாள் கழற்றியதே இல்லை.

இன்று தாத்தாவின் படத்தைக் காட்டி சாமியா என்று தன் மகனின் உருவேயான குழந்தை கேட்கவும் அவர் உடைந்தே போனார்.

"ஆமாமடா கண்ணா நமக்கு சாமிதான்" என்றபடி கண்களில் நீர் வடிய நேர் எதிராக உதடு சிரிக்கப் பேரனைத் தூக்கி மடிமேல் வைத்துக் கொண்டார்.

'அப்பாடி' என்று ஒரு பெரிய மூச்சை வெளியிடும் போது தான் அவ்வளவு நேரம் மூச்செடுக்காமல் நின்றதைக் கூட ரேகா உணர்ந்தாள்.

"தாத்தாகிட்டே சாமி மோதடம்..." என்று மகன் மழலை உதிர்த்தபோது ரேகா சட்டென விஷயத்தைப் புரிந்து கொண்டாள்.

வெங்கடாசலபதியின் கலர்ப்படம் அமைந்த மோதிரம் ஒன்றைச் சிதம்பரம் எப்போதும் அணிந்திருப்பார்.

அதைக் கண்ணில் ஒற்றிக் கொள்ளாமல் அவர் எந்தக் காரியத்தையும் செய்தது இல்லை.

'அது சாமி' என்று பேரனுக்குக் கற்றுக் கொடுத்திருந்தார்.

அந்த நினைவில் வினவியவன் இங்கே தாத்தாவே சாமிதான் என்பதை அறிவானா?

ஆனால் மடிமேல் தூக்கி வைத்த பவானி அம்மாள் பேரனைக் கீழே இறக்கி விடவே இல்லை.

அவனைக் கண்கொட்டாது பார்ப்பதும் உடம்பெல்லாம் விரல் நடுங்க வருடுவதும் அவனோடு பேசுவதுமாக மற்றவரை மறந்தே போனார்.

தாயை வியப்புடன் நோக்கிய வித்யாகூட அதில் குறுக்கிடாது ஒதுங்கிவிட்டாள்.

எப்படியோ, இங்கே ஒரு பாட்டியைத் தானாகவே சம்பாதித்துக் கொண்டான் குட்டி ராஜேந்திரன்.

ஆயினும் இந்தச் சம்பவம் அவனுக்கு ஒரு பாட்டியை மட்டும் தேடித் தரவில்லை அவன் தாயாருக்கும் ஒரு துணையைத் தேடித் தந்தது.

மகனைத் தேடியது முதல் ரேகாவின் முகத்தையே கவனித்துக் கொண்டிருந்தாள் உதயா.

ரேகாவின் அச்சமும், கலக்கமும், நிம்மதிப் பெரு மூச்சும், தன் பிள்ளை என்று உரிமை காட்டாது ஒதுங்கி நின்ற விதமும் எல்லாமுமாக உதயா வெகுவாக இளகிப் போனாள்.

திருமணமான பெண் என்பதால் வேரோடு பெயர்த்து எடுத்து வைத்தாற்போல இன்னொரு சூழ்நிலையில் பழகும் சிரமம் அறிந்தவள்; அத்தோடு ரேகா அறிமுகமான முறையும் சரியானதல்ல என்பதால் அவள் நிலை வழுக்கு மரம் ஏறுவது போன்றது என்பதை உணர்ந்தாள்.

முதலில் ரேகாவைப் பற்றி அவள் கொண்டிருந்த ஐயம் அந்தச் சில கணங்களில் அடியோடு மறைந்துவிடவே மனம் விட்டுப் பழகலானாள்.

ரேகாவைப் பற்றியோ கேட்கவேண்டாம்.

அன்பென்று அங்கே காட்டியது முதல் ரேகா அப்படியே பற்றிக் கொண்டாள்.

என்ன நடந்தது, எப்படி நடந்தது என்றெல்லாம் நோண்டாமல் அன்றைய அளவில் அவளை அப்படியே ஏற்றுக் கொண்டதால் வேறு உதயாவை ரேகாவுக்கு மிகவும் பிடித்தும் போயிற்று.

இரண்டு மூன்று தடவைகள் குறுக்கிட்டுப்பார்த்தாள் வித்யா.

தமக்கை கண்டிப்பது போலப் பார்க்கவும் சிவுக்கென்று எழுந்து சென்று விட்டாள்.

விருந்தினர் சென்றுவிட வீட்டு மனிதர்கள் மட்டும் பேசிக் கொண்டு இருந்தனர்.

கையில் பேரனோடு வந்த பவானி அம்மாள் முதல் தடவையாக மருமகளை முழுமையாகப் பார்த்தார்.

நெஞ்சு படபடக்க மருட்சியுடன் எழுந்தாள் ரேகா.

"பரவாயில்லை. உட்கார்" என்று அவளிடம் லேசாக முறுவலித்துவிட்டு மகளிடம் திரும்பி, "உன் மாமியார் ராமேசுவரம் போகலாமா" என்று கடிதம் எழுதியிருந்தாள்" என்றார்.

ஆண்களிடமிருந்து நகையொலி கிளம்பியது.

கன்னம் சிவக்க, "போங்கள் அம்மா, உங்களுக்கும் அத்தைக்கும் வேறே வேலை கிடையாது" என்று சிணுங்கினாள் உதயா.

"பின் என்னவாம். கல்யாணமாகி மூன்றாண்டுகள் முடிந்து விட்டனவே. அதே சமயம் எங்களைப்பார்" என்று இலகுவாகப் பேசி மகனின் கன்னத்தை நிமிண்டிச் சிரித்தான் விஜயன்.

திடுக்கிட்டு மாமியாரைப் பார்த்தாள் ரேகா.

அவரது கரம் தோளில் உரிமையோடு சாய்ந்திருந்த பேரனின் முதுகை வருடியது.

மகனின் இலகுக் குரலிலேயே, "உன் அண்ணனின் அவசரம் அவசியம் இல்லை என்றாலும் இவ்வளவு நாள் ஆகிறதே என்றால் வயதான எங்களுக்குக் கொஞ்சம் கவலையாக இருக்கிறதில்லையா?" என்றாள் பவானி.

தப்பு தப்புதான் என்றாலும் பேரனுக்காக மன்னிக்கிறேன் என்று சொல்லாமல் சொன்ன மாமியாரிடமும் புது மதிப்பு உண்டாயிற்று ரேகாவுக்கு.

"கூடவே விஜயன் முகத்திலும் திருப்தியைக் காண வேண்டுமென்றேதான் அவனும் தங்கள் பேச்சை எடுத்திருக்க வேண்டும்" என்பதையும் புரிந்து கொண்டாள் அவள்.

"பெரிய கவலைதான் உங்களுக்கு. எதற்கும் முதலில் இதுபற்றி உங்கள் மகனிடம் பேசுங்கள் என்று அத்தைக்கு எழுதிவிடுங்கள் அம்மா" என்றாள் உதயா.

"ஊகூம். என்னை மாட்டி விடாதே உதயா" என்றான் கருணாகரன் அவசரமாக. "அறுத்துத் தள்ளி விடுவார்கள்."

"நான் மட்டும் அறுபடலாமாக்கும். அதுவும் என் மேல் ஒரு தப்பும் இல்லாதபோது."

"ஓகோகோ! ஏதோ பெருங்கதை இருக்கிறாற் போலத் தெரிகிறதே. கருண், உதய் இங்கே நான் ஒருவன் எதற்காக இருக்கிறேனாம்? இருவரும் அவரவர் கட்சியைச் சொல்லுங்கள். நான் பார்த்து யார் அறுபடலாம் என்று தீர்ப்புச் சொல்லுகிறேன்" என்று பெருந்தலை போல முன் வந்தான் விஜயன்.

"சொல்லாதே, உதி, பிறகு உன் அண்ணன் நம் இருவரையும் அறுப்பார்" என்றான் கருணாகரன்.

"அசந்து மறந்து அண்ணனிடம் வாயை விட்டுவிடாதீர்கள் நானே உங்களை எச்சரிப்பதாக இருந்தேன்" என்றாள் உதயா.

"பொதுவாக நல்லவர்களுக்குக் காலம் இல்லை என்பது சரியாகத்தான் இருக்கிறது" வெகு சோகமாகச் சொன்னான் விஜயேந்திரன்.

"ஆமாமடா அரட்டை" என்று எல்லோருடனும் தானும் சேர்ந்து சிரித்து விட்டு உள்ளே சென்றாள் பவானி.

"ராஜாவுக்கு சாப்பாட்டு நேரம்..." என்று தானும் எழுந்தாள் ரேகா.

"அதற்காகத்தான் போகிறேன். நானே கொடுத்து விடுகிறேன். நீங்கள் எல்லோரும் சேர்ந்து பேசிக் கொண்டிருங்கள்" என்று விட்டுப் போனார் மாமியார்.

''மெய்யாகத்தான் என்ன விஷயம் கருண்?'' என்று விசாரித்தான் விஜயேந்திரன்.

"திட்டமிட்ட குடும்பம்" என்று அறிவித்தான் அவன். ''ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு முதல் குழந்தை. அடுத்து ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு அடுத்தது, பிறகு..."

"நாலாவது குழந்தை பிறக்கும் போது பிள்ளையா? பேரனா? என்று விசாரிப்பார்கள்" என்று சிரித்தாள் ரேகா.

உடனேயே அதிகப்படியாகப் பேசிவிட்டேனோ என்று அவள் மருளுமுன், "நன்றாய்ச் சொல்லுங்கள்" என்று கை தட்டினாள் உதயா. அவள் குழந்தைக்கு ஏங்குவது நன்றாகவே தெரிந்தது.

''ஓரினம் ஒரு கட்சி. அப்படித்தானே விஜய்?'' என்று மைத்துனனைத் தன் கட்சிக்கு இழுக்க முயற்சித்தான் கருணாகரன்.

''வருந்துகிறேன் மாப்பிள்ளை. இங்கே நீங்கள் தனிக் கட்சிதான்'' என்று விஜயன் சிரித்தான்.

"திடுமென உங்கள் வயது என்ன?" என்று உதயாவிடம் வினவினாள் ரேகா.

"இருபத்தி மூன்று முடிந்து விட்டது அண்ணி. அண்ணனுக்கு இருபத்தி எட்டு. நாத்திக்குப் பதினெட்டு. இவர் ஆசைப்படுகிற ஐந்தாண்டு வித்தியாசம் தான் இங்கேயும்; ஆனால் அண்ணன் அம்மாவின் பத்தொன்பதாவது வயதில் பிறந்து விட்டாராம்."

'ராஜாபோல' என்று தோன்றிய எண்ணத்தை ஒதுக்கி "முதல் குழந்தை ஒரு பெண்ணின் இருபத்தி ஐந்தாவது வயதுக்குள்ளாகப் பிறந்து விடுவது நல்லதாம். பிறகானால் அந்த இடுப்பு எலும்புகள் வலுப்பெற்று விடுமாம். பிரசவமும் கஷ்டமாகி விடுமாம். நம் ராஜா பிறந்த போது அப்படிக்

கஷ்டமாகிப்போன ஒரு கேஸ் பற்றி அங்கே இரண்டு டாக்டர்கள் சொன்னார்கள்'' என்றாள் ரேகா.

"கொஞ்சம் உரக்கச் சொல்லுங்கள், அண்ணி, அப்போதாவது காதில் விழுகிறதா" என்று பார்க்கலாம். என்றாள் உதயா.

"ரேகா, நீ நீங்கள்..." என்று தொடங்கிய கருணாகரனை இடைமறித்தான் விஜயேந்திரன்.

"சும்மா நீ யென்று சொல்லுங்கள் மாப்பிள்ளை; ரேகா சின்னவள்தான். ரேகா, கருண் உனக்கு அண்ணன்" என்றான்.

"ஓ. சரிதான், ஆனால் ரேகா, நீ சொன்னது மெய்யாகவே நிஜம்தானா?" என்றாள் கருணாகரன் முகம் வெளிற.

அவன் அரண்டுவிட்டதைக் கண்டு முகத்தை வெகு சீரியசாக வைத்துக்கொண்டு, "காட் ப்ராமிஸ். அண்ணா" என்றாள் ரேகா.

ஒருகணம் மவுனமாய் இருந்துவிட்டு, "உதி, நீ ஜயித்தாய்" என்றான் கருணாகரன்.

"உன்னைவிட ஒன்றுமே-எதுவுமே முக்கியமில்லை" என்று தொடர்ந்து கூறியது, விஜயனின் 'ஹுரே' என்ற கூவலில் அமுங்கிப் போயிற்று.

"இந்த ஆர்ப்பாட்டத்தையும் சிரிப்பையும் தூர இருந்தபடி அசூயையுடன் பார்த்துக் கொண்டிருந்த வித்யா திடுமெனத் துள்ளி எழுந்தாள், "தாராக்கா!"

"தாராக்கா வருகிறாள்" என்று கூவியவள் விழுந்தடித்துக் கொண்டு வாயிலுக்கு ஓடினாள்.

முகமலர்ச்சியுடன் எழுந்த விஜயனும் அவளைத் தொடர்ந்து சென்றான்.

## 8

பல நாட்களுக்குப் பிறகு இயல்பாகப் பேச ஓர் ஆள் கிடைத்ததே பெரிதாக இருந்தது ரேகாவுக்கு.

அத்தோடு மாமியார் ராஜாவைத் தூக்கியதும், ஏற்றுக் கொண்டதும், அவளோடு முகம் கொடுத்து இரண்டே வார்த்தை என்றாலும் வெறுப்பின்றிப் பேசியதும் மனதிற்கு மகிழ்ச்சியாக இருந்தது.

வாய்விட்டுச் சிரித்ததோ பெரும் பேறாகவே இருந்தது.

ஆனால் தாராவின் பெயர் மட்டிலுமே இவை அனைத்தையும் அழித்துவிடப் போதுமானதாகவும் இருந்தது.

அதிலும் தங்கையைத் தொடர்ந்து தாராவை வரவேற்க விஜயேந்திரன் ஓடியது அவள் மனதை மிகவும் பாதித்தது.

தன்னுள்ளேயே உறைந்தாற் போல இருந்தவளுக்குப் பிறகுதான் ஒன்று உரைத்தது.

அண்ணனும் தங்கையுமாகத் தாராதேவியை வரவேற்க ஓடியபோது உதயா அதில் கலந்து கொள்ளவில்லை.

யோசனையோடு திரும்பிப் பார்த்தபோது அவள் தன்னுடைய கணவனிடம் கண்களால் ஏதோ கூறிக் கொண்டிருந்தாள்.

அவனும் அதை புரிந்து ஏற்று, "நான் உடம்பு கழுவ வேண்டும்" என்று விட்டு அங்கிருந்து அகன்றான்.

முறுவலிக்க முயன்றபடி ரேகாவிடம் திரும்பினாள் ரேகா.

ஆனால் அண்ணியின் முகத்தைப் பார்த்ததும் பாவனையைக் கைவிட்டாள்.

"தாரா என் செட்தான் அண்ணி, இருவரும் ஒரே வயது. அதனாலேயே மற்றவர்களை விட எனக்கு அவளைப் பற்றி நன்றாகத் தெரியும். எங்கே அண்ணன் அவளை மணந்து விடுவாரோ" என்று உள்ளூரக் கலங்கிக் கொண்டு இருந்தேன். எப்படியோ அண்ணன் தப்பினான்" என்றாள் மனம் விட்டு.

தானாகத் தப்பவில்லை! அவன் தந்தை உயிரைவிட்டுக் காப்பாற்றினார் என்று நினைத்தாள் ரேகா.

ஆனால் அதன் பிறகு இந்த மூன்று நெடிய ஆண்டுகள்?

அன்று மணக்க இருந்தவன் மூன்று ஆண்டுகள் கழித்து இப்படி ஓடுகிறவன்-இடையில் அவளை ஏன் மணக்கவில்லை?

யாரிடம் கேட்பது?

உதயாவிடம் கேட்கலாம்தான்.

ஆனால் அவளுடைய அண்ணனுக்கும் தனக்கும் இடையே உள்ள மன வேறுபாட்டை வெளிப்படுத்தாமல் எப்படிக் கேட்க முடியும்?

ஆனால் அது அவளுக்குப் புரிந்திருக்காதா என்று தோன்றிய சந்தேகம் உடனே மறைந்தது.

எப்படிப் புரியும்?

'வா' என்ற வரவேற்பும், உன் அண்ணி, உன் மருமகன் என்று அறிமுகமும், கேலிப் பேச்சும் கிண்டல் சிரிப்பும்... இவையெல்லாம் மனவேறுபாட்டையா காட்டுகின்றன?

உரத்து ஒலித்த சிரிப்பு உடனடிப் பிரச்சினைக்கு ரேகாவை இழுத்து வந்தது.

அன்று வந்ததைத் தாரா சொல்லி விடுவாளோ?

தியாகத்தைக் கேட்டால் கலகத்திற்கு வந்தாயா என்று விஜயன் சீறுவானே?

இன்னமும் வெறுப்பேற்றும் விதமாய் அவள் மாற்றி மொழிவாளோ?

கண்மூடித் திறப்பதற்குள் இந்தப் பூ மண்டலத்தையே சுற்றி வந்து விடக்கூடிய மனது எதை எதையோ எண்ணிக் கலங்கித் தவித்தது.

ஆனால் அத்தனையும் அவசியமற்றுப் போக அவள் ஒருத்தி அங்கே இருப்பதாகவே தாரா காட்டிக் கொள்ள வில்லை.

"முதலில், உதயா" என்று ஓடிவந்து அவளைக் கட்டிக் கொண்டாள் தாரா.

"உன்னைப் பார்த்து எத்தனை நாளாகிவிட்டது? நீ பொல்லாதவள், இங்கே வந்தால் உடனே எங்கள் வீட்டுக்கு வராமல் இங்கே என்ன செய்கிறாய்? உன் அவரோடு நன்றாகச் சண்டை போடப் போகிறேன். அவர் காதைப் பிடித்து முறுக்கப் போகிறேனாக்கும். எங்கேடி கருண்?" என்று பொரிந்து கொட்டினாள்.

"காரில் வந்ததால் உடம்பு கசகசவென்று இருப்பதாகச் சொல்லிவிட்டுக் குளிக்கப்போனார்" என்ற உதயா ஒருவாறு தன்னை விடுவித்துக் கொண்டாள்.

"ஓகோ. சரிதான். குளித்துவிட்டு வரட்டும் பார்த்துக் கொள்கிறேன். இந்த அத்தை எங்கேயாம்? வேலையா? ஒழுங்காய், உயர்ந்த குடும்பத்திலிருந்து மருமகள் எடுத்திருந்தால் இந்த மாதிரிப் பெரிய வீட்டு வேலை தெரிந்து உதவுவாள். அந்தக் கொடுப்பினை இல்லாமல் அத்தை இந்த வயதான காலத்தில் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. ஓய்வெடுக்க முடியவில்லை பாவம்" என்று பரிதாபப்பட்டாள் தாரா.

வரவேற்கச் சென்ற விஜயன் ஆளையே காணவில்லை. ஆனால் "என் அம்மாவுக்கு ஐம்பது வயதுகூட ஆகவில்லை. அதற்குள் கிழவியாக்கி உட்காரவைக்கப் பார்க்கிறாயே" என்று சிரித்த முகமாகவே தாராவின் பேச்சை மறுத்தாள் உதயா.

பின்னர் ரேகாவின் அருகே வந்து அவளுடைய கையைப் பற்றி, "என் அண்ணி பார்த்தாயா? பெயர் ரேகா. ஆம், ஜீவரேகா. நன்றாக இல்லை? அண்ணி, தாராதேவி, என் மாமா மகள்" என்று அறிமுகம் செய்து வைத்தாள்.

ரேகா தடுமாற்றத்துடன் கைகுவித்தாள்.

ஆனால் தாராவின் முகத்தில் அவளைக் கண்டு கொண்ட அறிகுறியே இல்லை.

"வா....!" என்று வெகுவாக அதிசயித்தாள்.

"சே நான் நினைக்கவே இல்லை, உதயா" என்று தன் கையில் கிடந்த செம்பு வளையலை வெளிச்சத்தில் நகர்த்திப் பார்த்து விட்டுத் தொடர்ந்தாள், "கையில் காதில் ஒன்றும் இல்லாததால் யாரோ வேலைக்காரப் பெண் என்றல்லவா நினைத்துவிட்டேன். சேச்சே. ரொம்ப ஸாரி, உதை" என்று உதயாவிடம் வருத்தம் தெரிவித்தாள்.

என் பெயரை இப்படிக் கொலை செய்தால் மெய்யாகவே உனக்கு உதை கிடைத்தாலும் கிடைக்கும்" என்றாள் உதயா.

அதற்குள் ஒரு பெரியவரும் விஜயனும் பேசிக் கொண்டே மெல்ல உள்ளே வந்தனர்.

தாரா விஜயனிடம் ஓடிச் சென்று, "அத்தான் ஆனாலும் நீங்கள் ரொம்பவும் மோசம். உங்கள் மனைவியை இப்படியா பிச்சைக்காரிபோல வைத்திருப்பது? ஒரு நகை நட்டில்லையே" என்று அவன் தோளைப் பற்றித் தன் புறமாய்த் திருப்பிக் கேட்டாள்.

வேலைக்காரி!

பிச்சைக்காரி!

எவ்வளவு தைரியம்! ரேகாவின் முகம் சிவந்தன.

உதயாவின் முகமும் கடுத்தது. "இதேதான் தோளை, முதுகை என்று ஆண்பிள்ளைகளைத் தொட்டுக்கொண்டே இருப்பது அவர் எரிச்சல் படுவார். அதனால் குளியுங்கள் என்று அனுப்பி..." என்று ரேகாவிடம் மெல்லிய குரலில் கூறியவள் சட்டெனை நிறுத்தினாள்.

விஜயனோடு வந்த பெரியவர் அவர்களை நெருங்கி வரவும் "வாருங்கள் மாமா, வீட்டில் அத்தை, நவநீ, தேவி எல்லோரும் சுகமா?" என்று குசலம் விசாரித்தாள்.

தொளதொளவென்று ஜிப்பாவில் வந்த அந்தப் பெரியவரின் கண்களில் சிரிப்பு இருந்தது.

"ஆமாம்மா, ஆமாம். எல்லோருமே நல்ல சுகம்தான். உன் வீட்டில் உன் மாமனார், மாமியார், கொழுந்தன் பசு, மாடு, கன்றுக்குட்டி.....ம்...எல்லாம் சுகம்தானா? அப்பாடி. ஒரு வழியாகக் குசலம் விசாரித்து முடித்து விட்டேன். இனி அடுத்த விஷயத்துக்கு தாவலாமா? ஆனால் இந்த உடம்போடு தாவுவது கஷ்டம் என்பதால் நடந்தே போகலாம். ம் நீதான் விஜயன் மனைவியா, அம்மா? இந்தப் பயல் தலைசுற்றிப் போன கதை இப்போது புரிகிறது. அந்தக் காலத்திலும் இந்த மாதிரி அழகான பெண்கள் இருந்திருந்தால் எங்கள் வீட்டுப் பிள்ளைகளும் அழகாகப் பிறந்திருப்பார்கள். ஊம், இனிப் பிரயோசனமும் இல்லை. எல்லாம் காலம் கடந்த ஞானோதயம்" என்று முறுவலோடு தொடங்கியவர் வெகு சோகமாக முடித்தார்.

இதை வேடிக்கையாக எடுத்துக் கொள்ளத் தெரியாமல் தாராவின் முகம் கறுப்பதைக் காணவும் ரேகா, உதயா இருவருக்குமே சிரிப்பு வந்தது.

முறுவலோடு, "எப்போதுமே மிகவும் மிகைப்படுத்திப் பேசுவீர்கள் போல் இருக்கிறதே, உட்காருங்கள் டிபன் சாப்பிடுகிறீர்களா?" என்று உபசரித்தாள் ரேகா.

"பார்த்தாயா, அழகி என்று புகழ்ந்ததால்தானே டிபன் தருகிறேன் என்கிறாய்?" என்று மடக்கினார் அவர்.

"ஆக, டிபனுக்காகத்தான் சொன்னீர்கள் என்பதை ஒத்துக் கொண்டு விட்டீர்கள்" என்று ரேகா பதிலுக்கு மடக்கிடவே ஓகோவென்று கைதட்டிச் சிரித்தார் பெரியவர்.

"இப்போது இன்னமும் நன்றாகப் புரிகிறது" என்று விஜயனை நோக்கிக் கண்ணடித்தார் அவர்.

"வந்த விஷயத்தை மறந்துவிட்டு உபயோகமில்லாமல் வளவளக்கிறீர்கள் அப்பா" என்று எரிந்து விழுந்தாள் தாரா. "வயதாகி விட்டாலே ஞாபக சக்தி, பார்வை எல்லாம் மங்கிப் போய் விடும்போலும்" என்றாள் தொடர்ந்து.

"தன்னை அழகி என்று சொன்ன ஒரே காரணத்துக்காகவே தாரா அவளுடைய தந்தையைச் சற்றும் தயங்காமல் மட்டம் தட்டுகிறாள்" என்பதை ரேகா புரிந்து கொண்டாள்.

திட்டினால்கூடத் தன் தந்தையைப் பிறர் முன்னிலையில் குறைவாக ஒரு வார்த்தை சொல்லத் தன்னால் முடியுமோ என்று நினைத்துக் கொண்டாள்.

ஆனால் தாராவுடைய தந்தை அதைப் பொருட்படுத்தாதது மட்டுமின்றி, "அதனால்தான் தாரா, அந்த ஞாபக சக்தி மருந்தை ஞாபகமாகத் தந்துவிடு என்று உன்னிடம் சொல்லியிருந்தேன். நீயும் மறந்து....விட்....டாயே" என்று அதையே ஜோக்காகமாற்றி எல்லோரையும் சிரிக்க வைத்தார்.

சிரித்து முடித்ததும், "மறுபடியும் மறக்கு முன்பாகச் சொல்லி விடுகிறேன். நம் வீட்டில் உனக்கு நாளை மதியம் விருந்து

விஜய். உனக்கென்றால் வீட்டில் எல்லோருக்கும் தான். அதுவும் இந்த ரதி இல்லாமல் வந்தாயோ, விரட்டியடித்து விடுவேன்" என்று மிரட்டினார்.

சிரித்தபடியே அவன் வருவதாகக் கூறவும் உதயாவிடம் திரும்பினார்.

"உன் கணவர் எங்கே உதிக்குட்டி?" அவரிடமும் ஒரு வார்த்தை அழைத்துவிட்டுப் போகிறேன்" என்றார்.

"ஸாரி மாமா. நாங்கள் நாளைக் காலையே கிளம்ப வேண்டியிருக்கிறது. இன்னொரு தரம் வருகிறோம்" என்றாள் உதயா.

"ஏனம்மா? மாமியார் உத்திரவா?"

"அப்படி ஒன்றும் இல்லை மாமா. எங்கள் மாமா வெளிநாடு போயிருப்பதால் அங்கே இவருக்கு வேலை அதிகம்...அதுதான் அடுத்தமுறை வரும்போது கட்டாயம் வருகிறேன் என்றேன்" என்றாள் உதயா சற்று அழுத்தமாக.

மாமியார் கொஞ்சம் ஒரு மாதிரி என்றாலும் கணவன் வீட்டை விட்டுக் கொடுக்காமல் அவள் பேசுவது புரிந்தது.

"சரிம்மா சரி; அம்மா எங்கேப்பா விஜயா?"

"அம்மாவை அழைத்துவரத்தான் வித்யாவை அனுப்பி இருக்கிறேன்....அதோ, அம்மா எங்கே வித்யா?" என்று வந்து கொண்டிருந்த சின்னத் தங்கையை வினவினான் விஜயன்.

"அம்மா... அம்மா வந்து...உங்கள் .... வந்து.... ரா... ராஜாவைத் தூங்க வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். பத்து நிமிடங்களில் வருகிறார்களாம்" என்று பதிலிறுத்தாள் தங்கை.

ராஜாவைத் தாயார் ஏற்றது அவளுக்குப் பிடிக்கவில்லை என்பதை உணர்ந்தாள் ரேகா. இவள் என்றேனும் மாறுவாளா?

அதற்குள் விஜயனுடைய மாமா பேசினார். "பத்து நிமிடம்? நான் உடனே போக வேண்டுமப்பா. அரை மணி நேரத்தில் 'பாம்பே கால்' வரும்" என்றவர் டிபன் தட்டுகள் வரவும் நிறுத்தினார்.

"சோன்பப்டியா? உன் வீட்டுச் சரக்கா, உதி? பசு நெய்யில் செய்திருக்குமே" என்று இரண்டு துண்டுகளை எடுத்துக் கொண்டார்.

"இதல்லாம் தின்றால் சதைபோடும்" என்று தாரா மறுத்து விடவும், கையில் எடுத்த துண்டுகளைப் பிட்டு வாயில் போட்டபடியே கிளம்பினார் அவர். "அம்மாவிடம் சொல்லப்பா. எல்லோரும் கட்டாயம் வாருங்கள்."

"மாமா எப்படித்தான் சிரித்துக் கொண்டே இருக்கிறாரோ?" என்றாள் உதயா வறண்ட குரலில்.

"எல்லாம் அவரவர் பார்க்கும் விதம்" என்றான் விஜயன் தங்கையைக் கண்டிப்பதுபோல.

அவர் போன பிறகு கருணாகரன் வந்து சேரவே உதயாவும் ரேகாவும் ஒருவரை ஒருவர் பார்த்து முறுவலித்துக் கொண்டார்கள்.

இரவு படுக்கச் செல்லும் முன் குழந்தையைப் பார்க்க நர்சரிக்குள் சென்ற ரேகா அங்கே பவானி அம்மாவைக் காணவும் தயங்கி நின்றாள்.

பேரன் முகத்தில் பார்வையைப் பதித்து ஒரு சிலை போலத் தொட்டில் அருகே நின்று கொண்டிருந்தார் அவர்.

அதில் குறுக்கிட மனம் இல்லாமல் தொலைவில் இருந்தே மகனைப் பார்த்துவிட்டு அகன்றாள் ரேகா.

வெளியே வரும்போதுதான் விஜயனும் அவளைப் போலவே வந்து எட்டிப்பார்த்துவிட்டுத் திரும்பியிருப்பது புரிந்தது.

"எதிரே வந்த உதயா, அண்ணனிடம் "பரவாயில்லை அண்ணா, நின்று அண்ணியுடனேயே வரலாம். இப்படி இரண்டடி முன்னால் வருவதுபோலப் பாவனை எல்லாம் வேண்டாம்" என்றாள் கேலியாக.

லேசாகச் சிரித்துவிட்டு, "நான் எதனால் முன்னே வந்தேன் தெரியுமா, உதய்? யாரோ உதி? உதி என்று ஜபம் செய்தது கேட்டது, இப்படி ஒரு ஜபமா? என்ன ஏது என்று விசாரிக்கலாம் என ஓடோடி வந்து கொண்டிருந்தேன்" என்று தன் பங்குக்குக் கேலி செய்தான்.

"நீங்கள் சொன்னால் நம்புகிறேன்" என்று கண்களை விரித்துச் சிரித்தாள் உதயா. "அம்மா உன்னையா அண்ணி கொஞ்ச நேரம் பேசிக் கொண்டு இருக்கவென்று வரச் சொன்னார்கள்" என்று அவள் கூறும் வேளையில் பவானி அம்மாளும் வந்துவிட்டார்.

தாயாரோடு மகன் செல்ல விஜயனோடு ரேகா நடந்தாள்.

மறுநாள் சுமார் பதினோரு மணி அளவில் உதயாவும் அவள் கணவரும் கிளம்பிச் சென்றார்கள்.

செல்லும் முன் ரோஜா வண்ணத்தில் ஓர் அழகிய பட்டுச் சேலையையும் ஒரு வைர மோதிரத்தையும் தன் பரிசென்று கூறி ரேகாவிடம் கொடுத்தாள் உதயா.

"பிறகு முறைப்படி எங்கள் வீட்டுக்கு விருந்தாட வருமாறு மாமாவிடமிருந்து அழைப்பு வரும் அண்ணி. இப்போதைக்கு என் பரிசாக இதை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறி மோதிரத்தை ரேகாவின் விரலில் அணிவித்தாள்.

இந்த மோதிரம், பட்டுச் சேலையைப் போலவே, பல காரங்களால் நிரப்பப்பட்டு, உதயாவின் கார் டிக்கியில் வைக்கப்பட்ட இரு எவர்சில்வர் டிரம்களும் கூட ரேகாவுக்கு உள்ளூர வியப்பை அளித்தன.

அந்த வீட்டில் ஒதுங்காமல் ஒட்டிப் பழகிய ஒரே ஒருத்தியும் கிளம்புவதையும் சற்று வருத்தத்துடனேயே பார்த்துக் கொண்டு நின்றாள் ரேகா.

அன்று விஜயனுடைய மாமா வீட்டு விருந்துக்கு விஜயனும் அவன் மனைவியும் மட்டும்தான் சென்றார்கள்.

மூக்கில் தூசி புகுந்ததாலோ என்னவோ, ராஜா ஒரு தும்மல் போட்டு விட்டான்.

அதன்பிறகு வெளியே அழைத்துச் செல்ல பவானியம்மாள் சம்மதிக்கவில்லை.

"திரும்பி வரும்போது அதிக நேரம் ஆனாலும் ஆகலாம். அதோடு வெளிக்காற்றில் பிள்ளையை அழைத்து வர வேண்டாம். அவனுக்குத் துணையாக நான் தங்கி விடுகிறேன், நான் இல்லாமல் வித்யா அங்கே வருவதற்கில்லை, எனவே நீங்கள் இருவர் மட்டும் போய்வாருங்கள்" என்று முடித்து விட்டார்.

புலிக்குகைக்குள் செல்லும் உணர்வோடுதான் ரேகா அன்று விருந்திற்குக் கிளம்பினாள்.

முன் தினம் சிவப்பில் ஒளிர்ந்த தாரா இன்று பச்சைப் பசேல் என்று இருந்தாள்.

சரிகை இழையோடிய பச்சை வண்ண ஷிஃபான், பொருத்தமாகத் தங்கத்தில் பச்சை பதித்த தோடு, நெக்லஸ், வளையல், மோதிரம், பொட்டு கூடப் பச்சைதான்.

"கிரீன் அண்டு யெல்லோ கிரிடி ஃபெல்லோ" என்று வக்கிரமாய் நினைத்துவிட்டு, அப்படி நினைத்ததற்காகத் தன்னையே கடிந்து கொண்டாள் ரேகா.

"வாருங்கள் அத்தான்" என்று அவள்... விஜயன் மட்டிலும் தனியே வந்தாற்போல் அவன் கையைப் பிடித்து இழுத்துச் சென்றாள் தாரா.

கிட்டத்தட்ட அவளே உயரத்தில் கன்னம் ஒட்டி, உதடு கறுத்திருந்த அந்த இளைஞன் ரேகாவைக் கண்டதும் கண்கள் தெறித்து விழுந்து விடும்போல விழித்தான்.

''உன் மனைவி பயங்கர அழகு அத்தான்'' என்று பிரமித்தான்.

இவன்தான் தாராவின் அண்ணன் நவநீதன் என்று அறிந்த போது விஜயனுடைய மாமனைப் பற்றிப் பரிதாபப்பட்டாள் ரேகா.

மகிழவும் செய்யலாம் என்பதுபோல, ஒரு சின்னப் பெண், பதினைந்து பதினாறு வயதில் பாவாடை தாவணியில் மென்மையாகப் புன்னகைத்து மிருதுவான குரலில் வரவேற்றாள்.

தாராவுக்கும் அவளுக்கும் ஒன்பதாண்டு வித்தியாசம் என்பதை ரேகா தெரிந்து கொண்டாள்.

தன் தங்கை தேவி அழகியாக மலரக்கூடிய சாத்தியக் கூறுகளைக் கண்டு பொறாமையில் வெந்து கொண்டிருக்கிறாள் தாரா என்பதும் நன்றாகவே தெரிந்தது.

"இங்கே இளித்துக் கொண்டு நில்லாமல் உள்ளே சாப்பாட்டு மேசையில் பெரிய மெழுகுத் திரிகளைக் 'கான்டில் ஸ்டாண்டில்' பொருத்தி வை போ."

"கண்ணாடி டம்ளர்களில் நீர் ஊற்றி வை."

"வழக்கம் போல உடைத்துக் கொண்டிராதே" என்றெல்லாம் விரட்டியடித்தாள்.

ஒருவார்த்தை எதிர் பேசாமல் அவள் சொன்னதை எல்லாம் தேவி செய்வதைப் பார்க்கையில் ரேகாவுக்குப் பரிதாபமாக இருந்தது.

ரேகா வலியச்சென்று தேவியிடம் பேசியபோது அவளுக்கு ஒரே மகிழ்ச்சி.

சாப்பிடும் போது தாராவின் தாயார் சின்ன மகளைக் கண்டித்தார். "நீ கட்டியிருக்கிற அரக்குக் கலருக்கு கார் னெட்செட்டைப் போடுவதற்கென்ன? பிச்சைக்காரி மாதிரி ஒற்றைச் செயினைப் போட்டு நின்று என் மானத்தை வாங்குகிறாயே?" என்று கடிந்தார்.

முகம் கன்றிப் போயிற்று தேவிக்கு.

"இதுவும் அவளுக்கு நன்றாகத்தான் இருக்கிறது" என்ற பரிந்தாள் ரேகா.

ரேகாவை வெறுத்துவிட்டு, "உனக்கு அப்படித்தான் தோன்றும்" என்று முணுமுணுத்தார் தாராவின் தாயார்.

தாரா யாருடைய வாரிசு என்று அப்போது புரிந்து கொண்டாள் ரேகா.

உணவு நேர்த்தியாகவும் சுவையாகவும்கூடத் தயாரிக்கட் பட்டு இருந்தது.

ஆனால் ரேகாவால் நன்றாகச் சாப்பிட முடியவில்லை.

மேஜையின் எதிர்புறமாய் விஜயனின் அருகில் அமர்ந்து, "அத்தான் உங்களுக்கு நண்டு பிடிக்குமே என்று அலைந்து வாங்கி வரச்சொல்லி, உடைத்து சதை மட்டும் எடுத்துச் செய்யச் சொன்னேன். இன்னும் கொஞ்சம் சாப்பிடுங்கள். அத்தான் முஸ்லீம் வீட்டுப் பக்குவத்தில் செய்த குருமா உங்களுக்குப் பிடிக்குமே ஊற்றட்டுமா?" என்று கொஞ்சும் குரலில் மிழற்றி விஜயனை உபசரித்துக் கொண்டிருந்தாள் தாரா.

அதிலிருந்து கவனத்தைக் கட்டாயமாகத் திருப்பி, அருகிலிருந்த தேவியுடன் பேச்சுக் கொடுத்தாள் ரேகா.

"தமிழில் முதல் மார்க் வாங்கியது, இரண்டாவது ராங்க் வந்தும் பணக் கஷ்டத்தால் படிப்பை நிறுத்த இருந்த அவளுடைய தோழி, (நல்ல வேளையாக - அப்பாவிடம் சொன்னதும் அவளது படிப்புச் செலவை அப்பாவே ஏற்றுக் கொண்டார்....) அவளது அறையில் மறைத்துவைத்து அவள் வளர்க்கும் அணில் தண்ணீரில் விழுந்து சாக இருந்ததக்கா. காப்பாற்றப் போனால் முதலில் என்னை விரலில் கடித்து விட்டது. ஆனால் இப்போது பிரண்டாகி விட்டது" என்று வெகுளித்தனமாகப் பல கதைகள் சொன்னாள் அவள்.

உணவின் பிறகு தான் சேகரித்து வைத்திருந்த அபூர்வப் பொருட்களைப் பார்க்க என்று விஜயன் தம்பதியை அழைத்தார் சிவராமன்.

"நீங்கள்தான் எத்தனையோ தடவை பார்த்ததாயிற்றே. நீங்கள் இந்த ஆல்பம் பாருங்கள்" என்று விஜயனைப் பிடித்து உட்கார வைத்தாள் தாரா.

"நான் பார்க்கிறேன், அங்கிள்" என்று சிவராமனுடன் நடந்தாள் ரேகா.

கலை வேலைப்பாடமைந்த பல பொருட்களைச் சேகரித்து வைத்திருந்தார் அவர்.

அதிலும் தந்தத்தால் அமைந்தவை ஏராளம்.

பார்த்துக்கொண்டே வருகையில், "பவானி எப்படிப் பழகுகிறாள், ரேகா? பிள்ளையைத் தூங்க வைக்கிறாள் என்றால் உங்களை ஏற்றுக்கொண்டாள் என்றுதான் அர்த்தம். இல்லா விட்டாலும் விஜயன் பார்த்துக்கொள்வான்" என்று கூறியவர் ஒருகணம் பிரமையாக இருந்தார்.

பிறகு தொடர்ந்தார். "என் நவநீ அவன்போல் இல்லையே என்பது என் வருத்தம், விஜயன் கடும் உழைப்பாளி,

தெரியுமில்லையா?" அவன் அப்பா இறந்த போது ஒரு நாளைக்கு நாலு மணி நேரம் தூங்கியிருந்தான் என்றால் அதிசயம்."

"ஏன்? அதைச் செய்ய நிர்வாகத்தின் பழைய ஆட்கள் இருந்திருப்பார்கள் இல்லையா?" என்றாள் ரேகா.

"இருந்தார்கள், மகளே, இருந்தார்கள். ஆனால் என் அத்தான் விஜயனுடைய அப்பா அப்போது புதிதாக ஒரு சிமெண்ட் ஆலை தொடங்கியிருந்தார். இவரது உடல் நலம் கெட்டதும் எல்லாம் கெட்டுப் போயிற்று. ஒழுங்காக வேலை செய்கிறவர்களையும் கெடுப்பதற்கு என்று நாலு பேர் இருப்பார்கள்."

"பிளாஸ்டிக் தொழிற்சாலை வேறு ஏற்கனவே ஸ்டிரைக் அது இது என்று மூடுகிற நிலையில் இருந்தது. அடிமுதல் நுனிவரை அத்தனையும் இவன் பார்த்து... அப்படி உழைத்தும்கூட ஒரு பத்து லட்சத்தில் எல்லாம் முழுக இருந்தது. நான் தருகிறேன் என்றபோது என்ன சொன்னான் தெரியுமா?" என்று மறுபடியும் நிறுத்தினார் அவர்.

தாராவின் நிச்சயதார்த்த அலங்காரமும் பேச்சும் நினைவு வர, ரேகா பேசாதிருந்தாள்.

அவரே தொடர்ந்தார். "வருங்கால மாப்பிள்ளைக்கு என்ற எண்ணத்தில் தருவதானால் வேண்டாம் மாமா" என்றான். உதயாவின் திருமணம் வேறு நடக்க இருக்கிறது. அந்த நேரத்திலும் எவ்வளவு பற்றி நான் உன்னிடம் சொல்வது கொல்லன் பட்டறையில் நேர்மை பார்த்தாயாம்மா?... ஆனால் அவன் நேர்மை ஊசி விற்பது போலத்தான். மூன்றாண்டுப் பிரிவின் பிறகும் உன்னை மணந்து அழைத்து வந்து உனக்கும் பிள்ளைக்கும் கவுரவமான நிலைமையைத் தந்தவனுடைய நேர்மை பற்றி யாரும் சொல்லித் தெரிய வேண்டியதில்லையே."

இவர் நேர்மையானவரா அல்லது அப்படிக் காட்டிக் கொள்வதில் வல்லவரா? அப்பாவும் இவரிடம் ஏமாந்துதான் கிடக்கிறார்.

பணத்துக்காக அவளை மணக்கவில்லை என்று காட்டிக் கொள்ள நினைத்து வெற்றியும் கண்டவர். அவ்வளவுதான்.

கவுரவமான நிலை தந்தாராம்.

பிள்ளையைக் கண்டவுடன் மனம் பேதலித்து விட்டது. அவ்வளவே. இல்லையென்றால் அன்றைக்கு அவளை விடுத்துத் தாராவை மணக்க முனைந்திருப்பாரா?

இவரெல்லாம் நல்லவர்; நேர்மையின் திருவுரு!

இத்தனை எண்ணங்களும் உள்ளூரக் குமுறியபோதும் ரேகா வெளியே ஒன்றும் காட்டிக் கொள்ளவில்லை.

பெரியவரைப் பார்த்து முறுவலிப்பதோடு நிறுத்திக் கொண்டாள்.

வெளியே வருகையில் யாரோ அழைப்பதாகத் தந்தையிடம் அறிவித்தாள்.

ரேகா வரவேற்பறைக்குத் திரும்பியபோது மடியில் கிடந்த ஆல்பத்தை விஜயன் பார்த்துக்கொண்டிருக்க, அவனுடைய தோள்புறமாய்க் குனிந்து ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள் தாரா.

அவ்வளவு நெருக்கம்!

இவர் மகா மகா நேர்மையாளராம்!

அதுதான் கட்டினவளை அழைத்து வந்தது கூட மறந்து விட்டது போலும்!

இந்தக் காட்சியைக் கண்டு கனன்று கொண்டு இருக்க விடாமல் தாராவின் அண்ணன் நவநீதன் வந்தான்.

''அப்பாவின் 'கலெக்ஷன்' பார்த்தீர்களே, ரேகா என்னுடையதையும் பார்த்து அபிப்ராயம் சொல்லுங்களேன்,'' என்று அவளை அழைத்தான்.

சரேலெனத் தலை நிமிர்ந்தான் விஜயேந்திரன்.

அவனது விழிகள் மனைவியிடம் ஏதோ சொல்லி எச்சரித்தன.

எச்சரிக்கை அவளுக்குப் புரியாமல் இல்லை.

ஆனால் இன்னொருத்தியுடன் வெளிப்படையாகச் சரசமாடும் கணவனுக்கு மனைவியை தடுக்க என்ன உரிமை இருக்கிறது?

அவனுடைய எச்சரிக்கையை அலட்சியம் செய்து நவநீதனுடன் சென்றாள்.

வீம்புடன் சென்றவளுக்கு ஏன் வந்தோம் என்றாகி விட்டது. தலை நிமிர முடியாமல் திண்டாடிப் போனாள்.

கலையென்று பார்த்தால் நவநீதன் சேமித்து வைத்திருந்த தெல்லாம் பெரிய பொக்கிஷங்களாக இருக்கலாம்.

அதில் கூட அவளுக்கு சந்தேகம்தான் - மெய்யாகவே புகழ்வாய்ந்த ஓவியர்களுடைய கலை நுணுக்கமிகுந்த அசல்களை வாங்கி வைத்திருந்தானா, அல்லது விலை குறைவான நகல்களை வாங்கி வைத்திருந்தானா என்று.

ஆனால் அசலோ, நகலோ எதுவாயிருந்தாலும் அவன் அறையிலிருந்த சித்திரங்கள் அனைத்திற்கும் பொதுவாக இருந்த ஓர் அடிப்படை அவை யாவும் நிர்வாணச் சித்திரங்கள்.

அதிலும் பெரும்பான்மை பெண்களின் படங்கள்.

கன்னங்கள் சூடேற, அவமரியாதை செய்வதாகத் தோன்றாத அளவில் எவ்வளவு சீக்கிரம் வெளியேற முடியும் என்று துடித்துக்கொண்டு நின்றாள் ரேகா

அரைக் கண்ணை மூடி அவளைப் பார்த்தபடி, "இங்கே ஒரே ஒரு குறைதான் - உன்னுடைய சித்திரம் இல்லாத பயங்கரக் குறை இருக்கிறது ரேகா. இத்தனை சேர்த்து வைத்திருக்கிறேன். ஒன்று கூட உன் அழகுக்கு ஈடில்லையே. குழந்தை பெற்றபின் சில பெண்களுக்கு - வெகு சில பெண்களுக்கு அழகு பிரமாதமாகக் கூடும் என்கிறார்களே, நீ அந்த விதமா? மற்றபடி கன்னியாய் இருக்கையில் நீ இதைவிட அழகாய் இருந்திருக்கக் கூடும் என்றால் என்னால் நம்ப முடியவில்லையே" என்று பிதற்றினான்.

அவனது பிதற்றலைப் பெருமுயற்சியுடன் சகித்துக் கொண்டு, "நேரமாகிவிட்டது இனி உங்கள் தங்கைகளின் சேகரிப்புகளைப் பாராமல் சென்றால் நன்றாயிராதே" என்று சிரித்த முகமாகவே கூறி வெளியேறினாள்.

எதிலிருந்தோ தப்பி வந்தாற்போல இந்த உணர்வு, விஜயனின் உணர்ச்சியற்ற பார்வையைச் சந்திக்க நேர்ந்த போது மறைந்து அவள் முகம் ரத்த நிறம் கொண்டது.

"பிராக்குப் பாராதீர்கள், அத்தான். சொல்லுங்கள். இந்தப் புல்வெளிப் பின்னணியில் நான் கரும்பச்சைச் சேலை அணிந்திருப்பது 'கலர் ஸ்கீம்' எப்படி இருக்கிறது?" என்று சுவாதீனமாய் அவனுடைய கன்னத்தைப் பற்றித் தன்புறம் திருப்பினாள் தாரா.

பழைய நிலையிலேயே நின்றிருந்த அவளது கன்னத்துடன் அவன் கன்னம் இழைந்ததோ?

வாணலிக்குத் தப்பி அடுப்பு நெருப்பில் விழுந்தது போல அங்கேயும் பார்க்க முடியாமல் உட்காருவது போல விலக எண்ணிச் சற்றுத் தள்ளிக் கிடந்த சோபாவை நோக்கிச் சென்றாள் ரேகா.

"ரேகா" என்ற அழைப்புடன் சற்று ஒதுங்கி அமர்வதைக் கவனியாதவள்போல அந்த இன்னொரு சோபாவிலேயே அமர்ந்தாள் ரேகா.

அவ்வாறில்லாமல் விஜயனின் அருகே அவள் உட்கார முயன்றிருந்தாலும் அது 'மியூசிகல் சேர்' மாதிரி தான் ஆகி அசிங்கப்பட்டிருக்கும்.

ஏனெனில் தாரா வெகு விரைவாக விஜயன் அருகே அமர்ந்து விட்டிருந்தாள்.

'இவள் என்ன என்னைக் குற்றம் சாட்டுவது' என்று ஆத்திரத்தில், தன்னருகே அமர்ந்த நவநீதனிடம் திரும்பினாள்.

அவன் என்ன பேசுகிறான் என்பதையே கவனியாமல் அமர்ந்திருந்தாள்.

"அப்படியானால் நாளை அலுவலகத்திற்கு வந்து பாருங்கள்..." என்று யாரிடமோ கூறிவிட்டு சிவராமன் திரும்பி வருவது தெரிந்தது.

மெல்ல எழுந்தபடி, "அப்பாவின் கலெக்ஷன், நவநீயின் கலெக்ஷன் எல்லாம் காட்டிவிட்டார். என்னுடையதையும் காட்டாவிட்டால் நன்றாயிராது. வந்து பார்க்கிறாயா?" என்று அசுவாரசியமாக அழைத்தாள் தாரா.

"போகாதே ரேகா. எல்லாம் சுய விளம்பரம். பயங்கரமாய் போரடிக்கும்" என்று தடுத்தான் நவநீதன். "அதை விட நாம் இருவருமே சுவாரசியமாய்ப் பேசிக் கொண்டிருக்கலாம்" என்றான் ஒருவித இளிப்புடன்.

இவனிடம் இருந்து விலகும் ஆர்வம் ஒரு பக்கமும், மறுத்தால் தாரா மீண்டும் விஜயன் அருகே சாய்ந்து விடுவாளோ என்ற பயமுமாக, "இல்லை. இல்லை. வருகிறேன்" என்று எழுந்து தாராவைப் பின் தொடர்ந்தாள் ரேகா.

'நவநீதன் சொன்னதுபோல எல்லாம் சுயம்தான்' அறை முழுவதும் தாராதான்.

நின்று, படுத்து, உட்கார்ந்து, திருப்பி, பக்கவாட்டில், சுரிதாரில், டைட்ஸில், மிடியில், மாக்சியில், ஸீத்ரூவில் 'வால் பேப்பர்' போலச் சுவர் முழுமையும் தாராவின் கலர்ப்படங்கள் தான்.

யாராவது தாராவிடம் வந்து உலகிலேயே நீ அதிகமாக நேசிக்கும் மூன்று பேர் பெயர் சொல்லு என்றால் தாரா, தாரா, தாரா என்றுதான் சொல்லுவாள் போலிருக்கிறது என்று ஏளனமாக நினைத்தாள் ரேகா.

"எப்படி இருக்கிறது?" என்று தாரா கேட்டாள்.

"சிரமப்பட்டு ஒட்டியிருப்பீர்கள்" என்றாள் ரேகா.

சட்டெனத் தாராவின் முகம் கடுத்தது.

உடனே கண்கள் சொக்க, "என்னிடம் இன்னொரு ரகசிய கலெஷன் இருக்கிறது. அதை...அதை உனக்குக் காட்டலாமா என்றுதான் தெரியவில்லை. நீதான் பார்த்துச் சொல்லேன்" என்று சுவரோடு புதைத்திருந்த ஒரு பீரோவைத் திறந்து உள்ளே லாக்கரிலிருந்து ஒரு ஆல்பத்தை எடுத்தாள்.

லாக்கரில் போட்டோ ஆல்பத்தை வைப்பது என்றால்?

## 9

ஏதோ விபரீதம் என்பது புரிந்துவிட்டபோதும் மறுக்க மாட்டாமல் நின்றாள் ரேகா.

அப்படி என்ன இருக்கக்கூடும் என்று அறிவும் குறுகுறுப்பு வேறு.

என்ன இருந்தது என்பது தெரிந்தபோது மனது வெகுவாக நொந்து போயிற்று.

அதில் இருந்த அத்தனை படங்களிலும் விஜயனும் தாராவும் தான் - சேர்ந்த படங்கள்தான்.

அதில் நெருக்கமாகவே இருந்தார்கள்.

திடுமென்று தோன்றிய ஒரு நம்பிக்கையோடு "இதையெல்லாம் யார் எடுத்தார்கள்?" என்று வினவினாள்.

ரேகாவின் முகத்தையே கவனித்துக் கொண்டிருந்த மற்றவள் முகத்தில் புன்னகை இலங்கியது. "ஆட்டோமாடிக்" என்று கேள்விப்பட்டிருக்கிறாயா? செட் பண்ணி வைத்து விட்டால் தானாகப் படம் எடுக்கும் ச்சு. நல்ல காமிரா வைத்துப் படமெடுத்துப் பழகியிருந்தால் தெரியும்" என்றாள் ஏளனமாக.

திருப்பி அடிக்கும் ஆத்திரத்திலே ரேகா, "இவ்வளவு பழகியவர்கள் ஏன் மணந்து கொள்ளவில்லை?" என்றாள்.

"என்ன செய்வது? உன் தந்திரம் எனக்கும் தெரிந்திருந்தால் நானும் ஒரு பிள்ளையைப் பெற்று வைத்திருப்பேன்" என்றாள் தாரா சற்றும் நாணமற்று.

முகம் கன்றிச் சிவந்தவள் ரேகா தான்.

அவள் சமாளித்துக் கொள்ளும்முன் மெல்லிய குரலில் தனக்குள்ளேயே ஏதோ பேசிக் கொண்டாள் தாரா.

"ஆகும் சமயம் சரியாக மண்டையைப் போட்டு வைத்தார் மாமா..."

திருமண அழைப்பிதழைக் கண்டாயிற்று.

தாராவின் நிச்சயதார்த்த அலங்காரத்தைப் பார்த்தாயிற்று.

விஜயனிடம் வேலை செய்பவர் வருங்கால எஜமானி என்று தாராவிடம் குழைந்ததைக் கேட்டாயிற்று.

அதற்கும் மேலாக விஜயனே அந்த நிச்சயத்தை ஒப்புக் கொண்டாயிற்று.

இத்தனைக்கும், மேலாகத் துரும்பையும் பற்றுகிறவாளாகி, "அது நடந்து மூன்று ஆண்டுகள் முடிந்துவிட்டதே அன்று நின்ற திருமணம் இந்த மூன்று ஆண்டுகளில் ஏன் நடக்கவில்லையாம்?" என்று உள்ளே இல்லாத திடத்தைக் குரலில் காட்டிக் கேட்டாள்.

உதாசீனமாக அவளைப் பார்த்தாள் தாரா.

"அவருடைய தொழிலைத் தூக்கி நிலைநிறுத்திக் கொண்டு இருந்தார். ஒரு சூ மந்திரக் காளியில் தொழில் வளர்ந்துவிடும் என்று நினைத்தாயா? ஆனால் அப்போதே நடத்தியிருந்தால் உதயாவின் கல்யாணத்தோடு சேர்ந்து ஒரே செலவாய் முடிந்திருக்கும். இப்போது....கல்யாணம் என்றால் உங்களுடையதுபோல ஒன்னரை ரூபாய்க் கல்யாணம் என்று நினைத்தாயா? வாணவேடிக்கை, தெரு அலங்காரம், பந்திச் சாப்பாடு, வந்தவர்களுக்கு அடையாளம்-ஓ, உனக்குத் தெரியாதில்லையா? திருமணத்திற்கு வரும் பெண்களுக்குப் பட்டுச்சேலை கொடுக்க வேண்டும் தாம்பூலத்தோடு வெள்ளிக் கிண்ணம் தரவேண்டும் எங்கள் அப்பாவின் திருமணத்துக்குப் பவுன் கொடுத்தார்களாம். குறைத்துக் குறைத்துச் செய்தாலும் பத்து லட்சம் ஓடிவிடுமே. ஆனால் இந்தப் பத்து லட்சத்துக்கும் பயந்து பைத்தியக்காரத்தனம் பண்ணி விடுவார் என்று எண்ணாமல் போனேன். எண்ணியிருந்தால் நானும் உன்னைப் போல எல்லாவற்றுக்கும் விட்டுக் கொடுத்திருப்பேன்" என்றாள் வெகு துச்சமாக.

தாயார், தந்தை, திருமணம், குடும்பம் என்ற அத்தனையும் மறந்து செய்த பிழைக்கு இந்தத் தண்டனை தகுதியானதுதான், என்று தன்னையே நொந்துகொண்டாள் ரேகா.

தீக்குளித்தாற்போல உடம்பெல்லாம் எரிந்தது.

ஆனால் எந்தவிதத்தில் இவளிடம் தலை தூக்கி பதில் சொல்ல முடியும்?

அதுவும் அன்று செய்த பிழைக்குச் சான்றாக ஒரு பிள்ளையும் வைத்துக் கொண்டு?

கஷ்டப்பட்டு பெரிய மூச்சுகள் எடுத்துக் கொஞ்சம் மனதை நிதானப்படுத்திக் கொண்டாள் ரேகா.

விஜயேந்திரனை வளைத்துப் பிடிப்பதற்காக அவனுடன் ரேகா அளவுமீறிப் பழகியதுபோலவே பேசுகிறாளே அன்று பணம் தருகிறேன் என்றபோது வாங்காமல் போனது மறந்தா போகும்?

எப்படி மறக்கும்?

மெல்ல நிமிர்ந்து, "என்னை...என்னை நினைவிருக்கிறதா?" என்று மெல்லிய குரலில் வினவினாள்.

புருவங்களைச் சுருக்கினாள் தாரா.

"நினைவு என்றால்...? நாம் சந்தித்திருக்கிறோமோ? பொதுவாக நான் யாரையும் மறப்பவள் இல்லையே... ஒருவேளை...ஒருவேளை நீ...அப்படியும் இருக்குமா? மாமா உடம்பு பற்றிய கவலையும் கல்யாணப் பரபரப்புமாக அப்போது சில நாட்கள் எனக்கு எதுவும் சரியான கவனம் இல்லை. அதெல்லாம் உனக்கும் ஒழுங்காக நிச்சயம், கல்யாணம் என்று நடந்திருந்தால் புரியும், ஒரு வேளை அப்போது அத்தானின் காதலி என்று பணம் வாங்கிப் போனவர்களில் நீயும் ஒருத்தியா?" என்று மேலும் குத்தினாள் தாரா.

ரேகா ஒரேயடியாக அடிபட்டுப் போனாள் குழம்பியும் போனாள்.

'வந்தேன்' என்றால் பணம் வாங்கிக்கொண்டு போனவள் என்று ஆகும்.

அவள் வர்ணித்தது போலப் பணத்துக்காக வலை போட்டுப் பிடித்தாள் என்று ஒப்புவது போலவும் ஆகும்.

ஆனால்...

''உங்களிடம் பணம் வாங்காமல் யாருமே போக வில்லையா? யோசித்துப் பாருங்களேன்'' என்றாள் ரேகா.

"ம். ஒருத்தி அப்படியும் போனாளே. முகம் நினைவில்லா விட்டாலும் ஒரு சிவப்புச் சேலை கட்டியிருந்தாள்."

வியப்பும் நம்பிக்கையுமாக ரேகா நிமிர்கையில் தொடர்ந்து, "பணம் எடுத்து வருவதற்காக நான் உள்ளே சென்றபோது ஹாலில் இருந்த வெள்ளித்தட்டு, சந்தன பேலா, பன்னீர்ச் செம்பு, குங்குமச்சிமிழ் எல்லாவற்றையும் திருடிக் கொண்டு ஓடிவிட்டாள். மெய்யாகப் பணம் தருவதற்கென்று இல்லாமல் அவளை விரட்ட ஆளை அழைத்து வரப்போனேன் என்று நினைத்து, கிடைத்ததைச் சுருட்டிக் கொண்டு ஓடிவிட்டாள். முட்டாள் பெண்" என்று பெரும் போடாகப் போட்டாள் தாரா.

ரேகா அயர்ந்து போனாள்.

தாரா கூறியது ஒரு வகையில் மெய்யாகவும் இருக்கலாம்.

மனம் வெறுத்து இவள் வெளியேறியதைக் கவனித்துக் கொண்டிருந்த வேறு யாரேனும் கூடத் திருடிவிட்டு இவள் மேலேயே பழியைப் போட்டிருக்கலாம்.

அதையெல்லாம் நிரூபிப்பது எப்படி?

ரேகா திகைத்துத் திணறிக் கொண்டு இருந்தபோது நல்ல வேளையாகக் காலடிச் சத்தம் கேட்டது.

வந்தவள் தேவி.

"கழுதை பூனை மாதிரி இப்படி வந்து நிற்காதே என்று எத்தனை தரம் சொல்வது?" என்று சீறியபடி போட்டோ ஆல்பத்தை - அவளுடைய ரகசிய ஆல்பத்தை உள்ளே எடுத்துப் பூட்டினாள் தாரா.

தலைகுனிந்தபடி ஒருகணம் நின்றுவிட்டு, "ரேகாக்கா வீட்டுக்குப் போகலாமா என்று அத்தான் உங்களைக் கேட்கச் சொன்னார்கள்" என்றாள் தேவி, மெல்லிய குரலில்.

ஏன், தனது வண்டவாளத்தைத் தண்டவாளம் ஏற்றி விடுவாளோ மாமன்மகள் என்ற பயமா என்று உள்ளூரப் புகைந்த போதும் அங்கிருந்து தப்பினால் போதும் என்ற நிலையில் ரேகாவும் இருந்ததால் "ஆமாம் ஆமாம்" என்று அவசரமாகச் சொல்லிவிட்டுத் தேவியுடன் வெளியேறினாள் ரேகா.

அப்போதும் தாரா விடுவதாக இல்லை.

கூடவே வெளியே வந்தவள் விஜயனைப் பார்த்ததும், "அத்தான், நீங்கள் என்ன ரேகாவுக்குச் சேலை நகை என்று ஒன்றுமே வாங்கிக் கொடுக்கவில்லையா? பிச்சைக்காரி மாதிரி பாலியெஸ்டரைக் கட்டிக்கொண்டு நிற்கிறாளே. நைலான் ஜார்ஜ்ஜெட், ஷிபான், அசல்பட்டு என்று கொஞ்சம் வாங்கிக் கொடுப்பதுதானே" என்று சிபாரிசு செய்தாள்.

"நீ சொல்லிவிட்டாயல்லவா? இனிச் செய்து விட வேண்டியதுதான்" என்று விளையாட்டுப் போலச் சொல்லி விட்டு விடை பெற்றான் விஜயன்.

"அதற்குள் கிளம்பவேண்டுமா? நீ போய்விட்டால் இந்த வீடே இருட்டடித்து விடும்" என்று உபசாரமாகப் பேசினான் நவநீதன்.

"இங்கே வா" என்று அழைத்துச் சென்று, வெள்ளித் தட்டில் வெற்றிலை பாக்குடன் ஒரு விலை உயர்ந்த சேலையையும் வைத்து அளித்தார் தாராவின் தாயார்.

"இனியாவது வந்திருக்கிற இடத்துக்குத் தக்கபடி ஒழுக்கத்தோடு கவுரவமாக நடந்துகொள்" என்று புத்திமதியும் கூறினார்.

'ஒழுக்கம்' என்ற வார்த்தையில் சரேலென நிமிர்ந்த ரேகா, அவர் முகத்திலும், தாராவின் முகத்திலும் இருந்த குரூரமான முறுவலைக் காணவும் வாயை மூடிக் கொண்டாள்.

இருவருமாக அவளைச் சீண்டுகிறார்கள். இதற்கு இடம் தரக்கூடாது என்று முடிவு செய்தாள்.

பொதுப்படையாக முறுவலித்து விட்டுக் கவனப் பிசகு போல வெள்ளித் தட்டை எடுத்துக் கொள்ளாமலே கிளம்பி விட்டாள்.

ஏழரை நாட்டு சனி போல தாரா வீட்டில் தொடங்கிய துன்பம் அப்போதும் அவளை விடுவதாக இல்லை.

கார் சற்று தூரம் சென்றதும், "உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும்" என்று தொடங்கினான் விஜயன்.

ஒன்றுதானா? எனக்கு ஓராயிரம் இருக்கிறதே என்று நினைத்தவள் அவனிடம் எதைச் சொல்லவும் பிரியமற்று வெளியே பார்த்துக் கொண்டு சும்மா இருந்தாள்.

ஒருகணம் பொறுத்து, "உனக்குக் கெடுதலுக்குச் சொல்லப் போவது இல்லை ரேகா. அதனால் காது கொடுத்தே கேட்கலாம்" என்றான் அவன் வறண்ட குரலில்.

தாராவிடம் பட்ட அவமானங்கள் மனதில் பச்சைப் புண்ணாய் இருக்க ரேகா, "கேளாமல் குதித்து ஓடி விடவா முடியும்? அல்லது காதைப் பொத்திக் கொண்டு இருக்கிறேனா? சொல்லித்தான் ஆக வேண்டுமென்றால் சொல்வது தானே" என்றாள் எரிச்சலை சற்றும் மறைக்காமல்.

"ரேகா! நீ..." என்று சினக்குரலில் தொடங்கியவன் உடனே குரலைத் தணித்தான். "ரேகா. நீ வளர்ந்த விதம் வேறு. ஆனால் இங்கே எல்லாம் வித்தியாசமாய் இருக்கக் கூடும். நிறையப் பேருடன், பலப்பல நிலைகளில் உள்ளவர்களிடம் பழக

வேண்டியிருக்கும். யார் யாருடன் எப்படி, எந்த அளவில் பழகுவது என்று அவரவர் தராதரம் தெரிந்து பழக வேண்டும். முகஸ்துதியிலும் பல்லிளிப்பிலும் ஒரேயடியாக உச்சி குளிர்ந்து விடக்கூடாது. நவநீ போன்றவர்களை எல்லாம் தூர நிறுத்தித் தான் பேச வேண்டும்."

சைத்தான் வேதம் ஓதுவது என்பது இதுதான் போலும்!

அத்தனை பேர் நடுவில் தாராவுடன் இழைந்தவன் இவளைச் சொல்கிறான்.

"பாட் காலிங் தி கெட்டில் பிளாக்' என்று பழமொழி இருக்கிறது. ஒருவேளை அது உங்களுக்குத் தெரியாதோ" என்றாள் ரேகா குத்தலாக.

"ரேகா, நான் உனக்கு உதவி செய்யத்தான் விரும்புகிறேன் என்று முன்பே சொல்லியிருக்கிறேன். ஆனால் அதற்காக நீ விறைத்துக் கொண்டு போகப் போக நான் உன் பின்னே ஓடி வருவேன் என்று நினையாதே. தாரா என் அருகே உட்கார்ந்ததைத்தான் நீ இப்போது குறிப்பிடுகிறாய் என்று தோன்றுகிறது. ஆனால் நான் அழைத்தபோது நீ என் அருகே அமர்ந்திருந்தால் இந்த பிரச்சினைக்கே இடமில்லையே" என்று பொறுமையாக உரைத்தான் விஜயன்.

"உங்கள் அருகாமையில் ஒன்றும் தேன் வடியவில்லை" என்றாள் ரேகா துடுக்காக.

"பின்னே அதில் குறைபட என்ன இருக்கிறது?" என்றான் அவனும்.

"குறையென்ன? அவள் உங்கள் மடியிலேயே உட்கார்ந்தால் கூட எனக்கு ஒன்றும் இல்லை."

ஆத்திரமாக அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டுத் திரும்பவும் பாதையில் பார்வையைப் பதித்தான் அவன்.

சற்றுப் பொறுத்து, "தாராவின் பேச்சிலும் ஒன்று சரிதான். உன்னுடைய, ராஜாவுடைய ஆடைகள் எல்லாம் சரியில்லைதான். வித்யாவுடன் திருச்சிக்குப் போய் வாங்கு. இங்கே எதெது தேவைப்படும் என்பது அவளுக்குத் தெரியும். தாராவையே அழைத்துப் போய் வாங்கச் சொல்லியிருப்பேன். ஆனால் உனக்குத்தான் அவளைக் கண்டாலே ஆகவில்லையே. அப்புறம். .சிக்கனம் ஏதும் பார்க்கத் தேவையில்லை. ஏனென்றால் இன்றைக்கு நான் பணக்காரன் தான்" என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

உடைகளைப் பற்றி ரேகாவும் உணர்ந்தே இருந்தாள்.

ஒரு மத்திய தரத்துக் குடும்பத்தின் அளவில் நின்று பார்க்கையில் தரமானதாகவும் ஓரளவு உயர்வாகவும் தோன்றியவை இங்கே மட்டமாகத்தான் தோன்றின.

ஆனால் அவன் சொன்னதை ஒப்பவும் மனமின்றி, "முதலில் உங்கள் தங்கையை இதற்கு சம்மதிக்க வையுங்கள்" பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்று முடித்து விட்டாள்.

அதற்கு மேல் வீடு வந்து சேரும் வரை அவன் எதுவும், பேசவில்லை.

ஒரு சமயம் ஓரக்கண்ணால் அவனை, அவள் ஆராய்ந்த போது அவன் முகம் இறுகியிருந்தது தெரிந்தது.

தங்கையைச் சொன்னால் தாங்கவில்லையாக்கும்.

அவனுக்கு ஆத்திரமூட்டிவிட்ட அளவிலேயே உள்ளூர மகிழ்ச்சி உண்டாயிற்று அவளுக்கு.

ஆனால் அதுவும் உடனே ஏனோ வெறுத்துப் போயிற்று.

இது என்ன வாழ்க்கை!

அன்பற்ற பிணைப்பு.

பிரியமற்ற கணவன்.

அவனுடன் நடத்திய காதல் விளையாட்டுக்குச் சான்றாக போட்டோ ஆல்பத்தைக் காட்டி வதைக்கும் ஒருத்தி.

நாலாபுறமும் சூழ்ந்து வந்த இருளில் குழந்தை மட்டுமே கலங்கரை விளக்கமாகத் தோன்றினான்.

வீட்டை அடைந்ததும் அவசரமாகக் குழந்தையிடம் ஓடினாள்.

பவானி அம்மா அருகே உட்கார்ந்திருக்க ராஜா அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தான்.

மெதுவான குரலில், "உன்னைத் தேடினான். நினைத்துக் கொண்டே தூங்கினால் அழுவானில்லையா? அதனால் வேறு விளையாட்டுக் காட்டி மறக்கடித்து பிறகு தூங்க வைத்ததில் நேரமாகிப் போயிற்று. சற்று முன்பு தான் தூங்கத் தொடங்கினான்" என்றாள் பேரனின் முகத்தில் கிடந்த சுருள் முடியைக் கனிவுடன் ஒதுக்கியபடி.

அங்கும் தோற்றுவிட்டாற்போல உள்ளூர வாடிப்போனாள் ரேகா.

ஆகப் பிள்ளையும் மறக்கக் கூடியவன் தான் இல்லையா?

சிறுபிள்ளை; விளையாட்டில் பசி, தாகம், உடல் வேதனை அத்தனையும் மறக்கக் கூடிய வயது என்பதெல்லாம் புரிந்தபோது பல்லவி போல முணுமுணுவென்ற வேதனை சற்று குறைவதாக இல்லை.

"ராஜாக்குட்டி விழித்ததும் உன்னைக் கூப்பிட்டு அனுப்புகிறேன்" என்றார் மாமியார் தொடர்ந்து.

"வே. வேண்டாம். நான்... வந்து பிறகு நானே வருகிறேன்" என்று தடுமாறிவிட்டுப் போனாள் ரேகா.

பேரனை ஏற்றுக் கொண்டபோதும் மருமகளிடம் பேசுவது பவானி அம்மாளுக்குச் சற்றுக் கடினமாகவே இருந்தது.

ரேகாவோ கேட்கவே வேண்டாம்.

கணவனையே மனதில் ஏற்றுக் கொள்ளாதவள் மாமியாரை எங்கிருந்து ஏற்பது?

முகத்தைப் பாராமலே பேசி முடித்துவிட்டுத் தப்பினோம் பிழைத்தோம் என்பதுபோலத் திரும்பிச் சென்றாள்.

நிம்மதிக்கு வழியின்றி எல்லாம் அலுப்பாகவும் வெறுப்பாகவும் இருந்தது.

மனதில் இருந்த கைப்பும் சகப்பும் வெளியேயும் பரவியது போல உடம்பெல்லாம் கசகசத்தது.

சட்டெனச் சேலையை - அவள் மட்டமானது என்றாளே அந்தச் சேலையை அவிழ்த்து வீசிவிட்டுக் குளியல் அறைக்குள் சென்றாள்.

'பாத் டப்'பில் நீர் நிரப்பும் அளவு பொறுமை இல்லாது போகவே நேரே ஷவரைத் திறந்துவிட்டு அடியில் நின்றாள்.

எவ்வளவு நேரம் நின்றாளோ?

உடம்பு குளிரத் தொடங்கியதும் அங்கிருந்த பெரிய டவலைச் சுற்றிக்கொண்டு குளியலறையை விட்டு வெளியேறியவள் மறுபக்கச்சுவரோடு அமைத்திருந்த வார்ட்ரோபை நாடி வேகமாகச் சென்றாள்.

சட்டென நின்றாள்.

அறைக் கதவைத் திறந்துகொண்டு விஜயன் உள்ளே வந்து கொண்டிருந்தான்.

அவன் பார்வை தனது வெற்றுத்தோள்களில் படிவதைக் கண்ட ரேகா ஒருகணம் பேச்சிழந்து உறைந்தாள்.

"கதவைத் தட்டினேன் ரேகா, பதில் இல்..." என்று அவன் ஏதோ சொல்ல வருமுன் சுதாரித்துக் கொண்டு, "கெட்அவுட்" என்றாள் முகத்தில் அடித்தாற்போல்.

சட்டென உடல் விறைப்பாகி நிமிர்ந்தான் அவன்.

"யாரை வெளியே போகச் சொல்கிறாய்?" என்றான் ஆத்திரமாக.

"இங்கே உங்களைத் தவிர வேறு யாரும் இருக்கிறார்களா என்ன?" என்றாள் அவள் துச்சமாக.

"ரேகா" என்று அதட்டினான் அவன்.

"இந்த அதட்டலுக்கு மிரள வேறு ஆள் பாருங்கள். இது என் அறை. இங்கே வர உங்களுக்கு உரிமை இல்லை" என்றாள் ரேகா அழுத்தந்திருத்தமாக.

"இங்கே வர உரிமை இல்லையா? என் உரிமையின் அளவு தெரிந்தால் நடுங்கிப் போவாய்" என்றான் அவன் ஏளனமாக.

"எனக்குக் குளிர்காய்ச்சல் வரும்போது நன்றாகவே நடுங்கிக் கொள்கிறேன்" என்றாள் அவள் எகத்தாளமாக.

தாரா வீட்டுக்குச் சென்றதிலிருந்து- ஏன், திருமணமாகி இங்கே வந்ததிலிருந்தே குமுறிக் கொண்டிருந்த எரிமலைக்கு ஒரு வடிகால் கிடைத்தாற்போல் அவனிடம் வெகு உதாசீனமாகப் பேசினாள் ரேகா. "முதலில் என் அறையை விட்டு திரும்பிப் பாராமல் வெளியேறுங்கள்" என்றவள், தானும் திரும்பிப் பாராமல் 'வார்ட்ரோபை' நோக்கிச் சென்றாள்.

கதவு அழுத்திச் சாத்தப்பட்டதால் எழும் 'கிளிக்' ஓசை கேட்கவும் அவன் வெளியேறிவிட்டான் என்று ஊகித்தாள்.

உள்ளூரக் கொஞ்சம் கர்வம்கூட உண்டாயிற்று.

''உரிமையாம் உரிமை! கடமையைப் பற்றித் தெரியாதவர்களுக்கு உரிமை என்ன வாழ்கிறதாம்'' என்று முணு முணுத்தபடியே பீரோ கதவைத் திறந்தாள்.

"கடமையைப் பற்றி நீ பேசுகிறாயா?" என்ற குரல் அருகே கேட்கவும் தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு திரும்பினாள்.

"பிள்ளையின் பிறப்பையே தகப்பனிடமிருந்து மறைத்த உனக்குக் கடமையின் அடிப்படையேனும் தெரியுமா?" என்று சினத்துடன் கேட்டான்.

வெளியே போய்விட்டான் என்று நினைத்திருக்க அவன் கதவைச் சாத்திவிட்டு உள்ளேயே இருந்திருக்கிறான்!

ஏனென்று புரியாமல் கோபம் தலைக்கேற, "உங்களை வெளியே போகச் சொன்னேன்" என்றாள் அவள் காட்டமாக.

"போகத்தான் போகிறேன். ஆனால் அதற்குமுன் உரிமை, கடமை பற்றி உனக்குக் கொஞ்சம் கற்பிக்க வேண்டியிருக்கிறது" என்று அவளது தோளைப் பற்றினான்.

சட்டென விஷயம் புரிய அவன் கையைத் தட்டிவிட்டு அவனிடமிருந்து தப்பும் முயற்சியாகக் குளியலறையை நோக்கிப் பாய்ந்தாள் ரேகா.

ஆனால் வினாடிக்குள் அவளது முயற்சியைத் தடுத்தவன் திமிறத் திமிற அவளைத் தூக்கி வந்து படுக்கையில் போட்டான்.

## 10

தோற்று ஒடுங்கிப் போய் கிடந்தாள் ஜீவரேகா.

அவளிடமிருந்து பார்வையைத் திருப்பிக் கொண்ட விஜயேந்திரன், ''மிக மிக உக்கிரபுத்தி உடையவர்கள் தவிர

மற்ற யாரும் ஒரு... ஒரு... பலாத்காரத்தில் பெருமையோ இன்பமோ அடைவதற்கு இல்லை. ஆனால் இந்த அளவுக்கு இழுத்துக் கொண்டவளும் நீயேதான் என்பதால் நான் உன்னிடம் மன்னிப்புக் கேட்கப் போவதும் இல்லை" என்று வெளியேறினான்.

ரேகா பொதுவாக எதற்குமே அழுகிறவள் இல்லை.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு விஜயனுடைய துரோகத்தின் பின்னர் அழுத கண்ணீர்தான் அறிவறிந்து சிந்தியது.

அப்போதும் அழுகை கோழைத்தனத்தின் அறிகுறி சிந்தித்துச் செயலாற்றத் தெரியாத கையாலாகாதவன் செய்கிற வீண் வேலை; ஆத்திரத்தைப் போலவே அழுகையும் மூளையை மட்டுப்படுத்திவிடும் என்றெல்லாம் கூறிய தந்தையின் உபதேசம் அந்தக் கண்ணீரையும் நிறுத்தியது.

மற்றவர்களின் இகழ்ச்சியில் நெஞ்சு தவித்தபோதுகூட அவளது கண்களில் நீர் வடிந்ததில்லை.

ஆனால் இன்று ரேகாவுக்குத் தன்னிச்சையாய் கண்களில் நீர் பெருகியது.

மூன்றாண்டுகளுக்கு முன் கனிவே உருவாக இருந்தவன் இன்று கருணையற்ற கொலைகாரன் போல நடந்து கொண்ட விதம் அந்தக் கண்ணீரைப் பலமடங்கு பெருக்கியது.

எவ்வளவு பெரிய தோல்வி!

அருவருப்புடன் மீண்டும் நீரடியில் நின்றாள் ரேகா.

அவனுடைய மிருகத்தனத்துக்கு சாட்சியங்களாக நீர் பட்டதும் அங்கங்கே உடம்பு சுரீலென்று எரிந்தது.

அதீதமாய் எதையும் எதிர்பார்க்க மாட்டேன் என்றவன் பொய்யாகிப் போனது மேலும் மனதை வருத்தியது.

இது தொடராது என்பது என்ன நிச்சயம்?

தொடர்ந்தால் தப்புவது எப்படி?

பிள்ளையைத் தூக்கிக் கொண்டு வெளியேறினால்கூட அவன் விடுவானா?

அப்படியே வெளியேறினால் கூடப் போக்கிடம் ஏது?

எங்கோ வெளியூரில் இருந்துகொண்டு அந்தப் பயணத்தைப் பற்றிச் சிதம்பரம் எழுதிய கடிதம் அன்று காலையில்தானே வந்தது.

நிராதரவான தனது நிலையை எண்ணிய மாத்திரத்தில் விம்மலும், விக்கலுமாக அழுகை பொங்கியது.

உடம்பு நடுங்கத் தொடங்கிய பிறகுதான் இன்னமும் ஷவர் அடியில் நிற்பது புரிந்து நகர்ந்தாள்.

உலர்ந்த ஆடைகளை அணிந்த பிறகும், ஏசியை நிறுத்திய பிறகும்கூட நடுக்கம் அடியோடு நிற்க மறுத்தது.

யார் முகத்திலும் விழிப்பது என்றால் வெறுப்பாக இருக்கவே இண்டர்காமில் தங்கம்மாவை அழைத்து, ராஜாவுக்கு வேண்டியதை - உணவூட்டித் தூங்க வைப்பது உட்பட அவளையே செய்யச் சொன்னாள்.

சன்னல் ஓரமாய் அமர்ந்தவள், முட்டாள் தனம் என்று தெரிந்தபோதும் ஒவ்வொன்றாக நினைத்து நினைத்து அழலானாள்.

எவ்வளவு நேரம் இருந்தாளோ...

இண்டர்காம் ஒலித்தது.

சோர்வுடன் எடுத்து காதில் வைத்தாள்.

"சாப்பிட வரவில்லை?"

அவன் தான்...

"வேண்டாம் என்று சொல்ல நினைத்தபோது மீண்டும் விசிப்பு வந்துவிடவே, பேசாமல் கீழே வைத்து விட்டுப் பழைய இடத்திலேயே அமர்ந்து மீண்டும் அழுதாள்.

பின்புறம் கதவு திறந்ததும் அப்படியே உறைந்தாள்.

"சாப்பிட வா, ரேகா" என்றான் அவன் அதிகாரமாக.

அவள் திரும்பாமலே அமர்ந்திருக்கவும், "இருட்டிலே உட்கார்ந்து கொண்டு இது என்ன பிடிவாதம்?" என்று அதட்டியவன், ஸ்விட்சைப் போட்டுவிட்டு, அம்மா வருத்தப் படுவார்கள். வா, ரேகா... என்றான் சற்றுத் தணிவாக.

சத்புத்திரன்!

அம்மாவை வருத்தப்பட விடுவானா?

"அம்மா வருத்தப்படக் கூடாதுதான். அதுவும் தன் பிள்ளை மகா உத்தமன் என்று எண்ணிக் கொண்டு இருக்கிறவர்கள் ஆயிற்றே. ஆனால் இதெல்லாம் பார்த்தால் வருத்தப்பட மாட்டார்களா?" என்று கேட்டவள் சரேலென முகத்தை வெளிச்சத்தில் திருப்பிக் காட்டினாள்.

கைகளையும் தூக்கி காட்டினாள்.

மீண்டும் திரும்பி நின்று அடக்கமாட்டாமல் அழத் தொடங்கினாள்.

"ரேகா" என்று அதிர்ந்தான் அவன்.

"இதெல்லாம்... இதெல்லாம் நா... நானா" என்று தடுமாறினான்.

அசையவிடாமல் அழுந்தப் பற்றிய போது முகத்திலும், கைகளிலுமாகக் கன்றிச் சிவந்திருந்த அவனது விரல் அடை

யாளங்களும் நகக் கீறல்களும் அப்போதுதான் ஏற்பட்டது போல மீண்டும் குலுங்கினாள் ரேகா.

"ஸாரி ரேகா. மெய்யாகவே நான்... ஐம் ஸாரி ரேகா ப்ளீஸ், ரேகா" என்று தடுமாறினான்.

"இதோ வருகிறேன்" என்று கூறி அவசரமாகச் சென்றான்.

சொல்லப்போனால் அவனுடைய அதிர்ச்சியும் தடுமாற்றமும் அவளுக்குக் கொஞ்சமேனும் திருப்தியைத் தந்திருக்க வேண்டும்.

ஆனால் மாறாக இன்னமும் கண்ணீர்தான் பெருகியது.

மிக மிக இனிமையாகத் தோன்றிய ஓர் உறவு இவ்வளவு கசப்பாக முடியக்கூடுமா?

சற்று நேரத்தில் விஜயன் திரும்பி வந்தான்.

மேஜைமேல் மூடிய ட்ரே ஒன்றை வைத்தான்.

இன்னொரு சிறு பெட்டியை அருகிலேயே வைத்துத் திறந்தான்.

"ரேகா இதில் டெட்டால் பஞ்சு, மருந்து எல்லாம் இருக்கிறது. காயம் பட்ட இடங்களில் போட்டுக்கொள்" என்று அவளருகே சென்றான்.

அவள் சட்டென ஓரடி பின்னோக்கி நகரவும், நின்று "மருந்துபோட்டுக்கொள்ளவேண்டும் ரேகா. ரத்தம் மாதிரி சிவப்பு தெரிகிறது. வேண்டுமானால் நீயே போட்டுக் கொள். அந்த ட்ரேயில் உனக்குச் சாப்பாடு இருக்கிறது. இங்கேயே சாப்பிட்டுவிடு" என்றான் தணிவாக.

அவள் பதில் சொல்லாமல் நின்றாள்.

"பட்டினி கிடந்தால் இன்னும் கஷ்டமாகத்தான் இருக்கும் ரேகா. வா, சாப்பிடு சூடாகவே சாப்பிட்டு விடு" என்று அழைத்தான் அவன்.

கழுத்தை வெட்டிக் கொன்றுவிட்டு, காயத்துக்கு மருந்திடுகிறானா?

அந்தக் காட்டுத்தனமும், இந்தக் கனிவும் ஒன்றும் அவளுக்குப் புரிபடவில்லை; பிடிக்கவும் இல்லை.

இன்னமும் அவளிடமிருந்து பதில் வராது போகவே பொறுமை இழந்து, "ரேகா" என்றான் அழுத்தத்துடன்.

"பி... பிறகு" என்றவளுக்கு மேலே பேச முடியாமல் கேவல் வரவே. அவனுக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது.

மெதுவான குரலில் அவளை அழைத்து, "ரேகா உனக்கு ஊரில் இருந்து கடிதம் வந்ததால், பெற்றோரை நினைத்துக் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறாள் என்று அம்மாவிடம் சொல்லியிருக்கிறேன். அதனால் அவர்கள் உன்னைத் தப்பாக நினைக்க மாட்டார்கள். ஆனால் என் மேல் உள்ள கோபத்தில் உன் வயிற்றைப் பட்டினி போடாதே... என்ன?" என்றான்.

அவளிடம் அசைவின்றிப் போகவும் பெருமூச்சுடன் திரும்பி நடந்தான்.

அவன் அறை வாயிலை அடைகையில் அவளது குரல் மெலிந்து ஒலித்தது. "எனக்கு இந்த அறையின் சாவி வேண்டும்."

கண்களை இறுக மூடித் திறந்தான் விஜயன்.

பிறகு, "அதற்கு அவசியம் இராது ரேகா, இந்த வீட்டில் ஒரு பழக்கம். இருமுறை ஒரு தவறுக்கு மன்னிக்கும் அம்மா, மூன்றாம் தடவை கடுமையாக தண்டித்து விடுவார்கள்.

அதனால் எந்தத் தப்பையும் நாங்கள் மூன்றாவது தடவை திருப்பிச் செய்தது கிடையாது. அதனால் இனி... இனிமேல் இதுபோல் தவறு என்றுமே நடக்காது, ஐ ப்ராமிஸ் யூ" என்றான் அவன் உறுதியான குரலில்.

அத்துடன் கதவை மூடிக்கொண்டு போய்விட்டான்.

ஆக அன்றைய தினத்தையும் தப்பு என்று சொல்கிறான்.

உண்மைதான்.

அன்றைய தினம் தப்பு நடந்திராவிட்டால் ராஜா பிறந்திருக்க மாட்டான்; காத்திருக்கும் தாராவை மணந்து கொண்டு, ஸ்விட்சர்லாந்து ஹனிமூன் போயிருக்கலாம் அல்லவா?

விஜயன் கொண்டு வந்திருந்த உணவு அப்படியே வீணாயிற்று.

வெகு நேரம் அழுததோ, தண்ணீருக்குள் நின்றதோ ரேகாவின் உடம்பு லேசாகச் சுட்டது.

அவன் அழைத்து வருவதாகச் சொன்ன டாக்டரை மறுத்துவிட்டு, ஒரு மாத்திரையைப் போட்டுக் கொண்டு படுத்தாள்.

ராஜாவைக் கொணர்ந்து அவளிடம் சற்று நேரம் காட்டினான் விஜயன்.

உணவை அவளது அறைக்கு அவனே கொணர்ந்தான்.

கதைப் புத்தகங்களைக் கொண்டு வந்து போட்டான்.

வேறு எதுவும் வேண்டுமா என்று வெகுவாக விசாரித்தான்.

அவளுக்கும் ஒன்றும் ரசிக்கவில்லை.

மூன்றாம் நாள் எல்லாம் நன்றாகி விடவே, ரேகா அறையை விட்டு வெளியேறினாள்.

வெளியேறியவள் நேராக மாமியாரை நாடிச் சென்றாள்.

இந்த மூன்று நாட்களாக ஏற்பட்ட தனிமையில் ரேகா வெகுவாக யோசித்தாள்.

தன்னுடைய நிலையிலிருந்து மட்டுமே சிந்திப்பதை விடுத்து மற்றவர் நிலையிலிருந்து ஆராய்ந்தாள்.

முதலில் மாமியார்...

கையில் இரண்டு வயதுப் பிள்ளையோடு ஒரு மருமகளை ஏற்பது அவருக்குக் கடினமான காரியம்தானே.

அதே வீட்டில் இருந்துகொண்டு. அவர் முகத்தில் விழிக்காமல் மூன்று நாள் ஒதுக்கியது பெருந்தவறாகப் பட்டது அவளுக்கு.

மகன் செய்த பிழைக்கு அவரை வெறுப்பது என்ன நியாயம்?

அத்தோடு இந்த வீட்டில்தான் இருந்தாக வேண்டும் என்று நிலைமை ஆனபிறகு கணவனோடு முடியாவிட்டாலும் மற்றவர்களுடனாவது நல்லுறவுடன் பழகலாம் அல்லவா?

சிதம்பரம் அடிக்கடி கூறுவார். "நம்மைப் பொறுத்த வரை நல்லபடியாக நடந்து கொள்வோம். அதை ஏற்பதும் மறுப்பதும் மற்றவர் விருப்பம்" என்று.

தாலிக்கயிறு இல்லாமல் குழந்தை பெற்ற போதும் பலருடைய நட்பைத் தேடித் தந்தது அந்தப் பண்புதான்.

'இம்' மெனும் முன் எகிறாமல் இப்போதும் அதே பண்பைக் கடைப்பிடிக்கலாம் அல்லவா?

இந்த உறுதியோடுதான் ரேகா மாமியாரை நாடிச் சென்றது.

ஏதோ கடிதங்களைப் பார்த்துக் கொண்டு இருந்தார் பவானி.

அவர் அருகே சென்று, "வந்து... நான் ஏதாவது வகையில் உங்களுக்கு உதவி செய்ய முடியுமா... அ... அத்தை?" என்று ஒருவாறு கேட்டு விட்டாள் ரேகா.

அவளை ஒரு தரம் பார்த்துவிட்டு உட்காரச் சொன்னார் பவானி.

"உடம்பு சரியில்லை என்று விஜயன் சொன்னானே, இப்போது நன்றாகி விட்டதா?" என்று விசாரித்தார்.

ரேகாவின் முகம் சிவந்தது. "ஆமாம். லே... லேசான சூடுதான், வந்து... வந்து..." என்று தடுமாறினாள்.

விஜயன் சொன்னான். "என்னதான் பாசம் என்றாலும் உடம்பு கெடும் அளவுக்கா அலட்டுவது? நீ ஒரே பெண் என்றானே. ரொம்பவும் செல்லமா?"

"செல்லம்... என்று இல்லை. ஆனால் அப்பா அம்மாவைப் பிரிந்து இதற்கு முன் ஒரே ஒரு தடவைதான் ஒரு வாரம் இருந்திருக்கிறேன்" என்றாள் ரேகா.

அந்த ஒரு தடவையை நினைத்தபோது, அப்போதும் விழிகளில் நீர் திரையிட்டது.

ஆனால் பவானி அம்மாள் வேறு நினைத்தார். பாசம் மிகுந்த பெண், பாவம் என்று எண்ணினார்.

ஆதரவாய் மருமகளின் தோளில் கைவைத்து, "தனியாக அடைந்துகிடந்தால் அதே நினைவுதான் வரும். நாளன்று வெள்ளிக்கிழமை அல்லவா? தஞ்சைப் பெரிய கோயிலுக்குப் போய் வரலாம். சற்று முன்னதாகச் சென்றுவிட்டால் வெளிச்சத்தில் சிற்ப வேலைப்பாடெல்லாம் கூடப் பார்க்கலாம். விஜயனுக்குத் தெரியவேண்டும். வேலை வேலை என்று இன்னமும் அடைந்து கிடக்காமல் மனைவியோடு நாலு இடம் போய் வருவதுதானே" என்றார்.

ரேகாவுக்கு ஆச்சரியமாய் இருந்தது. இந்த அளவு இதமான பேச்சை அவள் எதிர்பார்க்கவே இல்லை.

ஒரு வேளை தன்னைப் போலவே அவரும் எண்ணியிருப்பாரோ?

அவள் எண்ணியதைக் கண் காட்டி விட்டதோ?

பவானியின் முகம் லேசாகச் சிவந்தது.

ஒரு முடிவுக்கு வந்தவர் போலச் சொன்னார். "ரேகா உன்னிடம் ஒன்று சொல்லவேண்டும். நீ இங்கே வரும்போது உன்னை பற்றி மிகவும் தப்பாக நினைத்திருந்தேன்... அதாவது."

"புரிகிறது ஏதோ ஒரு பிள்ளையை, எப்போதோ பழகிய ஒருத்தி, உங்கள் மகன் தலையில் கட்டிவிட்டதாக" என்றாள் ரேகா வறண்ட குரலில்.

உடனேயே, "ஆனால் உங்கள் நிலையில் யார் இருந்தாலும் அப்படித்தானே நினைத்திருப்பார்கள்" என்றாள் நிச்சயமாக.

"இருக்கலாம். ஆனால் ராஜாவைப் பார்த்ததும்... பார்த்ததுமே அவன் இந்த வீட்டின் வம்ச விளக்கு என்பது தெரிந்து போயிற்று. நீயும் நான் பயந்தமாதிரி இல்லை. பார்க்கப் போனால் வித்யாவை விடக் கூட அடக்கமாய் இருக்கிறாய். இந்த இரண்டு வயதுக்கு ராஜா வளர்ந்திருக்கும் விதமும் நன்றாகவே இருக்கிறது... மேலும்."

முதலில் பேரனையும், அவன் தாயையும் விலக்கி ஒதுக்கியதற்கு வருத்தம் தெரிவிக்கிறார் அவர் என்பதை ரேகா புரிந்து கொண்டாள்.

மனது லேசாகிவிட, "சும்மாவே இருந்தால் போரடிக்கிறது, ஏதாவது வேலை தாருங்கள் என்றேனே அத்தை?" என்றாள் முறுவலுடன்.

பவானியின் முகமும் மலர்ந்தது. "செய்யேன். இந்தக் கடிதங்கள் எல்லாம் பார். பலது உதவி கேட்டு வரும் கடிதங்கள் தான். உண்மையானது பார்த்துச் செய்யவேண்டும். அப்புறம் சிலர் தர்ம காரியங்களில் நான் கமிட்டி மெம்பரா, அது பற்றி கூட கடிதங்கள் வரும் பதில் எழுதவேண்டும். மற்றபடி வருமான விஷயம் எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டால் விஜயன் பார்த்துக் கொள்வான்..."

மாமியார் மருமகளின் உறவு ஒருவாறு சீர்பட்டுப் போயிற்று.

இருவரும் எதையோ பேசிச் சிரிக்கையில் அந்தப் பக்கமாய் வந்த வித்யா முகத்தைத் திருப்பிக் கொண்டு போனாள்.

அன்று இரவு உணவு முடிந்து அறைக்குத் திரும்புகையில் விஜயன் அவளை அழைத்தான்.

"நாளைக் காலையில் நீயும், வித்யாவுமாகத் திருச்சிக்குப் போய் வாருங்கள். காலையிலேயே போய் விட்டால் நிதான மாகப் பார்த்து வாங்கி விட்டு மாலையில் திரும்பலாம். குட்டி ராஜாவுக்கு வேண்டியதை எல்லாம் தயார் பண்ணிக்கொள்."

"வித்யா?"

"வித்யா வருவாள். அவளிடம் அன்றே சொல்லிவிட்டேன். அன்று... அன்று அதைச் சொல்லத்தான்... வந்தேன்" என்றான் அவன் சிறு தடுமாற்றத்துடன்,

சட்டென விழிகளில் பெருகிய நீரை மறைப்பதற்காகத் தலைகுனிந்தாள் ரேகா.

ஆனால் அவளையும் மீறி இரு பெரிய நீர் மணிகள் தரையில் விழுந்து சிதறின.

"தயவு பண்ணி அதை மறந்துவிடு ரேகா" என்றான் விஜயன் தணிவான குரலில்.

அவன் தணிந்தே போனாலும், 'தயவு செய்து' போட்டாலும் அவன் செய்தது மன்னிக்கக்கூடிய குற்றம் அல்ல என்று ரேகா நிச்சயமாய் நினைத்தாள்.

ஆனால் மேலும் மேலும் விறைத்துக் கொண்டு நிற்பதும் சரியாகப்படவில்லை.

எனவே அந்தப் பேச்சையே விடுத்து, "எத்தனை மணிக்குப் புறப்படவேண்டும்?" என்று வினவினாள்.

"காலையில் சுமார் ஒன்பது மணிக்குக் கிளம்பினால் ஷாப்பிங் செய்யக்கூட கொஞ்சம் நேரம் கிடைக்கும். வழக்கமாக வாங்கும் கடைகளில் பில்லில் கையெழுத்துப் போட்டுவிட்டு வந்து விடுங்கள். மற்ற கடைகளில் வாங்குவதானால் இதில் பணம் இருக்கிறது" என்று கவரை நீட்டினான்.

ஒரு கணம் தயங்கினாள் ரேகா.

மறுக்கத் தோன்றிய போதும் தாராவின் பேச்சு நினைவுக்கு வர வாங்கிக் கொண்டாள்.

"அவ்வளவு தானே."

"மதியச் சாப்பாடு வழக்கமாய் சாப்பிடும் ஹோட்டல் வித்யாவுக்குத் தெரியும். டிரைவரிடம் சொல்லி அனுப்புகிறேன். நீங்கள் கடையில் இருக்கும்போது ராஜாவையும் அவனே பார்த்துக் கொள்வான்."

"சரி" என்றாள் ரேகா சுருக்கமாக.

"மறுநாள் காலையிலேயே மாமியாரிடம் சென்றாள்.

திருச்சியில் ஏதேனும் வாங்க வேண்டியிருக்கிறதா என்று கேட்டு, அவர் சொன்ன ஒன்றிரண்டு பொருட்களை குறித்துக் கொண்। ாள்

ஒன்பது மணிக்கு ராஜாவையும் தூக்கிக் கொண்டு அவள் போர்டிகோவை அடைந்த போது, வித்யாவும் தயாராக அங்கிருந்தாள்.

கார் கிளம்பியதில் இருந்து, தன் பக்கத்து சன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டே வந்த நாத்தனாரை யோசனை யோடு பார்த்தாள் ரேகா.

இவளை எப்படி அணுகுவது?

மட்டம் தட்டுவாளோ, மவுனமாக இருப்பாளோ என்று எண்ணியபடி, "நீ காலேஜில் படிக்கிறாயா வித்யா?" என்று சகஜ பாவத்துடன் கேட்டாள் ரேகா.

தலை திரும்பாவிட்டாலும், "ஆமாம்" என்று சுருக்கமாக ஒரு பதில் வந்தது.

"எந்த ஆண்டு?"

"இரண்டாவது"

"எது முக்கியப் பாடம்?"

"ஃபைன் ஆர்ட்ஸ்."

"கலைகள் என்றால் சுவாரசியமா இருக்கும் அல்லவா?"

"தெரியாது."

"தெரியாது என்றால்... தெரியாமலா படிக்கிறாய்" என்றாள் ரேகா முறுவலோடு.

தலையைத் திருப்பி வெட்டுவது போல முறைத்துவிட்டு மறுபடியும் திரும்பிக் கொண்டாள் வித்யா.

இவ்வளவு வெறுப்புடன் இருப்பவள், பேசாமல் இருந்து தொலையேன் என்று ஏன் எரிந்து விழவில்லை.

ஒருவேளை அதுபோல் நடந்துகொள்ளக்கூடாது என்று மாமியார் எச்சரித்து அனுப்பியிருப்பார்களோ?

"அதோ மாடு..." என்று காட்டினான் ராஜா.

"ஊகூம், மாடு இல்லை, ஆடு" என்று திருத்தியபோது வளநாடு என்ற பெயர்ப் பலகை கண்ணில் பட்டது.

அவள் யோசிக்கையிலேயே டிரைவர், "இதிலிருந்து நம் அய்யாவுதும்மா. எல்லாம் முந்திரித் தோப்புங்க மூச்சூடும் நம்ப ஆலைக்கே வந்துவிடும்" என்றான்.

உட்செல்லும் பாதை போலத் தோன்றவும், "கொஞ்சம் நிறுத்துங்கள் டிரைவர்" என்றாள் ரேகா.

டிரைவர் நிறுத்தவே, "இங்கே என்ன?" என்றாள் வித்யா எரிச்சலாக.

உட்செல்லும் பாதையின் ஒரு புறமாகத் தோட்டம் போல அமைந்திருந்ததைக் காட்டினாள். ரேகா.

"நானும் ராஜாவும் அதுவரை போய்வரப் போகிறோம் நீயும் வா" என்று பெரியவள் குரலில் கூறினாள் ரேகா.

அதற்குள் அவசரமாக இறங்கி வந்த டிரைவர் ராஜாவை எடுத்து இறக்கி விட்டான்.

"அய்யால்லாம் சின்னப்போ இங்கே பிக்னிக் வருவாங்கம்மா. கொஞ்சம் முந்திரிப்பழம் இருக்குதான்னு பார்க்கிறேம்மா" என்று முன்னே ஓடினான் டிரைவர்.

சுளித்த முகத்துடன் இறங்கி நடந்தாள் வித்யா.

"உன்னிடம் சற்றுப் பேச வேண்டும் என்று தான் இறங்கினேன் வித்யா." என்றாள் ரேகா.

மவுனமாக எதிர்ப்பைக் காட்டினாள் மற்றவள்,

'நான் உன் அண்ணனிடம் படிக்கும் பாடத்தை நீ எனக்கே திருப்பிப் படித்துக் காட்டுகிறாயாக்கும்' என்று நினைத்த ரேகாவுக்குச் சிரிப்பு வந்தது.

காட்டிக் கொள்ளாமல் "உன் மனது என்னவென்று எனக்குப் புரியவில்லை வித்யா. ஒருவேளை சமூகப் பட்டாம் பூச்சிகள் போல உன் அண்ணனிடம் நெருங்கிப் பழகிவிட்டுக் குழந்தை என்கிற கொக்கி போட்டு அவரைப் பிடித்துவிட்ட ஏமாற்றுக்காரி என்று நினைக்கிறாயா?" என்று வெளிப்படை யாகக் கேட்டாள்.

"நினைப்பது என்ன? அது தான் தெளிவாகத் தெரிகிறதே" என்றாள் முகத்தில் அடித்தாற்போல.

"ஓ அப்படியா விஷயம்? நீ சிறு பெண் இல்லை வித்யா. ஒருவேளை நான் அதுபோன்ற நோக்கத்தோடு பழகியிருந்தால் குழந்தை உருவான உடன் ஏன் வரவில்லை என்று நினைத்தாய்? குறைந்தபட்சம் அபார்ஷன் அசாத்தியம் என்ற நிலையிலாவது வந்திருக்கலாமில்லையா? கடைசியாகக் குழந்தை பிறந்தவுடனாவது வந்திருக்கலாமே; ராஜா பிறந்து இரண்டு ஆண்டுகள் நான் காத்திருக்க வேண்டிய அவசியம்?" என்று கேட்டாள் ரேகா.

"ஏன்... ஏன் காத்திருந்தீர்கள்?" என்றாள் வித்யா குழப்பத்துடன்.

"நீ தான் மகா புத்திசாலி ஆயிற்றே. கண்டுபிடியேன்" என்றாள் ரேகா ஏளனமாக.

உடனேயே மாறி, "கல்யாணம் ஆகாமல் குழந்தை பெறுவது அதை வளர்ப்பது எல்லாம் நம் சமூகத்தில் பெருமைப்படுகிற விஷயம் அல்ல. அப்போதும் உன் அண்ணனை நான் தேடி

வரவில்லையே, ஏன்? யோசித்துப்பார். என்னைப் பொறுத்த வரையில் என் முழு எதிர்ப்புடன் நடந்த திருமணம் இது?" என்று கூறினாள்.

"ஏன் எதிர்க்கவேண்டும். என் அண்ணன் அந்தஸ்து உள்ளவர். பணக்காரர்...."

"பெரிய பணம்" என்றாள் ரேகா கசப்புடன். "உங்கள் பணமும் அந்தஸ்தும் இல்லாதவர்கள் உலகில் உயிர் வாழ்வதே இல்லையாமா? அல்லது சிரிப்பதுதான் கிடையாதா?"

வித்யா விழித்தாள்.

அதற்குள் ஒரு பாத்திரத்தில் லேசாக உப்பு தூவிய முந்திரிப்பழத் துண்டுகளுடன் டிரைவர் வந்துவிடவே பேச்சு நின்றது.

டிரைவருடன் அந்தத் தோப்பில் காவலாட்களும் வந்தனர். வணங்கினர். ராஜாவைப் பார்த்து வியந்து மகிழ்ந்தனர்.

கைப்பையில் இருந்து ஓர் இருபது ரூபாயை எடுத்து ரேகாவின் கையில் பிறர் அறியாமல் திணித்தாள் வித்யா.

புரிந்து கொண்டு, "நன்றாக இருக்கிறீர்களா? இதை அவர்களிடம் கொடு ராஜா" என்று கூறி, நல்ல பையனாக சிரித்தபடி ராஜா ரூபாயைக் கொடுத்ததும், "வருகிறோம்" என்று விடை பெற்றனர்.

வித்யாவும் அவர்களிடம், "நல்லான். உன் பெண் படிக்கிறாளா?" 'அந்தோணி, உன் மனைவி சுகமா என்று அம்மா கேட்டார்கள்' என்று ஒன்றிரண்டு விசாரித்து வடை பெற்றாள்.

**மீதிப் பயணத்தின்** போது வித்யாவின் முகம் வெளியே **திரும்பி இருக்கவில்லை.**

நேர் எதிரே வெறித்திருந்த முகத்தில் தீவிர சிந்தனையைக் கண்ட ரேகா அதைக் கலைக்கவில்லை.

## 11

முதலில் ராஜாவுக்குத்தான் நிறைய - நிறையவே வாங்கினார்கள்.

எடுத்த எடுப்பில் விலை அதிகம் போலத் தோன்றிய போதும் டிசைனும் தைத்து முடித்திருந்த விதமும் அந்தக் கடையில் மிகவும் நன்றாயிருந்தன.

எனவே, கண்ணில்பட்டதை எல்லாம் வித்யா வாங்கிக் குவித்தபோது ரேகா தடுத்து ஏதும் கூறவில்லை.

மேலும் வாங்குவது எல்லாம் அவள் மகனுக்குத்தானே - இவ்வளவு காலம் செய்யத் தவறியது, சேர்த்து செய்யட்டுமே.

"பட்டுச் சேலைகளை முதலில் வாங்கி விடலாம். மற்ற சேலைகள் வாங்கும் இடத்தில் இந்தச் சேலைகளுக்கும் சேர்த்து பிளவுஸ் துணிகள் வாங்க வசதியாக இருக்கும்" என்று அழைத்துச் சென்றாள் வித்யா.

முழு அகலச் சரிகைக்கரை அல்லது உள்ளே உடல் முழுவதும் சரிகைப் பூக்கள் என்று இல்லாத சேலைகளை வித்யா கண்ணெடுத்துப் பார்ப்பதாகவே இல்லை.

விலை என்று ஒன்று இருப்பது அவளுக்கு நினைவு இருப்பதாகவும் தெரியவில்லை.

"இது உங்களுக்கு நன்றாயிருக்கும்; இது பார்டர் பிரமாதம்; இது கலர் அழகாக இருக்கிறது" என்று எடுத்து வைத்துக் கொண்டே இருந்தாள்.

யாரும் கவனியாதபடி லேசாக ஒன்றின் விலைச் சீட்டைப் பார்த்த ரேகாவுக்கு மயக்கம் வரும்போல் ஆகிவிட்டது.

"இவ்வளவு விலையில் வேண்டாம் வித்யா" என்று நாத்தனாரின் காதில் ரகசியம் பேசினாள் அவள்.

"இதைவிடக் குறைந்தால் தரமாய் இராது" என்றாள் வித்யாவும் அதே குரலில்.

"அப்படியானால் இத்தனை வேண்டாம். ஒன்றிரண்டு போதும்."

"பின்னே, அதே சேலைகளை மாற்றி மாற்றிக் கட்டுவீர்களா! பேசாமல் இருங்கள் அண்ணி" என்று ரேகாவின் கையைப் பற்றி அடக்கிவிட்டு மீண்டும் சேலைகளிடம் கவனத்தைச் செலுத்தினாள் வித்யா.

அவள் முதல் தடவையாக அண்ணி என்று அழைத்தது மனதில் பட ரேகா மவுனமானாள்.

பன்னிரண்டு பட்டுச் சேலைகளையும் காரில் அடுக்கி விட்டுக் கடையில் எல்லோரும் வாயெல்லாம் பல்லாக நின்றார்கள்.

மொத்தமாய் வாங்கியதால் கிடைத்த தள்ளுபடி போகவும் மொத்தத் தொகையைப் பார்க்கையில் ரேகாவின் தலை சுற்றியது.

மதுரை வீட்டின் விலையில் கிட்டத்தட்டக் கால் பாகம்

சமாளித்துக் கொண்டு பில்லில் கையெழுத்திட்டாள்.

கிளம்புமுன், "அத்தைக்குப் பிடியாததைத் திருப்பி அனுப்பி விடுவோம்" என்று ஒரு வார்த்தை சொல்லி வைத்தாள்.

"ஏன் அப்படிச் சொன்னீர்கள்?" என்று விசாரித்தாள் வித்யா. "நாம் விரும்பி வாங்கிப் போவதை அம்மா ஒரு நாளும் வேண்டாம் என்று சொல்ல மாட்டார்களே."

"அதற்கில்லை வித்யா. இவ்வளவு பணத்தைக் கொண்டு போய்க் கட்டிக்கொள்ளும் சேலையில் போடுவது என்றால்

எனக்குத் தப்பாகப் படுகிறது. குறைந்தது பாதியையாவது திருப்பிவிடப் போகிறேன்" என்றாள் பிடிவாதக் குரலில் ரேகா.

வியந்த பார்வையுடன், "அண்ணன் சொன்னபோது நான் நம்பவில்லை அண்ணி. ஆனால் அதுதான் நிஜம் என்று இப்போது தெரிகிறது" என்றாள் வித்யா.

"என்ன சொன்னார்?" என்று தன் ஆவலை மறைத்து சாதாரணம் போலக் காட்டிக்கொண்டு ரேகா வினவினாள்.

உதடுகளில் முறுவலுடன், "அண்ணி ஒரு மாதிரி சிக்கனம் பார்ப்பாள். நீ அதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் அவளுக்குத் தேவை என்று பட்டதை எல்லாம் வாங்கி விடு, போகுமுன் அம்மாவிடம் மட்டும் கலந்துகொள். வேண்டுமா, வேண்டாமா என்று மட்டும் அண்ணியிடம் கேட்காதே என்றார். வந்து... ஸாரி அண்ணி, அப்போது எனக்கு உங்களிடம் அபிப்பிராயமே கிடையாது. நீங்கள் போட்ட வேஷத்தில் அண்ணன் ஏமாந்து கிடக்கிறார் என்று எண்ணிவிட்டேன். வெரி வெரி ஸாரி, அண்ணி" என்று மன்னிப்புக் கேட்டாள் வித்யா.

"ஷ் அதைவிடு வித்யா, ஆனால் மெய்யாகவே இவ்வளவு விலை உயர்ந்த சேலைகள் இத்தனை அவசியம் தானா?" என்று சீரியசாக விசாரித்தாள்.

"நிச்சயமாய் அவசியம் அண்ணி, அம்மாகூடச் சொல்லி அனுப்பினார்கள். இந்த மாதிரி பட்டுச்சேலைகள் பார்த்து வாங்கு என்று. அம்மா பதினைந்து என்றார்கள்; எனக்கு வேறு ஒன்றும் பிடிக்கவில்லை. அதனால் அடுத்த தடவை வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்று விட்டுவிட்டேன். இனி மற்ற தினுசு பார்ப்போமா? அப்புறம் அண்ணி நான் சொல்வதைத் தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டீர்களே. அடுத்து நாம் துணி வாங்கப் போகிற கடையில் விலைச் சீட்டைப் பார்க்கக் கூடாது. இன்னும் இரண்டு கடைகள் இருக்கின்றன. அதில், குறைத்துக் கேட்பதுகூட அவசியம்தான். ஆனால்

இந்தப் பட்டுக் கடையிலும் அடுத்ததிலும் ரொம்ப நாணயமானவர்கள் தெரிந்தவர்களும் கூட, அதனால் அவர்களாகவே தள்ளுபடியும் கொடுப்பார்கள்" என்று எடுத்து உரைத்தாள் வித்யா.

"இவ்வளவு சின்னப்பெண், உனக்கு இதெல்லாம் நன்றாய்த் தெரிகிறதே" என்றாள் ரேகா ஆச்சரியமாய்.

"ம். அக்கா திருமணத்திற்குப் பிறகு அம்மாவோடு வருகிறவள் நான்தான். இதில் இப்படி என்று சொல்லித் தந்திருக்கிறார்கள்...அண்ணி, இப்போதே சாப்பிடலாமா அல்லது இன்னும் ஒரு கடை பார்த்துவிட்டுச் சாப்பாட்டைப் பார்க்கலாமா? குட்டி ராஜாவுக்கு எப்போது சாப்பாட்டு நேரம்?" என்று கேட்டாள் வித்யா.

"இன்னும் ஒரு மணி நேரம் கழித்து உணவைப் பார்க்கலாம்" என்று ரேகா கூற, இருவரும் சேலைப் பெட்டிகளைக் காரின் சீட்டுக்குப் பின்புறமாய் அடுக்கினார்கள்.

"என்னவோ, துணிகளில் இவ்வளவு பணத்தைச் செலவு செய்வது என்றால் அநியாயம் போலப்படுகிறது" என்று பெருமூச்சு விட்டாள் ரேகா.

"அண்ணனின் கவுரவம் விலை மதிப்பே இல்லாதது அண்ணி. அதை எண்ணிப் பாருங்கள்" என்றாள் வித்யா.

"கவுரவமா" என்றாள் ரேகா ஒரு மாதிரிக்குரலில்.

அல்லது பார்வை சற்றுத் தொலைவில் டிரைவரின் தோள் மேல் இருந்துகொண்டு கைகொட்டிச் சிரித்த பிள்ளையிடம் சென்றது.

அவளது பார்வையைத் தொடர்ந்து அண்ணன் மகனை நோக்கிய வித்யாவும் மவுனமானாள்.

அதற்குள் இவர்களைக் காரில் கண்ட டிரைவர் வேகமாகத் திரும்பி வந்தான்.

தாயிடம் தாவி "கலர் குவ்வி, நெய்யா கலர்குவ்வி" என்று குட்டிப் பையன் அளக்கத் தொடங்கவும் இரு பெண் களுக்குமே சிரிப்பு வந்தது.

"லவ் பேர்ட்ம்மா. விற்பனைக்காகக் கூண்டு நிறைய அடைத்து வைத்திருக்கிறான்" என்று விளக்கினான் டிரைவர்.

சைனா சில்க், ஜப்பான் சில்க், ஷிஃபான், ஜக்கார்ட்ஸ், ஷிஃபான் ஜார்ஜெட் என்று நிறைய வாங்கி அவைகளுக்குப் பொருத்தமாக உள்ளாடைகள், பிளவுஸ் துணிகள் என்று வாங்கித் தைக்கவும் கொடுத்துவிட்டுத் திரும்பியபோது ரேகா ஒரேடியாகச் சோர்ந்து விட்டாள்.

மடியில் தூங்கும் பிள்ளையோடு அவள் கண்மூடிச் சாய்ந்திருந்ததைக் கண்டாள் வித்யா.

"கொஞ்சநேரம் இவனை நான் வைத்துக் கொள்கிறேன் அண்ணி" என்று மருமகனைத் தூக்கித் தன்மடியில் வைத்துக் கொண்டாள்.

மறுநாள் பெரிய கோயிலுக்குப் போனார்கள்.

வேலையிருப்பதால் லேட்டாக வந்து சேர்ந்து கொள்வதாகச் சொல்லிவிட்டான் விஜயன்.

குட்டிப் பையனுக்கு ஒரு புதிய பட்டு ஜிப்பாவை அணிவித்து, வீட்டில் இருந்த ஒரு பட்டு அங்கவஸ்திரத்தை மடித்து வேஷ்டிபோல் இடுப்பில் 'எலாஸ்டிக்' மாட்டிக் கட்டி விட்டிருந்தாள் வித்யா.

பெருமையாக அவன் தத்தக்கா பித்தக்கா என்று நடந்தது எல்லோருக்கும் சிரிப்பும் மகிழ்ச்சியுமாய் இருந்தது.

"பாத்திமா, நான் தாத்தா ஆயிட்டேன். வேட்டித் தாத்தா ஆயிட்டேன்" என்று அவன் பவானியை அழைத்துக் காட்டவும் அவருக்கு ஒரே மகிழ்ச்சி.

"இவ்வளவு சந்தோசமாக இருந்து எவ்வளவு காலம் ஆயிற்று" என்று பேரனை முத்தமிட்டார் அவர்.

ராஜாவை அவரிடம் விட்டுவிட்டு ரேகாவும் வித்யாவும் கிளம்பினார்கள்.

விஜயன் வரும்வரை சிற்பங்களைப் பார்த்துக்கொண்டு சுற்றினார்கள்.

நந்தியும் கோபுரமும், சுற்றிலும் சிற்ப வேலைப்பாடும் ரேகாவை வாயைப் பிளக்க வைத்தன.

அதிலும் சரஸ்வதி சிலையை விட்டு நகரவே அவளுக்குப் பிடிக்கவில்லை.

கருவரைச் சித்திரங்கள் கண்ணைப் பறித்தன.

கோபுரத்தில் கிட்டத்தட்ட வாஸ்கோடகாமா உருவில் அமைக்கப்பட்டிருந்த வெள்ளைக்காரன் சிலை வியப்பூட்டியது.

வருங்காலத்தைப் பாடும் வரகவிப்போலப் பிற்காலத்தில் வெள்ளையர் வருவர் என்பதை அறிந்து சிற்பி வடித்த சிலை என்றாள் வித்யா.

நம்பத்தான் தோன்றியது.

முருகன் கோயிலில் இப்போது மூடப்பட்டு விட்ட சுரங்கத்தின் வாயிலைப் பார்த்தார்கள்.

இருவரும் அம்பிகை கோயிலைச் சுற்றிக்கொண்டு வந்த போது விஜயேந்திரன் ஆசாரவாயில் தாண்டி உள்ளே வந்து கொண்டிருந்தான்.

வெண்பட்டு வேஷ்டியும் ஜிப்பாவும் நெற்றியில் திருநீற்றுக் கீற்றுமாக அவனைப் பார்த்த ரேகாவின் இதயம் சற்று நேரம் நின்று பிறகு கனவேகமாகத் துடித்தது.

தன்னை நோக்கி ஓடி வந்த மகனைக் குனிந்து அவன் தூக்கியபோது பவானி விம்மிவிட்டார்.

"அப்பாவும் நானும் ஒரே மாதிரி டெஸ்..." ... என்று ராஜாக் குட்டியின் பேச்சு வேறு.

அர்ச்சனையின் போது கணவன் அருகே பிள்ளையுடன் நின்றபோது அவளையும் மீறிக்கொண்டு ரேகாவின் உள்ளம் பெருமிதத்தால் பூரித்தது.

அம்மன் சன்னதியின் வெளியே அமர்ந்து நெக்குருகப் போடும் ஓதுவாரின் அபிராமி அந்தாதியைக் கேட்டு, ரசித்து, சன்மானம் செய்து விட்டுக் கிளம்பியபோது பல காலமாய் அறியாத, ஏன் மறந்து போயிருந்த சுகம் மயக்கம் போல அவளைச் சூழ்ந்தது.

"ராஜாக்குட்டி சாப்பாட்டு நேரம் ஆகப்போகிறது, நானும் வித்யாவும் குழந்தைகளோடு வீட்டுக்குப் போகிறோம். நீயும் ரேகாவும் மெள்ள - வேறெங்கேனும் போவதானாலும் போய்விட்டு வாருங்கள்" என்று கூறி மகள் பேரன் சகிதம் கிளம்பினார் பவானி.

மறுப்பது நன்றாயிராது என்பது புரிந்து பேசாது நின்றாள் ரேகா.

அவனும் அப்படியே நினைத்தானோ,

"அம்மா, நான் கார்லே போடேன், அம்மா டாடா, அப்பா டாடா" என்று குட்டிப்பையன் குரல் தேய்ந்தது.

"கோவிலிலேயே உட்கார்ந்திருக்கலாம்" என்றவன் காருக்குள்ளிருந்து ஒரு டவலை எடுத்து வந்தான்.

"இதில் உட்கார்" என்று அவளுக்கு விரித்துவிட்டுச் சற்றுத் தயங்கி விட்டுத் தரையில் உட்காரப் போனான்.

"உங்கள் வேஷ்டி..." என்று சற்றே விலகி அமர்ந்தாள் ரேகா.

அதையே அழைப்பாக ஏற்று அந்த டவலின் மறுபுறம் அமர்ந்தான் அவன்.

நல்ல வேளையாக டவல் பெரிய சைஸ்.

அல்லது அவனுடைய நீளக்கால்களை மடக்கி உட்காருவது சிரமமாய்ப் போயிருக்கும்.

கோயிலுக்கு வந்த பலர் தன் போக்கில் பார்வை செல்ல இவர்களை ஒருதரம் பார்த்துவிட்டு மீண்டும் திரும்பிப் பார்ப்பதைக் கண்டாள் ரேகா.

அவன் பார்வை கூர்மை ஆயிற்றே; அவனும் கவனித்திருப்பானோ?

"அதிலும் ஜோடின்னா. இப்படி இருக்கணும். எங்காத்துக்கும் வந்து சேர்ந்திருக்குதே ஒண்ணு" என்று ஓர் அம்மாள் தோளில் இடித்துக் கொண்டபோது ரேகாவில் முகம் சிவந்தது.

கவிந்து வந்த அரையிருளுக்கு நன்றி செலுத்தியபடி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"உதயாவிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது" என்றான் அவன் திடீரென்று.

"ஓ!" என்றாள் ரேகா.

தனக்கு எழுதுவதாகச் சொன்னதை உதயா மறந்து விட்டாளோ என்று நினைத்தாள்.

ஆனால் உதயா மறக்கக் கூடியவள் அல்ல என்றும் தோன்றியது.

அவள் மனதை உணர்ந்ததுபோல, "உனக்கும் எனக்கும் சேர்த்து எழுதியிருக்கிறாள். உனக்கு நன்றி சொல்லச் சொல்லி எழுதியிருக்கிறாள்?" என்றான் அவன்.

"ஏன்?" என்று வியப்பாக வினவினாள் ரேகா.

அவள் முகத்திலும் பார்வையைப்பதித்து, "அன்றுமுதல் பிள்ளை இருபத்தைந்துக்குள் பெறவில்லை என்றால் அப்படி இப்படி என்று கருணாகரனை ஒரு மிரட்டு மிரட்டினாயே. அதற்காகத்தான்" என்று சிரித்தான் விஜயன்.

விஜயன் சிரிப்பு எப்போதுமே மனதைக் கவரும் வகையில் இருக்கும். குதிரைக் கனைப்போ, அசட்டுச் சிரிப்போ இல்லாமல் ரசனையோடு, 'என்னுடன் பங்கு கொள்ள வா' என்று அழைப்பது போல இருக்கும்.

அவன் ஒப்புக்காகச் சிரித்தும் அவள் பார்த்தது இல்லை.

அவனது சிரிப்பை மறப்பதற்காகப் பேச்சில் கவனத்தை செலுத்தினாள் ரேகா. "ஓ...அதுவா? ஆனால் நான் சொன்னது மெய்தான். அத்தோடு உங்கள் தங்கைக்குக் குழந்தை ஆசை இருப்பது தெரியவே வெளியிட்டுச் சொன்னேன். ஆனால் அவள் கணவருக்குக் குழந்தை என்றால் பிடிக்காதா?"

"பிடிக்காது என்பது இல்லை. கல்யாணமாகி ஐந்து ஆண்டுகளுக்கு முன் ஒன்றும் கூடாது என்று சும்மா ஒரு பிடிவாதம். ஆனால் அன்று நீ சொன்னதைக் கேட்டு மிரண்டு விட்டாராம். அங்கே போய் இரண்டு டாக்டர்களிடம் விசாரித்தாராம். அவர்களும் அந்த இடுப்பு எலும்பு வலுப்படுவது நடக்கக்கூடிய ஒன்றுதான் என்று கூறிவிடவே தன் பிடிவாதத்தைக் கைவிட்டுவிட்டாராம். அதற்காகத்தான் உனக்கு நன்றி."

"கூடவே அவளுடைய மாமனார் அடுத்த வாரம் லண்டனிலிருந்து திரும்புகிறாராம். பிறகு நமக்கு விருந்துக்கு வரும்படி அழைப்பு வருமாம். எழுதியிருக்கிறாள்" என்றான் அவன் விவரமாக.

இன்னும் எத்தனை புதிய மனிதர்களைச் சந்தித்தாக வேண்டுமோ என்று சங்கடமாக இருந்தது ரேகாவுக்கு.

அன்றையப் பேச்சை நினைத்துப் பார்த்தால் உதயாவுடைய மாமியார் கொஞ்சம் பொல்லாதவர் போலவும் கணவன் வீட்டாரை விட்டுக் கொடுக்காமல் உதயா பேசுவது போலவும்தான் தோன்றியது.

"அங்கே யார் யார்...?" என்று தயங்கி நிறுத்தினாள் ரேகா.

யாராயிருந்தாலும் இவள் வரமுடியாது என்று மறுத்து விட முடியுமா என்ன?

ஏதோ, அன்றையச் சம்பவத்துக்கு வருத்தம் தெரிவிப்பது போல விஜயன் சற்று இதமாகப் பேசியபோதும், அவனுடைய தங்கை வீட்டுக்கு வரமறுத்தால் விட்டு விடுவானா?

அவளது எண்ணத்தை மெய்ப்பிப்பதுபோல, "யார் இருந்தாலும் உதயாவுக்காகப் போய்த்தான் ஆக வேண்டும் ரேகா. ஆனால் அங்கேயும் யாரும் கெட்டவர்கள் இல்லை. உதயா மாமியார் நெஞ்சம் படபடவென்று பேசுவார்கள். ஆனால் மிகவும் நல்ல மனது" என்றான் விஜயன்.

சற்று நேர அமைதிக்குப் பிறகு, "போகலாமா?" என்று எழுந்தான்.

கூடவே எழுந்து டவலை உதறி மடித்தாள் ரேகா.

சட்டென நினைவு வரவே, "வந்து...நேற்று எவ்வளவு செலவு என்று வித்யா சொன்னாளா?" என்று வினவினாள்.

"ம். கிட்டத்தட்ட மொத்தம் எவ்வளவு என்று சொன்னாள்" என்றான் அவன் சாதாரணமாக.

"வந்து-மிகவும் அதிகம் ஆகிவிட்டது" என்றாள் அவள் சங்கடத்துடன்.

"வாங்கியவை நன்றாக இருக்கிறதல்லவா?" என்றான் அவன் அதுதான் முக்கியம்போல.

"ஆமாம். ஆனாலும் வீட்டில் பிடிக்காவிட்டால் பாதியைத் திருப்பி அனுப்பிவிடுவேன்" என்று சொல்லி இருக்கிறேன்" என்றாள் ரேகா.

"அதற்கு அவசியம் இல்லை. ஆனால் செலவு செய்வது பற்றி நீ இவ்வளவு தூரம் யோசிப்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது" என்றான் அவன் ஒரு மாதிரிக் குரலில்.

அந்தக் குரலில் ரேகா குழம்பிப் போனாள்.

முன் ஒரு தரமும் இதே குரலில் ஏதோ சொன்னான்.

அவள் யோசிக்குமுன், "வா, நேரமாகிறது" என்று முன்னே நடந்துவிட்டான் அவன்.

அவன் குரல்... அந்தக் குரலில் என்ன இருந்தது?

குற்றம் சாட்டுவதுபோல.... அல்லது ஏளனம்போல... என்னவென்று அவளால் கண்டுகொள்ள முடியவில்லை.

ஆனால் அந்தக் குரல் அவளைப் பாராட்டவில்லை என்பது மட்டும் நிச்சயம்.

பாராட்டாதது மட்டுமில்லை. பாராட்ட ஒன்றும் இல்லை என்றும் திட்டமாய் அறிவித்தது.

ஏன்?

மதுரையில் பணத்தைச் செலவு செய்ய மறுத்துத் திருப்பியதாலா?

அன்று அங்கே அவ்வளவு ஜம்பமாய்த் திருப்பிவிட்டு இங்கே அதற்குப் பல மடங்கு செலவு செய்ததாலா?

தன் யோசனையில் மூழ்கியிருந்த ரேகா வித்யாவின் பார்வை தன்னையே தொடர்வதைக் கவனிக்கவில்லை.

கூடவே மாமியாரின் பார்வையும் தன்னோடு தன் கணவனையும் சேர்த்து கூர்வதையும் அவள் கவனித்தாள் இல்லை.

மறுநாள் காலையில் தாரா வந்தாள்.

மாலையில் டென்னிஸ் போட்டியை விஜயனுக்கு நினைவு படுத்த வந்ததாகச் சொன்னாள்.

கூடவே வந்த தேவியோ, "நான் உங்களைப் பார்க்க வந்தேன் ரேகாக்கா" என்று ரேகாவிடம் ஒட்டிக் கொண்டாள்.

"உங்கள் மகனைப் பார்க்க வேண்டுமே" என்று அவள் கூறவும் தோட்டத்தில் ராஜா விளையாடிக் கொண்டிருந்த பகுதிக்கு இருவருமாகச் சென்றார்கள்.

"வித்தி, நீயும் வருகிறாயல்லவா" என்று தாரா கேட்க "ஆமாம் தாராக்கா" என்று புன்னகை வழிய வித்யா பதிலளித்தது காதில் விழுந்தது.

ஒரு தோல்வி உணர்ச்சி நெஞ்சைப் பற்றியது.

"ரேகாக்கா, உங்கள் மகன் என்ன ஸ்வீட்டாக இருக்கிறான்." என்று அவனிடம் ஓடினாள் தேவி.

''என்னைப் பிடிக்கிறாயா?'' என்று அவனோடு விளையாட்டில் கலந்து கொண்டாள்.

பெரிய புல்வெளியும், ஒரு புறம் குவிக்கப்பட்ட ஆற்று மணலும், ஜங்கிள்ஜம், சறுக்குமரம் என்று சிறுவனுக்கான விளையாட்டு அமைப்புகளும் பார்க்கையில் தந்தையும் தாயும் இதைப் பார்த்தால் எவ்வளவு சந்தோஷப்படுவார்கள் என்று ரேகாவை எண்ண வைத்தன.

ராஜாவைத் தோளில் தூக்கி வைத்துக்கொண்டு ''அடேயப்பா, குட்டிராஜா எவ்வளவு உயரம்!'' என்று அதிசயப்பட்டாள் தேவி.

''ஊ...ம் எங்கப்பா தான் ரொம்ப உயரம்'' என்று பெருமையாக அறிவித்தான் குழந்தை.

"ஊகூம் எங்கப்பா தான் உயர்ர்ரம்."

''ம்ம் எங்கப்பா தான் என்னம்மா?'' என்று தாயைத் துணைக்கு அழைத்தான் ராஜா.

''சரி சரி, உங்கப்பாதான் உயரம்'' என்று அவனிடம் ஒப்பிவிட்டு, ''இவன் சரியான அப்பா பைத்தியம் போல தெரிகிறதேக்கா'' என்று ரேகாவிடம் கூறினாள் தேவி.

''ம் ம், ஆமாம்...'' என்று மனதை மறைத்து ஒரு புன்னகை செய்தாள் ரேகா.

ஏதோ தோன்றவும், ''மாலையில் நீ டென்னிஸ் விளையாட வில்லையா?'' என்று விசாரித்தாள்.

''என்னவோ எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால் பரத நாட்டியம் படிக்கிறேன், அக்கா. அம்மாவுக்கும் அக்காவுக்கும் பிடிக்காது. பட்டிக்காடு மாதிரி தைதை என்று குதிக்கிறேன் என்பார்கள். ஆனால் அப்பா பாவம், பரத நாட்டியம் பற்றி அதிகம் தெரியாவிட்டால் கூட உட்கார்ந்து பார்ப்பார். உங்களுக்குப் பிடிக்குமா. அக்கா? அல்லது நீங்களும் டென்னிஸ் தானா?'' என்று கேட்டாள் தேவி.

"எனக்கு டென்னிஸ் ஆடத்தெரியாது. ஆனால் ஒரு டான்ஸ் ஸ்கூலில் சேர்ந்து இரண்டு ஆண்டுகள் படித்தேன். ஒரு நாள் உன் நாட்டியம் பார்க்க வேண்டுமே நான்" என்று அவளோடு சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தாள் ரேகா.

மனமின்றித் திரும்பி வந்தபோது அவள் எண்ணிப் பயந்ததுபோலவே விஜயன் அருகே அமர்ந்திருந்தாள் தாரா.

விஜயன் தோளில் தட்டி, "வேண்டுமானால் பாருங்கள் அத்தான். இன்று மட்டுமல்ல என்றுமே, எதிலுமே ஜெயிக்கும் ஜோடி நாம் இருவரும் தான்" என்று கூறிக் கொண்டிருந்தாள்.

"இதோ வருகிறதே மக்கு. டென்னிஸ் கோர்ட்டில் விட்டால் தையா தக்கா ஆடும்" என்று தங்கையை மட்டம் தட்டினாள்.

தேவியின் முகம் கன்றிச் சிவந்து போயிற்று.

"அவள் தையதக்கா ஆடினால் விளையாட வந்தவர்கள் அவள் ஆட்டத்தில் மயங்கி டென்னிஸை மறந்து போவார்கள்" என்று விஜயன் வக்காலத்து வாங்கிப் பேசியும் கூட தேவிக்கு திருப்தியாகவில்லை.

"சொல்கிறாயே அக்கா. ரேகாவுக்குக்கூட டான்ஸ் தான் தெரியும்; பிடிக்கும். அவர்கள் என்பக்கம் தெரியுமா?" என்றாள் பெருமையாக.

அலட்சியமாகத் தோளைக் குலுக்கினாள் தாரா.

"டென்னிஸ் கோர்ட்டுக்குப் போய் விஜயன் விளையாடுவதைப் பார்த்துவிட்டுவா. வித்யாவுக்கும் துணை" என்று ரேகாவையும் அனுப்பி வைத்தார் பவானி.

ரேகா தயங்கியும் விடவில்லை.

"இவர்களிடமிருந்து ஒதுங்கியே இருந்துவிடமுடியாது ரேகா. விஜயன் மனைவி என்ற முறையில் இவர்களோடும் பழகித்தான் ஆக வேண்டும். மாட்ச் பரபரப்பில் இருக்கும் போது முழு ஆர்வம் உன்னிடம் படியாது. உனக்குப் பிறகு

இலகுவாக இருக்கும்'' என்று அவர் விளக்கி அனுப்பி வைத்தார்.

ஏன் வந்தோம் என்று ஆகிவிட்டது ரேகாவுக்கு.

கிளப் வாயிலில் அருகே கும்பலாக நின்ற சிலரிடம் விஜயன் தன் மனைவியை அறிமுகம் செய்வித்துக் கொண்டிருந்தபோது எங்கிருந்தோ புயல் வேகத்தில் ஓடி வந்தாள் தாரா.

''அத்தான், தலைமை கலெக்டர் வருவது சந்தேகமாக இருக்கிறது. வாருங்கள், கலெக்டர் பி.ஏக்கு போன் பண்ண வேண்டும்'' என்று இவன் கையைப் பற்றி இழுத்தாள்.

பொதுவாக எல்லோருமே விழாவில் பங்கேற்பவர்கள். எனவே ''என்ன என்ன? விஜய், முதலில் அதைப்பாருங்கள்...'' என்று சிலர் கூற, சிலர் தன்னளவில் முயற்சிப்பதற்காகச் செல்ல, கல்வியிருந்த காக்கைக் கூட்டமாய் அனைவரும் கலைந்து போயினர்.

''வாருங்கள் அண்ணி, நாமும் போய்ப் பார்க்கலாம்'' என்று ரேகாவை அழைத்துச் சென்றாள் வித்யா.

''பரிசளிப்பு விழா ஏற்பாடு எல்லாம் என்னுடையது, அண்ணி, தலைமை தாங்குகிறவர் வரவில்லை என்றால் அண்ணனுக்குத் தானே அவமானம்'' என்று கவலையோடு விளக்கினாள்.

கட்டடப் பகுதியிலிருந்து வெளியே வந்த ஒருவரிடம் வித்யா வினவ, ''சும்மா யாரோ கிளப்பிவிட்ட வதந்திம்மா; ஒரு நிமிடம் எல்லோரும் கலங்கிவிட்டோம்'' என்றார் அவர்.

யார் கிளப்பிவிட்ட வதந்தி என்பது ரேகாவுக்குப் புரிந்தது.

''ஆனால் வித்யாவுக்கும் விஜயனுக்கும் - முக்கியமாக விஜயனுக்குப் புரிந்திருக்குமா.''

ரேகாவுக்கு அப்படித் தோன்றவில்லை.

"நானும் ஒரு போட்டியில் விளையாடுகிறேன் அண்ணி, என்கூட விளையாடுகிறவள் வந்திருக்கிறாளா என்று பார்த்து விட்டு வருகிறேன். அதுவரை இங்கே இருக்கிறீர்களா? அல்லது நீங்களே சுற்றிப் பாருங்களேன்" என்று சொல்லிவிட்டுப் போனாள் வித்யா.

ஒருபுறமாய் மேடை அலங்காரம் நடந்து கொண்டு இருந்தது.

அதைப் பார்த்துவிட்டு மெல்ல நகர்ந்து கொண்டிருந்த போது தாராவின் குரல் ஜீவரேகாவின் செவிப்பறையில் மோதியது.

"அத்தான் மனைவி டென்னிஸ் ஆட கிரிக்கெட் பேட்டைத் தான் தூக்குவாள். ஒன்றும் தெரியாது. ரொம்ப ஏழைக் குடும்பமாம். பணக்காரர் என்றவுடன் அப்படியே - வெட்கமின்றி அவ்வளவுக்கும் துணிந்து சென்று வளைத்துப் பிடித்துவிட்டாள். குழந்தை என்று ஆகிவிடவே வேறு வழியில்லாமல் அத்தான் கல்யாணம் செய்து வந்திருக்கிறார், பாவம்" என்று அளந்து கொண்டிருந்தாள் அவள்.

பல்லைக் கடிப்பது தவிர வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை ரேகாவால்.

## 12

'பணக்காரனுக்காக எதற்கும் துணிகிற குடும்பத்தில் நான் பிறக்கவில்லை. அந்த மாதிரி எண்ணமே எனக்கு இருந்தது இல்லை' என்று எந்த மேடையில் ஏறிக் கத்துவது?

கத்தினாலும் கல்யாணத்துக்கு முன்பே பிள்ளை பெற்றவளை யார் நம்புவார்கள்?

எத்தனை பேரிடம் இப்படிச் சொன்னாளோ!

இவர்களை எப்படி முகம் நிமிர்ந்து பார்ப்பது? பேசுவது?

முகம் முழுவதும் அனலாய்ச் சூடு பரவக் கழுத்து வரை ரத்த நிறம் பூசிக்கொண்டது ரேகாவுக்கு.

மெல்லச் சென்று ஒரு புறமாய் ஒதுங்கி அமர்ந்தாள்.

இன்னமும் எத்தனை மணி நேரம் இங்கே இருந்ததாக வேண்டும்?

"அண்ணி, நீங்கள் இங்கேயா இருக்கிறீர்கள்? வாருங்கள், அண்ணன் விளையாடுகிற மாட்ச் தொடங்கப்போகிறது" என்று அழைத்துச் சென்றாள் வித்யா.

'மிக்ஸ்ட் டபிள்ஸ்.'

விஜயனும் தாராவும் ஒருபுறம் நின்று ஆடினர்.

முதல் செட்டை 'ஸிக்ஸ் லவ்' என்ற கணக்கில் தாரா விஜயன் ஜோடி வென்றது.

கடைசி பாயிண்டை தாரா சாமர்த்தியமாய் அடித்து ஜெயிக்க, "வெல்டன் பார்ட்னர்" என்று பாராட்டினான் விஜயன்.

"தாங்க் யூ மேட்" என்று செல்லமாக உதட்டைக் குவித்தாள் தாரா.

"நம்மைவிட சரியான ஜோடி உலகத்திலேயே கிடையாது. தெரியுமா?" என்று விஜயனிடம் சொல்லி ரேகாவை ஒரு பார்வை பார்த்தாள்.

எதையோ புரிந்து கொள்ள முடியாதது போலத் திகைத்தாள் ரேகா.

"என்னம்மா, போரடிக்கிறதா?" என்று ரேகாவின் மறுபுறம் வந்து அமர்ந்தார் தாராவின் தந்தை சிவராமன்.

"எனக்கு இந்த விளையாட்டு தெரியாதில்லையா?" என்றாள் ரேகா வறட்சியாக.

மகள் இவ்வளவு வெளிப்படையாக விஜயனிடம் உறவு கொண்டாடுவது இவருக்குப் புரியாமலா இருக்கும்?

புரிந்து கொண்டவர் போல அவர் பேசவில்லையே.

"எனக்கும் போர்தான் அடிக்கிறது, வயதாகிவிட்ட காரணம் என்னோடு வருகிறாயா, மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் என்

சர்க்கரை ஆலை இருக்கிறது பார்த்து விட்டு வரலாம்" என்று அழைத்தார்.

இங்கே இருந்து நெஞ்சு மறுகுவதற்கு அது எவ்வளவோ மேல்தான். ஆனால்...

"என்னைப் பற்றி யோசியாதீர்கள் அண்ணி. என் மாட்ச் இப்போ தொடங்கிவிடும். இப்போது கிளம்பினீர்கள் என்றால் ஒரு மணி நேரத்துக்குள் திரும்பி வந்து விடலாம். விழா தொடங்க இன்னும் இரண்டு மணிநேரம் இருக்கிறது" என்றாள் வித்யா.

கணவனைத் திரும்பிப் பார்த்தாள் ரேகா.

காதருகில் நெருங்கித் தாரா ஏதோ சொல்வதை வெகு கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான் அவன்.

சட்டெனத் திரும்பி, "போகலாமே" என்றாள் சிவராமனிடம்.

பெரிய ராட்சத எந்திரங்களால் கரும்பு சாறு பிழியப்பட்டு, அந்த சாறு சுத்தப்படுத்தப்பட்டு கெட்டியாகிப் பின் சர்க்கரைப் படிகங்களாக மாறுவதை விளக்கினார் சிவராமன்.

காது மட்டும் அவர் பேச்சைக் கேட்க, அகன்ற மார்பையும் வலுவான புஜங்களையும் இறுக்கிப் பிடித்த டீஷர்ட்டும் ஷார்ட்சுமாக விஜயனின் வலிமையும் வனப்புமான உருவையே படம் பிடித்துக் கொண்டிருந்தது ரேகாவின் உள்ளம்.

அருகிலேயே உரிமைக்காரி போல வெகு நெருக்கமாக நின்ற தாரா.....

அவள் எப்படி அவனோடு ஒட்டிக் கொண்டு நிற்கலாம்?

"என்ன மகளே, இங்கேயும் போரடிக்கிறதா?" என்று கண் சிமிட்டினார் சிவராமன்.

"இல்..." என்று மறுத்துரைக்கத் தொடங்கிய ரேகா. அவர் முகத்தைப் பார்த்ததும் பேச்சை நிறுத்தி முறுவலித்தாள்.

"ஸாரி அங்கிள். வீட்டில் ராஜா விழித்து என்னைத் தேடினானோ" என்று நினைத்தேன் என்று சமாளித்தாள்.

"அதுதான் பெண் என்பது எங்கே போனாலும் மனது மட்டும் பிள்ளையிடந்தான். என் தங்கையும் அப்படித்தான். பரவாயில்லை, மருமகளைப் பொருத்தமாய்த்தான் பிடித்திருக்கிறான் விஜயன். வா. அலுவலகத்தில் என் அறையிலிருந்து அங்கே வீட்டுக்கு போன் போட்டு விசாரிக்கலாம்" என்று அழைத்துச் சென்றார் அவர்.

டெலிபோன் பண்ண வேண்டிய அவசியம் இல்லை என்று நன்றாகத் தெரியும்.

இந்த நல்ல மனிதரை ஏமாற்றுகிறோம் என்று வருத்தம்தான்.

ஆனால் அதையெல்லாம் சொல்ல முடியாமல் அவருடன் சென்றாள் ரேகா.

ஒரு பெரிய அறையில் பலர் உட்கார்ந்து வேலை செய்து கொண்டு இருந்தார்கள்.

சிவராமனைக் கண்டதும் எல்லோரும் எழுந்து வணக்கம் தெரிவிக்க, ஒருவர் மட்டும் சட்டென விலகுவது போன்று தோன்றவும் கூர்ந்து கவனித்தாள் ரேகா.

அருகில் இருந்த மனிதரின் பின்னே ஒதுங்கிக் கொண்டு இருந்தார் அவர்.

அவர்... அந்தக் கண்ணாடிக்காரர்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக விஜயனைத் தேடி இந்த ஊருக்கு வந்தபோது தாராவிடம் கொண்டு விட்டவர்.

முன்னைவிட அதிகம் தலை நரைத்திருந்தது.

மற்றபடி அவரிடம் வித்தியாசம் இல்லை.

அவரைக் கவனியாததுபோலக் காட்டிக் கொண்டு சிவராமனைத் தொடர்ந்த ரேகாவின் மூளை வெகு வேகமாக வேலை செய்தது.

அந்தக் கண்ணாடிக்காரர் இங்கே எப்படி வந்தார்?

விஜயனிடம் வேலை செய்வதாக அல்லவா அன்று பேசிக் கொண்டார்கள்?

இவர் இங்கே வேலை செய்கிறாரே.

ஒரு வேளை அன்று சொன்னது பொய்யாக இருந்தால்...

மூழ்கிறவன் துரும்பையும் பற்றுகிற மாதிரி ரேகா பரபரப்புற்றாள்.

தன் தந்தையிடம் வேலை செய்கிறவரைப் பயன்படுத்தித் தாரா அவனை ஏமாற்றியிருந்தால்?

கூல்டிரிங்க் கொண்டுவரச் சொல்லிவிட்டு டெலிபோனைக் காட்டினார் சிவராமன்.

சொன்ன பொய்க்காக வீட்டிற்கு டெலிபோன் செய்தாள்.

அதற்குள் கூல்டிரிங்க் வந்தது.

மெல்லக் குடித்தபடி சாதாரணம் போலக் காட்டிக் கொண்டு "இந்த மில் தொடங்கி ரொம்ப நாள் ஆகிறதா, அங்கிள்?" என்று வினவினாள்.

"ஓ... நாற்பதாண்டு ஆகிறதே. ஆனால் போகிற போக்கைப் பார்த்தால் அதிக நாள் தாங்காது" என்றார் அவர்.

அடுத்து எப்படித் தொடங்குவது என்று யோசித்தபடி, "ஏன், அங்கிள்?" என்று கேட்டாள் அவள்.

"பின்னே என்னம்மா, ஒரு பக்கம் விவசாயி ஓட்டு வேண்டும் என்று கரும்பு விலையை ஏகமாய் ஏற்றி விடுகிறார்கள். அடுத்த பக்கம் சாதாரண ஜனங்கள் ஓட்டும் வேண்டும். அதனால் சர்க்கரையைக் கண்ட்ரோல் விலைக்கு விற்றாக வேண்டும். அத்தோடு அதற்கு டொனேஷன், இதற்கு நிதி என்று அதிகாரக் கெடுபிடி வேறு. எப்படித் தாங்கும் சொல்லு."

"ஓ கே... ஆனால், அப்படி மூடினால் வேலையில் இருப்பவர்கள் பாடுதான் கஷ்டமாகி விடும். அதிலும் அந்தக் கண்ணாடிக்காரர் போல ரொம்ப நாளாக வேலையில் இருப்பவர்கள் ரொம்பவும் பாதிக்கப்பட்டு விடுவார்கள், இல்லையா?"

"யார்...? ஓ... அந்தக் கருடமூக்கு நல்லசிவனா!"

மூச்சை பிடித்துக்கொண்டு, பேச மாட்டாமல், 'ஆம்' என்பது போலத் தலையை ஆட்டினாள் ரேகா.

"நல்லசிவன் நம்மிடம் இடையில் வந்தவன்தானம்மா. வந்து இரண்டரை, மூன்று ஆண்டுகளுக்குள்ளாகத்தான் இருக்கும். முன்பு விஜயனிடம் இருந்தான். சம்பள உயர்வு கேட்டானாம். விஜயன் மறுத்து விட்டான். அவன் விரும்பினாலும் கொடுக்க முடியாத காலம் அது. இங்கே வந்து சேர்ந்தான், தாராவின் சிபாரிசு. அவன் பெண் தாராவுக்குத் தெரிந்தவளாம். கஷ்டம் என்று அழுததால் வாக்குக் கொடுத்து விட்டாளாம்; சரியென்று வேலையில் சேர்த்தேன். செய்கிற வேலைக்கு அதிகச் சம்பளம் தான். ஆனால் எத்தனையோ தருமம் என்று கொடுக்கவில்லை? இவனும் தின்று விட்டுப் போகட்டுமே" என்றார் சிவராமன்.

அவரது பின்பகுதி விளக்கப் பேச்சு ரேகாவின் மனதில் பதியவில்லை.

அதற்கு முன்பாகவே அது அடிபட்டுச் சுருண்டு போயிற்று.

அவர்கள் பழகுவதைக் கண்டபிறகும், போட்டோ ஆல்பத்தைப் பார்த்த பிறகும், அவன் வாயிலாகவே அவர்களுடைய நிச்சயதார்த்தத்தை உறுதி செய்த பிறகும் அற்பத்துக்கு ஆசைப்பட்டால் அடிபட வேண்டியதுதானே!

ஒரு சிறு பொய்யில் உண்மை என்று உறுதியாகிவிட்ட இவை எல்லாமே பொய்யாகி விடமுடியுமா என்று கூட யோசியாமல் அப்படி என்ன பரபரப்பு?

இப்போது மண்டையில் அடித்தாற்போலச் சொல்லி விட்டார். அன்று விஜயனிடம் வேலை செய்தவர்தான் அவர் என்று.

பெருமுயற்சி செய்து கவனத்தைச் சிவராமன் பேச்சில் திருப்பினாள். "சர்க்கரைப் படிகங்கள் உருவாகுமுன் எடுத்த பாகு ஒரு ஜார் கொண்டுவரச் சொல்லியிருக்கிறேன். கொண்டு போ. நிறையக் கொப்பரையைத் துருவிப்போட்டு சாப்பிட்டால் ருசியாக இருக்கும்" என்று சொல்லிக் கொண்டிருந்தார் அவர்.

போரடித்துக் கிடக்கிறாள் என்று அழைத்து வந்ததோடு நில்லாமல் உபசாரமும் செய்கிறார். இவர் பேச்சைக்கூட முழுமையாகக் கவனிக்கவில்லை.

மற்றதை மனதிலிருந்து ஒதுக்கினாள் ரேகா.

தன் கண்களை அகல விரித்து, "உங்கள் தொப்பை எப்படி வந்தது என்று இப்போது புரிகிறது, அங்கிள்" என்று சிரித்தாள்.

"அதை விஜயனிடம் சொல்லு. ஏனென்றால் அவனுக்கும் இது ரொம்பப் பிடிக்கும்" என்று அவரும் சேர்ந்து சிரித்தார்.

அந்த அறையைச் சுற்றி பார்த்துவிட்டு, "ஊம் எப்போதாவது வருகிறீர்கள். உங்களுக்கு ஏசியாக்கும். நாள் முழுக்க உழைக்கிற அவர்களுக்கு வெறும் மின்விசிறிக் காற்றுதானாக்கும். ஊ...ம்..." என்று பெருமூச்சு விட்டாள் அவள்.

"அந்த மின் விசிறிக் காற்றை அவர்களுக்கு அளிப்பதே என்னுடைய மூளை தானே. அந்த மூளைக்குத்தான் இந்த ஏ.சி. கூடச் சேர்ந்த புண்ணியம், என் தொப்பையும் அனுபவிக்கிறது" என்று சிரித்தார் அவர்.

"உங்களிடம் பேசிக்கொண்டிருந்தால் நேரம் போவதே தெரியாது அங்கிள்" என்று ரேகா புகழ அவர் முகம் இருண்டது.

"தேவிக் கண்ணு தவிர என் வீட்டில் வேறு யாரும் நீ சொல்வதை ஒப்ப மாட்டார்கள் ரேகா. தேவி மட்டும் தான்

'பாவம் அப்பா' என்று கேட்டுச் சிரிக்கும்'' என்றார் ஒரு வருத்தச் சிரிப்புடன்.

இருவருமாகத் திரும்பி வந்தபோது டென்னிஸ் போட்டிகள் முடிவடைந்திருந்தன.

"என்ன ஆயிற்று?" என்று கேட்டபோது, வித்யா தோளைக் குலுக்கினாள்.

ஆனால் விஜயனும் தாராவும் ஜெயித்திருந்தனர்.

''எங்கள் ஜோடியை ஜெயிக்க யாராலும் முடியாது. தெரியுமா?" என்று ரேகாவிடம் பெருமையடித்தாள் தாரா.

''ஆக, என்னைப்போல ஆட்களோடு தான் விளையாடுவீர்கள் போலத் தெரிகிறது'' என்று கேலி போலப் பதில் கூறிவிட்டுத் திரும்பினாள் ரேகா.

ரேகாவைப் பார்வையாலேயே வெட்டினாள் தாரா.

குழப்பத்துடன் சிறு கோபமும் சேர இதைக் கவனித்துக் கொண்டிருந்தாள் வித்யா.

மறுநாள் காலையிலேயே அண்ணியைப் பிடித்தாள்.

"வாருங்கள் அண்ணி, உங்களுக்கு நான் டென்னிஸ் கற்றுத் தருகிறேன்'' என்று காம்பவுண்டின் பின் பகுதியில் அமைந்திருந்த டென்னிஸ் கோர்ட்டுக்கு அழைத்துச் சென்று கற்றுக் கொடுத்தாள்.

''உங்களுக்கு 'நேக்' இருக்கிறது அண்ணி. விரைவில் நன்றாகப் பிடித்துக் கொள்வீர்கள், பிறகு தாராக்காவையே தோற்கடித்து விடலாம்'' என்றாள் மகிழ்ச்சியோடு.

அத்தோடு நில்லாமல் அண்ணனிடம் சொன்னாள். "அண்ணிக்கு நன்றாக விளையாட வருகிறது'' என்றாள்.

வியப்புடன் புருவங்களை உயர்த்தியவனிடம், "இன்றைக்கு அண்ணிக்குக் கற்றுக் கொடுத்தேன்..." என்று அவள் தொடங்க, அவன் புருவங்களை உச்சி மேட்டுக்கே தூக்கிச் சிரித்தான்.

"ச்... போங்கண்ணா..." என்று முகம் சிவந்தாள் வித்யா. "நான் ஒன்றும் பெரிய விளையாட்டுக்காரி இல்லை தான். ஆனால் எனக்கு விளையாட்டு முறை தெரியும் அல்லவா? அதைத்தான் அண்ணிக்குச் சொல்லிக் கொடுத்தேன். இதற்கு மேல் நீங்கள் கற்றுக் கொடுங்கள் அண்ணா. ப்ளீஸ்..."என்றாள் கெஞ்சுதலாக.

மனைவியிடம் ஒரு பார்வையைச் செலுத்திவிட்டு, "அண்ணிக்குக் கற்றுக் கொடுப்பதற்கு நீ ப்ளீஸ் எல்லாம் போட்டுக் கெஞ்சவேண்டுமா, வித்துக் கண்ணு" என்று தங்கையின் கன்னத்தில் செல்லமாகத் தட்டினான்.

ரேகாவின் முகத்தைப் பார்த்துவிட்டு, "நாளைக் காலை ஆறு மணிக்குக் கோர்ட்டுக்கு வந்துவிடு" என்றான். மறுக்க நினைத்த போது, இது தாராவை எதிர்த்து வித்யாவின் செயல் என்பதால் சம்மதித்துத் தலையாட்டினாள் ரேகா.

"இன்னொன்று... இந்தச் சேலையில் ஆடினால் தட்டி விடாது?" என்று வினவினான் அவன்.

வித்யா முழங்கால் வரையிலான அரைப்பாவாடையும், தாரா அதைவிடச் சற்றுக் குட்டையான மினி பாவாடையும் அணிந்து விளையாடக் கண்டிருந்தாள் ரேகா.

"தூக்கிச் செருகிக்கொள்வேன்" என்று முடித்துவிட்டாள் ரேகா.

கற்றுக் கொடுக்கையில் தவறு செய்தால் எரிந்து விழுவானோ என்று நினைத்தபடியே அவன் சொன்ன நேரத்தில் கோர்ட்டுக்குப் போய்ச் சேர்ந்தாள்.

ஆனால் விளையாடும் போது அவனது தொடை, கால், தோள், தசைகள் அசைவதை எல்லாம் பார்க்க நேர்ந்த போது ஒரு விதமான வேதனை உள்ளூரத் தோன்றக் கூடும் என்பதை அவள் எதிர்பார்க்கவே இல்லை.

அதே போல தூக்கிச் செருகிய சேலை வெளிப்படுத்திய தந்தக் கால்களும், இழுத்துச் செருகிய சேலையும், வியர்வையில் நனைந்த ஜாக்கெட்டுமாக வெளிப்படுத்திய உடல்கட்டு அவனையும் அதே போல வருத்தக்கூடும் என்பதை அவள் சிறிதுகூட நினைத்துப் பார்க்கவில்லை.

தன் வேதனையில் தானே உழன்றபடி தனியே இருந்து அசைபோட்டபோது ஓர் உண்மை புரிந்தது.

விஜயன் மீது அவள் அன்று கொண்ட காதல் சற்றும் குறையவில்லை.

அவன் செய்த துரோகத்தால், அந்தக் காதலை அவனே கொன்றுவிட்டான் என்று நினைத்தது தவறு.

அவனது துரோகத்தாலும், பின்நேர்ந்த அவமானங்களாலும் அவளது அன்பு முழுமையும் வெறுப்பாய் மாறி விட்டதென்று அவள் நினைத்தது முழுத்தப்பு.

அவனுடைய பயமுறுத்தலுக்காகவோ தந்தையின் கெஞ்சலுக்காகவோ அவள் அவனைத் திருமணம் செய்து கொள்ளச் சம்மதிக்கவில்லை.

அவள் மனத்தின் அடித்தளத்தில் எப்போதும் உயிர்த்திருந்த காதலின் செயல்தான் அது.

மற்றபடி, அடியோடு மறுத்திருந்தால் ஒரேயடியாகக் கட்டாயப்படுத்தக் கூடியவர் அல்ல சிதம்பரம்.

அத்தோடு, இரண்டுவயது மகனைத் தாயிடம் இருந்து பிரிக்கும் அளவு சட்டமும் கொடூரமானதல்ல.

யானை போலக் காதலில் ஈடுபட்ட நெஞ்சம் அவனை மணந்ததன் மூலம் தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டிருக்கிறது.

பிறகு தாராவைக் கண்டபோதும், அவள் விஜயனிடம் இழையும்போதும் உண்டானது தகாத உறவைக் காணும் போது உண்டாகும் வெறுப்பும் ஆத்திரமும் மட்டுமல்ல.

பொறாமை!

தன் காதலுக்கு உரியவன் இன்னொருத்தியிடம் நெருங்கிப் பழகுவதா என்ற பொறாமையில்தான் ரேகா அப்படிக் கொதித்திருக்கிறாள்.

மூட மனது என்பது முழுக்க முழுக்கச் சரிதான்.

வெறும் விளையாட்டாக அவளிடம் பழகிவிட்டு இன்னொருத்தியை மணக்க இருந்தவன்.

அவனுடைய தந்தை மாளாது இருந்திருந்தால், பின்னர் தொழில் ரீதித் தொல்லைகள் தொடராமல் இருந்திருந்தால் இப்போது அவன் இன்னும் இரண்டு குழந்தைகளுக்குத் தந்தைகூட ஆகியிருப்பான்-இன்னொரு பெண் மூலம்.

அந்தத் தகுதியல்ல ஒருவனிடம் இந்த மூட மனம் கொண்ட பித்தம் கொஞ்சமும் குறையவில்லையே.

அந்தத் தோளில் முகம் புதைத்தாள்; அந்தக் கைகளுக்குள் சிறைப்பட்டால்... என்று வெட்கம் கெட்ட கற்பனைகளில் ஈடுபடுகிறதே.

அதெல்லாம் இயலவில்லையே என்று இப்படித் தவிக்கிறதே.

மூடத்திலும் மூடம், நிர்மூடம்.

இந்த உண்மை மட்டும் அவனுக்குத் தெரிந்து விட்டால்...

எட்டி உதைத்த பிறகும் அவள் மனம் அவன் காலடியில் தான் கிடக்கிறது என்பது தெரிந்தால் என்ன ஆகும்!

மறுப்பும் வெறுப்புமாக இருப்பதால் ஓரளவேனும் இதமாக நடந்து கொண்டிருக்கிறான்.

செய்த குற்றங்களை எல்லாம் மீறி அவனை நேசிப்பது தெரிந்தால் சுயமரியாதையே இல்லாதவள் என்று எண்ணி விடமாட்டானா?

பிறகு முதுகெலும்பே இல்லாத புழுவுக்கு உரிய மரியாதைதானே அவளுக்கும்?

ஒரே ஏளனமும் எக்காளமும் ஆகிவிடும்.

இந்தப் பேதை மனதை மறுப்பதும் மறைப்பதும் கடினமான செயல்தான் என்றாலும் அவள் அதைச் செய்தே ஆக வேண்டும்.

அவளுடைய கண்டுபிடிப்பு அவளுக்குள்ளேயே இருக்கும்படி கவனமாகப் பாதுகாத்தாக வேண்டும்.

புதையலைக் காக்கும் பூதம் போல என்று வெறுப்பாக நினைத்தாள் ரேகா.

ஆனால் உள்ளிருக்கும் புதையலின் அருமையை அறியாதவனிடம் மறைத்துத்தானே ஆகவேண்டும்!

அவனிடம் மட்டுமின்றி மாமியார், நாத்தனார் எல்லோரிடமுமே வேடம் போடவேண்டியதாய் இருந்தது.

வீட்டினுள் நடித்துப் பழக்கம் இல்லாததால் இது மிகவும் கடினமாகவும் இருந்தது.

அதிலும் முன்னாள் போல இல்லாது பெண்கள் இருவரும் ரேகாவிடம் நன்கு பழகியது அதை மேலும் சிரமம் ஆக்கியது.

ஒரு நாள் ஏதோ பேச்சின் நடுவே நவநீதனைப்பற்றிக் குறிப்பிட்டார் பவானி.

"பாவம், அண்ணனுக்கு இருந்திருந்து ஒரு பிள்ளை அதுவும் சரியில்லை. போதை மருந்து சாப்பிடுகிறானாம். எலும்பெடுத்துப் போவது தெரியவில்லை? அன்று அண்ணன் வந்தபோது சொல்லி ரொம்பவும் வருத்தப்பட்டார்.

"கையில் பணம் புழங்காமல் கட்டுப்படுத்தலாம் என்று பார்த்தால் அண்ணி விடுவது இல்லையாம். பணக்காரப் பையன் என்றால் போதை, பெண் என்று எல்லாம் சகஜம் தானே. பின்னால் தானாகச் சரியாகிவிடும். அதைப்போய்க் கண்டிப்பானேன் என்று அண்ணனிடம் ஒரே தர்க்கமாம். ஏதோ லேசு பாசாக இருந்தால் பெரிது படுத்த வேண்டியது இல்லை தான். ஆனால் இவன் ஆரோக்கியம் கெடுமளவுக்குப் போவது அண்ணிக்குப் புரியவில்லை" என்றார்.

அவர் பேச்சில் ஒன்று மனதை உறுத்த, "ஏன் அத்தை இவர்கள்-இந்தப் பணக்காரப் பையன்களைச் சொல்கிறேன் - இவர்கள் கூட ஒழுங்காக இருக்கக் கூடாதா?" என்று கேட்டு விட்டாள் ரேகா

"கூடாது என்பது இல்லையம்மா. ஆனால் இவர்களுடைய பணத்துக்காக சுற்றுகிற காக்கைகள்; இவர்கள் நல்லவர்களாக இருக்க விரும்பினால்கூட விடுவது இல்லை. பணம் இருப்பதால் இவர்கள் ஆசைப்படுவதை எல்லாம் வாங்கிக் கொடுத்துப் பெற்றோர் கெடுப்பது வேறு; விரும்பியதை எல்லாம் அடைந்து பழகிவிடுவதால் ஆசைகளை அடக்கும் சக்தியில்லாது போகிறது."

மகனுக்காக வக்காலத்து வாங்குகிறாரே மாமியார் என்று ஐயம் கொண்டாள் ரேகா.

பவானியின் அடுத்த பேச்சும் அதையே உறுதி செய்தது.

"ஆனால் சாதாரண நிலையில் எப்படி இருந்தாலும் பொறுப்பு என்று வரும்போது அதை ஏற்கவும் தெரிய வேண்டும். அண்ணனுக்கு ஏற்கனவே ஓர் 'அட்டாக்'

வந்திருக்கிறது. பிறகேனும் நவநீ தாங்க வேண்டாமா? இன்னமும் விரல்கூட அசைப்பது இல்லையாம்."

"அதே சமயம் நம் விஜயனைப் பார். இவனுக்கும் நவநீ வயது தானே. அவன் அப்பா மறைந்தபோது அவன் உழைத்த உழைப்பு எனக்கு ஒன்றும் சரியாகத் தெரியாது. அந்தச் சமயம் உலகமே இருட்டாகி விட்ட மாதிரி எனக்கு எதிலுமே கவனம் இல்லை. ஆனால் கூடவே இருந்து பார்த்த அண்ணன் சொல்லுவார். வேலை வேலை என்று பசி தூக்கம் பார்க்க மாட்டானாம்.

"பதினைந்து வயது-அப்போதும் சின்னவள் இரவில் பயந்து அழுவாள். எங்கிருந்து எப்படித்தான் கவனிப்பானோ? வினாடிக்குள் வந்து அவள் கையைப் பிடித்துக் கொண்டு அருகிலேயே இருந்து உறங்க வைப்பான். இப்போது அவள் அண்ணன் அண்ணன் என்று பைத்தியமாய் இருப்பது சும்மா அல்ல.

''பண விஷயத்தில் அண்ணன் நிறையச் செய்தாலும் அவருக்கும் அட்டாக் வந்த புதிது. இவனுக்கு வேலைச் சுமையைக் குறைத்து உதவ முடியவில்லை. இவ்வளவு வேலையா? தனியே எப்படிச் செய்வது என்றெல்லாம் என் மகன் மலைக்கவில்லை. நினைத்தால் எல்லாவற்றையும் விற்று ஒழித்துவிட்டு, இப்போதுபோல இல்லாவிட்டாலும் சுகமாகவே வாழ்ந்திருக்கலாம்தான். ஆனால் அவன் பொறுப்பைத் தட்டிக் கழித்து சுலப வழி தேடி ஓடவில்லை. தன்னால் முடியும் என்று ஏற்று, செய்து முடித்தும் காட்டினான். இன்றைக்கு அண்ணனுக்கு ஓரளவு இவன் தான் உதவி செய்கிறான்.

"இவனையும் நாங்கள் செல்லமாகத் தானே வளர்த்தோம்?

"இவனில் பாதி அளவு பொறுப்புள்ளவனாகக்கூட நவநீ நடந்து கொள்ளவில்லையே என்றுதான் அண்ணன் வருந்தப் படுகிறார்'' என்று தன் மகன் புகழை இடையில் செருகி மீண்டும் அண்ணன் மகனில் வந்து முடித்தார் பவானி.

விஜயன் பொறுப்பைத் தட்டிக் கழித்து ஓடுகிறவன் இல்லை என்பது ரேகாவும் அறிந்த விஷயம்தான்.

பிள்ளைப் பொறுப்புக்காகத்தான் அவளை மணமுடித்ததே.

ஒரு வேளை தாயார், தங்கைகள் என்று அந்தப் பொறுப்புக்காகத்தான் தாராவை மணக்கவும் முடிவு செய்தானோ!

ஆயினும் வயிற்றில் தன் சிசுவோடு ஓர் அறியாப் பெண்ணை கைவிட்டது என்ன நியாயம்?

சற்றும் நியாயம் இல்லை என்று ஆத்திரமாகத் தலையைச் சிலுப்பினாள் ரேகா.

பவானியின் பார்வை மருமகளிடம் யோசனையாகப் படிந்தது.

தன்னுடைய கண்டுபிடிப்பின் விளைவாக முடிந்த அளவு விஜயன் முன்னிலையைத் தவிர்ப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தாள்.

'சும்மா இருக்கும் சிட்டுக்குருவிக்குச் சோற்றைப் போடுவானேன்? அது கொண்டையைக் கொண்டையை ஆட்டிக் கொண்டு கொத்த வருவானேன்?' என்று ஒரு பழமொழி உண்டு.

அதுபோல அவன் கண்ணையும் முகத்தையும் பார்ப்பானேன். காதலுக்காக ஏங்குவானேன் என்பது அவளது எண்ணம்.

விஜயன் வீட்டுக்குள் வரும் நேரம் தோட்டத்திற்குச் சென்று விடுவதும், தோட்டத்திற்கு வந்தால் லைப்ரரிக்குள் மறைவதுமாக அவள் வெகு ஜாக்கிரதையாக ஆடிய கண்ணாமூச்சி ஆட்டம் மாமியாரின் கவனத்தைக் கவர்ந்ததில் வியப்பில்லை.

தன் ஆட்டத்தில் முழுக் கவனமாக இருந்த ரேகா மாமியாரின் கவனிப்பைக் காணாது விட்டதிலும் அதிசயமில்லைதான்.

''விஜயன் வருகிறான்; ஏதாவது வேண்டுமா என்று கேட்டுவா,' 'அவன் கிளம்பும் நேரம்; இந்த லிஸ்டை அவனிடம் கொடு.' 'லாக்கரில் இருந்து இந்தஸெட் நகையை எடுத்து வரச் சொல்லு'' என்று ரேகாவையே ஏவி அவளுடைய பொறுமையைப் பவானியம்மாள் சோதித்த காரணம் அவளுக்குப் புரிவதாகவும் இல்லை.

அவராகச் சொல்லக்கூடிய விஷயங்களுக்குக் கூட தன்னையே ஏவுகிறாரே என்று எரிச்சலுற்ற போதும் பெரியவரிடம் மறுத்துப் பேச மனமின்றிக் கீழ்ப்படிந்தாள்.

அன்று இரவு உணவின் போது உப்பை நகர்த்துமாறு தங்கையிடம் கேட்டான் விஜயன்.

கை நீட்டிய வித்யாவைத் தடுத்து, "இதையெல்லாம் இனி நீ உன் மனைவியிடம் கேட்கவேண்டும் விஜய். ஆனால் அவள் தந்தால் உப்பும் சர்க்கரை ஆகிவிடும் உனக்கு" என்றார் பவானி கேலியாக.

"என்னம்மா, நீங்கள்? தயிரோடு சர்க்கரை சேர்த்தால் ருசி என்ன ஆவது?" என்று ஆட்சேபித்தாள் மகள்.

"அசட்டுப் பெண்ணே அண்ணியைப் பார்த்துக் கொண்டே உண்ணும்போது உன் அண்ணனுக்குப் பருத்திக் கொட்டைகூடப் பாயாசம் தான்" எனச் சிரித்தார் தாயார்.

சங்கடமாய் இருந்த போதும் சிரிப்பது போலப் பாவனை செய்து தட்டில் கவனம் செலுத்தினாள் ரேகா.

சிரித்தபடியே தாயின் கண்களைச் சந்தித்த விஜயன் சட்டெனப் பார்வையைத் தாழ்த்திக் கொண்டான்.

அன்றிரவு ஓசையின்றி, தன் அறைக்குள் புகமுயன்ற மனைவியை விஜயன் அழைத்தான்.

அவள் அருகே வந்து, "அம்மா கவனிக்கிறார்கள் ரேகா. அவர்கள் முன்னிலையில் சற்று நடிக்க வேண்டும் நீ" என்றான்.

அந்த உப்பு, சர்க்கரை பேச்சில் சிரித்தான் என்று ரேகாவுக்கு உள்ளூரக் கோபம்.

"நான் பள்ளி நாடகத்தில் கூடப் பங்கேற்றதில்லை எனக்கு நடிக்க வராது" என்று வெடுக்கென மொழிந்து விட்டுத் திரும்பிச் செல்லலானாள் அவள்.

அந்த அலட்சியம் அவனைப் பாதித்துவிட அவள் கையைப் பற்றி நிறுத்தி, "ரொம்பவும் பொறுமையைச் சோதிக்கிறாய் ரேகா. இது உனக்கு நல்லது இல்லை" என்றான் சினத்துடன்.

"என்ன செய்து விடுவீர்கள்? ஓ, ஆண்பிள்ளை... அதிக பலம் உண்டல்லவா! சொன்ன வார்த்தை மீறுவது சகஜம் தானே" என்று குத்தியபடி கையை உதற முயன்றாள் ரேகா.

முகம் கன்ற, "ஒரு பெண்ணை இதுவரை நான் அடித்தது இல்லை. ஆனால் நீ..." என்றவன் சட்டென அவளைத் தூர விலக்கித் தள்ளினான்.

அதை எதிர்பாராமல் தன்னளவிலும் விடுபடப் போராடிக் கொண்டிருந்த ரேகா நிலையிழந்து தடுமாறி விழப் போனாள்.

விழாமல் அவளைப்பற்றி நிறுத்தியவன் சட்டென் இறுக அணைத்து, ரேகா என்று அவள் கூந்தலில் முகம் புதைத்தான்.

தன் வசமிழந்து நின்றாள் அவன் மனைவியும்.

## 13

ஜீவரேகா தன்னை மறந்து நின்றது சில வினாடிகள் தான்.

அதற்குள்ளாகச் சுதாரித்துக் கொண்டவள் தன்மீது வந்த கோபத்தையும் அவனிடமே காட்டினாள்.

"அடுத்த முயற்சியா? இன்னமும் பதினெட்டு வயது முட்டாள் என்று நினைத்தீர்களோ, இதிலெல்லாம் ஏமாற்றுவதற்கு?" என்றாள் ஆத்திரத்துடன்.

சட்டென அவளை விலக்கி நிறுத்தி, "ஏமாற்றுவானேன்? அன்றையத் தவறில் பாதிப்பங்கு, உன்னுடையதுதான் ரேகா அதை மறக்க வேண்டாம்" என்றான் அவனும் பதிலுக்கு.

முகம் ரத்தமாகிச் சிவந்தபோதும், "அதுதான் பதினெட்டு வயது முட்டாள் என்று ஒத்துக்கொண்டேன்" என்றாள் அவள் விடாமல்.

"சே" என்று அவளைவிட்டு விலகி வெளியே போனான் அவன்.

இனி இதை மாதிரித் தவறு நேராது என்றவன் எப்படித் தொடலாம்? பழைய மாதிரித் தொட்டால் குழைந்து விடுவாள் என்று நினைத்தானோ? என்ன இறுமாப்பு? என்று ரேகா கொதித்ததெல்லாம் சிறிது நேரம்தான்.

பிறகு கட்டுப்படுத்த முடியாமல் கண்ணீர் பெருகித் தலையணையை நனைக்கலாயிற்று.

உணர்ச்சி வேகங்கள் எல்லாம் ஒருவாறு அடங்கிய பிறகு அமைதியாக இருந்து யோசித்துப் பார்த்தாள் ரேகா.

அப்போதுதான் தயார் குறித்து விஜயன் சொன்னதின் உண்மை புரிந்தது.

அது இது என்று சாக்கிட்டு விஜயனிடம் தன்னை அவர் அனுப்பியதன் அர்த்தமும் புலனாயிற்று.

இனி மாமியார் முன்னிலையில் கவனமாக நடந்து கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தாள்.

இவ்வளவு ஆத்திரமூட்டியபின் விஜயன் வெளிப்படையாக வெறுப்புக் காட்டக் கூடுமோ என்று அவளுக்கு உள்ளூரப் பயம்தான்.

ஆனால் தாயாருக்காக விஜயனும் அவளோடு இணைந்து கொண்டான்.

பவானி அம்மாளின் பார்வையில் கவலை சற்றுக் குறைந்து தெரிந்தது.

என்னமோ மனதுக்குக் கொஞ்சம் இதமாகவே இருந்தது ரேகாவுக்கும்.

வித்யாவுடன் பேசுகிறபோது இன்னொரு விதமாய் மாட்டினாள் ரேகா.

வித்யாவைப் பொறுத்தவரையில் அவளுடைய அண்ணனுக்கு நிகராக உலகில் ஆண்மகன் கிடையாது.

ஆனால் ஒன்றில் மட்டும் மனது குழம்பியது.

எனவே இப்போது நன்கு பழகத் தொடங்கிவிட்ட அண்ணியிடம் கேட்டாள். "அண்ணனைப்பற்றி எனக்கு ஒன்றும் புரியவில்லையே அண்ணி" என்று.

"உனக்கு மட்டுமா? என்று உள்ளூர நினைத்த போதும், என்ன?" என்பதுபோலப் புருவங்களைச் சுருக்கினாள் ரேகா.

"இந்தக் குட்டிராஜா பற்றித்தான்" என்று விளையாட்டு ரயிலோடு சேர்ந்து சுற்றிச் சுற்றி ஓடிவந்து கொண்டிருந்த ராஜாவைக் காட்டினாள் வித்யா.

மாமியார் காட்டியிருந்த ஒரு டிசைனில் குட்டிராஜாவுக்கு ரேகா ஸ்வெட்டர் பின்னிக்கொண்டிருக்க வித்யா பொழுது போக்காய் ராஜாவுடன் நர்சரியில் விளையாடிக் கொண்டிருந்த போது இந்தப் பேச்சுத் தொடங்கியது.

"எந்த வகையிலும் பொறுப்பைத் தட்டிக் கழிப்பவர் அல்ல என் அண்ணன். அப்படி இருக்க இவனை...எப்படி இவ்வளவு நாள் இவன் பொறுப்பை நீங்களே தாங்கும்படி விட்டுவிட்டுச் சும்மா இருந்தார்?" என்று கேட்டான் வித்யா.

"அதெல்லாம் உன் அண்ணன் சொல்லவில்லையா?" என்று உள்ளூரக் குறுகுறுப்புடன் விசாரித்தாள் ரேகா.

"இல்லையே" என்று கையை விரித்தாள் மற்றவள். "மதுரையிலிருந்து திடீரென்று டெலிபோன் செய்தார்.

உங்களுக்கு அதிர்ச்சி தரும்படி ஒன்று சொல்லப் போகிறேன். இங்கே எனக்கு இரண்டு வயதில் ஒரு மகன் இருப்பது இன்று தெரிய வந்தது? அதனால் அவன் தாயை முறைப்படி மணந்து பிள்ளையோடு அழைத்து வருகிறேன்."

"இந்தத் திடீர் 'ஷாக்'கிற்காக என்னை மன்னித்து விடுங்கள். மூன்று ஆண்டுகளுக்கு முன் செய்த பிழையைச் சீர் செய்தேன் என்று எண்ணிப் பொறுத்துக்கொள்ளுங்கள் என்று மட்டும் சொன்னார். அம்மாவுக்கு நம்பவே முடியவில்லை. ராஜாவை நன்றாகப் பார்க்கும் வரையிலும்கூட நம்பிக்கை வரவில்லை... எப்படி அண்ணி...?"

"உன் அண்ணனையே கேட்பதுதானே" என்று தன் வரையில் மாட்டிக்கொள்ளாமல் மீள முயன்றாள் ரேகா.

"கேட்டேனே. சின்னக்குட்டி இதெல்லாம் புரிய நீ இன்னும் ரொம்ப வளர வேண்டும் போ" என்று விட்டார் என்று அசடு வழிந்தாள் வித்யா.

அவள் முகத்தைப் பார்க்கையில் ரேகாவுக்கும் சிரிப்பு வந்தது.

பின்னலில் கவனம்போலக் காட்டிக் கொண்டு "நானும் உன் அண்ணனைப் போலவே சொல்..." எனுமுன் வித்யா குறுக்கிட்டாள்.

"அண்ணி மூன்றாண்டுகளுக்கு முன்பாக உங்களுக்கும் என் வயதுதானே நீங்கள் மட்டும்" என்றவள் சட்டென முகம் சிவந்து போனாள்.

கவனியாதது போல, "அவசரம் அவசரம்" என்று சுட்டு விரலை நீட்டிப் பத்திரம் காட்டிவிட்டு, "உன் அண்ணனைப் போல நானும் சொல்லப்போவது இல்லை என்று சொல்லி முடிப்பதற்குள் அவசரப்படுகிறாயே" என்று இலகுவாகப் பேசினாள் ரேகா.

ஆவலே வடிவாக நாத்தனார் காத்திருக்கக் கண்டதும் ''வித்தி அப்போது உன் அப்பாவுக்கு நோய் வந்திருந்ததில்லையா? பிறகு தொழிலில் நெருக்கடி, எல்லாம் தன்னந்தனியாகப் பார்த்தாக வேண்டிய நிலை வேறு. 'லென்ஸ் ஆஃப் இம்பார்டன்ஸ்' என்று சொல்வார்கள். அதற்கு உரிய மதிப்புக் கொடுப்பது-புரிகிறதா? உன் அண்ணனுடைய முதல் கடமை-முக்கியமான பொறுப்பு மாமாவும், அத்தையும், சகோதரிகளாகிய நீங்களும்தான். உங்களுடைய நலனுக்குக் குறைபாடு வராமல் காப்பாற்றிய பிறகுதான் மற்றதைப் பற்றி நினைக்கக்கூட முடியும் இல்லையா? அப்போது அவர் ஒரு நாளைக்கு இருபது மணி நேரம் வேலை செய்வாராமே" என்றாள்.

''ஆமாம் அண்ணி'' என்று கண்ணைத் துடைத்துக் கொண்டாள் வித்யா. "நான் கூட அண்ணன் தூங்குவதே இல்லையா என்று எண்ணியிருக்கிறேன். என் பங்குக்குத் தொல்லைகூட செய்திருக்கிறேன்" என்றாள் அவமானத்துடன்.

அந்த தொல்லை என்ன என்பதை அவள் தாயார் மூலம் அறிந்திருந்த ரேகா மற்றவளின் கன்னத்தை வருடி "அப்போது நீ மிகவும் சின்னப்பெண் இல்லையா?" என்றாள் அன்பாக.

"கொஞ்சம் அசட்டுப் பெண்ணும்கூட" என்று சிரித்தவள் மீண்டும் யோசனையோடு, "ஆனாலும்...." என்று இழுத்தாள்.

"ஆனாலும் என்ன? அபாய நிலையில் உள்ள தந்தை, உள்ளம் கலங்கியிருந்த தாயார், உடன் பிறந்த சகோதரிகள். இந்தத் தொழிற்சாலைகளின் வேலையை நம்பி வாழும் எத்தனையோ தொழிலாளர்கள்-இவர்களை விட நேற்று முளைத்த காதலியைப் பெரிதாக நினைத்து ஓடி வந்தால் அவரைப் பொறுப்புள்ளவர் என்று யாரால் சொல்ல முடியும்?" என்று அழுத்தம் கொடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தபோதே விஜயனுக்காகத் தான் வக்காலத்து வாங்குவதை ஒரு திடுக்கிடலுடன் உணர்ந்தாள் ரேகா.

"ஆனாலும் உங்களையும் அழைத்து வந்திருக்கலாமே" என்றாள் வித்யா விடாமல்.

எப்படி அழைப்பது?

பணத்துக்காக இப்போதுதான் அவள் அடுக்கிய அத்தனை பேரின் நலனையும் பாதுகாப்பதற்கு அத்தியாவ்சியமாகத் தேவைப்பட்ட பணத்துக்காக இன்னொருத்தியை மணந்தாக வேண்டிய நிலையில் இருந்த அவளுடைய அண்ணன் வயிற்றுப் பிள்ளையோடு காதலியை எப்படி அழைத்து வருவான்?

இதை இவளிடம் என்னவென்று சொல்வது?

அளவு மீறிப் பழகிவிட்டு இன்னொருத்தியை மணக்கத் துணிந்தவன் என்பது தெரிந்தால் அண்ணனிடம் மதிப்புக் கெட்டுப் போகும் அவளுக்கு.

அதையும் ரேகாவால் சகிக்க முடியவில்லை.

"வித்யா, அந்தச் சமயம் தன் கணவரை இழந்ததுடன் அம்மா இருந்த நிலையை எண்ணிப்பார். அந்த நேரத்தில் இதைச் சொல்லியிருந்தால் அவரால் தாங்கியிருக்க முடியுமா? இவ்வளவு காலம் கழித்தே பெரும் அதிர்ச்சி என்றாயே அது போகட்டும். இந்த டிசைன் ராஜாப் பையனுக்கு மெய்யாகவே பொருந்துமா பார்" என்று பேச்சை மாற்ற முயன்றாள் ரேகா.

விடாமல், "டிசைனை விடுங்கள் அண்ணி. அப்போது தான் அப்படி என்றால் பிறகும் இவ்வளவு நாள்" என்று தொடங்கிய வித்யாவைத் தடுத்தாள் ரேகா.

"அதுபற்றிய பேச்சு போதும், வித்யா. ஏதோ ஒரு பிசகு, தவறாகப் புரிந்து கொண்ட விதம், கூடவே நம் தபாலாபீசுகள் வேலை செய்யும் அழகு எல்லாமாகச் சேர்ந்து செய்த சதி. 'ஆல் இஸ் வெல் தட் என்ட்ஸ் வெல்' அல்லவா? எல்லாம் நல்லபடியாக முடிந்த பிறகு பழசைக் கிளறிக் குப்பையை

இறைப்பார்களா? விடு. முதலில் டிசைனைப் பார்க்கலாம்". என்று அண்ணியாய் நின்று அடக்கி முடித்தாள் ரேகா.

ஆனால் 'விடுவிடு' என்ற பிறகும் விடாமல் அன்றிரவு உணவு வேளையில் அண்ணனிடம் போட்டு உடைத்தாள் வித்யா.

"அண்ணா, உங்களை ஒரு வார்த்தை சொன்னால் அண்ணி எப்படி வக்காலத்து வாங்குகிறார்கள் தெரியுமா?" என்று வியந்தாள்.

அவன் சட்டைக் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு சிரிக்கவும் எல்லோரும் அதில் கலந்து கொண்டனர்.

அந்தச் சிரிப்பின் போர்வையில் விஜயனின் விழிகள் மனைவியின் சிவந்த முகத்தைக் கூர்மையாக ஆராய்ந்தன.

முதலில் கூறியிருந்தபடியே உதயாவின் மாமனாரிடமிருந்து விஜயனுக்கும், அவனுடைய மனைவி, குழந்தைக்கும் அழைப்பு வந்தது.

உடனே ஏதோ பண்டிகை நெருங்குவது போல பட்டுத் துணிகள் வாங்குவதும் பலகாரங்கள் செய்வதுமாக அமளிப் படுவதைப் பார்க்க ரேகாவுக்கு ஆச்சரிமாய் இருந்தது.

சும்மா ஒரு தரம் போய் வருவதற்கு இவ்வளவு ஆர்ப்பாட்டமா என்று நினைத்தாள்.

ஆனால், "போன தடவை அக்காவுக்கு வாங்கிப்போனது நீலக்கலர்ச் சேலை அம்மா. இப்போது வேற கலர் வாங்க வேண்டும்" என்று வித்யா கூறியபோதுதான் இது இங்கு வழக்கம் என்று புரிந்தது.

பெரிய தூக்கு நிறைய பால்கோவா, இன்னொரு தூக்கு நிறைய கொப்பரை இட்ட சர்க்கரைப்பாகு, ஒரு ஸ்டீல் டிரம் நிறைய நெய் முறுக்குடனும் உதயா கருணாகரனுக்குப்

பட்டாடைகளுடனும் விஜயன் தம்பதியினர் அவன் தங்கை வீடு நோக்கிப் புறப்பட்டனர்.

வாயிலுக்கே ஓடிவந்து வரவேற்றாள் உதயா.

"அண்ணி, வாருங்கள்" என்று ரேகாவின் கையைப் பிடித்து உள்ளே அழைத்துச் சென்றாள்.

"எங்கள் அண்ணி, அத்தை" என்று மாமியாருக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.

"ம்ம்..." என்று ரேகாவை ஏற இறங்கப் பார்த்தார். சற்றே பழைய பாணியின் கட்டமிட்ட பட்டுச்சேலை அணிந்திருந்த அந்த அம்மாள்-உதயாவின் மாமியார் பார்வதி.

உதயாவின் விரல் அழுத்தத்தைப் புரிந்து கொண்டு, தோளில் இருந்த ராஜாவை இறக்கி விட்டுவிட்டுப் பார்வதி அம்மாளின் முன் விழுந்து வணங்கி எழுந்தாள் ரேகா.

"நல்லாயிரு" என்று அந்த அம்மாள் சொல்லி முடிக்கும் முன். தாயைப் பின்பற்றி ராஜாவும் விழுந்து எழவே எல்லோருக்கும் சிரிப்பு வந்தது.

''அடே ராஜாப் பயலே, அதற்குள் இவ்வளவு கெட்டிக்காரத்தனமா?'' என்று நெட்டி முறித்தார் பார்வதி அம்மாள்.

''ராஜாக்குட்டி, நான் யார் சொல்லு?'' என்று உதயா கொஞ்சலாகக் கேட்க, அத்தை என்று அழகாகப் பதிலுரைத்தான் மருமகன்.

அத்தை ஆசையாகத் தூக்கவும், மேலும் சற்று யோசித்து "காட்ப்ரீஸ் தந்த அத்தை" என்று விளக்கவும் மேலும் சிரிப்பு மூண்டது.

"பிழைத்துக் கொள்வாய்" என்று பார்வதி அம்மாள் கூறிய போது கருணாகரனுடன் பேசியபடி விஜயன் உள்ளே வந்தான்.

அவனிடம், ''உன்னையே உரித்து வைத்தது போல இருக்கிறான் உன் பிள்ளை. ஆமாம், இது ஒன்றுதானா, இன்னமும் உண்டா?'' என்று குண்டு வெடித்தார் பார்வதி.

ரேகா அதிர்ச்சியுற்று நிமிர, "என்ன அத்தை, என்னை என்னவென்று நினைத்தீர்கள்?" என்று கேலி போலப் பேச முயன்றான் விஜயன்.

விடாமல், ''கல்யாணத்துக்கு முன்பாகப் பிள்ளை பெற்றவனை என்னவென்று நினைப்பார்களாம்?'' என்று மடக்கினார் அந்த அம்மாள்.

தோல்வியை ஒப்புவதுபோல ''ஒரே ஒரு தவறுதான் அத்தை. மற்றபடி நான் ராமன்'' என்று சிரித்த முகமாவே கூறி விஜயன் சமாளித்தான்.

"ம்... நல்ல பெண்ணாகத்தான் தெரிகிறாள். நான் இவ்வளவு பேசியும் முகம் திருப்பிக் கொள்ளவிலலை பார்'' என்று பார்வதி பேசிய போதுதான் முன்னைவிட அதிகமாகத் தூக்கிவாரிப் போட்டது ரேகாவுக்கு.

ஆக, நோட்டம் பார்க்கிற விதமா இது?

உதயாவின் சிரித்த முகத்தைப் பார்க்கவும் ரேகாவுக்கும் முகம் மலர்ந்தது.

கொண்டு வந்த சீர்களைப் பார்த்துத் திருப்தியுற்றவராய், "சாயங்காலம் அந்தச் சேலையைக் கட்டிக்கொண்டு வா" என்று மருமகளைப் பணித்தார்.

ஆண்கள் அகன்றதும் சமையலறையில் எல்லாம் தயார் தானா என்று பார்த்து வருமாறு உதயாவை அனுப்பி வைத்தார்.

ரேகாவைத் தன் அருகில் இருத்தி. "இதோ பார், பெண்ணே. நீ அழகாய் இருக்கிறாய்' குணவதி என்றும் என் மருமகள் சொன்னாள். இது மட்டும் போதாது. இனி உன் புருஷனைக்

கட்டி வைக்க வேண்டும். அந்தப் பெண் தாராவை அடியோடு விரட்டிவிடு. அது பொல்லாத பிசாசு... உதயா கல்யாணத்தின் போது பார்த்தேன். தம்பி கட்டிக் கொள்ளப் போகிற பெண் என்று கேட்டதும் இனி நம் மகனுக்கு மாமியார் வீடு இல்லை என்றும் நினைத்து விட்டேன். எப்படியோ அது ஒரு வழியாய் நடவாது நின்றது. இப்போதும் சுற்றுகிறாள் என்று கேள்வி. அதற்கு மட்டும் இடம் கொடுக்கக்கூடாது'' என்று அறிவுரை கூறினார்.

தாராவின் பெயர் ரேகாவை வாடவைத்தது.

வெளியில் காட்டாமல் மறைக்க முயன்றபோதும் பார்வதி அம்மாளின் உலகாதாயக் கூர்மை அதைக்கண்டு கொள்ள, ''அதற்குள் வாடுவானேன். ஆண்பிள்ளை அப்படி இப்படிப் போவதுதான். நீதானே மனைவி? ரத்தினம் போலப் பிள்ளை வேறு-அனுசரணையாக இருந்தாயானால் அவன் அயல் வழி எப்படிப் போவான்? தைரியமாய் இரு'' என்று தட்டிக் கொடுத்தார்.

''சரி அம்...அம்...'' என்று என்னவென்று அழைப்பது என்று புரியாமல் தடுமாறினாள் ரேகா.

''உனக்குப் பெரிய தாயார் முறைதான் வரும் என்று நினைக்கிறேன், பெரியம்மா என்றே கூப்பிடு'' என்று பார்வதி கூற, ''சரி பெரியம்மா'' என்றாள் சின்னவள் பணிவாக.

''எங்கள் பையனுக்கு ரொம்பவும் புத்தி சொன்னாயாமே. ஏதோ, நீ வந்த வேளை, எங்கள் வீட்டிலும் ஒரு பூச்சி மொட்டு முளைக்க இருக்கிறது'' என்று மகிழ்ச்சியோடு அறிவித்தார்.

முறையற்று வந்தபோதும் மருமகளின் அண்ணன் மனைவியைப் பழமை விரும்பியான இந்தப் பெண்மணி ஏற்றுக் கொண்ட விதம் புரிய ரேகா அழகாக முறுவலித்தாள்.

அத்தோடு அவர் கூறிய செய்தியும் மகிழ்ச்சியூட்ட "ரொம்ப சந்தோஷம் பெரியம்மா. அத்தைக்குத் தெரிந்தால் மிகவும் ஆனந்தப்படுவார்கள்" என்று புன்னகையோடு இயம்பினாள்.

"எல்லாம் உன் புண்ணியம் பெண்ணே. உதயா அப்படிச் சொன்னாள் உன்னைப்பற்றி. என்னவோ, கடவுள் எல்லோரையும் நல்லபடியாக வைக்கவேண்டும்" என்றார் அவர்.

"நீங்கள் மிகவும் நல்லவர்கள் என்று உதயாண்ணி சொன்னார்கள். அது அப்படியே மெய் என்பது உங்களைப் பார்த்த பிறகு தெரிந்து கொண்டேன்" என்று ஐஸ் வைத்தாள் ரேகா.

அது பொய்யும் இல்லையே.

மாமியாரைத் தாங்கி உதயா பேசியது மெய்தானே.

வாயெல்லாம் பல்லாகிவிட, "என் மருமகளைப் போல உண்டா?" என்றார் இந்த அம்மாள்.

உதயாவுடைய மாமனாரைப் பார்க்கையில் ரேகாவுக்கு மிகவும் ஆச்சரியமாய் இருந்தது.

ஒல்லியாய், சற்றுக் கடுமையாய், மிகவும் எளிமையாய் இருக்கும் இவர் சில நாட்களுக்கு முன்னர்தான் லண்டனில் இருந்து திரும்பி வந்தவர் என்றால் நம்ப முடியவில்லை.

விடுவிடுவென்று அவரது வேகமும் பார்வதி அம்மாளின் அமர்ந்த நடையும் வெகுவாக வித்தியாசப்பட்டன.

ஆயினும் மனதில் ஒன்றுபட்டவர்கள் என்பது நன்றாகத் தெரிந்தது.

அந்த பாக்கியம் கிடைத்து விட்டால் வாழ்க்கையில் வேறு என்ன வேண்டும்?

ஒரு பொருளின் அருமை அது இல்லாத போதுதானே நன்றாகத் தெரிகிறது.

விருந்து உபசாரம் சிறப்பாகவே செய்தார்கள்.

ராஜாவைத் தூங்க வைத்துவிட்டு இரு இளம் தம்பதியினரும் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தனர்.

கருணாகரனைக் கேலி செய்து சிரித்ததுதான் அதிகம்.

கடைசியாகப் பார்வதி அம்மாள் வந்து, ''வயிற்றுப் பிள்ளைக்காரி, எவ்வளவு நேரம் இரவு கண் விழிப்பாய்? உடம்பு கெட்டுவிடும். போய்ப்படு'' என்று மருமகளை விரட்டிய பிறகுதான் எல்லோரும் உறங்கச் சென்றது.

விஜயனும் கூடவே வந்ததும் ரேகா எதிர்பார்த்ததுதான்.

பவானி அம்மாள் அணிவித்து அனுப்பிய நகைகளைக் கழற்றி வைத்தபடி ரேகா தீவிரமாக யோசித்தாள்.

அனுசரணையாக என்று உதயாவின் மாமியார் கூறினாரே-எப்படி?

ஒரு மனைவி எப்படி நடந்து கொள்ளலாம் என்பது அறியாதவள் அல்ல அவள்.

ஆனால் அவன் அன்று கைவிட்டது முள்ளாய் உறுத்துகையில் எப்படி அனுசரணையாக நடந்து கொள்வது?

இந்த மனது இன்னமும் பலவீனப்பட்டால்தான் உண்டு.

ஒரு பெருமூச்சுடன் எழுந்தாள்.

பல் துலக்கி உடம்பு கழுவிப் பைஜாமா அணிந்து விஜயன் பாத்ரூமில் இருந்து வெளிவந்ததும் இவள் உள்ளே சென்றாள்.

குளித்து, ஒரு மெல்லிய வாயில் சேலையணிந்து அவள் வந்தபோது ஒரு புத்தகத்தை புரட்டிக் கொண்டிருந்தான் அவன்.

படுக்கையில் இருந்து ஒரு போர்வை, தலையணையை மட்டுமாக அவள் எடுக்கவும், "நீ கட்டிலில் படுத்துக் கொள் ரேகா. நான் இந்த சோபாவில் தூங்குகிறேன்" என்றான்.

"நான் சோபாவில்..."

"இல்லை. ராஜாவின் தொட்டில் கட்டில் அருகே இருப்பதால் நீ அங்கே படுப்பதுதான் உசிதம்" என்று முடித்துவிட்டான் அவன்.

இரு தலையணைகளையும், ஒரு போர்வையையும் அந்த நீள சோபாவில் வைத்துவிட்டுப் படுத்தவன் இப்புறம் அப்புறம் அசையவில்லை.

இவள் படுத்த உடன் விளக்கை அணைத்துவிட்ட அவனிடமும் அசைவு தெரியவில்லை.

அப்படியே ரேகா உறங்கி விட்டிருக்க வேண்டும்.

இடையே விழித்தபோது பால்கனியில் அவன் ஒரு சிகரெட்டைப் புகைத்த வண்ணம் நிற்பது தெரிந்தது.

இன்னமுமா தூங்கவில்லை என்று நினைத்தபடி தலையைத் திருப்பிப் பார்த்தாள்.

சுவரில் இருந்த கடிகாரத்தின் மினுமினுத்த கரங்கள் மணி இரண்டு என்பதைக் காட்டின.

இப்படி விழிந்திருந்தால் உடம்பு கெட்டுவிடாதா என்று தோன்றிய போதும், அவனிடம் அதை உரிமையோடு சொல்லும் வழியற்றவளாய் இருக்கும்படி ஆயிற்று.

காலையில் ரேகா விழித்தபோது விஜயன் இன்னமும் தூங்கிக் கொண்டிருந்தான்.

ஓசையின்றி எழுந்து அருகே வந்து நின்று பார்த்தவளுக்கு மனதை என்னவோ செய்தது.

உதட்டோரம் தோன்றியிருந்த சிறு சுருக்கங்களும், காதோரம் முளைத்திருந்த ஓரிரு நரை மயிர்களும் இந்த மூன்றாண்டு காலத்தில் அவன் ஏற்ற சுமையைக் காட்டினவோ?

ஒருகாலத்தில் உரிமையோடு இதழ் பொருத்தி அவனை எழுப்பியது நினைவு வர நெஞ்சை அடைத்துக் கொண்டு ஹோவென்று வந்தது.

யாரோ கதவை லேசாகத் தட்டுவது போலத் தோன்றியது.

இந்த மன நிலையில் யாருடைய முகத்திலும் விழிக்க மனமின்றி அவசரமாகக் குளியலறைக்குள் மறைந்தாள்.

அடக்க முடியாமல் வந்த சில கண்ணீர்த் துளிகளை உதிர்த்துவிட்டு, அது தெரியாதபடி முகம் கழுவி ஆசுவாசப் படுத்திக் கொண்டு அவள் வெளியே வந்தபோது விஜயனோடு ராஜாவும் விழித்திருந்தான்.

தந்தை மடியில் அமர்ந்து பிஸ்கட்டை நொறுக்கிக் கொண்டு இருந்தவன் தாயைக் கண்டதும், "அம்மா பிக்கட்டு" என்று ட்ரேயில் ஒன்றை எடுத்து அவளிடம் நீட்டினான்.

விஜயனின் குடும்பம் அன்று காலையிலேயே கிளம்புவதாக இருந்தது.

உதயா வீட்டுப் பரிசாக வைரப் பதக்கத்துடன் கூடிய தங்கச் சங்கிலியையும், பொருத்தமான காதணிகளையும் வெற்றிலை பாக்கு, மஞ்சளை பட்டுச் சேலையுடன் வைத்துக் கொடுத்தார்கள்.

கணவன், மற்றும் அவன் உறவினரின் செல்வ வளம் இப்போது நன்றாகப் புரிய வர ரேகா பிரமித்தாள்.

இந்தத் தரம் குறையாதிருக்கத்தான் அந்தப் பாடுபட்டிருக்கிறான்

செய்து முடித்தவன் தன் கணவன் என்று உள்ளூரப் பெருமிதம் உண்டாயிற்று அவளுக்கு.

"வித்திக்கு மாப்பிள்ளை பார்க்கும்போது ஒரு வார்த்தை சொல்லு. அத்தோடு இந்த அருமையான பெண்ணைச் சந்தோஷமாக வைத்துக்கொள்" என்று விடை கொடுத்தார் பார்வதி.

எல்லோரிடமும் விடைபெற்ற விஜயன் தங்கையிடம் மட்டும் எதுவும் பேசாமல் ஒருதரம் அவள் தலையை வருடி விட்டு விட்டுக் காரில் ஏறினான்.

ஆயிரம் அன்பான வார்த்தைகளுக்கு அது ஈடு என்று உணர்ந்தாள் ரேகா.

உதயா வீட்டு வேலையாட்களிடம் தன் திருமணத்திற்காகப் புதுத் துணிகள் வாங்கிக் கொள்ளுமாறு விஜயன் பணம் கொடுத்தது நினைவு வந்தது.

உதயா வீட்டு விருந்தையும் அங்கே அளிக்கப்பட்ட பரிசுகளையும் பார்க்கும்போது தாரா சொன்ன அந்தப் 'பத்து லட்சம் திருமணச் செலவு' கொஞ்சம் புரிபட்டாற் போல இருந்தது.

'பூபதி ராஜா'வும் புரிந்தது.

இந்த நிலையில் இருக்கும் விஜயன் தன்னை மணம் புரிந்ததே அதிசயமாகத் தோன்ற வாயடைத்துப் போனாள்.

விஜயனும் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தவனாகப் பேசாமலே காரை ஓட்டினான்.

ஒன்று சொல்ல எண்ணி அவன் பக்கம் திரும்பியவள், அவன் இன்னமும் யோசனையிலேயே இருப்பது கண்டு பேசாமலே திரும்பினாள்.

ஆனால் அவன் மனைவியின் அசைவைக் கவனித்தவனாக, "என்ன" என்று வினவினான்.

"வந்து..."

"ம்?"

"வந்து...நம் வீட்டில்கூட எல்லோருக்கும் துணி மணி பரிசு கொடுக்க வேண்டாமா? தொழிற்சாலைகளில் கூட..." என்று தொடங்கியவள் சட்டென்று நிறுத்திக்கொண்டாள்.

இன்னமும் விஜயனின் பொருளாதார நிலைபற்றி அவளுக்கு அதிகமாகத் தெரியாதே.

ஆனால் அவன் முகத்தில் ஒரு விசித்திர முறுவல்- திருப்தியுற்றவன் போல் உண்டாயிற்று.

"கட்டாயம் கொடுக்க வேண்டும். அங்கு போனதும் அதற்கு ஏற்பாடு செய்யலாம்" என்றான் குரலில் ஒரு மென்மையோடு.

அந்தக் குரலில் ஏனோ அவள் முகம் லேசாகச் சிவந்தது.

"அம்மா நான் ஓரம்..." என்று சன்னல் புறமாக உட்கார முயன்றான் ராஜா.

சற்று உட்புறம் நகர்ந்து அவனை வசதியாக உட்கார வைத்தாள் ரேகா.

"கதவு லாக் ஆகி இருக்கிறதா?" என்ற விஜயன் கையைக் குறுக்கே நீட்டிக் கார்க் கதவை லாக் செய்தபோது அவனது கரம் அவள் உடம்பில் லேசாக உராய்ந்தது.

மின்சாரம் பாய்ந்தது போன்ற உணர்வுடன் மூச்சு நின்று முகம் சிவந்தது ரேகாவுக்கு.

மனைவியின் முகத்தில் விஜயனுடைய பார்வை ஒரு கணம் அதிகமாகவே படிந்து மீள மெல்லக் கையை இழுத்துக் கொண்டான்.

# 14

விஜயனுடைய பெரிய தங்கை உதியாவின் வீட்டுக்குச் சென்று வந்ததிலிருந்து அவனிடம் சில மாறுதல்கள் தென்பட்டன.

முதலாவதாக விஜயன் வீட்டில் அதிகநேரம் செலவு செய்தான்.

அந்த நேரத்தின் பெரும் பகுதியை மனைவியிடமும் பிள்ளையிடமும் கழித்தான்.

காலையிலும் மாலையிலும் மகனைத் தங்கள் அறைக்கு வரவழைத்து அவனோடு விளையாடினான்.

பிள்ளையோடு விளையாடும்போது மனைவியையும் பங்கெடுத்துக் கொள்ள வைத்தான்.

"நாம் மூவரும் ஒரே குடும்பம். ஒருவருக்கொருவர்" என்ற உணர்வைத் தூண்டிவிட்டுக்கொண்டே இருந்தான்.

தந்தை, தாய், பிள்ளை என்று இந்த மூவருக்குள்ளாக ஒரு நெருக்கம் உருவாயிற்று.

ஒரு நாள் புரொஜக்டரைக் கொணர்ந்து தன் சிறுவயதுப் படங்களை ஓட்டிக் காண்பித்தான் விஜயன்.

"அம்மா அதோ டாஜா. அப்பா அதோ டாஜா" என்று ராஜா ஆர்ப்பரிக்கவும் விஜயனுக்கும் அவன் பிள்ளைக்கும் உள்ள ஜாடை ஒற்றுமை இன்னும் அதிகமான வேகத்துடன் ரேகாவைத் தாக்கிற்று.

மகனுடன் சேர்ந்து, "ஆமாமாம்" என்று விட்டு "உன் அம்மா எங்கேடா?" என்று மகனை விசாரித்தான் விஜயன்.

"அம்மா எங்கேம்மா?" என்று மகன் கேட்கவும் "உங்க அப்பா எங்கே என்று கேளடா?" என்று பதிலுக்குக் கற்றுக் கொடுத்தாள் தாயார்.

மகன் அறியாத ரகசியச் சிரிப்பில் கணவனுடன் கலந்து கொண்ட ரேகா சற்றுத் திகைத்தாள்.

எந்த நெருக்கம் வேண்டாமென்று ஓடி ஒதுங்கிக் கொண்டு இருந்தாளோ அந்த நெருக்கம் தானாக உருவாகி விட்டிருக்கிறது!

தானாகவா அல்லது கணவன், மாமியார் முதலியவர்களின் முயற்சியாலா?

எப்படி நேர்ந்திருந்தாலும் மீளமுடியாமல் சிக்கிக் கொண்டதை ரேகா உணர்ந்தாள்.

அன்று முழுவதும் ரகசியச் சிரிப்பில் மலர்ந்த விஜயனுடைய முகம் அவள் கண்ணிலே நின்றது.

தனியாக இருக்கையில் அவன் கற்றுக்கொடுத்தபடி புரொஜக்டரில் விஜயனின் வளர்ச்சியை வரிசையாக ஓடவிட்டுப் பார்த்தாள்.

மனது பூராவுமாக அவன் நிறைந்திருக்க அன்று சிவகங்கா கார்டனுக்கு இருவரையும் அழைத்துச் சென்றான் விஜயன்.

முந்திரித் தோப்பை அடைந்ததும் காரை நிறுத்தி "பஸ்சில் போகலாமா?" என்று வினவினான் விஜயன்.

"பஸ்ஸிலா" என்று ஆச்சரியமாக வினவினாள் ரேகா.

காரில் கிளம்பி பஸ்சில் போவானேன்.

காரிலிருந்து இறங்கிய விஜயன் மகனைத் தூக்கி "என்னடா கண்ணா? உன் அம்மாவுக்குக் கார்தான் பிடிக்குமாம். நீ எப்படி? பஸ்ஸில் போவோமா?" என்று விசாரித்தான்.

"பஸ்ஸ்... ஸ் ஹையா... பஸ் பெரீய்ய பஸ்ஸ்..." என்று கை கொட்டி மகிழ்ந்தான் ராஜா.

சற்று ஏளனமான பார்வை ஒன்றை மனைவியிடம் செலுத்திவிட்டுக் கார் கண்ணாடியை ஏற்றலானான் விஜயன்.

"நானும் பஸ் வேண்டாம் என்று சொல்லவில்லையே" என்று தன்புறக் கண்ணாடியை சாற்றி லாக் செய்து கதவைச் சாத்தினாள் ரேகா.

ராஜாவுக்குத் தேவையானவை அடங்கிய தோல் பையை எடுத்துக் கொண்டு கதவை மூடவும் முந்திரித் தோப்பின் காவலாளி ஓடி வந்தான்.

''காரைப் பார்த்துக் கொள்'' என்று பணித்துவிட்டு அவ்வழியே வந்து கொண்டிருந்த பஸ்சை நிறுத்தினான் விஜயன்.

மூவருமாக நிற்கையில் விஜயனை இனம் கண்டு கொண்ட யாரோ எழுந்து இடம் கொடுத்தார்கள்.

"தேவையில்லை" என்று விஜயன் மறுத்தும் அவர்கள் கேட்பதாக இல்லை.

நல்ல வேளையாக அதற்குள் யாரோ இருவர் இறங்கிடவும் எல்லோருமே அமர்ந்தனர்.

பூங்காவில் ராஜாவுக்கு ஒரே கொண்டாட்டம்.

"அதோ முயல், அதோ மயில்" என்று அங்கும் இங்குமாய் ஓடினான்.

பஞ்சவர்ணக் கிளியின் நிறங்களால் கவரப்பட்டு அருகில் சென்றவன் திடீரென்று அது கத்தவும்,"நல்லால்லை' என்று விலகிப் போனான்.

உயிருள்ளவை போன்ற ஆள் உயரப் பொம்மைகளைத் தந்தையின் தூண்டுதலால் தொட்டுப் பார்த்தான்.

கடைசியாக 'போட்டிங்' போனார்கள்.

படகில் ஏற, இறங்க விஜயன் உதவி செய்தான்.

அவனுடைய வலிய கரத்தினுள் தன் கை அடங்குவதை ஒரு சிலிர்ப்புடன் கண்டாள் ரேகா.

திரும்பும்போது ராஜா அலுத்துப்போய் விடவே தோளில் தூக்கிக் கொண்டாள் ரேகா.

சுவாதீனமாய் அவளது தோளைப் பற்றி நிறுத்தி "அவனை என்னிடம் கொடு" என்று மகனை வாங்கிக் கொண்டான் விஜயன்.

அவனுக்கு எப்படியோ?

ரேகாவின் நெஞ்சப் படபடப்பு நிற்க நெடுநேரம் ஆயிற்று.

கிளம்பும் இடம் என்பதால் பஸ்ஸில் இலகுவாக இடம் கிடைத்தது.

மூவர் அமரும் சீட் ஒன்றில் ஓரமாய் ரேகாவும் நடுவில் ராஜாவுடன் உட்புறமாய் விஜயனும் அமர்ந்தனர்.

கிளம்பும் சமயம் நிறையப் பேர் ஏறவே, "ராஜாவை மடியில் வைத்துக் கொள்" என்று நெருங்கி அமர்ந்தான் விஜயன்.

புதிதாக வந்து அமர்ந்தவர் கொஞ்ச பெரிய சைஸ்.

அவருக்கு சற்று வசதியாக அமர இடம் கொடுத்தோ என்னவோ, கையை மனைவியின் பின்புறம் நீட்டி, மிகவும் ஒட்டி உட்கார்ந்து கொண்டான் விஜயன்.

இலகுவாக அமர்ந்ததால் அவன் தோளில் சாய்ந்தாக வேண்டிய நிலை ரேகாவுக்கு.

பந்தயக் குதிரையாக நெஞ்சத் துடிப்பு ஓட தன் படபடப்பை மறைத்து சற்று முன்புறமாக குனிந்து அமர்ந்தாள் ரேகா.

மடியில் பிள்ளையோடு அப்படி அமர்வது சிரமமாகத்தான் இருந்தது.

எல்லாவற்றுக்கும் மேலாகக் கணவன் தோளில் உரிமையோடு சாய்ந்து கொள்ளத் துடித்த மனத்தை அடக்குவது ரேகாவுக்கு மிகவும் சிரமமாக இருந்தது.

பஸ் கிளம்பிய பிறகு எத்தனை திருப்பங்கள் இல்லை?

ரேகா தன்னோடு தானே போராடிக் கொண்டு இருக்கையில் "அதோ பார் ராஜா. அதுதான் அரண்மனை. இங்கே ராஜாக்கள் எல்லாம் இருந்தார்கள்" என்று மறுகரத்தையும் முன்புறமாக நீட்டி வெளியே மகனுக்குச் சுட்டிக் காட்டினான் விஜயன்.

"கதைலவர டாஜாவா?" என்று கண்ணை விரித்தான் மகன்.

"ம், அதே ராஜா நிஜமாகவே இருந்த இடம்" என்று கூறியவன் கையை எடுக்காமலே மனைவியின் தோளை ஒட்டிக் குனிந்து மகனோடு பேசலானான் விஜயன்.

கிட்டத்தட்டப் பாதி அணைத்தாற்போல இருந்த நிலையில் ரேகாவுக்கு மூச்சு முட்டியது.

யாரேனும் பார்த்தால் என்ன நினைப்பார்கள் என்ற தவிப்பு வேறு.

"யா... யாராவது பார்த்தால் என்ன...என்ன நினைப்பார்கள்?" என்று முகம் சிவக்கத் திக்கித் திணறினாள்.

ரோஜாக்கள் பூத்திருந்த கன்னங்களில் ரசனையுடன் பார்வையைப் பதித்தபடி, "எ.. என்ன நினைப்பார்கள்?" என்று அவளைப் போலவே சொல்லிக் காட்டி கேலி செய்தான்.

வேண்டும் என்றே வதைக்கிறான்.

முடிந்த அளவு உணர்ச்சியை வெளிக்காட்டாமல் மறைக்க முயன்றபடி அசையாமல் அமர்ந்திருந்தாள் ரேகா.

அவளது நிலையைப் பரிபூரணமாய் உணர்ந்து கொண்டான் அவன்.

திட்டமிட்டு இந்த அளவுக்குக் கொணர்ந்தவனும் அவன் தானே.

அரண்மனையைக் காட்டிய கையால் பிறர் அறியாமல் மிருதுவாக அவள் கன்னத்தை வருடினான்; மெல்லச் சிரித்தான்.

அவளது நடுங்கும் உதடுகளை லேசாக வருடிக் கையை எடுத்தவன், "வா. நம் தோப்பு வரப்போகிறது" என்று திரும்பி, "இறங்க வேண்டும்" என்று கண்டக்டரிடம் கை காட்டினான்.

இறங்கும்போதும், பிள்ளையைத் தூக்குவது போலவும், மீண்டும் கொடுப்பது போலவும் அவளை நன்றாகவே தொட்டான்.

தன் நிலையை அறிந்து கொண்டு வேண்டுமென்றே அவன் விளையாடுவது ரேகாவுக்குப் புரிந்தது.

ஆனாலும் அவளால் விலக முடியவில்லை.

அவனுடைய வலிமையும் வனப்புமான உருவம் கண்களை நிறைத்திருக்க, அவனுக்கே உரிய மணம் நாசியைத் தாக்க அவனுடைய ஆழ்ந்த குரல் காதில் ஒலிக்க, வழி பூராவுமாக உராய்ந்த சருமம் தீயாய் தகிக்க, அவனுடைய உதடுகளின் ஒற்றுதலுக்காக ரேகாவின் நெஞ்சு தவியாய்த் தவிக்கலாயிற்று.

வெளிக்காட்டிக் கொள்ள மனம் இன்றி உதட்டைப் பற்களால் அழுந்தப் பற்றிக்கொண்டு காரில் அமர்ந்திருந்தாள் ரேகா.

தோப்பு ஆட்களிடம் சற்று நேரம் பேசிவிட்டுக் காரில் ஏறினான் விஜயன்.

குறுநகை இலங்க, மனைவியின் முகத்தில் சில கணங்கள் பார்வையைப் பதித்துவிட்டு, லேசாக விசிலடித்தபடி காரை எடுத்தான் விஜயேந்திரன்.

நினைத்தது நினைத்தபடி நடக்கையில் அவன் விசிலடிக்கக் கேட்பானேன்?

"அப்பா, நானும் விசில்..." என்று வாயைக் குவித்து 'ஊஊ' என்று ராஜா ஒலியெழுப்ப. மற்றதை மீறிச் சிரித்தபடி விஜயன் குடும்பம் வீட்டை அடைந்தது.

உள்ளே வந்ததுமே, "பூங்கா எப்படி இருந்தது அண்ணி? வாத்து உங்களுக்கு வழி விட்டதா? உடும்பு பார்த்தீர்களா?" என்று விசாரித்தாள் வித்யா.

"வா... வாத்து, உடும்பு?" என்று விழித்தாள் ரேகா.

கலகலவென்று நகைத்தபடி, "என்ன அண்ணி, இது தான் பூலோகமா என்று விழிக்கிறீர்கள் நீங்கள் கார்டனில் பறவை, மிருகம் பார்க்கப் போனீர்களா, அல்லது அண்ணனோடு டூயட் பாடி 'ஸ்டெப் டான்ஸ்' ஆடிவிட்டு வந்தீர்களா" என்று கேலி செய்யத் தொடங்கினாள் வித்யா.

அதற்குள் உள்ளே வந்திருந்த விஜயனின் சுவாரசியமான பார்வையிலிருந்து அப்போதைக்குத் தப்பிக்கும் முயற்சியாக, "இவன் பொம்மை மேலே ரூமில் இருக்கிறது" என்று உளறி அடித்துவிட்டு மாடிப்படியில் ஏறலானாள்.

அண்ணனும் தங்கையும் சிரிக்க "என் பொம்மை..." என்று மகனும் உடன் ஏறி வந்தான்.

அறைக்குள் சென்றதுமே சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, "பொம்மை எங்கேம்மா..." என்று கேட்டான் ராஜா.

பொம்மை இருந்தால் அல்லவோ கொடுப்பதற்கு?

"பொம்மையா... கண்ணா, வருகிறாயா, தண்ணீரில் விளையாடலாம்" என்று அழைத்துச் சென்றாள்.

தண்ணீரில் அளைவது என்றால் ராஜாவுக்கு மிகவும் இஷ்டம்.

விளையாடுவதுபோலத் தனக்கும் அவனுக்கும் முகம் கை கால் கழுவினாள் ரேகா.

உடம்பு துடைத்து வேறு உடை அணிந்து வெளியே வந்ததுமே, மீண்டும் பொம்மையைக் கேட்டான் பையன்.

"நாம் இரண்டு பேரும் ஓடிப் பிடித்து விளையாடலாமா ராஜாக்குட்டி" என்று அவன் கவனத்தை மாற்ற முயன்றாள் ரேகா.

"ம்...ம்...பொம்மை?"

"பொம்மை அப்புறம் இப்போ அம்மா உன்னைப் பிடிக்கட்டுமா?"

"ம்...அம்மா வல்லாம்" என்று மோடாவின் பின்னே ஒளிந்து கொண்டான் ராஜா.

குழந்தைகளுக்குச் சரியாக அங்கும் இங்கும் தேடுவது போலப் பாவனை செய்தாள் ரேகா.

"அய்யோடா. கண்ணாப் பையனைக் காணோமே" என்று மண்டியிட்டு கண்மூடி அமர்ந்தாள் ரேகா.

'கிக்கிக்கிக்' என்று சிரித்தபடி ஓடிவந்து தாயின் கன்னத்தில் முத்தமிட்டான் சின்னவன்.

மகனை இழுத்து முத்தமிட, 'ஊகூம்' என்று திமிறினான் அவன்.

"நான்தான் ஜயிச்சேன். நான்தான் கிஸ் பண்ணுவேன்" என்றவன், "ம்... அடுத்த ஆட்டம். தேடுங்கம்மா" என்று கதவைத் திறந்து அதன்பின்னே மறைந்து நின்றான் ராஜா.

அவன் இருந்த பக்கம் தவிர மற்ற பக்கம் எல்லாம் தேடுவது போலப் பாவனை செய்து விட்டு, "அச்சச்சோ, திரும்பவும் ராஜாவைக் காணலியே. அம்மா தோத்தாச்சே" என்று மீண்டும் மண்டியிட்டுக் கண்மூடி அமர்ந்தாள் ரேகா.

இந்த நேரத்தில் தான் விஜயன் வந்து சேர்ந்தான்.

மறைவிடத்திலிருந்து பொத்திப் பொத்தி வெளியே வந்த மகனைப் பார்த்ததும், வந்த சிரிப்பை அடக்கி முறுவல் செய்தான்.

அண்ணாந்து பார்த்த மகனிடம் உதட்டின் மேல் விரல் வைத்து ஜாடை காட்டி வெளியே அழைத்தான்.

வந்த பிள்ளையின் காதருவே குனிந்து, "அத்தையிடம் எக்லேர்ஸ் வாங்கிக் கொள். போ..." என்று ரகசியம் கூறி அனுப்பினான்.

கதவை மெல்லச் சாத்திவிட்டு, ஓசைப்படாமல் மனைவியை அணுகினான்.

"அம்மா கால் வலிக்கிறது, சீக்கிரம் கண்ணா..." என்ற சொல்லி முடியும்போது ரேகாவின் இதழ்களை விஜயனின் உதடுகள் மூடின.

திடுக்கிட்டு அவள் விலகுமுன் அவனது வலிய கரங்கள் அவளைத் தூக்கி நிறுத்தி இறுக அணைத்தன.

பல நாட்களாக - முக்கியமாக அன்றெல்லாம் அவனுடைய அணைப்புக்கு வெகுவாக ஏங்கிப் போயிருந்த ரேகாவும் அவன் கையில் அப்படியே அடங்கிப் போனாள்.

எவ்வளவு நேரம் இருவருமாக உலகை மறந்திருந் தார்களோ...

கதவைத் தாண்டி வித்யாவின் குரல் கேட்கவும் அவசரமாக மனைவியை விடுவித்தான் விஜயன்.

அவள் நிதானமின்றித் தடுமாறவும் அவளை மறைத்தாற் போல அறை வாயிற்புறம் திரும்பினான்.

கதவைத் திறந்து கொண்டு, கையில் ராஜாவுடன் உள்ளே வந்தாள் வித்யா.

"அண்ணா, இந்தக் குட்டி பையனுக்கு இப்..." என்றவள் குரல் பாதிப் பேச்சில் நின்று சிரிப்பு பீறிட்டது.

அவள் விழுந்து விழுந்து சிரிக்கவும், "என்ன மண்டு என்ன அப்படிச் சிரிப்பு?" என்று கோபம் போலக் காட்டி மிரட்டினான் அவள் அண்ணன்.

ஒருவாறு சமாளித்துக் கொண்டு கணவன் பின்னிருந்து வெளிப்பட்டாள் ரேகா.

முறுவலித்தபடி ஓர் எட்டு வைத்த அவளைக் கண்டதும் மீண்டும் விழுந்து சிரிக்கலானாள் வித்யா.

காரணம் புரியாமல் திகைத்தபடி வித்யாவின் பார்வையைப் பின்பற்றிய ரேகாவின் முகம் சிவந்து போயிற்று.

அண்ணி புரிந்து கொண்டு விட்டதை உணர்ந்து அவள் மீண்டும் கலகலக்க, "ஷ்... சொல்லிவிட்டுச் சிரி, வித்தி" என்ற தோரணையாக அதட்டினான் விஜயன்.

"பெரீ...ய மிரட்டல்தான்... இதையெல்லாம் அண்ணியிடம் காட்டிக் கேளுங்கள்; சொல்வார்கள், வாடா கண்ணா இங்கே நாம் அதிகப்படி" என்று மீண்டும் நகைத்தபடி வெளியே ஓடி விட்டாள்.

"இவளுக்கு என்ன ஆகிவிட்டது?" என்று வியந்தபடி, மனைவியிடம் திரும்பினான் விஜயன்.

உதட்டைக் கடித்துக்கொண்டு அவள் முகம் சிவந்து நிற்கவும், "என்ன விஷயம் ரேகா?" என்று ஆவலும் வியப்புமாய் விசாரித்தான்.

ரேகாவின் தலை தரையைப் பார்த்தது.

மெல்ல அவள் முகத்தை நிமிர்த்தி அவன் மீண்டும் கேட்கவும் கண்ணால் அவன் தோள் பக்கம் பார்த்து விட்டு மீண்டும் தலை குனிந்தாள் ரேகா.

கீழ்க்கண்ணால் பார்த்தான்.

முக்கால் வட்டமும் ஒரு புறம் வாலுமாக ரேகாவின் குங்குமம் அவன் சட்டையில் பளிச்சென்று தெரிந்தது.

அவனுக்கும் சிரிப்பு வந்தது.

வெற்றி கொண்டவனின் பெருமை கலந்த சிரிப்பு.

சிரித்தபடியே சட்டையைக் கழற்றினான்.

அர்த்தத்துடன் அவள் முகத்தைப் பார்த்தபடி ஷர்ட்டைக் கவனமாக மடித்து உதடுகளில் ஒற்றுவித்தான்.

அவள் மேலும் சிவக்கவும் முறுவலித்தபடி, "வேறு பொட்டு வைத்துக் கொண்டு வா ரேகா" என்று கூறி அனுப்பிவிட்டுத் தன் அறைக்குள் சென்றான்.

சற்றுப் பொறுத்து வேறு ஒரு டீ ஷர்ட்டை மாட்டிக் கொண்டு வந்து அவன் எட்டிப் பார்த்தபோது ரேகா கண்ணாடி முன்தான் அமர்ந்திருந்தாள்.

"ரேகா!"

கண்ணாடியிலே நிமிர்ந்து பார்த்தவளுக்கு அவன் கதவைத் தட்டாமல் வந்தது மனதில் பட்டது.

இதுவரை அவன் அப்படிக் கதவைத் தட்டாமல் வந்தது இல்லை. சும்மாவே உதறிக் கொண்டிருந்த கையை இன்னமும் அதிகமாக நடுங்க வைத்தது.

குங்குமம் தோய்ந்திருந்த வலது கை மோதிர விரலைக் கை நடுக்கத்தின் காரணமாக நெற்றியில் குங்குமத்தை இடாமலேயே எடுத்தாள்.

முகம் மேலும் மலர்ச்சியுற்ற, சட்டென அவள் அருகே வந்து அவளது விரலைப் பற்றி நெற்றியில் வைத்து அழுத்தினான் அவன்.

பிரமை கொண்டவள் போல அமர்ந்திருந்த அவளைத் தூக்கி நிறுத்தி ஒரு தரம் இறுக அணைத்தான்.

விலகி, "வா, கீழே போகலாம்" என்று அழைத்துச் சென்றான்.

இருவரையும் சேர்த்துக் கண்டதும் வித்யா மீண்டும் சிரிக்கத் தொடங்கி விட்டாள்.

"ஷ். சும்மா இரு வித்தி" என்று பவானி முறுவலோடு மகளைக் கண்டித்தார்.

விஷயம் மாமியார் வரை பரவிவிட்டது புரியவும் மீண்டும் சிவந்து போனாள் ரேகா.

மருமகளின் கன்னத்தை லேசாக வருடிவிட்டு அவள் மேல் இரக்கம் கொண்டவர் போல வேறு விஷயங்களைப் பற்றி பேசினார் பவானி.

இரவு உணவின் முன்னும் பின்னும் சற்று நேரம் கலந்து பேசிக் கொண்டு இருப்பது அங்கே வழக்கமாகி இருந்தது.

உணவும் சரி, முன்னும் பின்னுமாக பேச்சுகளும் சரி, எல்லாம் அன்று எப்படி நடந்தது, என்ன நடந்தது என்பதே ரேகாவுக்குத் தெரியாது.

பிறகும் வழக்கம் போலவே இரவு பல்துலக்கி, உடம்புகழுவி, லேசான பருத்தி ஆடை அணிந்து எல்லாமே இயந்திரப் பதுமை போலச் செய்து முடித்தாள்.

ஆனால் படுக்கத் தோன்றாமல் இன்னதென்று இனம் கண்டு கொள்ள முடியாத தவிப்புடன் சன்னலில் சாய்ந்தபடி நின்றாள்.

அன்று அவளுடைய விருப்பத்துடன் கூடவே அவளைத் தன்னவளாக்கிக் கொள்ள விஜயன் உத்தேசத்திருப்பது நன்றாகவே புரிந்தது.

அவளுக்குச் சம்மதம் இல்லை என்று குறிப்புக் காட்டினால் விலகி விடத்தான் செய்வான். அதில் அவளுக்கு நம்பிக்கை இருக்கிறது.

ஆனால் உடம்பின் ஒவ்வொரு அணுவும் அவனுக்காக ஏங்கும்போது எப்படி மறப்பது?

மற்றதை விடவும் தன்னுடன் போராடத்தான் அடியோடு தெம்பிழந்து போயிருந்தாள் ரேகா.

சற்றும் உரிமை இல்லாதபோதும் அவனோடு இணைகையில் சிறு முணுமுணுப்புக்கூட இல்லாமல் வாய்மூடி மவுனமாய் இருந்த மனது இப்போது முணுமுணுவென்பதை நிறுத்தவும் அவளால் முடியவில்லை.

தவித்தாள்.

விஜயன் வரவு அவன் எதிர்பாராதது இல்லைதான்.

ஆனாலும் உள்ளே திக்கென்றது.

திரும்பாமல் அப்படியே நின்றாள்.

தோளில் பதிந்த அவன் கரங்கள் வருடிக் கொடுத்தபடியே மெல்ல அவள் கைகளின் மீது இறங்க கழுத்தோரம் அவன் உதடுகள் புதைந்தன.

பெரும் பிரயாசையுடன், "நான்....நான் ஒன்று சொல்ல வேண்டும்" என்றாள் அவள்.

"இப்போதா! இப்போதேயா?"

மவுனச் சிரிப்பில் அவன் உடல் குலுங்குவதை அவளால் உணரமுடிந்தது.

பின்னே அவன் கைகளில் இப்படி நெகிழ்ந்து கொண்டே, வேறு பேச வேண்டும் என்றால் சிரிக்கத்தான் செய்வான்.

ஆயினும் சொல்லாதிருக்கவும் முடியவில்லை.

தன் நிதானத்தை அடியோடு குலைக்க முயன்ற அவன் கைகளைப்பற்றி நிறுத்தி, "இப்...இப்போது தான்" என்றாள் அவள்.

அவள் விரல்களோடு விளையாடியபடி "சொல்லு" என்றான் அவன்.

"வந்து...வந்து நம்மிடையே வெ...வெறும் உடல் கவர்ச்சி... வெறும் உடம்புப் பொருத்தம்தவிர வேறு ஒன்றும் இல்லை" என்று திக்கித் திணறினாள்.

அவளது கையோடு சேர்ந்து அவளைச் சுற்றிவளைத்தபடி, "நம் நாட்டில் எத்தனையோ திருமணங்கள், ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் பார்த்தது கூட இல்லாமல் தான் நடக்கின்றன. அவர்களைப் பொறுத்தவரை இது ஒன்று தானே முதல் பொருத்தமாக அமைகிறது? நாமும் அவர்களைப்போல வாழ்வைத் தொடங்குவதாக வைத்துக் கொள்வோம்" என்று பதிலிறுத்தான்.

"அதெப்படி முடியும்? அவர்கள் எல்லாம் இரண்டு வயதுப் பிள்ளையோடா வாழ்வைத் தொடங்குகிறார்கள்?" என்ற கேள்வி தோன்றிய வேகத்திலேயே மறைந்துவிட அவன் அவளைத் தன்னுடைமையாக்கிக் கொண்டான்.

அவனைப் பொறுத்தவரையில் அன்றைக்கும் இன்றைக்கும் இடையே எதுவும் நேர்ந்திராதது போல நடந்து கொண்டான்.

"ரேகா, ரேகா; என்று குலவினான்; கட்டி அணைத்தான்; கொஞ்சினான்.

சில சமயங்களில் கண்ணில் ஓர் எதிர்பார்ப்புடன் அவன் எதற்காகவோ காத்திருப்பதுபோல அவளுக்குத் தோன்றுவதுண்டு.

'எதற்காகவோ' என்ன?

'விஜி' என்ற அவளது அழைப்புக்காகத்தான்.

இவ்வளவுக்குப் பிறகு இந்த ஒரு பெயரைச் சொல்லி அழைத்து விடுவதில் ஒன்றும் இல்லைதான்.

ஆனால் அவளுக்கு அப்படித் தோன்றவில்லை.

அவளுடைய தூய உள்ளத்தில் தடையற்றுப் பொங்கிப் பெருகிய அன்பு வெள்ளம் அது.

இன்றைக்கு வெளிப்படையாக எல்லாம் சரியாகி விட்டாற் போலத் தோன்றியபோதும் உண்மையில் அப்படியல்ல.

மனதில் இவ்வளவு வேறுபாட்டை வைத்துக்கொண்டு பழைய மாதிரி 'விஜி' யென்று அவனை அழைப்பது முடியாத காரியம் என்று நினைத்தாள் ரேகா.

சில சமயங்களில் அவன் வெகு சுலபமாக "ரேகா" என்று அழைப்பது அவளுக்கு எரிச்சலாகக்கூட இருந்தது.

அன்று இன்றும் அவனுக்கு ஒன்றுதானா என்று ஆத்திரமும் உண்டாயிற்று.

யோசித்துப் பார்த்தால் அன்றும் இன்றும் அவனுடைய நோக்கம் ஒன்றுதான் - அவளுடைய உடம்புதான் உள்ளே இருந்து மருகும் இந்த உள்ளம் இல்லை என்பது இப்போது தானே புரிகிறது.

ஒருவேளை மனதைப் பற்றிய எண்ணமே இல்லாது வாழ்வது ஆண்களுக்கு இயல்புதானோ?

ஆண்கள் மட்டும் என்ன?

இவளும்தான் விஜயனிடமிருந்து விலகியா போனாள்.

உடம்பின் தேவையிடம் அவளும் தோற்றுத்தானே போனாள்?

இன்னமும் தோற்கத்தானே போகிறாள்?

தன்னிச்சையாய்க் கண்களில் பெருகிய நீரைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தாள் ரேகா.

எவ்வளவோ தோற்றபோதும் ஒன்றில் மட்டும் அவள் தோற்கப் போவதில்லை.

இந்த ஏழை நெஞ்சம் அவன் காலடியில் கிடப்பதை மறைக்கும் முயற்சியில் ஒருநாளும் தோற்கப் போவது இல்லை.

ஏதேதோ நினைத்தபடி அமர்ந்திருந்தாள். விஜயன் வெகு இயல்பாய் அறைக்குள் வரவும் திடுக்குற்று எழுந்தாள்.

# 15

மனைவியின் அருகில் வந்து குனிந்து லேசாக முத்தமிட்டு, "குட்மார்னிங்" சொன்னவன், "என்ன விஷயம்?" என்று கேட்டான்.

"ஒ...ஒன்றுமில்லை."

"ஒன்றுமில்லாததற்கு இங்கே சுளிப்பானேன்" என்று ஒற்றை விரலால் அவளது புருவ மத்தியைத் தொட்டுக் காட்டினான்.

சட்டென அவளது விழிகளில் நீர் நிறையவும் அவளை இழுத்து அணைத்துப் "பைத்தியம்" என்று செல்லமாக கடிந்தான்.

"என் ரேகா, கவனி. போனதெல்லாம் முடிந்து போன கதை. என்னென்ன நடந்திருந்தாலும் இனி அதையெல்லாம் நினைத்து மனதைக் குழப்பிக் கொள்ளக்கூடாது. நேற்று சொன்னது நினைவில்லை... நாம் புதிதாக மணமானவர்கள் அதிலும் அடிப்படைப் பொருத்தம் உன்னதமாக அமைந்தவர்கள்" என்று குறும்பாகக் கண் சிமிட்டினான்.

அவள் முகம் சிவக்கக்கண்டு சிரித்தபடி அவளை இழுத்து அழுந்த முத்தமிட்டான்.

தன் உதடுகளாலும் கைகளாலும் அவளை ஆவலே வடிவாக மாற்றக்கூடிய அவனுடைய சக்தியை அனுபவிக்கையில் இன்பமாகவும், எண்ணிப் பார்க்கையில் அவமானமாகவும் இருந்தது அவளுக்கு.

அவனுக்கு அவள் மீதுள்ள ஆதிக்கத்தில் பத்தில் ஒரு பங்கேனும் அவளுக்கு அவன் மீது இருக்குமா?

நம்பிக்கையில்லை அவளுக்கு.

ஏனெனில் விஜயன் வாழ்வில் தாராவின் பங்கு அப்படியேதான் இருந்தது.

வள நாட்டிற்கு அவளது வருகை குறைந்திருந்த போதும், டெலிபோன் கால்களைக் குறித்து வைக்கும் புத்தகத்தில் தாராவின் பெயர் தினமும் எழுதப்பட்ட படியே இருந்தது.

ஒரோரு சமயங்களில் அவள் ரேகாவையே அழைத்து "அத்தான் எங்கே என்றுகூடத் தெரியாமல் அங்கே என்ன தான் செய்கிறாய்?" என்று கேட்பது உண்டு.

"இன்று காலையிலேயே வந்துவிடுவதாக நேற்று வந்த போது சொன்னார். இன்னமும் வரவில்லையே. என்ன ஆனார்?" என்று விசாரிப்பதும் உண்டு.

அவளது பேச்சு மெய்தான் என்பதுபோல, "மாமா வீட்டில் சாப்பிடப் போகிறேன், வர நேரமாகும்" என்றெல்லாம் விஜயனும் அவ்வப்போது சொல்வதுண்டு.

ரேகாவுக்கு அவன் மீது ஆதிக்கம் இருந்ததால் அவன் தாராவை நாடிச் செல்வானா?

கணவனுக்கும் மனைவிக்கும் இடையே இருக்க வேண்டிய நெருக்கமும் மன ஒற்றுமையும் இருந்திருந்தால் அவன் ஓர் ஊரறிந்த வேசி வீட்டுக்குச் சென்றால் கூட அவள் கவலைப்பட வேண்டியிராது.

அல்லது குறைந்த பட்சமாக, 'அங்கே போகாதீர்கள்' என்று உரிமையோடோ,. கெஞ்சுதலாகவோ அவனைத் தடுக்கவும் முடியும்.

இங்கே அந்த உரிமை தனக்கு இல்லை என்று எண்ணிய ரேகா, முடிந்த அளவு தாரா பற்றிய பேச்சையே தவிர்த்தாள்.

ஆனால் மனம் வேதனைப்படுவதைத் தவிர்க்க முடியாமல் வாடினாள்.

இதுபோன்ற ஒரு தருணத்தில், டெலிபோனை வைத்து விட்டு வாடிய முகத்துடன் அவள் திரும்பிய போது வித்யா அங்கே வந்தாள்.

"என்ன, அண்ணி?" என்றாள் கவலையோடு.

"ஒ...ஒன்றுமில்லை. ஒன்றுமே இல்லையே" என்று புன்னகை புரிய முயன்றாள் ரேகா.

"பொய் சொல்லத் தெரியாமல் அதற்கு முயற்சி செய்யக் கூடாது அண்ணி. யார் டெலிபோன் செய்தது?" என்று வித்யா குறிப்புப் புத்தகத்தை எடுத்துப் பார்த்தாள்.

லேசான முகச் சுளிப்புடன் அந்தப் புத்தகத்தை மீண்டும் டெலிபோன் அருகே வீசியெறிந்தாள். பிறகு "இந்தத் தாராக்காவிடம் உள்ள தப்புகள் எதையுமே கண்டு கொள்ளத் தெரியாத முழு முட்டாளாக இருந்திருக்கிறேன் என்பதை நினைத்தால் அவமானமாக இருக்கிறது அண்ணி. சும்மா சும்மா அவள் சொல்வதற்கெல்லாம் தலையாட்டிக் கொண்டு... அவளோடு சேர்ந்து கொண்டு, பாவம் தேவியைக் கூட அலட்சியம் செய்திருக்கிறேன். சொல்லப் போனால் முதலில் உங்களை வெறுத்தது கூட தாராக்கா இடத்தை நீங்கள் அபகரித்து கொண்டதாக நான் நினைத்ததுதான். ஆனால்..." என்றவள் ஓடிவந்து ரேகாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டு,

"வைரமும் கண்ணாடியும் விளங்கிப் போயிற்று அண்ணி" என்று மகிழ்ச்சியோடு கூறினாள்.

உன் அண்ணனுக்குத் தெரியவில்லையே என்று உள்ளூர நினைத்த போதும், முறுவலோடு, "உச்சி ஒரேயடியாய் குளிர்ந்து போயிற்று" மயக்கம் வந்தாற் போலத் தள்ளாடினாள் ரேகா.

"விழுந்து விடாதீர்கள். தாங்கிக் கொள்ள அண்ணன்கூட வீட்டில் இல்லையாக்கும்" என்று மிரட்டினாள் வித்யா.

தன் அண்ணனைப் பற்றி அவள் கூறியதைக் கவனியாதது போலக் "குட்டிப் பையன் ஒரேயடியாகத் தோட்டத்திலேயே நிற்கத் தொடங்கி விட்டானே" என்று வெளியே செல்லத் தொடங்கினாள் ரேகா.

"ராஜாக் குட்டிக்காகப் போகிறீர்களா, அல்லது அண்ணன் வரும் நேரம் என்று ஓடுகிறீர்களா?" என்று விடாமல் கேலி செய்தபடி கூடவே நடந்தாள் வித்யாவும்.

அண்ணனும் அண்ணியும் இணைந்து பழகத் தொடங்கிய பின் வித்யாவின் கேலி சற்று மீறித்தான் போய்க் கொண்டிருந்தது.

ஆனால் தன் மகிழ்ச்சியை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளும் அந்த வெள்ளை மனப் பெண்ணைத் தடுக்க ரேகாவும் எண்ணவில்லை.

தோட்டத்தில் பேரனுடன்தான் நின்று கொண்டிருந்தார் பவானியும்.

மகளையும், மருமகளையும் கண்டதும் "உதயாவிடம் இருந்து கடிதம் வந்திருக்கிறது" என்றார் புன்னகையோடு.

"எப்போது வருகிறார்களாம்... ஆனால் இப்போது நாம் சென்று முறைப்படி அழைக்க வேண்டுமா, அத்தை?" என்று ஆவலாக விசாரித்தாள் ரேகா.

"அது ஐந்தாம் மாதம் அழைத்துக் கொள்ளலாம். ஆனால் அவள் எழுதி இருப்பது வேறு. உன்னை அவர்கள் வீட்டில் எல்லோருக்கும் பிடித்துப்போய் விட்டதாம். அதனால் அடுத்த தடவை நீ அங்கே செல்லும்போது அவர்கள் சொந்தத்தில் எல்லோரையும் அழைத்து விருந்து வைக்கப் போகிறார்களாம்" என்றார் பவானி பூரிப்புடன்.

"அக்காவுக்கும், ராஜாப் பையன் போலவே பிறந்தால் நன்றாக இருக்கும். என்னம்மா..." என்ற வித்யா, "ஏய் குட்டி ராஜா, பந்தைப் பூச்செடி மேல் வீசாதே" என்று அவனிடம் ஓடினாள்.

யோசனையோடு மாமியார் முகத்தைப் பார்த்தாள் ரேகா.

"அத்தை, நான் ஒன்று கேட்கிறேன். நிஜத்தை சொல்வீர்களா?" என்று மெல்லக் கேட்டாள்.

"என்ன விஷயம்? பீடிகை எல்லாம் பிரமாதமாய் இருக்கிறதே" என்று முறுவலித்தார் மாமியார்.

"இல்லை...நான்...வந்து அத்தை, நான்...வந்து ஒரு சரியான வந்து ஒழுங்கான முறையில் உங்கள் மருமகளாக இங்கு வரவில்லை. பிறகும் முதுகு ஒடிய வேலை செய்து.... உழைத்து என்றோ, புத்திசாலித்தனமாக யாரையாவது காப்பாற்றி கீப்பாற்றி என்றோ, பிரமாதமாக எதையும் செய்துவிடவில்லை, பிறகு ஏன்...அப்படி அத்தை, எல்லோரும் என்னிடம் பிரியமாய் இருக்கிறீர்கள்? என்ன யோசித்தும் எனக்குப் புரியவே மாட்டேன் என்கிறது" என்று மனதில் இருந்ததைக் கேட்டு விட்டாள்.

வாய்விட்டுச் சிரித்தார் பவானி.

பிறகு புல் தரையில் மருமகளை அமரச் சொல்லி தானும் உட்கார்ந்து கொண்டார்.

பிறகு சொன்னார், "இந்த வீட்டிற்குள் உன் வருகை பற்றி நீ சொன்னது சரிதான் ரேகா. ஆனால் அப்படி வருகிற ஒரு பெண்ணிடம் மற்றவர்கள் எதிர்பார்க்கக் கூடியது என்ன? ஒன்று கணவனைக் கைக்குள் போட்டுக் கொண்டு மற்றவரை அலட்சியம் செய்யக்கூடும். இன்னும் எல்லோரிடமும் உருக்க வேடம் போடக்கூடும். உன்னைப் பொறுத்த வரையில் அந்த இரு வகையிலும் நீ சேரவில்லை. வலிய பழகியபோதும் ஒரேயடியாகப் பணிந்துவிடாமல் இயல்பாயிருந்தாய். ஒரே புன்னகை வேடம் போடவில்லை வித்யாவை அதட்டி உருட்டியிருக்கிறாய். உதயா சொன்னதைப் பார்க்கையில் நீ பயந்தும் இருக்கிறாய். மொத்தத்தில் ஒரு நல்ல எல்லோரையும் போலான ஒரு சாதாரணப் பெண்ணாக இருக்கிறாய்... வேறு என்ன வேண்டும்? போனசாக இந்தக் கண்ணன் வேறு" என்று விளக்கினார்.

அவரது பார்வையைத் தொடர்ந்து சற்று தொலைவில் பந்தை எறிந்து விளையாடிக் கொண்டிருந்த மகனிடம் பார்வையைச் செலுத்தினாள் ரேகாவும்.

உடனே சற்றுத் திடுக்கிட்டு, "ஏன் அத்தை குளத்தை மூடுகிறார்கள்?" என்று கேட்டாள்.

வீட்டின் முன்புறத்தில், விசாலமான புல்வெளிகள் நடுமயத்தில் ஒரு செங்குளம் பலவண்ணத் தாமரை மலர்களோடு இருந்தது.

புதுமண் போட்டு இருவர் அதை மூடிக்கொண்டு இருப்பதைக் கண்டுதான் ரேகா திடுக்கிட்டது.

"நேற்று குட்டிராஜா அதில் குனிந்து கைநீட்டி பூ பறித்துக் கொண்டு இருந்தான், கால் தவறினால் என்ன ஆவது? ஆழம் இல்லை என்றாலும் இசகுபிசகாய் விழுந்தால் கடவுளே! ரொம்ப நேரம் மனது ஆடிப் போய்விட்டது. அதனால்தான்

மூடச் சொல்லிவிட்டேன்" என்றார் பவானி இன்னமும் சிறு நடுக்கத்துடன்.

தன்னுள்ளமும் பிறந்த விதிர்ப்பை மறைத்து, "அந்த இடத்தில் என்ன வைக்கலாம். அத்தை? ஆழ்ந்த. சிவப்பில் ஒரு சின்ன சூரியகாந்தி உண்டே, அதை மொத்தமாக வைக்கலாமா?" என்று யோசனை சொன்னாள் ரேகா.

"செய்வோம்" என்று ஒப்பிவிட்டு, "இதுதான் ரேகா, நான் சொன்னது, நீ கவனியாமல் இல்லை. கவனித்த பிறகும்கூட, என்னிடம் ஒரு வார்த்தை சொல்லாமல் மூடிவிட்டீர்களே என்று நீ கேட்டிருக்கலாம். லேசாக வருத்தம்கூடக் காட்டியிருக்கலாம். உரிமை உள்ளவள்தானே, ஆனால்..." என்று மேலே பேசுமுன் ரேகா இடைமறித்தாள்.

"நீங்கள் நல்லவர்களாக இருக்கையில் அந்த மாதிரி யெல்லாம் உங்களிடம் யாராலும் பேசமுடியாது அத்தை. அத்தோடு உங்களை மீறிய உரிமையும் எனக்கு ஒரு நாளும் கிடையாது" என்று முடித்தாள் ரேகா.

"பாத்திம்மா, பாத்திம்மா, ஒரு பட்டர்ஃப்ளை, புளூ கலர் பட்டர்ஃப்ளை..." என்று ஓடிவந்தான் ராஜா.

பேச்சு ஆனந்தமாய் திசை மாறியது.

விஜயனும் வந்து அங்கேயே அமர்ந்துவிட, டிபன்காபி எல்லாமாகத் தோட்டம் அமர்க்களப்பட்டது.

ஒரு நாள் சிவராமன் தன் இரு பெண்களுடனும் வந்தார்.

விஜயனை அழைத்துச் சென்று தனியாகப் பேசினார்.

"அம்மா வரவில்லையா தாரா? அண்ணியைப் பார்த்து அதிக நாள் ஆகிவிட்டதே" என்றார் பவானி.

"அம்மாகூடச் சொன்னார்கள், அத்தை. ஆனால் இங்கே வந்தாலும் முன்போலப் பேச நீங்கள் மட்டும் இருக்கிறீர்கள்?

அதனால்தான் வரவில்லையாம்'' என்று சிறு குறையோடு பேசினாள் தாரா.

அதற்குள் விஜயனும் சிவராமனும் வந்துவிட அவனிடம் ஓடி, ''கிளப் பக்கமே காணோமே, அத்தான்'' என்று அவனிடமும் குறைபட்டாள்.

''நேரமே கிடைப்பது இல்லை'' என்று மனைவியிடம் கண்ணால் சிரித்தான் விஜயன்.

அவள் முகம் சிவப்பதைக் காணவும் தாராவுக்குக் கடுத்தது.

அதன் பிறகு விஜயனைவிட்டு அவள் அப்புறம் இப்புறம் அகலவில்லை.

வித்யா பல்லைக் கடித்தாள்.

அக்கறை அற்றவள் போலத் திரும்பி நின்று தேவியுடன் பேசலானாள் ரேகா.

கடைசியாக அவர்கள் கிளம்பியபோது வித்யாவும் உடன் கிளம்பினாள்.

''தேவியின் டான்ஸ் வீடியோ எடுத்து வந்துவிட்டதாம். அதை வாங்கி வரப் போகிறேன்'' என்று காரணம் சொன்னாள்.

''அதைத்தான் அவள் டிரைவரிடமே அனுப்பி விடலாமே'' என்றான் விஜயன்.

தான் இல்லாமல் தனியே மகளை மாமா வீட்டுக்கு அனுப்புவது தாயாருக்குப் பிடிக்காது என்பது அவன் அறிந்த விஷயம்.

காரணம் நவநீதன் என்பதால் வெளிப்படையாகச் சொல்லாமல் தடுத்துப் பார்த்தான்.

ஆனால் வியப்பூட்டும் விதமாக வித்யா பிடிவாதம் செய்தாள்.

"நான் வேறே சிலதும்கூடப் பார்க்க வேண்டும். தாராக்கா புதிதாகச் சில சேலைகளை வாங்கியிருக்கிறார்களாம். அதையும் பார்த்துவிட்டு உடனே வந்து விடுகிறேன். மாமா என்னை உடனே பத்திரமாய் அனுப்பி வைத்து விடுவார்கள். என்ன மாமா?" என்று மாமாவைத் துணைக்கு அழைத்தாள்.

"நீ வாம்மா" என்றார் அவர் சலுகையாக.

மாமனுடைய வீட்டை அடைந்ததும், "தேவி, நீ காஸெட்டை எடும்மா. நான் இதோ வருகிறேன்" என்று அவளை அனுப்பி விட்டுத் தாராவைப் பின் தொடர்ந்தாள் வித்யா.

அவளது அறைக்குள் சென்றதுமே கதவைச் சாத்தினாள் தாராக்கா "நீ செய்வது சரியில்லை. அண்ணி அமரவேண்டிய இடத்தில் நீ உட்காராதே" என்றாள் கோபத்தைக் காட்டி.

ஜிவ்வென்று சினம் தலைக்கேறியது தாராவுக்கு. "சீ இருந்திருந்து அந்தக் கழுதைக்காகப் பரிந்து பேசவா இங்கே வந்தாய்?" என்றாள் கொதிப்புடன்.

வித்யாவும் ஒரே ஆத்திரத்தில் இருந்தாள்.

"அளந்து பேசு தாராக்கா. அண்ணியின் கால்தூசி கூட நீ பெற மாட்டாய். அவரவர் தகுதி தெரிந்ததுதான். நீ நாயாய் விரட்டியும் என் அண்ணன் கைத்தாலி அண்ணிக்குக் கிடைத்திருக்கிறது" என்று பதிலுக்கு மட்டம் தட்டிப் பேசினாள்.

"நாயா? நானா? உண்மையில் சரியாக மோப்பம் பிடிக்கக்கூடத் தெரியாத நாய் நீ தானடி. அவர்கள் இருவரும் ஆளுக்கு ஒரு திசையைப் பார்ப்பதைக்கூட அறிய முடியாத முட்டாள் நீ" என்று கத்தினாள் தாரா.

"அது பழைய கதை தாராக்கா. ரொம்ப ரொம்பப் பழைய கதை. இப்போது போகிற போக்கைப் பார்த்தால் என் அண்ணன் இரண்டாவது தடவையாக அப்பா ஆகப்போகும்

நாள் அதிக தூரத்தில் இல்லை" என்று வேண்டுமென்றே பெருமையடித்தாள் வித்யா.

"இதைச் சொல்லத்தான் இங்கே வந்தாயா? சீசீ அந்த வீட்டில் உனக்காவது சற்றேனும் குலப்பெருமை, மான ஈனம் என்று ஏதேனும் இருக்கும் என்று நினைத்தேனே..."

"அதெல்லாம் இருப்பதால்தான் எங்கள் வீட்டில் எல்லோருமே நிம்மதியாக இருக்கிறோம். பாவம் நீ, தாராக்கா. நான் முன்னைப் போல உன் புகழ் பாட வந்திருப்பேன்; கேட்டு இளித்துக் கொண்டு இருக்கலாம் என்று நினைத்திருப்பாய் இல்லையா? என் அண்ணியுடன் பழகிய பிறகுதானே நீ எவ்வளவு மட்டம் என்பது எனக்குப் புரிந்திருக்கிறது. அண்ணியைப் புகழ்ந்து ஒரு வார்த்தை சொன்னால் பேச்சையே மாற்றிவிடுவார்கள் தெரியுமா? நீயும் இருக்கிறாயே. முகஸ்துதி பாட லஞ்சம் கொடுக்கிற இனம்..."

ஆத்திரம் பொங்க, "போயேன். உன் அண்ணி அந்தச் சனியனிடமே போயேன். உன்னை இங்கே யார் வரச் சொன்னது? போ போ, போய்விடு. உடனே போய் விடு" என்று ஆவேசத்துடன் கதவைத் திறந்தாள் தாரா.

வாயில் ஓரமாய் நின்ற தேவியைக் கண்டதும், "போகும் போது இந்த ஐந்தாம் படைப் பிசாசையும் இழுத்துக் கொண்டு போய்த் தொலை" என்று தங்கையைப் பிடித்துத் தள்ளினாள்.

கீழே விழுந்த தேவியைத் தூக்கி நிறுத்தயபடி "போகத்தான் போகிறேன் தாராக்கா. ஆனால் நான் சொன்னது நினைவிருக்கட்டும், ஜாக்கிரதை" என்று தாராவை எச்சரித்தாள் வித்யா.

பிறகு தேவியிடம் திரும்பி, "உன் காஸெட்டைக் கொடு தேவி" என்று அவளை அழைத்துக் கொண்டு போனாள்.

வெறி கொண்ட புலிபோல ஆங்காரமாய் வந்தது தாராவுக்கு.

இந்த வித்யா-

எப்போதும் நாய்க்குட்டி மாதிரி வாலைக் குழைத்துக் கொண்டு 'தாராக்கா' என்று அவள் பின்னே சுற்றுகிற அசடு. அவள் இன்று எதிரே நின்று எதிர்த்துப் பேசி எச்சரிக்கை வேறு விடுப்பதா?

அதுவும் இந்த இடையில் வந்த பிடாரிக்காகவா?

தாங்க முடியவில்லை அவளால்.

சட்டம் திட்டம் என்று இல்லாத கற்காலமாக இருந்திருந்தால் ரேகாவின் கழுத்தை நெரித்தே கொன்றிருப்பாள்.

அப்படி ஒரு கொலை வெறி உண்டாயிற்று.

எல்லாம் அந்தக் கழுதை ரேகா செய்கிற வேலைதான்.

நெளிந்து மினுக்கி அத்தானை வலையில் போட்டுக் கொண்டாள்.

இப்போது அந்த வீட்டில் அத்தனை பேரையும் விஷமாக மாற்றிக் கொண்டு இருக்கிறாள்.

அவளை...அவளை...

மறுநாள் காத்திருந்து பத்து மணிக்கு மேல் விஜயன் வீட்டுக்கு டெலிபோன் செய்தாள்.

ரேகாவை அழைத்தும் பேசினாள்.

"உனக்கு என்றேனும் புத்தி வருமா?" என்று எடுத்த எடுப்பிலேயே தூக்கி எறிந்து பேசினாள்.

ஒருகணம் மவுனமாக இருந்தாள் ரேகா.

"உன்னைத் தானடி கேட்கிறேன். அறிவுதான் கிடையாது என்றால் காதுமா செவிடாகிவிட்டது?" உதாசீனப் பேச்சுத் தொடர்ந்தது.

உதடு அழுந்த, "ராங் நம்பர் என்று நினைக்கிறேன்" என்று ரிசீவரை வைத்துவிட்டாள் ரேகா.

ஆனால் தாரா விடுவதாயில்லை.

மீண்டும் அழைத்து, "அத்தான் நாகரீகம் பார்க்கிறவர். உன்னை அடித்து விரட்டப் போவது இல்லை. நீயாகவும் புரிந்து கொண்டு வழிவிடப் போவதும் இல்லையா?" என்று கேட்டாள்.

"நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை" என்றாள் ரேகா மொட்டையாக.

"நீ ஒன்றும் அவ்வளவு முட்டாள் இல்லை என்று எனக்குத் தெரியும்படி; சும்மா வேஷம் போடாதே. ஒரு நிமிட சபலத்தில் வந்த போதும் பிள்ளைப் பொறுப்பை ஏற்பதற்காகத்தான் அத்தான் உன்னை மணந்தது உனக்குத் தெரியாது என்றா சொல்கிறாய்? இப்போது அந்தப் பையன் அங்கே எல்லோரிடமும் ஒட்டிக் கொண்ட பிறகு உனக்கு அங்கே என்ன வேலை? இரண்டோ மூன்றோ - லட்சத்தைச் சொல்கிறேன். ஏனென்றால் பிள்ளை பெற்றுக் கொடுத்திருக்கிறாய் அல்லவா... வாங்கிக் கொண்டு ஓடுவது தானே."

'இருபது என்றால் நூறல்ல. ஆயிரத்தைச் சொல்கிறேன்.'

பழைய விஷயங்கள் நினைவுக்கு வந்தன.

வேதனைகளும் கூடத்தான்.

ஆயிரம் லட்சமாகியிருக்கிறது

விலைவாசி ஏறிவிட்டதல்லவா என்று வெறுப்பாக நினைத்தாள் ரேகா.

இப்போதும் ரிசீவரை வைத்து விடலாம்தான்.

ஆனால் எதிர்முனையிலிருந்து பேசுகிறவள் விட மாட்டாள்.

திருப்பித் திருப்பி டெலிபோன் பொறுப்பாளர் "அம்மா உங்களுக்குத்தான்" என்று அழைத்துச் சொல்லிக் கொண்டே இருப்பார்.

அவர் முகத்தில் விழித்தாக வேண்டுமே.

எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும் இவள் பேச்சைக் கேட்டு முடித்துத்தான் ஆகவேண்டும்.

"கொஞ்சமேனும் மூளையிருந்தால் புரிந்து கொண்டு நடந்து கொள்" என்று தொடர்ந்து ஒலித்தது தாராவின் குரல்.

"எதைப் புரிந்து கொள்வது?" என்றாள் ரேகா.

இடையில் தாரா பேசியது எதையும் கவனிக்கவில்லையே.

ஆனால் அதற்காகத் தாரா திரும்பச் சொல்ல மறுத்து விடவில்லை. "என்னை அத்தான் விரும்புவதை" என்றாள் தெளிவாக.

"பொய்!" என்றாள் ரேகா.

எவ்வளவோ முயன்றும் குரல் பலவீனப்பட்டுப் போவதை அவளால் தடுக்க இயலவில்லை.

"என்னது, பொய்யா? ஓகோ, சும்மா உன்னைக் கட்டிப் பிடிப்பதால் அத்தான் உன்னை விரும்புவதாக எண்ணி விட்டாயா? உன் வீடு மாதிரி பத்து பைசாக் கீரைத்தண்டில் சாப்பாட்டை முடிக்கிற வீடு என்றால் வருடம் முழுவதும்கூட பிரம்மச்சாரியாக இருக்கலாம். இந்த வீட்டுச் சாப்பாட்டைப் பார்த்தாயல்லவா? அது தான் மூன்று வேளையும் மூக்குப் பிடிக்க அடைத்துக் கொள்கிறாயே. இந்தச் சாப்பாட்டைச் சாப்பிட்டு விட்டு விரதம் காக்க முடியுமா? வீட்டில் ஒருத்தி இருக்கும்போது அங்கே இங்கே போவானேன் என்று அன்றைக்கு தாங்க முடியவில்லையே என்று என்னிடம், கேட்டபோது நான்தான் சொல்லி அனுப்பினேன். "உங்கள்

வீட்டில் சும்மாதானே தின்றுவிட்டுத் தூங்கிக் கொண்டு இருக்கிறாள். என்னை நினைத்து அவளைத் தொடுங்கள்" என்று கூறி அனுப்பி வைத்தேன். இருந்திருந்து இதை வைத்துக் கொண்டு அத்தானின் காதல் கண்ணாட்டி என்று கற்பனையில் இறங்கிவிட்டாயா?" என்று உரக்கச் சிரித்தாள் தாரா.

"அய்யோ, அய்யோ நல்ல வேடிக்கைதான் போ" என்று மேலும் சிரித்தாள்.

கணவன் அன்பில் உறுதி பெற்றிராத ரேகாவுக்கு நெஞ்சு பதறிப் போயிற்று.

இருக்காது.

இருக்கவே இருக்காது.

விஜயன் அந்த அளவுக்குக் கீழானவன் அல்ல.

ஆனால்...இல்லை இல்லை.

இவளிடம் பலவீனத்தைக் காட்டி இன்னமும் குத்துப்படக் கூடாது.

இவளிடம்...இவளிடம்...முருகா!

வெகு சிரமப்பட்டு சமாளித்துக் கொண்டாள் ரேகா.

உள்ளே இல்லாத நிதானத்தைக் குரலில் காட்டி தானும் மட்ட ரகத்தில் இறங்குவது புரிந்தும்கூட வேண்டுமென்றே, "ஆமாம். உங்கள் வீட்டுச் சாப்பாடுகூட பைசாக் கணக்கில் அடங்குகிற தினுசு இல்லையே. கிட்டத்தட்ட இங்கே போலத் தானே. உணர்ச்சி வேகம் மீறுகிறபோது நீங்களும் இவரை நினைத்து... அப்படி வேறு ஏதும் வைத்திருக்கிறீர்களா?" என்று கேட்டு விட்டாள்.

கேட்ட உடனேயே மனது அருவருத்துப் போயிற்று.

யாரோ ஒருத்தி கொச்சைப்படுத்திப் பேசினால் தானும் அந்த அளவுக்கு இறங்கிவிட வேண்டுமா?

நாற்றச் சேற்றில் தானும் கைவிட்டிருக்க வேண்டுமா?

தன்னிடமே மூண்ட வெறுப்புடன் ரிசீவரை மெல்லக் கீழே வைத்தாள். எதிர் முனையில் பொழிந்த வசை மாரியைக் காதில் வாங்காமலேயே.

காதில் வாங்கி மனதிலும் ஏற்றிருந்தால் ஒருவேளை எச்சரிக்கையோடு இருந்திருப்பாளோ?

## 16

தாராவுடன் பேசிய பேச்சில் அன்றைக்கெல்லாம் ரேகாவுக்குக் குமட்டிக் கொண்டே வந்தது.

கணவனோடு உண்டான உறவை நினைக்கையில் மிகவும் வெறுப்பாக இருந்தது.

அவன் வழக்கம்போல் நெருங்கியபோது, கையை உதறிக் கொண்டு விலகிப் போனாள்.

பொறுமை இழந்தாற்போல, "ரேகா!" என்று அதட்டலுடன் அவன் வலிய அணைத்தபோது கண்ணீர் சொரிந்தாள்.

திகைத்துப் போனான் விஜயன்.

மிருதுவாய் அவளது கண்ணீரைத் துடைத்துவிட்டு அதற்கு மேல் அவளை வற்புறுத்தாமல் தனியாக தன் அறைக்குச் சென்று விட்டான்.

தாரா சொன்ன காமம் கண்ணீரை மதிக்குமா?

ரேகாவின் மனம் மீண்டும் சற்றே அமைதியடைந்தது.

ஆனால் அன்று குளவிக்கூட்டில் கல்லெறிந்தாற்போல ஓர் அருவருப்பான உண்மை பற்றி அறியாது ரேகா சொன்ன சில வார்த்தைகளின் பயங்கரமான விளைவைப் பற்றிய முன்னறிவு கொஞ்சமேனும் அவளுக்கு இல்லாது போனதுதான் பரிதாபம்.

அந்த அறிவு அவளுக்கு இருந்திருந்தால் இந்தச் சிறு அமைதியில் நிம்மதி பெற்றிருக்க மாட்டாள்.

கண்ணோடு கண்மூடாமல் காவல் இருந்து காத்திருப்பாள்.

உயிரைக் கொடுத்தேனும் காப்பாற்றியும் இருப்பாள்.

ஆனால் அது சற்றும் இல்லாது போனபடியால், இரு தினங்கள் கழித்து பூபதி ராஜாக்களின் வம்சவிளக்கு, விஜயனின் அருமைப் புத்திரன், ரேகாவின் வாழ்வின் ஆதாரம், ராஜேந்திர பூபதிராஜா காணாமல் போனான்.

பகல் பன்னிரண்டு மணி அளவில் பகலுணவு உண்டு, பின் ஒரு மணிநேரம் சென்றபின் ஆரஞ்சுச் சாறு அருந்தி விட்டு உறங்குவது ராஜாவின் வழக்கம்.

அயர்ந்த உறக்கத்தின் பின்னர் மூன்றரை, நாலுமணி அளவில் எழுந்து கேக், பிஸ்கட் என்று சிற்றுண்டியின் பின் ஓடியாடி விளையாடுவான்.

முதலாவதாக சுமார் நாலரை மணிக்குத் தங்கம்மாள் இண்டர்காமில் ரேகாவை அழைத்தாள்.

"அம்மா, சின்ன ராஜாவுக்கு டிபன் நேரம் தாண்டி விட்டதே. அங்கேயே டிபனைக் கொண்டு வரவா?" என்று விசாரித்தாள்.

புது மாதிரிப் பின்னல் வேலை ஒன்றில் மூழ்கியிருந்த ரேகாவுக்கு ஆச்சரியமாய்ப் போயிற்று. "ஓ! மணி நாலரையா? ஆனால் ராஜா இங்கே இல்லையே தங்கம்மா; அத்தையிடம் கேட்டீர்களா? அல்லது வித்யாவிடம் இருப்பான் பாருங்கள்" என்று ரிசீவரைக் கீழே வைத்தாள்.

சட்டென ஒரு பொறிபோல வயிற்றுக்குள் சங்கடம் செய்தது.

இண்டர்காமை எடுத்தவள் பேசாமல் வைத்துவிட்டு வேகமாக மாமியாரின் அறையை நாடிச் சென்றாள்.

அதற்குள் அவரும் கண்களில் கலக்கத்துடன் வெளியே வந்து கொண்டிருந்தார்.

மருமகளின் முகத்தைப் பார்த்ததும் நிதானித்து, "விழித்து எழுந்ததும் தானாகத் தோட்டத்திற்குள் ஆடப் போயிருப்பான்" என்றார் தேறுதலாக.

அதற்குள் அங்கே ஓடி வந்தாள் வித்யா. "அம்மா, குட்டிப் பையன்.... ஓ அண்ணி, ராஜா உங்களிடமும் இல்லையா?" என்றாள் பதட்டத்துடன்.

"தோ... தோட்டத்தில்...." என்ற ரேகாவுக்கு குரல் நடுங்கியது.

நல்லவேளை, செய்குளத்தை மூடியாகி விட்டது என்று ஒரு சிறு நிம்மதியுடன் மூவரும் தோட்டத்திற்கு விரைந்தனர்.

அதற்குள் தன் நடுக்கத்துக்கு வெட்கியவள்போல லேசாக முறுவலித்து, "அவன் வேறே எங்கே போக முடியும். சும்மா தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருப்பான். இப்போது பட்டர்ஃப்ளை விரட்டுவது அவனுக்குப் பெரிய விளையாட்டாய் போய்விட்டது" என்று கூறியபடி இங்கும் அங்குமாய் பார்வையைச் செலுத்தினாள் ரேகா.

அவளுக்கு முன்பாக ஓடிச்சென்று அழைத்துப் பார்த்த வித்யா, தோட்டத்தில் ராஜாவைக் காணாமல் தோட்டக்காரன், வேலையாட்கள் எல்லோரையும் கூப்பிட்டு விசாரித்தாள்.

நான் பார்க்கவில்லை, நான் பார்க்கவில்லை என்று ஒவ்வொருவராகச் சொல்லச் சொல்ல எல்லோருக்கும் வயிற்றில் புளியைக் கரைத்தது.

அந்தச் சின்னக் குழந்தை தானாக எங்கே சென்றிருக்க முடியும்?

அதுவும் கேட்டில் இரு காவலர்களைத் தாண்டிக் கொண்டு?

உள்ளேதான் இருக்கவேண்டும் என்ற நிச்சயத்தில் எல்லோருமாக வீட்டினுள்ளும், தோட்டத்திலும் முழுமையாக அலசித் தேடினார்கள்.

"இரண்டுபேரும் கேட்டைவிட்டு நகரவே இல்லையா?" என்று பவானி அம்மாள் மூன்றாம் தடவையாக வாயிற்

காவலர்களை விசாரித்தபோது ரேகா முதல் தடவையாக உடைந்தாள்.

"அத்தை.... அத்தை எனக்குப் பயமாக இருக்கிறதே" என்று குரல் ஒடுங்கிப் போனாள்.

பெரியவருக்கும் பயம்தான்.

காட்டிக் கொள்ளாமல், "தைரியமாய் இரு ரேகா இத்தனை பேரை மீறிக் குழந்தை எங்கே போய்விட முடியும்" என்றார் தைரியமூட்டும் விதமாக.

ஆனால், "அதுதான் அத்தை. இத்தனை பேரும் காணாமல் அவன் மறைவது என்றால்.... முருகா" என்று இரத்தப் பசையே இல்லாது முகம் வெளுத்தாள் மருமகள்.

"மதிய உணவு கொடுத்தாயல்லவா? தங்கம்மா." என்று விசாரணையில் இறங்கினார் பவானி.

"பிறகும் ஜூஸ் கொடுத்துதான் தூங்க வைத்தேன் அம்மா" என்றாள் தங்கம்மா வேதனையோடு.

"ஒரு மணிக்கு அப்புறமாய்... பிறகு யார் யார் வீட்டுக்கு வந்தார்கள்?"

"மூன்று கார் வந்ததம்மா" என்றார்கள் காவலர்கள்.

"ஒன்றில் அனாதை ஆசிரம நிதிக்காக இரண்டு பேர் வந்தார்கள். அடுத்து உங்கள் அண்ணன் மகன் நவநீதன் சாரும், ஒரு போட்டோ கிராபரும் நம் வீட்டைச் சில போட்டோக்கள் எடுக்கவென்று வந்தார்கள். அப்புறம் லேடீஸ் கிளப்பிலிருந்து வந்தார்கள்" என்று வீட்டோடு இருந்து மேல் வேலையைக் கவனிக்கும் வயதான காரியஸ்தர் விவரித்தார்.

"இவர்களில் யாரும் ராஜாவைத் தூக்கிச் சென்றிருக்க வாய்ப்பில்லை. அன்றி அவனாகவே சென்று காரில் ஏறியிருந்தாலும் கூடப் பார்த்து இறக்கி விட்டுவிட்டுத்தான் போயிருப்பார்கள்... அதிலும் லேடீஸ் கிளப் மெம்பர்களை நானே வாயில் வரை வந்து வழியனுப்பினேன்...."

"அத்தை...." என்று தள்ளாடினாள் ரேகா.

''அண்ணீ....'' என்று அவளைத் தாங்கி அணைத்துக் கொண்டாள் வித்யா. "ராஜா கிடைத்துவிடுவான் அண்ணி, பயப்படாதீர்கள்."

"இ... இல்லை வித்தி. ஒரு வகையிலும் அவனைக் காண வில்லை என்றால்... யாரோ வேண்டுமென்றே தூ தூக்கி.... அத்தை; தைரியமாய் இருக்க வேண்டும் என்றுதான் முயற்சி செய்கிறேன். அத்தை. ஆனால் முடியவில்லையே... பயமாக... அய்யோ, என்னால் தாங்க முடியவில்லையே" என்று தீனக் குரலில் கூறி ஏதோ பயங்கரக் காட்சியைக் காண்பவள்போல கண்களை இறுக மூடிக் கொண்டு தரையில் தொய்ந்து சரிந்தாள் ரேகா.

அவள் அருகே மண்டியிட்ட வித்யாவை பவானி அழைத்தார். "ஓடிப்போய் அண்ணனுக்கு டெலிபோன் செய் வித்யா, முதலில் தூங்கும்முன் ராஜா போட்டிருந்த டிரஸ் எல்லாம் தங்கத்திடம் கேட்டுக் கொண்டு போ" என்று மகளை அனுப்பிவிட்டு மருமகளிடம் திரும்பினார்.

"இதோ பார் ரேகா. சற்று யோசித்துப்பார். வெளி ஆட்கள் யாரும் வந்தால் நாய் சத்தம் கேட்டிருக்கும் இல்லையா? சும்மா இல்லாத கற்பனைகளைச் செய்து கொண்டு நடுங்கக் கூடாதும்மா" என்றார்.

"பின்னே அவனைக் காணோமே..." என்றாள் ரேகா புரியாத வெற்றுப் பார்வையுடன்.

சின்னப் பிள்ளைகளைப் பிடித்துப் போய்க் கை கால்களை முடமாக்கி, கண்ணைப் பறித்து, முகத்தைக் கோரப்படுத்தி பிச்சைத் தொழிலில் ஈடுபடுத்தும் கூட்டம் பற்றி ரேகாவுக்கு நினைவு வந்தது.

ஒவ்வொன்றாக நினைவு வர, நினைவு வர ஒவ்வொரு நினைவுக்கும் உச்சி முதல் உள்ளங்கால் வரை வெளிறி

நடுங்கிய அவளுக்குத் தனக்கென்று இருந்த ஒரே எதிரி நினைவு வராது போனது இன்னொரு பரிதாபம்.

அன்று ரேகா பதிலுக்குத் திருப்பி அடித்ததும் தாரா ஒரு கணம் திகைத்து நின்றாள்.

' ஆனால் உடனேயே வாயில் வழங்க முடியாத வார்த்தைகளை எல்லாம் கொட்டி வசைமாரி பொழிந்தாள்.

ரேகா தொலைபேசியை வைத்து விட்டிருந்ததையே அவள் அறியவில்லை.

வாயில் வந்தபடி ஏசி முடித்தபின் கடைசி வார்த்தையாக, "எந்த வலையைப் பயன்படுத்தி அத்தானைப் பிடித்தாயோ, அந்த வலையை உருத்தெரியாமல் அழித்து விடுகிறேன் பார்" என்று சூளுரைத்தாள்.

பிறகுதான் எதிர்முனையில் ஆள் இல்லாதது புரிந்தது.,

'அவ்வளவு திமிரா, அத்தனையும் ஒடுக்குகிறேன் பார்' என்று கருவிக் கொண்டாள்.

தாரா இவ்வளவு கொதிப்படையக் காரணம் இருந்தது.

தாராவின் தரத்துக்கு இறங்கிய அவளை மடக்கிய போது அதில் கொஞ்சமேனும் உண்மை இருக்கும் என்று ரேகா எண்ணவே இல்லை.

ஆனால் அதில் உண்மை இருந்ததாலேயே தாராவுக்கு சகிக்க முடியாமல் போயிற்று.

அந்த உண்மை ஒரு போட்டோ கிராபர்.

தாராவுடைய அண்ணன் நவநீதனுடைய போதை மருந்து செட்டில் ஒருவன்.

ஓரளவு வசதியுள்ளவன்தான்.

அவனை தாரா நாடிச் சென்றது வேறு ஒரு காரியத்துக்காக.

ஆனால் அந்தக் காரியத்தின் தரம் அவளை மிகவும் மட்டமாக்கி விட்டதை அவள் உணரவில்லை.

அந்த மட்டத்தில் அவன் குளிர் காய்ந்தான்.

இதன் பலனாக தாரா இரண்டு தடவை கருக்கலைப்பு மாத்திரை தின்றிருக்கிறாள்.

அவனுக்கு வேண்டியது ஒரு பெண்ணின் உடலாக இருக்க, விஜயன் மேல் உள்ள வெறியில் அவன் கிட்டாத தவிப்பில், துணிந்து நெருங்கிய இவனை அவனாகக் கற்பனை செய்து கொள்வது எளிதாகப் பட்டது தாராவுக்கு.

பெரிய தவறாகவும் தோன்றவில்லை.

ஏன், விஜயன் மட்டும் சுத்தமாகவா இருந்தான். இரண்டு வயதுப் பிள்ளையோடு வந்து நிற்பவன் எந்த அளவில் சுத்தமாக இருந்திருக்க முடியும்?

ஆனால் அதற்காக அவனை விட்டு விடுவதாகவும் இல்லை.

சின்ன வயதிலிருந்து திருமதி விஜயேந்திர பூபதி ராஜா வாகவே தன்னை எண்ணி வந்திருந்தவள் அந்தப் பதவிக்கு இன்னொருத்தி வந்த பிறகும் அதை ஒப்புவதாக இல்லை.

வந்திருப்பவள் என்ன, பணக்காரியா? அந்தஸ்து உள்ளவளா? அதிகார வர்க்கத்தைச் சேர்ந்தவளா?

இருக்கும் அழகை எடுத்துக் காட்டக் கூடத் தெரியாத சாதாரண மத்திய தரத்துக் குடும்பத்தைச் சேர்ந்தவள்.

கூலிக்கு மாரடிக்கும் கூட்டத்தில் ஒருத்தி.

மானம் ஈனம் என்று இரண்டு வார்த்தைகளில் வாலைச் சுருட்டிக் கொண்டு ஓடிவிடுகிற முட்டாள்.

ஒரு தடவை விரட்டி அடித்து விடவில்லையா?

தாலி கட்டிவிட்டதால் மட்டும் அவள் என்ன உயர்ந்து விடுவாள்.

ஆனால் தாலிகட்டி விட்டதால் மட்டுமே ரேகா விஜயனின் மறுபாதி, அவனுடைய இல்லத்தின் எஜமானி என்றாகி விட்டதை தாரா ஏற்பதாக இல்லை.

விஜயனின் உள்ளம் தன்னுடையது என்று காட்டிக் கொண்டே இருந்தால், இந்த 'உள்ளத்தால் வாழும் நடுத்தர இனத்து முட்டாள்' என்று தானாக விலகி விடுவாள் என்பதில் அவள் நிச்சயமாக இருந்தாள்.

அதற்காகவே ரேகாவின் கண்காண விஜயனிடம் ஒட்டிப் பழகினாள்.

எப்போதுமே அதில் ஒரு சுகம் உண்டுதான். என்றாலும் இப்போது அதற்கு அடுத்தொரு காரணமும் உண்டாகிவிட்டது.

கண்ணில் கலக்கத்துடன் அஞ்சி, ஒதுங்கி நின்ற அவள் ஒட்டி விட்ட சேதி வெறியூட்டியது.

அதுவரை தனக்குச் சாமரம் வீசிக்கொண்டு இருந்த வித்யா எடுத்தெறிந்து பேசி ரேகாவை உயர்வாக மதித்தது மட்டுமே வஞ்சத்தீ எரியப் போதுமானதாக இருந்தது.

கனன்று கொண்டிருந்த அந்தத் தீயில் ரேகாவின் பதில் கேள்வி எண்ணெய், நெய், பெட்ரோல் எல்லாவற்றையும் சேர்த்து ஊற்றியது.

பழி பழி பழி!

அவளைப் பழி வாங்கியே தீர வேண்டும்.

அவள் துடியாய்த் துடிக்க வேண்டும்.

இதயம் வெடித்துச் சாக வேண்டும்.

எப்படி?

நெஞ்சு முட்ட நிறைந்திருந்த வன்மத்துடன் தாரா திட்டம் தீட்டினாள்.

நவநீதனை மடக்குவது எளிது.

தானாக ஒரு காசு சம்பாதித்து அறியாத அவனுக்குத் தந்தை பணம் கொடுப்பதை அறவே நிறுத்தியிருந்தார்.

சிறு வயதில் இருந்தே செட்சேர்த்துக் கொண்டு சவடாலாகச் செலவழிக்கும் அவனுக்கு இந்த 'மாலி'ல் இறங்கிய பிறகு

தந்தை அறியாமல் தாயார் கொடுக்கும் பணம் போதுமான தாக இருக்கவில்லை.

ஏதாவது நகை, துணி வாங்கப் போவதாகச் சொல்லித் தந்தையிடம் அதிகப் பணம் பெற்று, அதில் கொஞ்சத்தைத் தாரா அண்ணனுக்குக் கொடுப்பதும், அவன் அந்தப் பணத்துக்காக தங்கை சொல்படி ஆடுவதும் எப்போதும் நடக்கிற விஷயம்தான்.

'மாலு'க்கும், மங்கைக்கும், மற்ற நண்பர்களுக்கும் வாரி இறைக்கப் பணம் கிடைக்கும் என்றால் நவநீத்துக்கு நியாய அநியாயமே கிடையாது.

புகைப்படக்காரனோ, கேட்கவே வேண்டாம்.

விஜயன் வீடு தாராவுக்கு அத்துப்படி.

ராஜா உறங்கும் நேரம் தெரியும்.

வீட்டின் கலை அழகைப் புகைப்படம் எடுப்பதாகச் சொல்லி உள்ளே நுழைந்தபின், லேசான மயக்க மருந்தைப் பயன்படுத்தி, துவண்டு விட்ட பிள்ளையைக் கடத்திச் செல்வது அவர்கள் இருவருக்கும் சற்றும் கடினமாக இல்லை.

அதிலும் ஒரு சிறிதும் சந்தேகப்படாத இடத்தில் சந்தேகப் படாத மனிதர்களிடமிருந்து.

பூதலூர் தாண்டி உள்பகுதியில் ஒரு பண்ணையும் நடுவே ஒரு கல் வீடும் நவநீதனுடைய தாத்தாவின் சொத்து இருந்தது.

பாட்டன் சொத்து, பேரனுக்கு உரியதாகவும் இருந்தது.

நவநீதன் கம்பெனியாரின் லீலைகள் நடக்கும் இடம் அதுதான்.

தாரா சருக்கமும் அங்கேதான்.

ராஜாவைக் கொணர்ந்து ஹாலில் கிடந்த சோபாவில் கிடத்திவிட்டு வெற்றியுடன் நிமிர்ந்தான் போட்டோ கிராபர்.

தாராவிடம் பணத்தை வாங்கிக் கொண்டு, டீலரிடம் 'மால்' வாங்குவதற்காக ஓடினான் நவநீதன்.

"ஏய் என்ன பரிசு ஒன்றும் கிடையாதா?" என்று தாராவின் தோளைப் பற்றினான் போட்டோகிராபர்.

அவன் கையைத் தட்டிவிட்டு, துவண்டு கிடந்த பிள்ளையை நெருங்கினாள் தாரா.

சாயம் தீட்டிச் சிவந்திருந்த நீண்ட நகங்களை, ஒரு தரம் விரல்களை விரித்து மடக்கிப் பார்த்தாள்.

விரல்களை நீட்டிக் கொண்டு சோபாவை நெருங்கினாள்.

மாசு மறுவற்ற அந்தப் பால்முகம் என்ன செய்ததோ?

திருப்பி, "இவனைக் கொல்ல வேண்டும்" என்றாள் அருகே நின்ற அவனிடம்.

"கொலையா? அப்படி என்ன தாரா?" என்று ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான் அவன்.

"அப்படித்தான். அப்படியேதான். தலையணையை முகத்தில் அழுத்திக் கொன்றால், உடம்பு கிடைத்தால்கூட ஒன்றும் தெரியாது. கொன்று விட்டு உடம்பை எங்காவது வீசிவிடலாம். ஆனால் கிடைக்கும்படியான இடத்தில்தான் வீச வேண்டும். உடம்பைப் பார்த்துப் பார்த்து அவள் கதற வேண்டும்... துடிக்க வேண்டும்....

வெறி பிடித்தவள் போல அவள் பேசிக் கொண்டே செல்ல அவன் கண்கள் இடுங்கின.

"ம்.... கொல்லு அவனை" என்று உத்தரவிட்டாள் தாரா.

"ஓ கே. செய்துவிடலாம் ஆனால் முதலில்..." என்று அவள் தோளில் மீண்டும் கை வைத்தான் அவன்,

"பிறகு..." என்றாள் அவள் ஒரு கொக்குப் பார்வையுடன்.

"ஊகூம். முதலில்..." என்றான் அவன் பிடிவாதமாக.

"சரி... சரி. ஆனால் இந்தச் சனி விழித்துக் கொண்டு தப்பி ஓடி விடாதே?"

"சேச்சே. விழிப்பதாவது, ஓடுவதாவது? அப்படியே ஓடினால் கூட, எவ்வளவு தூரம் ஓடிவிடுவான்? அத்தோடு எதிலிருந்து தப்ப எண்ணி ஓடப் போகிறான்? இவன் எதற்காக இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறான் என்று பிட்டுப் பிட்டுச் சொன்னால்கூட அவனால் புரிந்து கொள்ள முடியாதே என்று சிரித்தான் போட்டோ கிராபர்.

தனக்கு நேர்ந்திருக்கும் ஆபத்தையோ, நேர இருக்கும் அபாயத்தையோ சற்றும் அறியாத பாலகன் தன்னுணர்வற்று மயக்கத்தில் ஆழ்ந்திருந்தான்.

## 17

வித்யா டெலிபோனில் பேசியதைக் கேட்டதும் விஜயன் சற்று நேரம் ஒன்றும் பேசவில்லை.

இந்த மாதிரியெல்லாம் அவன் வீட்டில் வேடிக்கை செய்வதில்லை என்று அறிந்திருந்ததால் அநாவசியமான குறுக்குக் கோள்விகள் போடாமல் தங்கையைப் பேச விட்டான்.

"வீடு, தோட்டம் எல்லாம் முழுக்க முழுக்க நன்றாகத் தேடி விட்டோம். ஒரு இடத்திலும் அவனைக் காணவில்லை" என்று அவள் அவசரமாகச் சொல்லி முடிக்கவும், "அண்ணி எப்படி இருக்கிறாள்?" என்று முதல் கேள்வியைக் கேட்டான்.

"ரொம்பவும் பயந்து போய்... அண்ணா, நீங்கள் உடனே வாருங்களேன்" என்றாள் வித்யாவும் கண்ணீர் குரலில்.

"ஷ். வித்தி. அழக்கூடாது. நான் இங்கே நம் சதா சாரிடம் ஒரு ஏற்பாடு செய்துவிட்டு சீக்கிரமாய் வந்துவிடுகிறேன். அது வரை நீதான் பயப்படாமல் அண்ணியையும், அம்மாவையும் பார்த்துக் கொள்ளவேண்டும். என் வித்யா தைரியசாலி ஆயிற்றே" என்று தங்கையைத் தட்டிக் கொடுத்தது அவளுக்கு ஒரு பொறுப்பையும் தந்து அனுப்பினாள்.

தஞ்சை எஸ்.பி. அவனுடைய நெருங்கிய நண்பர்.

ஒரு மீட்டிங்கில் இருந்த அவரை டெலிபோனில் பிடித்தான். விஷயத்தைச் சொன்னான்.

"முதலில் நன்றாக இன்னொரு தரம் தேடிப்பார்க்கச் சொல்லுங்கள்" என்றார் அவர்.

"தேவை இராது சதா. இங்கே ஒவ்வொரு மூலை முடுக்கையும் தேடி முடிக்காமல் அம்மா எனக்குத் தகவல் கொடுக்க மாட்டார்கள்... சதா, நான் இப்போது வீட்டிற்குப் போகிறேன். அவனுடைய போட்டோ சிலது அனுப்புகிறேன் ம்...? இதோ, என் மேசையில் ஒன்று இருக்கிறது. அந்தப் படத்தை முதலில் அனுப்பி விட்டுப்போகிறேன். இன்னொன்று, ஆழ்ந்த நீலத்தில் வெள்ளையில் முன் பக்கம் முழுதும் கோடு போட்ட டீ ஷர்ட் அணிந்திருந்தானாம். ஷூ போடவில்லை, மதியம் ஒரு மணிக்குத் தூங்க வைத்த போதுதான் கடைசியாகப் பார்த்தது" என்று தேவைப்படுமென்று தோன்றிய விவரங்களைத் தான் அறிந்தவரையில் லேசாகக் கூறினான் விஜயன்.

"கவலைப்படவேண்டாம் விஜய். வெளியே செல்லக்கூடிய வழிகளை எல்லாம் 'ஸீல்' செய்து விடுகிறேன். மற்றபடியும் தேவையான எல்லா ஏற்பாடுகளையும் எங்கள் முறையில் செய்து விடுகிறேன். தைரியமாய் இருங்கள், இன்றே உங்கள் மகனைக் கண்டுபிடித்துவிடலாம்" என்று உற்சாகமாகப் பேசினார் சதானந்தம்.

மானேஜரை அழைத்து கவனித்துக்கொள்ளும்படி கூறி விட்டு, சதானந்தத்திடம் சொன்னபடி போட்டோவை அனுப்பி விட்டு வீட்டுக்கு விரைந்தான்.

சக்தியே இல்லாதது போலத் தொய்ந்து கிடந்த ரேகாவின் கால்களுக்கு எங்கிருந்துதான் அவ்வளவு வேகம் வந்ததோ?

அவன் குரல் கேட்டதும், 'விஜீ' என்ற கதறலுடன் பறந்தோடி வந்து அவன் மார்பில் புதைந்தாள்.

"எனக்கும் பயமாய் இருக்கிறதே விஜீ, என்னால் தாங்க முடியவில்லையே. வயிறெல்லாம் காந்துகிறது விஜீ என்னால்... என்னால்... விஜீ" என்று கொட்டித் தீர்த்தாள்.

அவளை நெஞ்சோடு அணைத்து, "ஷ் என்ன பயம் ரேகா? தைரியமாய் இரு. ராஜா கிடைத்து விடுவான்" என்று தேற்றினான் விஜயன்.

நெஞ்சின் ஏக்கம், பயம் எல்லாவற்றையும் கண்ணில் தேக்கி, "நிஜமாகக் கிடைத்து விடுவானா விஜி?" என்று கேட்டாள் அவள்.

அந்தப் பார்வைக்கு பதில் சொல்வது கடினமாக இருந்தாலும், அவள் கூந்தலை வருடி, "நிச்சயம்" என்றான் விஜயன்.

அவ்வளவில் அமைதியுற்றாள் ரேகா.

ஓர் ஆழ்ந்த பார்வையால் அவளை அளந்துவிட்டு, கை வளைவில் அவளையும் அழைத்துக் கொண்டு தாயாரிடம் சென்றாள் விஜயன்.

"தூங்குகிறான் என்று விட்டுவிட்டுப் போனேன் தம்பி" என்று கண்ணீருடன் புலம்பினாள் தங்கம்மாள்.

அவள் கையைப் பற்றி அழுத்தி, "உன்மேல் தப்பு இருக்காது என்று எனக்குத் தெரியும். தங்கம்மா" என்று ஆறுதலாகப் பேசிவிட்டுத் தாயிடம் திரும்பினான் அவன்.

பவானியின் முகம் இறுகி இருப்பதைக் கண்டதும் அவர் பெருமுயற்சியுடன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு இருப்பது புரிந்தவனாய், போலீஸ் அதிகாரி செய்திருக்கும் ஏற்பாடுகளை விவரித்தான்.

"ராஜாவின் போட்டோ இன்னும் சிலது வேண்டும் என்றார் சதா இருக்கிறதில்லையா?" என்று கேட்டான்.

போட்டோ என்றதும் எடுத்து வர எண்ணி ஓர் எட்டு எடுத்து வைத்தாள் ரேகா.

ஆனால் அவனிடமிருந்து விலகியதுமே திக்கற்றுப் போனாற் போல உணர்ந்து மீண்டும் அவனிடமே ஒண்டினாள்.

கெஞ்சலாக வித்யாவை நோக்கி, "என் ரூமில் ஷெல்பில் மேல் தட்டில், கடைசியாக வந்த ஆல்பம் இருக்கிறது வித்யா. அதில் இன்று போட்டிருந்த டிரஸ்ஸோடு கூட..." என்றவள் உதட்டைக் கடித்து நடுக்கத்தை நிறுத்தினாள்.

வித்யா சிட்டாய் பறந்து சென்று ஆல்பத்தைக் கொண்டுவர, அதை எஸ்.பி.யிடம் கொடுத்து வருமாறு டிரைவரைக் காரோடு அனுப்பினான்.

அப்புறமாய் செய்வதற்கு ஒன்றுமில்லாமல் காத்திருக்க நேர்ந்த அந்த நேரம் எல்லோருடைய தைரியத்தையும் பலமாய் சோதித்துக் கொண்டிருந்தபோது, டெலிபோன் பொறுப்பை கவனிப்பவன் ஓடிவந்தான்.

"அய்யா. உங்களிடம் பேசவேண்டும். உங்கள் மாமா கூப்பிடுகிறார்கள். ரொம்ப அவசரமாம்" என்றான் பரபரப்புடன்.

நனைந்த கோழிக்குஞ்சு போலத் தோள் வளைவில் ஒண்டிக் கொண்டு நின்ற மனைவியை ஒருதரம் பார்த்தான் விஜயன்.

தாயார் அருகே கொண்டுவிட்டு "அம்மாவிடம் இரு" என்று அவளைப் பணித்துவிட்டு உள்ளே விரைந்தான்.

ஓரிரு நிமிடங்களில் அவன் வெளியே வந்தபோது முகம் மலர்ந்திருந்தது.

"ராஜா கிடைத்துவிட்டான்" என்றான் உரக்க.

கவலையோடு குழுமியிருந்த வேலையாட்கள் அனைவரும் நிம்மதியோடு அவரவர் வேலையைப் பார்க்க கலைந்து சென்றனர்.

"ராஜா எங்கே இருக்கிறான்?"

"எப்படி இருக்கிறான்?"

"அவனைப் பார்க்கவேண்டுமே."

என்று அவசரப்பட்ட குடும்பத்தினரிடம் "தேவி அழைத்து வருகிறாளாம்" என்றான் விஜயன் தணிவான குரலில்.

ஒருகணம் திகைத்துப் பின் கண் அகல, "தாரா தேவி" என்றாள் ரேகா.

சட்டென அவள் வாயைப் பொத்தி, "ஒன்றும் பேசாதே ரேகா. மாமாவுக்காக" என்று அடக்கினான் அவன்.

"ராஜா... ராஜா நன்றாய்த்தானே..." என்று மீண்டும் பயத்துடன் நெஞ்சை அழுத்திக் கொண்டாள் ரேகா.

"ரேகா" என்று மீண்டும் அவளைத் தன்னோடு லேசாகச் சேர்த்து அணைத்துக் கொண்டான் விஜயன்.

அப்போதும் அவள் உடம்பு நடுங்குவதை உணர்ந்து லேசாகத் தட்டிக் கொடுத்தான்.

"ஒன்று இராது, பயப்படாதே."

"அவனைக் கடத்திக் கொண்டு செல்கிற அளவுக்கு துணிந்தவர்கள் சும்மா விளையாட்டுக்குக்கூடச் செய்ய மாட்டார்கள்" என்று மீண்டும் குலுங்கினாள் ரேகா.

"சும்மா சும்மா கலங்கக்கூடாது. பயப்படும்படியாக எதுவும் நேர்ந்திருந்தால் மாமா சொல்லியிருப்பார்கள் இல்லையா? யோசி..." என்று தேறுதலாகப் பேசினான் அவன்.

இவ்வளவு நேரம் திகைத்து நின்ற வித்யாவுக்கு அப்போது தான் விஷயம் புரிந்தது.

"அண்ணா, நீங்கள் என்ன சொல்லிக் கொண்டு இருக்கிறீர்கள்? தாராக்காவா ராஜாவைத் தூக்கிப் போய்... ஓ. நவநீ அத்தான். இன்னொருவரோடு போட்டோ எடுக்க என்று வந்தது இவனைத் தூக்கிப் போகவா... முறைத்து, பார்க்காதீர்கள் அண்ணா, நான் மெல்லத்தானே பேசுகிறேன், வேறு யாருக்கும் கேட்காது. சொல்லுங்கள் தாராக்கா, நவநீ அத்தான் எல்லோரும் சேர்ந்து திட்டம் போட்டுச் செய்த சதியா?" வியப்பும் கோபமுமாய் விசாரித்தாள்.

'ஆம்' என்பது போலத் தமையன் தலையசைக்கவும், "ராட்சசர்கள்! பிசாசுகள்!" என்று ஆத்திரத்தோடு தனக்குத் தெரிந்த வசை மொழிகளை உதிர்த்தாள்.

"அடக்கிக் கொள், வித்யா" என்று மகளிடம் கூறி விட்டு மகனிடம் திரும்பினார் பவானி. "எஸ்.பி.க்குச் சொல்லி விட்டாயா விஜய்? விஷயம் வெளியே பரவாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்?" என்றார்.

"அவருக்கு போன் செய்து விட்டுத்தான் வந்தேன். ஏற்கனவே அவர் கேஸ் என்று எதுவும் பதிவு செய்யவில்லை அதனால் ஒன்றும் இராது. மொத்தத்தில் நம்முடைய கவனப் பிசகு என்பது போல் முடித்துவிடச் சொல்லியிருக்கிறேன்" என்றான் மகன்.

"கவனப் பிசகாம், கவனப் பிசகு, இனி தாரா அக்காவோ நவநீ அத்தானோ இந்தப் பக்கம் கால் எடுத்து வைக்கட்டும் சொல்கிறேன்" என்று பல்லைக் கடித்தாள் வித்யா.

"மாமாவின் பிள்ளைகள் வித்யா" என்றான் விஜயன்.

"ஆனாலும் இவ்வளவு செய்தவர்களைச் சும்மா விடுவது என்றால் அநியாயமாய் இருக்கிறது அண்ணா" என்றாள் வித்யா சினம் தணியாமல்.

திடுமெனக் "கார்..." என்று உடல் விறைத்தாள் ரேகா.

இன்னமும் மகனுடைய முழு சுகத்தில் அவளுக்கு நம்பிக்கை வரவில்லை.

தேவி வந்த கார் நிற்குமுன் அங்கே ஓட முயன்றவளைத் தன் பிடியிலேயே நிறுத்தித் தடுத்தான் விஜயன்.

"ரேகா, பதற்றம் இல்லாமல் எப்போதும் போலச் சாதாரண மாக நடந்து கொள்ளவேண்டும். இந்தக் கண்ணீர் முரட்டு அணைப்பு என்று அவனைப் பயமுறுத்தி விடாதே" என்று எச்சரித்தான்.

தலையசைத்துவிட்டு அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டாள் அவள்.

கார் நிற்குமுன்பே இவர்கள் நால்வரையும் கண்டுவிட்ட தேவி, புன்னகையோடு கையாட்டினாள்.

ராஜாவைத் தூக்கிக் கொண்டு அவள் இறங்கவும், "என் கண்ணு ராஜா" என்று அவனைத் தூக்கி கொண்டாள் வித்யா.

அச்சம் தீர்ந்திராத தாயின் கண்கள் மட்டும் உச்சி முதல் உள்ளங்கால் வரை மகனை வேகமாகப் பலமுறை பார்த்துப் பரிசீலித்தது.

காயம் கன்றல் என்றுகூட எதுவும் இல்லை என்பதை அறியவும் அவ்வளவு நேரம் இருந்த இறுக்கம் மறைந்து அப்படியே தொய்ந்தாள்.

விஜயனுடைய கை மட்டும் இல்லையென்றால் கீழேயே சரிந்திருப்பாள்.

அது தெரியாமல் "அம்மா, பாத்திம்மா. டாஜா கார்லே ஆன்ட்டிகூட வந்தாளே" என்று உற்சாகமாக அறிவித்தான் குழந்தை.

"அப்படியடா என் கண்ணே" என்று பேரனை வாங்கி உச்சி முகர்ந்தார் பவானி.

அதிர்ச்சியும், அவ்வளவு நேரம் உலுக்கி எடுத்த உணர்ச்சிகள் பாதிப்பும் வடியவும் 'ரீ ஆக்ஷன்' போல எவ்வளவோ முயன்றும் கட்டுப்படுத்த முடியாமல் ரேகாவின் உடம்பு நடுங்கத் தொடங்கியது.

மனைவியின் நிலை புரிந்துவிட, "அம்மா நான் இவளை மாடிக்குக் கூட்டிப் போகிறேன். நீங்கள் ஏதாவது சூடாக பானம் அனுப்புங்கள். பிறகு பேசலாம், தேவி. என்ன? ரேகா, வா... என்றவன் அவளது உடல் பூராவும் உதறுவது கண்டு சட்டெனக் கைகளில் ஏந்திக் கொண்டு படியேறிச் சென்றான்.

கட்டிலில் கிடத்தி நன்றாக மூடிவிட்டான்.

சில்லிட்டிருந்த கைகால்களை வேகமாகச் சூடு வரத் தேய்க்கலானான்.

அதற்குள் பாலில் ஓவல் கலந்து எடுத்து வந்த பவானியும் அவனுக்கு உதவி புரிய ரேகாவின் நடுக்கம் மெல்லக் குறைந்தது.

பாலைக் குடிக்கச் செய்து, மீண்டும் படுக்க வைத்து நன்றாக மூடிவிட்ட பிறகு, "ராஜா பத்திரமாய் இருக்கிறான் அதனால் அலட்டிக் கொள்ளாமல் சற்று நேரம் நன்றாகத் தூங்கு" என்று மருமகளிடம் கூறினார் பவானி.

"நீயும் ரேகா பக்கத்திலேயே இரு" என்று மகனையும் பணித்து விட்டுச் சென்றார்.

தூங்கும்படி ரேகாவை வற்புறுத்தத் தேவை இருக்கவில்லை.

அவனது விரல்கள் அவளுடைய புருவங்களை மெல்ல நீவிவிடத் தொடங்கியதுமே அவள் விழிகள் மூடிவிட்டன.

ரேகா உயர்ந்து உறங்கியதும் விஜயன் கீழே இறங்கி வந்தான்.

தேவியை அழைத்துப் பேசினான்.

தயக்கத்துடன் "அப்பா எதுவும் சொன்னார்களா அத்தான்?" என்று கேட்டாள்.

"நீ சொல்வாய் என்றார். குரல் நொந்தாற்போல இருக்கவே நானும் ஒன்றும் கேட்கவில்லை" என்றான் விஜயன்.

"ஆமாம் அப்பாவுக்கு ரொம்பவும் வேதனைதான்" என்றாள் தேவி வருத்தமாக.

பிறகு அவளே தொடங்கினாள். "தாராக்கா... அத்தான், தாராக்காவுக்கு ரேகா அக்காவிடம் ஓரே பொறாமை."

"ம்."

ஒரு பெரிய மூச்சை எடுத்த தேவி மடமடவென்று சொல்லத் தொடங்கினாள். "அக்கா செய்தது எதுவும் எனக்குப் பிடிக்க வில்லை அத்தான். ரொம்பத் தப்பு செய்கிறாள் என்று அம்மாவிடம் சொல்லிப் பார்த்தேன். நல்ல திட்டுத்தான் கிடைத்தது. எனக்கு அக்காவைப் பார்த்துப் பொறாமை என்று அண்ணனைப் பற்றி உங்களுக்குத் தெரியும். கடைசியில் அப்பாவிடம் மெல்லச் சொன்னேன். கொஞ்சம் கவனித்து அவரிடம் வந்து சொல்லச் சொன்னார். பார்த்ததில்... பார்த்ததில் அத்தான், முதலில் எல்லாம் கொஞ்சம் கொஞ்சம் ஒரு மாதிரி யான படங்கள்தான். பிறகு ரேகாக்கா வந்த பிறகு வெறி பிடித்த மாதிரி ஆகிவிட்டாள். ரொம்ப அசிங்கமாய் ஒரு ஆல்பம்..." என்று அந்த போட்டோ ஆல்பம் பற்றிக் கூறினாள்.

"சினிமா ஸ்டில்களை எடுத்து அதில் உங்கள்... உங்கள் முகத்தையும் தாராக்கா முகத்தையும் ஒட்டித் தயார் செய்திருந் தாள். அதையெல்லாம் தயார் பண்ணிக் கொடுத்தது ஒரு போட்டோகிராபர். அண்ணனுடைய போதை ஃபிராண்டு" என்றவள், முகம் ரத்தமெனச் சிவக்க, "அது ரொம்பவும் அசிங்கக் கதை, அத்தான். அன்றைக்கு வித்யாக்காவிடம் கோபமாகப் பேசி ஒதுங்கச் சொன்னாள். அன்றைக்கு அக்கா தூங்கவே இல்லை. குறுக்கும் நெடுக்குமாகப் புலி மாதிரி ஒரே நடைதான். மறுநாள் ரேகாக்காவுக்கு டெலிபோன் செய்து ரொம்பக் கீழ்த்தரமாய் ஏதேதோ பேசினாள். கடைசியாக அத்தானைப் பிடித்த வலையை அழித்துவிடுவதாகச் சொன்னாள். அது... அது... ராஜாவை என்று நான் நினைக்க வில்லை அத்தான்."

"பிறகு?" என்று இறுகிய குரலில் கேட்டான் விஜயன்.

"ஆனால் ரேகாக்காவுக்கு ஏதோ கெடுதல் செய்யப் போகிறாள் என்பது தெரிந்தது. அப்பாவிடமும் சொல்லியிருந் தேன். ஒரு டெலிபோன் கால் வந்ததும் 'ஷாப்பிங்' போவதாக அம்மாவிடம் சொல்லிவிட்டு அக்கா அவசரமாகக் கிளம்பினாள்."

"எனக்குப் புரிந்து போயிற்று. அப்பா சொல்லியிருந்தபடி அவருக்குத் தகவல் சொல்லி விட்டு எனக்குத் தனியாக அப்பா ஏற்பாடு செய்திருந்த காரில் பண்ணை வீட்டுக்குப் போனேன்."

"என்னிடமும் சொல்லியிருக்கலாமே, அங்கெல்லாம் நீ தனியாகப் போகலாமா?" என்று கேட்டான் விஜயன்.

"தனியாக இல்லை, டிரைவர் துப்பாக்கியோடு எதற்கும் தயாராகத்தான் இருந்தான்."

"ம்..."

இவ்வளவு நேரம் சொல்லிக்கொண்டே சென்ற தேவிக்கு இப்போது தொண்டையை அடைத்தது.

மிடறு விழுங்கி சமாளித்துக் கொண்டு, "ராஜா சோபாவில் கிடந்தான். பக்கத்து அறையில்" என்றவள் சட்டெனப் பெருகிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மேலே சொன்னாள்.

"நான் சென்றது, பார்த்தது எதுவும் அவர்களுக்குத் தெரியாது. ராஜாவை தூக்கிக் கொண்டு நான் கிளம்பிய போது அப்பாவும் வந்துவிட்டார்... பாவம் அப்பா" என்று மேலும் கண்ணீர் சிந்தினாள்.

தந்தைக்கு நிகராகத் தான் மதிக்கும் தன் மாமன் பார்த்திருக்கக்கூடிய காட்சி என்னவென்று அவனால் ஊகிக்க முடிந்தது.

அவராவது பெரியவர்.

இவள், பதினைந்து வயதுப் பச்சைமண் - இவள் வயதில் வித்யா பாதி இரவில் விழித்துக் கொண்டு அழுவாள் - இந்த சின்னப் பெண்ணுக்கு எவ்வளவு கொடூரமான அனுபவம்

இவளே இன்னும் சற்றுச் சிறியவளாய் இருந்திருந்தால் மடியில் வைத்து ஆறுதல் சொல்லலாம்.

கூடப் பிறந்திருந்தால் கண்ணீரைத் துடைத்துவிடலாம்.

எதையும் செய்ய முடியாமல் அவள் அழுவதை இரக்கத்துடன் பார்த்துக் கொண்டு இருந்தான் விஜயன்.

தானாகவே ஒருவாறு சுதாரித்துக் கொண்டாள் தேவி.

"அத்தான், அப்பா சொன்னார், அண்ணனை போதை மருந்து உட்கொள்ளுகிறவர்களுக்கு என்று ஒரு மருத்துவமனை இருக்கிறதாமே; அதில் சேர்த்து விடப் போகிறாராம். அக்காவையும் அம்மாவையும் காவலோடு பம்பாயில் குடி வைக்கப் போகிறாராம்."

"நான்...எனக்கு அவளோடு வசிக்க இஷ்டமே இல்லை அத்தான்...வந்து எங்கள் நவநீ அண்ணன் உங்கள் மாதிரி இல்லையே என்று ரொம்ப ஏங்கி இருக்கிறேன் அத்தான். நான் இங்கே உங்கள் வீட்டில் இருந்து கொள்ளலாமா அத்தான்? ரேகாக்கா, அத்தை நீங்கள் எல்லோரும் சம்மதித்தால் இருக்கலாம் என்று அப்பா சொன்னார் ப்ளீஸ், அத்தான் எல்லோரிடமும் கேட்டுச் சொல்கிறீர்களா?" என்றாள் கன்றிச் சிவந்த முகத்துடன்.

"கேட்க வேறு வேண்டுமா? பைத்தியம் உன் ரேகாக்காவுக்குத்தான் நீ என்றால் உயிராயிற்றே. அம்மா, வித்தி பற்றிக் கேட்கவே வேண்டாம். நீயாக பம்பாய் போவதாகச் சொன்னால் கூட விடவே மாட்டார்கள். போம்மா... போய் முகத்தைக் கழுவிக் கொண்டு வித்யாவோடு பேசிக்கொண்டு இரு" என்று அவன் கூறவும் தேவியின் முகம் தாமரையாய் மலர்ந்தது.

தாயாரிடம் சுருக்கமாக விஷயத்தைக் கூறிவிட்டு மீண்டும் மனைவியிடமே சென்றான்.

அவள் துயில்வதைப் பார்த்தபடி புருவமத்தியில் ஒரு சிந்தனை முடிச்சுடன் அவள் அருகிலேயே அமர்ந்தான்.

## 18

வெகு தீவிரமாக யோசனையில் மூழ்கியவனாய், ஜீவரேகா துயில் எழுவதற்காகக் காத்திருந்தான் விஜயேந்திரன்.

ஓர் இரண்டு மணிநேர மன உளைச்சலில் அடித்துப் போட்டாற்போல அயர்ந்து போன மனைவியைப் பார்க்கையில் அவனுக்குப் பரிதாபமாகக்கூட இருந்தது.

ஆயினும் அதையும் மீறி அவனுக்கு ஒன்று தெரிய வேண்டியிருந்தது.

அதைப்பற்றிச் சிந்தித்தவாறே காத்திருந்தான்.

இடையில் பவானி ஒரு தரம் வந்து பார்த்தார்?

மருமகளை இரக்கமாகப் பார்த்துவிட்டு, "ரொம்பவும் கலவரப்பட்டு போனாள். பாவம் பெற்ற மனம் இல்லையா?" என்றார் பரிவாக.

"நீங்கள் மட்டும் எப்படியாம்?" என்று புன்னகை செய்தான் மகன். "இவளையும் சேர்த்துப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதால் வெளியே காட்டாமல் சமாளித்தீர்கள்" என்றான் பெருமையுடனேயே.

ஒரு பெருமூச்சுடன் ஒத்துக் கொண்டார் அன்னை. "இடையில் சற்று நேரம் எல்லாம் ஒரே இருட்டான மாதிரி ஆகிவிட்டதடா, எப்படியோ, என் கண்ணப்பன் நல்லபடியாத் திரும்பி வந்தானோ, எல்லோர் உயிரும் நிலைத்ததோ, சரிசரி இனி இந்தப் பேச்சை எடுத்துத் திரும்பத் திரும்ப வேதனைப் படக்கூடாது. இப்போது நீயும் சற்று ஓய்வெடுக்கிறாயா? நான் வேண்டுமானால் ரேகாவுக்குத் துணையாக இருக்கிறேன்" என்று உதவ முன் வந்தார்.

"ஊகூம், துணையெல்லாம் தேவையில்லை அம்மா; நான் சும்மாதான் இங்கே உட்கார்ந்திருக்கிறேன்" என்றான் ஒரு முறுவலுடன் மகன்.

மைந்தனின் முகத்தைக் கூர்ந்து பார்த்தார் பவானி. பிறகு, "கண்ணா உனக்கும் உன் மனைவிக்கும் இடையே என்னென்ன

வேறுபாடுகள் நிகழ்ந்தனவோ, தெரியாது. எப்படியோ, எல்லாம் நன்றாகி விட்டதாக நினைத்தேன். அப்படி இன்றி மிச்சம் மீதி ஏதும் இருந்தால் பிறகு பார்த்துக் கொள்ளலாம். இன்றைக்கே அவளை வறுத்து எடுக்காதே...." பாவம் என்றார்.

"என்னம்மா, அநியாயமாய்ப் பேசுகிறீர்களே. நான் அப்படி வறுத்து எடுக்கிறவனா?" என்று கேட்டுச் சிரித்தான் விஜயன்.

"இல்லை தான். ஆனால் ஒன்றை நினைத்தால் முடிக்கும் வரை ஓய மாட்டாயே, அந்தச் சமயத்துத் தோற்றம் தெரிகிறது. அதனால் சொன்னேன்" என்று விடாமல் சொன்னார் பவானி.

பதில் சொல்லாமல் புன்னகை செய்தான் விஜயன்.

உடனேயே முகம் மாறி, "அம்மா மாமாவின் கார் சத்தம், வாருங்கள்" என்று தாயையும் அழைத்துக்கொண்டு கீழே சென்றான்.

தன் சின்ன மகள் மென்குரலில் ஏதோ கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்த சிவராமன் அரவம் கேட்டுத் திரும்பினார்.

ஒரே நாளில் பத்து வயது மூத்துத் தெரிந்த அவரை கண்டதும் விஜயனின் மனது உருகிப் போயிற்று.

அவனுடைய தந்தை இறந்த சமயத்தில் தவிர அவர் கண்களில் சிரிப்பில்லாதபடி இப்போதுதான் காண்கிறான்.

சிரிப்பு இல்லாதது மட்டுமல்ல. லேசான கண்ணீரும் கூட...

விரைந்து வந்து கையைப் பற்றியவனிடம் "என்னை மன்னித்து விடப்பா" என்றார் அவர் வருத்தத்துடன்.

"என்ன பேச்சு மாமா இது? நீங்கள் என்னிடம் மன்னிப்புக் கேட்பதா?" என்று அன்பான குரலில் ஆட்சேபித்தான் விஜயன்.

"வா தேவி அப்பாவுக்குச் சாப்பாடு எடுத்து வைக்கலாம்" என்று வாடி நின்ற தேவியை அழைத்தார், பவானி.

"சாப்பாடு வேண்டாம்மா. கொஞ்சம் குளிர்ச்சியாய் ஏதாவது குடிக்கக் கொடு போதும். தொண்டையெல்லாம் காய்ந்து போனமாதிரி இருக்கிறது" என்று கூறி அனுப்பினார் சிவராமன்.

"ரேகா எங்கேப்பா? பிரியமாய்ப் பேசுகிற பெண் அவள் முகத்தில் எப்படி விழிப்பது என்றே தெரியவில்லை."

"அவள் தூங்கி விட்டாள் மாமா?" என்று அவரை அழைத்துச் சென்று சோபாவில் அமர வைத்தான் விஜயன்

"மனது ஓய்ந்து போயிருப்பாள் பாவம், அவளிடமும் மன்னிப்புக் கேட்டேன் என்று சொல்கிறாயா?"

"மாமா..." என்று இடைமறித்தவனைக் கையமர்த்தி மேலே பேசினார். "மோசமான பிள்ளைகளைப் பெற்று விட்டேன் என்று ஏற்கனவே வருத்தமாய்த்தான் இருந்தேன். ஆனால் இவ்வளவு மோசம் என்று தெரியாதப்பா. அதிலும் தாரா-உன்மேல் ஆசைப்பட்டாள், பாவம்...நாளாவட்டத்தில் சரியாகி விடுவாள் என்று நினைத்தேன். அவளோ, அவனைவிடக் கேவலமான வெறும் பிண்டமாகி விட்டாள். கூடப் பிறந்த தங்கை, கதவைக் கூடச் சாத்தாமல் பக்கத்து அறையில் கேவலத்தில் ஈடுபட்டிருக்கிறாள். அந்தக் கழுதை 'மால்' அடித்துவிட்டு மயங்கிக் கிடக்கிறது. போதுமப்பா. போதும் இன்னமும் ஒரு பிறவிக்கு இந்த அவமானம் போதும்" என்றும் தழுதழுத்த குரலில் வருந்தினார் பெரியவர்.

"கெட்ட சகவாசம் விலகிவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் மாமா" என்று தேற்றினான் விஜயன்.

"சரியாகித்தான் தீரவேண்டும்" என்றார் அவர் கண்டிப்பான குரலில், "ஆனால் ஒன்று, இனி உன் அத்தையின் ஒத்துழைப்பும் இருக்கும். இன்றைய நடப்புகள் அவளுக்கும் பெரிய அதிர்ச்சிதான். பாவம். எப்படியோ, தும்பைவிட்டு விட்டு வாலையேனும் பிடிக்கப் பார்க்கிறோம். என்ன நடக்குமோ."

''நல்லபடியாவே நடக்கும் மாமா'' என்றான் விஜயன் நம்பிக்கையாக.

மெல்ல நிமிர்ந்து, ''ஏதோ, என் சின்னத் தங்கம் ஒன்று மட்டும் இருந்திராவிட்டால் இன்று மட்டுமல்ல இனி என்றுமே உன் முகத்தை நிமிர்ந்து பார்த்துப் பேச முடியாமல் போயிருக்கும். அந்த மட்டில் கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும். இனி தேவியும் உனக்கு வித்யா போலத்தான் கண்ணப்பா...'' என்றவரின் குரல் உடைந்தது; உடம்பு குலுங்கியது.

அவர் கையைப் பற்றி, ''நிச்சயமாய் தேவியும் என் தங்கை தான் மாமா. அப்பாவுக்குப் பிறகு நீங்கள்தான் எனக்கும் தந்தை என்பதை மறந்து விட்டீர்களா? நீங்களே பார்க்கப் போகிறீர்கள் மாமா. இன்னும் ஓர் ஆண்டுக் காலத்திற்குள் எல்லாம் நன்றாகிவிடும்'' என்று தைரியம் கொடுத்துப் பேசினான் விஜயன்.

''அம்மா'' என்று அவன் குரல் கொடுக்க, ஒரு பெரிய கண்ணாடித் தம்ளரில் சில்லிட்ட பாதாம்கீருடன் வித்யா, தேவி சகிதம் வந்தார் பவானி.

அதைக் குடித்துவிட்டு, மருந்தெல்லாம் ஒழுங்காகச் சாப்பிடுவதாகத் தேவியிடம் உறுதி கூறிவிட்டு, எல்லோரிடமும் விடை பெற்றுக் கிளம்பினார் சிவராமன்.

ஹாலில் இருந்த பழைய கால அலங்காரக் கடிகாரத்தில் இருந்து வீரன் ஒருவன் வெளிப்பட்டு மணி அடித்தான்.

''எட்டரையா? சாப்பாடே மறந்து விட்டது. விஜயா உனக்கும், ரேகாவுக்கும் சாப்பாட்டை மாடிக்கு அனுப்பி விடுகிறேன். தேவி, வித்யா வாருங்கள். நாம் மூவரும் சாப்பிடலாம்'' என்று இரு பெண்களையும் அழைத்தார் பவானி.

மீண்டும் பழைய இடத்தில் அமர்ந்தான் விஜயன். சற்று நேரத்தில் விழித்தாள் ரேகா.

சோம்பல் முறித்தபடி சென்று முகம் கழுவிக் கொண்டு வந்தாள்.

மேசைமேல் "தெர்மோ பாட்"டைப் பார்த்ததும் பசி தெரிந்தது.

ஆனால் சாப்பிட உட்காராமல், "ராஜாவைப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று திரும்பினாள்.

"சாப்பிட்ட பிறகு, மணி ஒன்பதாகிவிட்டது தெரியுமா? வா. முதலில் இருவருமாய்ச் சாப்பிட்டு விட்டுப் பிறகு போய் அவனைப் பார்த்து வரலாம்" என்றான் விஜயன்.

"நீங்களும் சாப்பிடவில்லையா?" என்று திடுக்கிட்டு வினவியவள், சட்டென உணவு மேசைக்குச் சென்றாள்.

பாத்திரத்தைத் திறந்து, சூடு குறையாமல் இருந்த உணவை அவனுக்குப் பரிமாறினாள்.

தனக்கும் எடுத்துக்கொண்டு அமர்ந்தாள்.

உணவு அருந்திய பின்னர் இருவருமாய்ச் சென்று அயர்ந்து உறங்கும் மகன் அருகே சற்று நேரம் நின்று பார்த்துவிட்டு வந்தார்கள்.

"அப்பாடி" என்று ஒரு பெரிய மூச்சுவிட்டு மீண்டும் சோம்பல் முறித்தாள் ரேகா.

ஓர் ஆழ்ந்த பார்வையை அவளிடம் செலுத்தி "இப்போது உடம்பு நன்றாக இருக்கிறதா ரேகா? அசதி, படபடப்பு ஏதும் இல்லையே" என்று விசாரித்தான் அவள் கணவன்.

அவள் 'இல்லை' என்றாள்.

"இங்கே வா" என்று அருகில் அழைத்து, வெளிச்சம் அவள் முகத்தில் நன்கு படும்படி நிறுத்திக் கேட்டான். "அன்றிலிருந்து இன்றுவரை உன் அன்பு மாறவே இல்லை அப்படித்தானே."

தூக்கி வாரிப் போட்டுக்கொண்டு விலக முயன்றாள் ரேகா.

அவளைத் தடுத்து நிறுத்தி, அவள் முகத்தை மென்மையாகக் கையில் ஏந்தி, "என்னுடையதைப் போலவே" என்றான் மிருதுவாக.

வெடுக்கெனத் தலையைத் திருப்பி விடுவித்துக்கொண்டாள் ரேகா. "இதை நம்ப முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்" என்றாள் ஏளனமாக.

"ஏன்? ஏன் நம்பமுடியாது" என்று அவள் முகத்தில் பார்வையைப் பதித்து வினவினான் விஜயன்.

முகத்தை திருப்பிக்கொண்டு விலக முயன்றவளை அழுந்தப் பற்றி நிறுத்தி, "நம்ப முடியாமல் போனதற்குக் காரணம் கேட்டேன்." என்றான் அழுத்தமான குரலில்.

அவளுக்கு ஆத்திரம் பொங்கி விட்டது.

"காரணமா? காட்டுகிறேன்" என்று அவன் கையை உதறி விட்டுத் தன் அறைக்குச் சென்றாள்.

உள்ளே உருட்டிப் புரட்டி மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக அவளுக்கு வந்த அழைப்பிதழை எடுத்து வந்து, அவன் கையில் திணித்தாள்.

"ஒரு பதினெட்டு வயதுப் பெண்ணின் கன்னிமையை அழித்துக் கருவைக் கொடுத்துவிட்டு இன்னொருத்தியை மணக்க இருந்ததன் சான்று இது. உங்கள் வார்த்தையை நம்பாததற்கு இதைவிடச் சிறந்த காரணம் இன்னும் வேண்டுமா?" என்றாள் எகத்தாளமாக.

அந்த அழைப்பிதழைப் பிரித்துப் பார்த்த அவன் முகத்தில் வியப்பின் ரேகை ஒன்று ஓடியது.

நிமிர்ந்து, சற்று ஏளனமாய் அவளைப் பார்த்து, "இந்த அழைப்பிதழ் ஒன்றை மட்டும் நம்பியா என்னை வெறுத்தாய்? இது பொய்யானதாக இருந்தால்... அதை எண்ணிப் பார்க்க வேண்டாம்?" என்றான் சினக் குரலில்.

"பெண்களுக்கு மூளையே கிடையாது என்பது உங்கள் எண்ணம். இல்லையா? ஆனால் நான் ஒன்றும் அவ்வளவு முட்டாள் அல்ல. இது பொய்யானதாக இருக்கும் என்று நம்பித்தான்...நம்பித்தான்..." என்ற அவளுக்கு, அன்று பட்ட வேதனையின் நினைவில் இன்றைக்கும் தொண்டை அடைத்தது; விழுங்கிக் கொண்டு "நேரிலேயே வந்தேன்" என்றாள்.

"இங்கேயா?" என்றான் அவன் மிகுந்த ஆச்சரியத்துடன்.

"இங்கே என்றால் இந்த ஊருக்கு, இந்த வீட்டுக்கு அல்ல."

"ஏன்... இவ்வளவு தூரம் வந்தவள் ஏன் என்னை நேரில் வந்து பார்க்கவில்லை?" என்று விளக்கம் கேட்டான் அவன்.

"உங்களையாவது நேரில் வந்து பார்ப்பதாவது? என்று புருவங்களை வெகுவாக உயர்த்தி ஆச்சரியம் காட்டினாள் ரேகா." உங்கள் கோட்டைக்குள் புக முடிந்தால் அல்லவா உங்களைப் பார்ப்பதற்கு? கல்யாணத்துக்கும் நிச்சயத்துக்குமாக வந்த மந்திரிகள் என்ன? ராஜாக்கள் என்ன? அவர்களுடைய பாதுகாப்புக்கு வந்த போலீஸ் படையென்ன? பூபதிராஜா வீட்டு விசேஷம் என்றால் சும்மாவா?" என்றாள் குத்தலும், கிண்டலுமாக.

கோபமாக அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டுக் கையில் இருந்த அழைப்பிதழை விசிறி எறிந்தான் விஜயேந்திரன்.

"என்னையும் பார்க்கவில்லை; நிச்சயம் நடந்ததையும் பார்க்கவில்லை. பிறகு நிச்சயம் நடந்தது என்று மட்டும் என்னம்மா நிச்சயம்?" என்றான் அவளைப் போலவே கிண்டல் குரலில்.

கைகளைக் கட்டிக்கொண்டு ஸ்டைலாக மேசைமேல் சாய்ந்தபடி அவன் கேட்ட விதம் அவளுக்கு ஆத்திரம் ஊட்டிற்று.

தப்பும் செய்துவிட்டுத் திமிர் வேறா?

"நிச்சயதார்த்தப் பெண்ணே சொன்னாள்" என்றாள் பட்டென.

"அது யாராவள் நிச்சயதார்த்தப் பெண்."

"உங்கள் தாராதேவி" என்று வெடித்தாள் ரேகா.

"அவள் என் தாராதேவியாக ஒருநாளும் இருந்தது இல்லை" என்றான் அவன் அழுத்தம் திருத்தமாக.

"வாயில் வார்த்தை வளமாக இருந்தால் என்ன வேண்டுமானாலும் கதை கட்டலாம்" என்றாள் அவள் வெறுப்பாக.

"கதை கட்டுவானேன்? யோசி ரேகா. நீ நினைப்பது போல அன்று நிச்சயம் நடந்திருந்தால் இந்த மூன்று ஆண்டுகள் அவளை மணக்க காத்திருப்பானேன்?" என்று கேட்டான் அவன்.

"உங்கள் அப்பா..." என்று தொடங்கி, செலவு அது இது என்று தாரா சொன்ன காரணங்களை அடுக்கினாள் ஜீவரேகா.

கேட்டு முடித்துவிட்டு, "முட்டாள்" என்றான் அவன் ஆத்திரமாக. "தாராவை மணக்க நான் சம்மதித்திருந்தால் மாமா கொட்டியிருக்க மாட்டாரா? கல்யாணச் செலவுக்குப் பணம் 'சேர்க்க என்று நான் காத்திருக்க வேண்டுமா?"

சற்று திகைத்துவிட்டு, "பணக்காரர்கள் விஷயம் எல்லாம் எனக்கு எப்படித் தெரியும்?" என்றாள் ரேகா வறண்ட குரலில்.

"அது தெரியாது. ஆனால் என்னைப் பொய்யனாக்கத் தெரியும்; வண்டுமொடல் காமுகனாக்கத் தெரியும். இதெல்லாம் மட்டும் நன்றாகவே தெரியும் இல்லையா?" என்று கோபத்துடன் இரைந்தான் அவன்.

இந்தக் கோபமும் பேச்சும் நன்றாய்த்தானே இருந்தன.

ஆனால் நாலு வார்த்தையில் நடந்தது எல்லாம் பொய்யாகி இவன் மகா நல்லவனாகி விடமுடியுமா?

சலித்துப் போயிருந்தது அவளுக்கு.

"ப்ளீஸ், எதற்காக இந்தப் பிரேத பரிசோதனை? எனக்கு ஒரு தாலியும் ராஜாவுக்கு ஒரு தந்தையும் கிடைத்தாயிற்று. உங்களுக்கு...அன்றும் இன்றும் உங்களுக்கு வேண்டிய உடம்பும் கிடைத்து வருகிறது, போதாதா?" என்றாள் கசப்புடன்.

"இந்த ஒரு வார்த்தைக்கு உன்னை அறைந்திருப்பேன்" என்றான் விஜயன் சீற்றத்துடன்.

"உடம்பா? காசை வீசி எறிந்தால் உன் இனத்தில் அதற்குப் பஞ்சமா? அதற்கு உன்னையேதான் மணந்தாக வேண்டும் என்று என்னடி?" என்று சீறினான்.

என்ன 'டீ' யா? வயிற்றுக்குள் சில்லிட்டது அவளுக்கு.

அவளுடைய வெளுத்த முகத்தைப் பார்த்ததும், 'இப்போது அவளை வறுத்து எடுக்காதே' என்று தாய் சொன்னது விஜயனுக்கு நினைவு வர அரும்பாடுபட்டு தன்னை அடக்கிக் கொண்டான்.

"சற்று உட்கார், ரேகா. இதில் ஏதோ பிசகு-பெரிய பிசகு நேர்ந்திருக்கிறது. என்னைப் பொறுத்த வரையில் நான் மாறவில்லை."

நம்பிக்கையற்று எங்கோ பார்த்தாள்.

''சத்தியம் ரேகா. நீயும் இதுவரை வந்துதான் திரும்பியிருக்கிறாய். அப்படி இருக்க...சொல்லு ரேகா. நடந்தது எதையும் மறைக்காமல் சொல்லு. வறட்டு கவுரவம் பாராட்டாமல்...உனக்கு இலகுவாக இருக்குமானால் இதோ, முதலில் நானே சொல்லிவிடுகிறேன். அன்றிலிருந்து இன்று வரை எனக்கு நீதான் ரேகா. நீ மட்டுமேதான். போதுமா? சொல்லு நீ வந்தாய்...அப்புறம்?'' என்று மேலே சொல்லுமாறு தூண்டினான்.

ஆனால் அவன் இவ்வளவு சொல்லியும் ரேகாவுக்கு நம்பிக்கை இல்லைதான்.

அவன் சொன்ன மாதிரி, மூன்று ஆண்டுகளாகத் தாராவை மணம் புரியக் காத்திருக்கும் அவசியம் இல்லாதிருக்கலாம்.

ஆனால் அந்த மூன்று ஆண்டுகளாக அவளையும் நாடி வரவில்லையே.

முகவரியைக் கண்டுபிடிக்க முடியாமல் போயிருக்கலாம். ஆனால் தமிழ்நாட்டில் எத்தனை பத்திரிகைகள் இருக்கின்றன. ஒரு விளம்பரம் கொடுக்க முடியாதா?

ஆனாலும் இவ்வளவு கேட்கிறானே என்று தோன்ற நடந்ததைச் சொன்னாள்.

வளநாடு வரை வந்தது, தாராவோடு பேசியது. திரும்பிச் சென்றது, முடிவு எடுத்தது, பிறகு நடந்தது.

"அம்மா அடிக்க வந்தார்கள். வயிற்றுச் சிசுவை அழித்துவிடு என்றார்கள். ஆனால் அப்பாதான்... ஒரு தூண்மாதிரி என் பிடிவாதத்துக்குத் துணை நின்றார்கள்; இன்றைக்கு அம்மாவும் நானும் உயிரோடு இருப்பதே அவர் கொடுத்த தைரியம்தான். எத்தனை பேரிடம் அவமானப்பட்டிருப்போம்..." என்றவள்

பழைய துயரம் எல்லாம் நினைவு வர முகத்தை மூடிக் கொண்டு விசும்பினாள்.

அவள் கையைப் பற்றி மிருதுவாக வருடினான் விஜயன்.

"யோசி, ரேகா, தாரா உன்னிடம் பொய் சொல்லி இந்தப் பொய்யான அழைப்பிதழை அனுப்பியதும் அவளாகவே இருந்தால்..."

இருந்தால்....நெஞ்சு நிறைய நம்பிக்கையுடன் நிமிர்ந்த ரேகா உடனே தொய்ந்தாள்.

"தாரா மட்டும் சொல்லவில்லையே. இன்னொருவர் வழி தெரியாமல் திணறிக் கொண்டு இருந்தபோது உதவியவர் அவரும்கூடச் சொன்னார், கல்யாணமும் நிச்சயமுமாய் தாரா தேவியிடம் அழைத்துச் சென்றார். அவளும் உங்கள் நிச்சயத்தைச் சர்வ நிச்சயமாகவே சொன்னார்" என்றாள் மீண்டும் கசப்புடன்.

"யார் அவர்? பெயர் விசாரித்தாயா?"

"தாரா தேவியே அவரைப் பெயர் சொல்லித்தான் அழைத்தாள். நல்லசிவன், அப்போது உங்களிடம் வேலை பார்த்தார். அதிலும் அன்றைக்கு மந்திரி மற்றவர்களின் பாதுகாப்புக்கு வந்தவர்களைக் கவனிக்கும் பொறுப்பைச் செய்தவர்" என்று அவன் பிடியிலிருந்து கையை விடுவித்துக் கொண்டாள் அவள்.

"நல்லசிவன்?" என்றான் விஜயன் யோசனையோடு. "என்னிடம் டெஸ்பாச்சிங் கிளார்க்காக வேலை செய்தவர். அன்றைய நிலையில் மற்றவர் எல்லோரும் போனஸ், அலவன்ஸ், சம்பள உயர்வு என்று எல்லாவற்றையும் நிறுத்தி வைக்கத் தயாராக இருந்தபோது இவர் மட்டும் இருமடங்கு சம்பள உயர்வு கேட்டார்...இப்போது மாமாவிடம் வேலை செய்வதாகக் கேள்விப்பட்டேன்."

"ஆமாம், அன்றுகூட உங்கள் மாமாவின் சர்க்கரை ஆலையில் பார்த்தேன்."

அவனுக்கு ஒரு பதிலாக அசுவாரசியமாகச் சொல்லிக் கொண்டிருந்த ரேகா சட்டென நிறுத்தினாள்.

தன்னைக் கண்டதும், கண்ணில் பட்டுவிடாமல் மறைந்து கொள்ள முயற்சிப்பது போல அவசரமாக நகர்ந்தது நினைவு வந்தது.

அன்று போலவே இன்றும் அவள் மனம் பரபரப்புற்றது.

கணவனிடம் திரும்பி, "தாராதேவியின் சிபாரிசின் பேரில் தகுதி இல்லாதபோது அதிகச் சம்பளம் கொடுத்து வைத்திருப்பதாக அங்கிள் சொன்னார்" என்று விவரம் சொன்னாள்.

"கரெக்ட்" என்று மனைவியின் தோளைப் பற்றினான் விஜயன். "உனக்குப் புரியவில்லையா ரேகா? நல்லசிவனைத் தாரா விலைக்கு வாங்கி விட்டிருக்கிறாள். அவர் செய்து வந்த வேலையாய் வெளியே செல்லும் கடிதங்கள்-குறைந்தது முகவரிகள் அவருக்குத் தெரிய வந்திருக்கும்-புதிதாக ஒரு பெண்ணின்-உன் பெயரில் ஒரு கடிதத்தைக் கண்டதும் இவராகவே அந்தத் தாராவிடம் விற்றிருக்கலாம் இல்லையா? பிறகும் தாரா அவரைக் கொண்டே உன்னை மடக்கியிருக்கிறாள்."

பரபரப்பினூடே இன்னொரு சந்தேகம்.

"ஆனால் நான் தான் என்று அவர்கள் இருவருக்குமே எப்படித் தெரியமுடியும்? முன்பின் பார்த்ததே இல்லையே?"

"ரேகா, உன்னைப் பற்றி யாரிடமும் சொல்லவில்லையே தவிர எதையும் ஒளித்து மறைக்கவும் நான் முயற்சி செய்ததில்லை. கொச்சியில் உன்னை எடுத்த படங்கள்

இன்னமும் என் அலுவலக மேசையில் இருக்கின்றன தெரியுமா?"

"கடிதத்தைக் கண்டபிறகு அவர்கள் நோண்டியிருக்கலாம். உன் படத்தைப் பார்த்திருக்கலாம். ஓ-ராஜாவைப் பற்றி எழுதினேன் என்றாயே-அந்தக் கடிதத்தைக்கூட இவர்களே அப்புறப்படுத்தி இருக்கலாம்..." என்றான் அவன் பரபரப்புடன்.

"அது அவ்வளவு எளிதா?"

"பொதுவாக எளிதில்லைதான். ஆனால் இப்படி எல்லாம் கிரிமினல் வேலைகள் யாரேனும் செய்யக்கூடும் என்று சற்றும் எதிர்பாராதபோது-அந்த மாதிரி ஐயப்பாடுகளே இல்லாத இடத்தில் செய்வது முடியும் தானே ரேகா. பார். இவ்வளவு பெரிய வீட்டிலிருந்து நீ, அம்மா, வித்யா எல்லோரும், இத்தனை வேலையாட்களுடன் இருக்கிறபோதுகூட ராஜாவைக் கடத்தி விடவில்லையா?"

"மெய்தான்..."

"எனக்குப் புரிந்துவிட்டது ரேகா" என்று அவளைத் தன்புறம் திருப்பினான் விஜயன்.

"உனக்கு புரிகிறதில்லையா ரேகா? தாராவும் நல்ல சிவனுமாகச் சேர்ந்து உன் கடிதங்கள் என் கைக்கு வராமல் தடுத்திருக்கிறார்கள். என்னுடைய கடிதங்கள் எதெது உனக்கு வந்ததோ, அன்று இருந்த நிலையில் காதல், அன்பு என்று எண்ணிப் பார்க்கக்கூடத் தோன்றாமல், உள்ள நிலையை அப்படியே எழுதினேனே தவிர நான் வேறு எதுவும் எழுதவும் இல்லை."

"அப்படி ஒரு கடிதம் வந்தது" என்றாள். ரேகா விழிநீரை அடக்கியபடி.

அந்தக் கடிதத்தைப் படித்து விட்டுத் தவித்த தவிப்பு என்றேனும் மறக்குமா?

"காதல், கீதல் என்று எழுதாததால் வரவிட்டிருப்பார்கள். குழந்தையைப் பற்றிய கடிதத்துக்குப் பதிலாகப் பொய்யான திருமண அழைப்பை அனுப்பினால் அதிலேயே நீ ஓய்ந்து விடுவாய் என்று எதிர்பார்த்திருக்கலாம். நீ மீறிவந்துவிடவே கலவரப்படுத்திக் குழப்பியடித்து விரட்டிவிட்டிருக்கிறார்கள். ரேகா, ரேகா, மதுரையில் அந்தப் போட்டோ ஸ்டூடியோவில் ராஜாவின் படத்தை நான் பார்த்திராவிட்டால்..." சட்டென விலா எலும்புகள் எல்லாம் நொறுங்கிவிடும்போல அவளை இறுக அணைத்தான் விஜயன். "என் ரேகா" என்றான் குரல் நடுங்க.

குரலைப் போலவே அவனுடைய உடலும் நடுங்குவதை ரேகா உணர்ந்தாள்.

சற்று, நேரம் அந்த அணைப்பில் கட்டுண்டவளாய் அசையாமல் இருந்தாள்.

அவளுடைய குழப்பங்கள் தீர்ந்திருக்கலாம்.

ஆனால் அவளுடைய சந்தேகங்கள்?

மெல்லத் திமிறி அவன் கைகளிலிருந்து விலகினாள்.

"என்ன ரேகா?" என்றான் அவன் குரலில் கரகரப்புடன்.

இதெல்லாம்கூடப் பொய்யாக இருக்க முடியுமா?

ஆனால் முதலிலும் இவனை மெய்யென்று நம்பித்தானே... ஒருவேளை மெய்யேதானோ?

தலை சுற்றியது அவளுக்கு.

ஆயினும் விடாமல், இந்த "மூன்று ஆண்டுகளாக நீங்கள் என்னைத் தேடவே இல்லையே, முகவரியைக் கண்டு

பிடித்திருக்க முடியாதுதான். ஆனால் ஒரு விளம்பரம் செய்திருந்தால்..." என்று பேசியவளைப் பொறுமை இழந்தாற் போல இடைமறித்தான் விஜயன்.

"என் நிலையிலிருந்து சற்று சிந்தித்துப் பார் ரேகா. நீ சொன்ன விளம்பரத்துக்கு அவசியம் என்ன? நீ வருவதாக இருந்தால் என் முகவரி உனக்குத் தெரியும், உன் போல நான் இடம் மாறி ஓடி விடவில்லையே. வேண்டாம் என்று விலகி விட்டாய் என்று நினைத்தேன். விளம்பரம் செய்வது பற்றி நான் எண்ணாமல் இல்லை ரேகா. ஆனால் விலகிப் போனவள் வேறு ஒருவரை மணந்திருந்தால் அந்த விளம்பரம் உன் வாழ்வைக் கெடுத்துவிடக் கூடுமே" என்று அஞ்சினேன் என்றான் அவன்.

"நானா இன்னொருவரை மணப்பேன்?" என்று ஆத்திரத்துடன் முறைத்தாள்.

"பின்னே, நான் மட்டும் மணப்பேனா? போகட்டும். என் மனத்திலும் அப்போது உன்னைப்பற்றி தவறான எண்ணம் உண்டாகி விட்டது. அது வந்திருக்கக்கூடாது என்று இப்போது புரிகிறது" என்று மீண்டும் அவளைத் தன் வசம் இழுத்தான்.

அவனைத் தடுக்க முயன்றபடி, "ஆனால் நீங்களே நிச்சயத்தை ஒப்புக் கொண்டீர்களே" என்றாள் அவசரமாக.

"நானா? எப்போது?" என்று ஆச்சரியமாய்க் கேட்டான் அவன்.

"ம்...மதுரையில்...முதல் நாளன்று நான் கேட்ட போது..."

"ஓ, அது சிறுவயதுப் பேச்சை அல்லவா சொன்னேன். ஒரு குறிப்பிட்ட தினத்தில் என்று சொன்னேனா? இல்லையே... ரேகா, ப்ளீஸ் எது சொல்வதானாலும் இங்கே இருந்து சொல்" என்று

மீண்டும் அவளைத் தன் கைவளைவுக்குள் வாகாக இழுத்துக் கொண்டான்.

"ஆனால் அவளோடு அப்படி நெருங்கிப் பழகி விட்டு..." என்று முணுமுணுத்தாள் ரேகா.

"நானா? நானாக அவளை நெருங்கி நீ பார்த்திருக்கிறாயா?" அவன் ஓர் அழுத்தத்துடன் கேட்க அவள் இன்னமும் குழம்பிப் போனாள். அவளது நெருக்கம் தந்த குழப்பம் வேறு.

ஒருவேளை இல்லையோ...? தாராவாய்த்தான் ஒட்டினாளோ? என்றெல்லாம் தடுமாறினாள். ஆனால்...

நிமிர்ந்து அவன் முகத்தை நேராகக் கண் அகலப் பார்த்தாள்.

"தாரா...தாரா ஒரு போட்டோ ஆல்பம் காட்டினாள்..." என்ற போது மீண்டும் அவள் விழிகளில் நீர் நிறைந்து வழிந்தது.

"என் ரேகா..." என்று முதலில் அவள் கண்களைத் துடைத்தான்.

"அந்த ஆல்பம்கூட இந்த அழைப்பிதழ் போலவே ஒரு பொய்தான் ரேகா. தாராவின் விருப்பப்படி. நம் செல்வனைக் கடத்திச் சென்றானே, அந்த போட்டோ கிராபர் தயார் செய்து கொடுத்தது அது ஓர் அசிங்க உறவு ரேகா, இந்த ஆல்பம் தயார் செய்து கொடுத்துவிட்டு விலையாக அவளை வேறு மாதிரிப் பயன் படுத்தியிருக்கிறான், ராஸ்கல்."

"பயன்படுத்தி சீ" என்றாள் ரேகா முகம் சிவக்க,

மெல்லத் தலையசைத்தான் அவன்.

ஒருகணம் பேசாது, இருந்துவிட்டு, "ஆனால் அவள் உங்கள் மேல்கொண்ட காதல்தானே" என்று விவாதித்தாள் ரேகா.

''நல்ல வார்த்தையைக் கேவலப்படுத்தாதே'' என்றான் அவன்.

''ஆனால் இங்கே மற்றவர்களும் உங்கள் இருவருக்கும் இடையே திருமணத்தை எதிர்பார்த்துதானே இருந்திருக்கிறார்கள். உங்கள் இடையே அம்மா, வித்யா...'' என்று மீண்டும் விசாரித்தாள் ரேகா.

''ரேகா இதையெல்லாம் உன்னிடம் எப்படி விளக்குவது. கேள் ரேகா இங்கே இந்தக் குடும்பங்களில் மாமன், அத்தை மகன் மகள் என்றால் உடனே முடிச்சுப் போட்டுப் பேசுவார்கள். முன்பெல்லாம் இந்த முறைப் பெண், பையன் தவிர வேறே வெளியே மணம் செய்வதே கிடையாது. இப்போது அந்த மாதிரி இல்லை என்றாலும் இவனுக்கு இவள் என்று முடிபோட்டுப் பேசுவது இயல்புதான். உதயா, நவநீதன் என்றுகூடப் பேச்சுத்தான் ஆனால் அவன் குணம் கெட்டுவிடவே மாமாவே முன்னின்று அவளுக்கு வேறு இடம் பார்த்து முடிவு செய்தார்.

''அதே போல் தாராவுக்கு எனக்கும் என்று பேச்சும் இருந்தது. இந்த விஷயத்தில் அம்மா, மாமா இருவருமே முதலில் இருந்தே விருப்பமாய் இருந்தார்கள். அப்பாவும் தடை சொல்லவில்லை நான்...நானும் வேண்டாம் என்று வேண்டும் எதுவும் நினைக்கவில்லை. தாரா எப்போதுமே சுற்றிச் சுற்றி வருவாள்.

''ஆனால்...கொச்சியில் உன்னைப் பார்த்தபிறகு எல்லாம் மாறிவிட்டது. இங்கே வந்ததும் அப்பா நோய்ப்பட்டு விட்டார். உதயா திருமணத்துக்குத் தேதி நிச்சயமாகி இருந்தது. அதுவும் விரைவில். தொழிலிலோ... பயங்கர நெருக்கடி. உனக்கு விரிவாக ஒரு கடிதம் எழுதக்கூட நேரம் கிடையாது ரேகா.''

''முந்திரித் தொழிற்சாலை, பிளாஸ்டிக் பெருமளவு பணத்தை விழுங்கிவிட்டு உற்பத்தியை அப்போதுதான் தொடங்க இருந்த

சிமெண்ட் தொழிற்சாலை... அத்தனையிலும் உள்ள ஒவ்வொரு வரையும் சந்தித்துப் பேச வேண்டியிருந்தது. கிட்டத் தட்ட எல்லோருமே வெகுவாக ஒத்துழைத்தார்கள் ரேகா. அத்தனை கணக்கு வழக்குகள், பர்சனல் ஃபைல்கள்... இதற்கிடையே உதயா திருமண வேலைகள், அப்பா...ரேகா, உடம்பும் மனமும் வெகுவாக அயர்ந்து போகும் நேரங்களில் உன் படங்கள் தான் எனக்கு சக்தியைக் கொடுத்த அமுதமாக இருந்தன...."

"ஆனால் ஒரே ஒரு கடிதத்தின் பிறகு உன்னிடமிருந்து ஒரு தகவலும் இல்லாது போயிற்று."

''முதலில் அதற்காக நான் தேடவும் இல்லை. என் தனிப்பட்ட சொந்தக் கடிதங்களைப் பிரித்துக்கூடப் பார்க்கவில்லை. உதயா திருமணம் முடிந்து அப்பாவின் காரியங்கள் முடிந்து இடையே கிடைத்த சில நிமிடங்களில் தான், குவிந்து வந்த சொந்தக் கடிதங்கள் பிரிப்பது அவ்வப்போது உன் கடிதம் இல்லையே என்று நினைத்தாலும் மற்றபடி... ஸாரி ரேகா, உன்னை நினைக்கக்கூட அப்போது எனக்கு நேரம் இருக்கவில்லை..." என்று சற்று நிறுத்தினான் விஜயன்.

அவன் கையைப் பற்றி அழுத்தி, "புரிகிறது" என்றாள் ரேகா மெல்லிய குரலில்.

அவளது அந்தச் சிறு அசைவில்கூட அவன் அணைப்பு இறுகிப் போயிற்று.

ஒரு பெருமூச்சுடன் மீண்டும் தொடர்ந்தான்.

"அன்றைய நிலையில் சொந்த சுகம் பற்றி நினைத்துப் பார்க்கக்கூட முடியாத நேரம். அன்று நீ வித்யாவிடம் எனக்காகப் பரிந்து பேசியபோது சொன்னாயாமே- அது சொல்லுக்குச் சொல் மெய் ரேகா. ஆனால் ஒவ்வொரு வினாடி யும் பொன்னான விநாடிகள். தொழிலாளர்களுடைய மதிப்பு

பற்றி நான் நன்றாகப் புரிந்து கொண்ட சமயம் அது. மாமா பணம் தர முன்வந்தபோது இவர்களுடைய உதவி இல்லா விட்டால் நான் மீளவே முடிந்திராது. ஆனால் மாமா பணம்தர முன்வந்தபோது இன்னொரு சிக்கல். வருங்கால மாப் பிள்ளைக்கு என்று எண்ணிவிடக் கூடாதே. அதனால் அந்த நினைப்பில் தருவதாக இருந்ததால் வேண்டாம் என்றேன்."

சிவராமன் அன்று சொன்னது இன்று வேறுவிதமாய் விளங்க, "அவர் தராமல் விட்டிருந்தால்?" என்று வினவினாள் அவள்.

"தொழிலாளர் உதவியோடு சமாளித்திருப்பேன். என் பெயரில் உள்ள சொந்த சொத்துகளை எல்லாமே விற்றுப் போட்டிருப்பேன். ஆனால் எந்த நிலையிலும் இன்னொருத்தியை மணந்திருக்க மாட்டேன்" என்றான் அவன் உறுதியோடு.

"ஆனால் உங்கள் மாமா... என்னைப் பற்றி சொல்லவில்லை என்றார்களே..."

"உன்னைப் பற்றிச் சொல்லவில்லைதான். ஆனால் தாராவைத் திருமணம் செய்யமுடியாது என்பதைச் சொல்லி விட்டேன். வேறு திருமணத்துக்குத் தாரா ஒப்பவில்லை. ஒரேயடியாய் முறிக்க வேண்டாம். தானாக மாறட்டும் என்றார் மாமா. ஒருவேளை நானும் மாறலாம் என்று நினைத்திருக்கலாம்...

"எப்படியோ ஒருவிதமாய் எல்லாவற்றையும் ஒழுங்கு செய்து விட்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு முதல் தடவை யாக விடுப்பு எடுக்க முடிந்த இரு தினங்களில் சென்னைக்கு ஓடி வந்து உன்னை தேடினேன். அங்கே உன் சுவடே தெரியவில்லை. ஹெலனுக்கு கால் போட்டு விசாரித்தேன். அவளும் "விலாசதார் இல்லாததால்" என்று உனக்கு அவள் எழுதிய கடிதங்கள் திரும்பி வந்துவிட்டதாகச் சொன்னாள்.

''கடைசியாக என்னால் ஒரு முடிவுக்குத்தான் வர முடிந்தது...''

"என்ன அது?"

அவள் கன்னத்தை வருடி, "உன்னை உயர்த்திக் காட்டுகிற முடிவு இல்லை. ஆனாலும் இன்று எதையும் ஒளியாது, மறையாது சொல்லிவிட வேண்டும் என்று இருக்கிறேன்..." என்று மேலே சொன்னான்.

"பெரும் செல்வந்தன் என்று ஹெலன் மூலம் கேள்விப்பட்டு நீ என்னுடன் பழகியிருக்கிறாய் அப்படி இல்லை என்கிற நிலை வந்த உடன் ஒதுங்கி ஓடி விட்டாய் என்று மூழ்கிற கப்பலைவிட்டு ஓடுகிற எலிகள் என்பார்களே அதுபோல என்று நினைத்தேன்."

"ஓ! ஆனால், அதனால் தானா... அவ்வப்போது நீங்கள் ஒரு மாதிரிப் பேசும்போது புரியாமல் இருந்தது. ஆனால் அப்படிப்பட்டவள் ராஜாவைப் பெற்றிருப்பேனா?" என்று ரோஷமாகவே கேட்டாள் ஜீவரேகா.

"யோசித்தேன் அதையும். ஒருவேளை கருவையும் ஒன்றும் செய்யமுடியாத நிலையில்தான் கண்டுபிடித்திருப்பாயோ என்று...ரேகா. இந்த மாதிரி விஷயம் பற்றி எனக்குச் சரியாகத் தெரியாது. ஆனால் ராஜாவைப் பார்த்த பிறகு அவனை விட்டு வருவது நடக்கிற விஷயமில்லை" என்று முடிவு செய்தேன்.

"ஓகோ, அதனால்தான் செல்வநிலைபற்றி விசாரிக்கச் சொன்னீர்களா? ஆனால் அப்போதும் நான் மறுத்தது ஏன் என்று எண்ணிப் பார்க்கவில்லையா?"

''தவறு செய்தால் அதை ஒத்துக்கொண்டு மனம் வருந்துகிறவர்கள் எத்தனைபேர் என்று நினைத்தாய் ரேகா? எப்படியும் அடுத்தவர்மேல் தன் பழியையும் சேர்த்துச் சுமத்துவதுதான் மனித இயல்பு. செய்துவிட்ட தப்பை ஒத்துக்

கொள்ள மனம் இல்லாமல் அசட்டு வீம்பும் எரிந்து விழுவதுமாக இருக்கிறாய் என்று நினைத்தேன். அது அளவு மீறிப் போகிறது என்று நினைத்தபோதுதான்... ரேகா அன்று உன்னிடம் முரட்டுத்தனமாக நடந்து கொண்டதை மறப்பது ரொம்பக் கஷ்டம் இல்லையா?" என்றான் வருத்தத்துடன்.

அவன் கையைப்பற்றி லேசாக முத்தமிட்டாள் ரேகா.

அவன் மேலே பேசுமுன் முகம் மாறி "தாராவிடம் நெருங்கியது இல்லை என்றீர்கள் ஆனால் விலகவும் இல்லையே" என்றாள்.

"மாமாவுக்காக ரேகா. உன்னையும் ராஜாவையும் பார்த்தபிறகு என் மறுப்பை அவர் புரிந்து கொண்டார். உன் வரவால் தாரா அதிர்ச்சி அடைந்திருப்பதாகவும் இன்னொரு உரிமைக்காரி என்று ஆகிவிட்டதால், எப்படியும் அவள் தானாக மாறிவிடுவாள். அதற்குமுன் அவள் மனம் நோக வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார். மாமா செய்திருக்கும் உதவிக்கு இது ஒரு சிறு கைம்மாறு. அத்தோடு நீ நடந்து கொண்ட முறை உனக்காக ஒன்று செய்வானேன் என்ற வீம்பு வேறு. கூடவே, இன்னொருத்தி என்னிடம் ஒட்டுவதைப் பார்த்தாலாவது நீ மனம் மாற மாட்டாயா என்ற நப்பாசை வேறு.... ஆனால் அதெல்லாம் பிரயோசனமில்லை என்ற முடிவுக்கும் வந்தேன். நீதான் அப்படி முகம் திருப்பிக் கொண்டு நின்றாயே."

"முகம் திருப்பி நிற்கக் காரணம் அதுதானே"... என்று ரேகா குறுக்கிட்டுச் சொல்லவும் வெண்பற்கள் தெரிய லேசாகச் சிரித்தான்.

"என்னவோ... என்னைப் பொறுத்த வரையில் கொஞ்சம் நம்பிக்கை வந்ததே உதயா வீட்டுக்கு சென்று வந்தோமே, அப்போதுதான். காலையில் நான் தூங்குகிறேன் என்று

எண்ணிப் பார்த்துக் கொண்டு நின்றாயே..." என்றவன் முகம் சிவக்க விலக முயன்றவளை மீண்டும் பிடியில் நிறுத்தி, "அன்றுதான் வேறு வழியில் முயற்சி செய்யலாம் என்ற ஐடியாவும் வந்தது. வழியில் பெறலாம் என்ற நம்பிக்கையும் வந்தது" என்று விஷமமாகச் சிரித்தான்.

அந்தப் பார்வையிலிருந்து தப்பிக்க எண்ணி அவன் மார்பிலேயே முகம் புதைத்துக் கொண்டாள் ரேகா.

குனிந்து அவள் உச்சியில் உதடுகளை ஒற்றி எடுத்தான் அவன்.

இந்த அன்பு எப்படி விஷமாகாமல் தப்பியது என்று உள்ளூர வியந்தாள் ரேகா.

அதுவும் அவன் சொன்னதெல்லாம் மெய்யாக இருந்தால்- மெய்யாகவே 'இருந்தால்' என்ன இருந்தால்? மெய்யேதான். அப்பாவே அவனை நம்பிவிட்டபோதே அவளும் புரிந்து கொண்டிருக்க வேண்டும். முட்டாளாக ஒதுங்கி ஓடிப்போய் அவளும் துன்புற்று அவனையும் துன்புறுத்தி... ஆனால் அன்றைய நெருக்கடியான நிலையில் அவன் எப்படித் தவித்திருக்க வேண்டும்?

அண்ணாந்து அவன் முகத்தைப் பார்த்து, "என்னை மன்னித்துவிடுங்கள்..." என்று தொடங்கினாள்.

"ஷ்" என்று அவள் உதடுகளில் ஒரு விரலை வைத்து மேலே பேசாமல் தடுத்தான் அவன்.

"ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாதபோதுதான் மன்னிப்பெல்லாம். நமக்குள் என்ன ரேகா" என்று பெருந்தன்மையாகப் பேசியவன் மறுகணமே, "இனி நமக்கு அதற்கெல்லாம் ஏது நேரம்?" என்று பெருமூச்சு விட்டான்.

திகைப்புடன் நிமிர்ந்து பார்த்தவளிடம், "மெய்தான் ரேகா. மூன்று ஆண்டு இழப்பை ஈடு செய்ய வேண்டுமே" என்று சாதாரணக் குரலில் எடுத்துக் கூறியவன் சட்டெனக் குறும்பாகக் கண்களைச் சிமிட்டிச் சிரித்தான்.

மூன்றாண்டுகளுக்குச் சற்று முன்போலவே வெள்ளம் போலப் பொங்கிய எல்லையில்லாத காதல் கண்களில் முழுமையாய்ப் பிரகாசிக்க அவன் மார்பில் மாலையாய்த் துவண்டபடி அவனோடு இணைந்து நகைக்கலானாள் ஜீவரேகா.


காதலெனும்
சோலையிலே
ரமணிசந்திரன்